

# தயா

லா.ச.ராமாமிருதம்

வானதி
பதிப்பகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# தயா

லா. ச. ராமாமிர்தம்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

வானதி முதற்பதிப்பு : செப்டம்பர் 1993
உரிமை ஆசிரியருக்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 25-00

அச்சிட்டோர் :
கவின்கலை அச்சகம்
கந்தசாமிநகர், பாலவாக்கம்
சென்னை 600 041
தொலைபேசி 41 71 41

# பதிப்புரை

எழுத்துலகில் 'லா. ச. ரா' என்ற மூன்று எழுத்துக்களுக்கு ஒரு தனி மகத்துவம் உண்டு.

உலகில் பிரம்மா படைக்கும் பாத்திரங்கள் வெறும் செய்திகளைத்தான் உண்டாக்குகின்றன. இந்த எழுத்துலக பிரம்மாவின் படைப்புக்களோ. அழியாத இலக்கியத்தை யல்லவா தோற்றுவிக்கின்றன.

சில பாத்திரங்களின் பேச்சில் இந்த உண்மையைப் பார்க்கலாம்.

நீ கண்டது கனவில்லை; உன் கற்பனையின் சத்தியம்!

ஃ

இதில் பொன்னைத்தானா உரைக்கரோம்?
ஆளையே உரைக்கரோம்!

ஃ

யுத்தம் தந்த பரிசா ஒரு வெள்ளைத் தோல் என்னைக் கொடுத்துட்டு கப்பலும் ஏறிப் போச்சு. நான் வெங்காயத் தோலோடு பிறந்துட்டேன்.

ஃ

நாமம் என்ன திவ்ய மானாலும் ரூபத்துக்கு இணையாகுமா? ரூபத்தின் நிழல்களைத்தான் நாமம் தரமுடியும்.

ஃ

இப்படி எத்தனையோ முத்துச் சிதறல்கள் இந்தக் கதைத் தொகுப்பில் காணலாம்,

அமைதியாகப் படிக்க, சுவைக்க, அசைபோட, மகிழ உங்களுக் கொரு நல்ல விருந்து!

எழுத்துலக ஜாம்பவான் உயர்திரு லா.ச. ராமமிருதம் அவர்களின் படைப்பிலக்கியங்களை வானதி பதிப்பகத்தின் மூலம் வெளியிடுவதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

—ஏ. திருநாவுக்கரசு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தயா | ... | 1 |
| சுருதி | ... | 21 |
| நேரங்கள் | ... | 48 |
| மாய மான் | ... | 70 |
| ராணி | ... | 96 |
| ஜிங்லி | ... | 115 |
| மன்னி | ... | 149 |
| பிராயச்சித்தம் | ... | 170 |

# தயா

அத்தனை பேரிலும் அவள்தான் அதி குதூகலமாயிருந்தாள். வருவோரை வா, போவோரை இரு என்று, கைக்குழந்தைக்காரிகளுக்குப் பசும்பால் தேடிக் கொடுத்து ஜுரக்காரக் குழந்தைகளுக்குச் சமையல்கார மாமாவைத் 'தாஜா' பண்ணி மிளகு ரஸம் பண்ணச் செய்து கொடுத்து, ஊட்டும் குழந்தையைத் தாயின் இடுப்பிலிருந்து பிடுங்கித் தன் இடுப்பில் ஏற்றிக்கொண்டு ஊட்டி, நலங்கு பாடி, ஏசல் பாடி, சிரிப்பும் கேளிக்கையும் சளைத்த இடத்தில் தான் புகுந்து முட்டக்கொடுத்து மறுபடி மூட்டி விட்டு, மோதல்கள் பயமுறுத்திய இடத்தில் குறுக்கே விழுந்து அவைகளின் கதியைச் சிரிப்பாய் மாற்றி, அங்கும் இங்கும் எங்குமெனப் பம்பரமாய், சமயத்தின் உயிராய்...

சம்பந்திப் பிராம்மணன், ஸாதாரணமாய் ரொம்பப் பேசாதவர்; அவரே மூக்கின்மேல் சரிந்த கண்ணாடிமேல் எட்டிப் பார்த்துக்கொண்டு, ''யார் அந்தக் குட்டி? குறு குறு சுறுசுறு வென்று சிரித்த முகமாய் சொருக்களாக்குட்டி?'' என்றார்.

''யாரைச் சொல்றேள்?''

''அதோ நம் பக்கத்தில், சந்தனம் தாம்பூலம் விசாரிக்கிறாளே?''

''எவள்? அந்தக் கத்தரிப்பூக் கலரிப் புடைவையும் கறுத்த அரக்கில் ப்ளஷ் ரவிக்கையுமா? அது தான் தயா!''

''தயா! தயா! பேர் கொஞ்சம் புது தினுசாயில்லை?''

''தயான்னுதான் யாரும் அழைக்கிறா; அதுக்குத் தான் அவளும் ஏன் என்கிறாள்.''

''தயா! தயா! பேர் மாதிரிதான் இருக்கிறாள் குளு குளுன்னு! நாம் செய்ய வேண்டிய உபசாரங்கள் எல்லாம் அவள் செய்கிறாப் போல் இருக்கிறதே! நம் மாத்துப் பெண்கள் எல்லாம் எங்கே?''

''நம் பெண்களா? எல்லாம் ஆபீஸர் ஆம்படையாள் கள்னா! நீங்களும் என்னவோ இன்னிக்குத்தான் புதிசாக் கண்டமாதிரி கேக்கறேளே! நம்மாத்துக் கலியாணத்துக்கு நாமேன்னா அவாளைப் பத்திரிக்கையும் பழமும் வெச்சு அழைக்கணும்? பாருங்கள், நீங்களே பாருங்கள்; அது அதுகள் மூலைக்கு மூலை நின்னுண்டு தாக்கல் மோக்கல் இல்லாமே பேசிண்டு நிக்கிற அக்கிரமத்தை! காமாக்ஷி! ஏ விசாலம்!! ஏ புவனம்!!!—''

ஆத்திரத்தோடு அழைப்பிலே உயர்ந்த குரல் கேட்டு அவள் சப்தத்தின் திக்கில் முகம் திருப்பினாள். நடு வகிடின் இரு மருங்கிலும் வங்கி வங்கியாய்ப் படிந்த கூந்தலிலிருந்து இரு சுருள்கள் பிரிந்து மின்சார விசிறியின் விசைக் காற்றில் நெற்றி மேட்டில் விளையாடின. மைக் கோடுகளென ஒழுங்கான புருவ வளைவுகளின் எழுச்சியின் மேல் மிதந்த பொட்டு வேர்வையில் கரைந்து குங்குமம் வழிந்து முகத்தில் ஒரு பிரஸன்னம் வீசிற்று.

''என்ன மாமி வேணும்?''

''எங்காத்து நாட்டுப் பெண்கள் எல்லாம் எங்கே கூப் பிட்ட குரலுக்கு ஏன் என்காமே?''

''கல்யாணமோ கார்த்திகையோன்னு அப்படித் தான் இருக்கும். நான் இருக்கேனே உங்களுக்கு என்ன வேணும் சொல்லுங்கோ.''

"நீ யாரு குட்டி?"

"தயா."

"தயா சரி; நீ பெண்ணாத்தைச் சேர்ந்தவளா, பிள்ளை யாத்துக்காரியா?"

"கல்யாணத்துலே அது மாதிரி யெல்லாம் கட்சி யிருக்கணுமா மாமா? எல்லாம் ஒரே கொட்டு மேளம் தானே! நான் உங்காத்து மாப்பிள்ளைக்குத் தங்கை. மாமியும், மாமாவும் சேர்ந்து நில்லுங்கோ, நமஸ்காரம் பண்றேன்."

"நன்னாயிரு மகராஜியா, தோளோடுதாலி தொங்கத் தொங்கக் கட்டிண்டு என்னிக்கும் சந்தோஷமா, சௌபாக்யமாயிருக்கணும், காரியத்தோடு காரியமா உன் அம்மாவை உனக்குச் சுற்றிப்போடச் சொல்லு. பாக்கறவ கண் எல்லாமே நல்ல கண் என்று சொல்ல முடியுமா? என் கண்ணே கூடாமல் இருக்கணும். சிரித்த முகமா, தெச்ச முள்ளை எடுக்கிற மாதிரி, இவ்வளவு சமத்தாப் பேசிண்டு, இவ்வளவு பொறுப்பா—உன்னைக் கட்டினவன் கொடுத்து வைச்சவன்தான் : சந்தேகமேயில்லை. உன்னை எங்கே கொடுத்திருக்கிறது? உன் ஆத்துக்காரர் கல்யாணத்துக்கு வந்திருக்காரா? என்ன குழந்தை? ஏன் அழறே? ஏதாவது தப்பு நேர்ந்துடுத்தா? என்னை மன்னிச்சுக்கோ. எங்கே போறே, ஏ குழந்தை தயா! தயா!!"

ஆனால் அவள் சரசரவென அவ்விடம் விட்டு விரைந்து பந்தலில் நெறிந்த கூட்டத்துள் புகுந்து மறைந்து விட்டாள்.

"தயா. தயா!"

வயது சோர்ந்த குரலின் தேடல் நெருங்கிக் கொண்டே வந்தது.

"ஏ ஜயா, ஸுபா, தயாவைக் கண்டேளோ?"

"இல்லையேம்மா!" யதேச்சையாய் ஒரே சமயத்தில் ஒரே பதிலில் இரு குரல்களும் இரு ஸ்தாயியில் ஒருமித்தன.

"நீங்கள் என்ன பண்ணறேள்?"

"என்ன பண்ணனும்?"

"அங்கே என்ன நடந்திண்டிருக்கு...?"

"எல்லாம் நடந்தாயிடுத்து." அக்காவும் தங்கையும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். அவர்கள் கண்களில் விஷமமும் ரகஸ்ய அர்த்தங்களும் தத்தித் தித்தித்தன,

"அப்படியா?"

"ஆமாம். அப்படித்தான்!! அம்மா இப்படித்தான் ஏதாவது அர்த்த மில்லாமல் கேட்டுக் கொண்டு தொணப்பிக் கொண்டிருப்பாள். வயதானதோடு வாத்தியார் பெண்டாட்டியில்லையா?"

"என்னடி சொல்றேள்?"

ஸுபா அருகே வந்து ஒவ்வொரு விரலாய் மடக்கினாள்.

"இதைக் கேட்டுக்கோ. காலையிலே தாலி கட்டியாச்சா? இப்போ கதவைச் சாத்தியாச்சு. இனிமேல் ஒண்ணும் பாக்கியில்லை."

"என்ன ஸுபா. அவ்வளவு சுருக்க முடிச்சுட்டியே?"

"பின்னே என்ன இன்னும் பாக்கி?"

"காலையில் கட்டுச் சாதக் கூடையும் கருவடாமும் இருக்கே!"

"இருக்கு. அதையும் வாங்கிண்டு நின்னா, இன்னுமா கிளம்பல்லேன்னு சவுக்கு உருண்டைக் கட்டையாலே உதையுமிருக்கு."

''உருண்டைக் கட்டை எஞ்சியிருந்தால்?'' இரு 'கேக் கேக்'கள் ஒரு 'க்றீச்'சில் கலந்தன.

''தயாவைக் காணோமே! ஏ தயா. தயா!''

''இதென்ன சவலை மாதிரி உன் கையொட்டிக் குழந்தையை மடியில் போட்டுத் தூங்கப் பண்ணணுமா?''

''தயா, எங்கேடி போயிட்டே?''

மூலையில் வைத்த மண் தொட்டியினின்று எழுந்த பெரிய 'க்ரோட்டன்'ஸின் நிழலின் கீழிருந்து ஒரு பெருமூச்சு கிளம்பிற்று.

இதென்ன, ஒரு ஆட்டை மடக்க மூணு புலியா?

''ஏண்டி தயா, இருட்டில் என்ன பண்றே?''

''என்ன பண்ணுவா? ஏதாவது குருட்டுயோசனை தான். எங்களைப் போலவாளுக்கு இது மாதிரி சமயங்கள் தானே;''

தயாவின் பார்வை ஐயாவின் மேல் தாழ்ந்து ஆழ்ந்தது. பாவம், ஐயா, தன்னைத்தான் நொந்து கொள்கிறாள்.

''அப்பா! கால் விட்டுப் போறது!'' அம்மா உடம்பை மெதுவாய் இறக்கிக்கொண்டு படிக்கட்டில் உட்கார்ந்தாள். அம்மாவுக்குப் பாரி உடம்பு,

''அப்பாடா- எப்போப்பா வீடுபோய்ச் சேருவோம்னு இருக்கு.''

''பாவம், பிள்ளையாத்துச் சம்பந்தி, மங்கு மங்குன்னு காரியம் செஞ்சு களைச்சுப் போச்சாக்கும்.''

''என் நாளிலே வேணது செஞ்சாச்சு. அதுக்கில்லே, இந்தப் பிராமணனுக்கு தையிலே நடக்கிற கல்யாணத் துக்கு வாழைக்காயைத் தவிர வேறே காய்கறி அகப் படலியா?''

''இந்த வயஸுலே. இந்த உடம்பிலே அம்மா, உனக்கு இந்த நாக்கு வேண்டாம், உனக்குத்தான் வாழைக்காய் பிடிக்குமே!''

''அதுக்காக?''

''ஐயா, அம்மா சொல்றதும் நியாயந்தான். மூஞ்சிலே அடிச்ச மாதிரி, வந்ததிலிருந்து இதென்ன ஓயாமே வாழைக் காயை வெந்த கறி, வதக்கின கறி, துருவல் கறி, ஸாம்பாரில் வாழைக்காய்த்தான்...?''

''கூட்டிலே கூடன்னா வாழைக்காய்?''

''வசனமே உண்டு: வாழைக்காய்க்கூட்டும் வளர்த் தெடுத்த பிள்ளையும்!''

''அதான் எடுத்தாச்சு வளர்த்தாச்சு கொடுத்தாச்சே!''

''இதென்ன புதுப் பிரலாபம்?''

''இந்த நாளிலே பிள்ளையை வாங்கறதேது? பிள்ளையைக் கொடுக்கறதுதானே உண்டு!''

''நம்ம பிள்ளை நல்ல பிள்ளையம்மா.''

''அரசப் பிரதட்சிணம் பண்ணி இடதுகையாலே சாப்பிட்டு...''—

''கோவில் படியை நெய்யாலே மெழுகி, பிள்ளைப் பூச்சி முழுங்கி—''

''தவங்கிடந்து ராமேசுவரம் போய்''—

''உச்சிப் பிள்ளையாருக்குத் தினம் ஒரு குடம் காவேரியிலிருந்து ஈரப்புடைவையோடு ஜலம் எடுத்து வந்து —''

''ஆசையாச் சுமந்து அருமையாப் பெற்றபிள்ளை. எங்கேயோ படித்துறையில் கண்டெடுத்து வளர்த்த பிள்ளையல்ல.''

''வாழைக்காய்க் கூட்டுமாதிரி—''

'நன்னாயிருக்கு! அம்மாவும் பெண்ணும் மாத்தி மாத்தி எதிர்ஸ்வரம் போட்டு ஸம்பந்தி மண்டையை உருட்டு உருட்டுன்னு உருட்டறது!''

ஆமாண்டி ஸுபா. அவர் மண்டைகூட நன்னா, பெரிசா உருண்டையா இல்லே? குடுமியைப் பிச்ச நலங்குத் தேங்காய் மாதிரி?''

''மண்டை பெரிசானால் மூளை ஜாஸ்தி.''

''கெட்டிக்காரர்.''

''ஸந்தேகமா? இல்லாட்டா இவ்வளவு பெரிய காரியத்தை இவ்வளவு சொல்பத்துலே அடக்கிவிட முடியுமா?''

''அதுக்கென்ன பண்றது? அவாவாளுக்கு முடிஞ்சுது தானே?''

''அழகாயிருக்கு நீ பரிஞ்சுக்கறது! நாம் மாத்திரம் கொல்லையிலே யானை கட்டி வாழறோமா? ஆனால், அதுக்காக சமயம் போது இல்லையா? எல்லாத்துக்கும் ஒரே பெப்பேயா? எனக்கும்தான் இல்லை. ஆனால், உன் கல்யாணத்தின் போது பந்தல் மாத்திரம்—''

''ஐயோ போறுமேம்மா! சற்றே நிறுத்திக்கோயேன், கேட்டுக் கேட்டு எங்களுக்கே காது புளிச்சுப் போச்சு.''

''அதுக்குச் சொல்ல வல்லே—''

''என்ன சொல்லவல்லே? மீனாட்சியம்மன் கலியாணம் கூட எங்கள் கலியாணத்துக்குப் பிந்திதான் போயேன்—''

அவரவர் யோசனைகளின் படலங்கள் அவரவர்களை மூடியதில் பேச்சு சற்றே மறந்தது.

''கிரிக் க்ரிக் கிர்க்—கிர்க்—''

க்ரோட்டன்ஸில் பாச்சை.

அந்தி இருளில் முகங்கள் கரைய ஆரம்பித்துவிட்டன.

"ஆமாம்—ரொம்ப அழகா கல்யாணம் பண்ணி வெச்சியே!"—ஸுபாவின் குரல். சிலந்தி நூல் போல், குரல் இருளினின்று, இழை பிரிந்து இருளூடே வந்து எட்டிற்று.

"ஏன், நான் பண்ண கலியாணத்துலே என்ன கோணலாம்?"

"போறும் நிறுத்திக்கோ! நீயும் நீ பண்ணின உன் கல்யாண வைபவங்களும்—" தன்னிடத்திலிருந்து ஜயா திடீரெனச் சீறினாள். அம்மா கூடக் கொஞ்சம் மிரண்டு போனாள். அவள் இடத்தில் இருளில் அவள் உருவம் சற்று உள்ளுக்கு இழுத்துக் கொண்டாற் போலிருந்தது.

"நீ தெருவையே அடைச்சுப் போட்ட பந்தலும் வேளைக்குப் பதினாறு பரிசாரகன் பரிமாறினதும் ஊஞ்சலைப் பூவாலேயே இழைச்சதும் யாருக்கு வேண்டிக் கிடக்கு?"

"ஊரே மகிமையாத்தான் பேசிண்டது."

"ஒண்ணுந் தெரியாத மாதிரி வேஷம் போடாதே அம்மா—" ஸுபா பல்லைக் கடித்தாள். "இப்போ எப்படி இருக்கோம்?"

"மூணும் மூணு தினுஸாய். ஸுபாவாம், ஜயாவாம், தயாவாம்! நாமும் நம்ம பேரும்!"

"உங்க அப்பா ஆசையா வெச்ச பேர்களடீ!"

"ஆமா. ஆசையா வெச்சதுளே அவலமாய் முடிய?"

"உஷ்? ஸுபா. சற்றே அடக்கிக்கோ. நம்மை யாராவது கவனிக்கப் போறா—"

''யார் வேணாலும் கவனிக்கட்டும். நான் அடங்க மாட்டேன்—நான் பிடாரி—எனக்கு வெறி வந்திருக்கு? கூரைமேலே ஏறி நின்னு கூவுவேன். என்னை யார் கேக்கறது!''

''சரி. கத்து. நன்னா கத்து. சுபம் நடக்கிற இடத்தில் உனக்குத்தான் தெரியும்ணு அடிச்சு விழு—''

''அதுக்கென்ன பண்றது? என்னிக்கும் என் கஷ்டம் என்னுதுதானே!''

''யார் இல்லேன்னா?''

''ஏதோ இந்தமட்டுக்குமாவது ஒத்துக்கறையே! தோ பார்; மன்னன் மலையா வெச்சிட்டுப் போகாவிட்டாலும் இடுப்பு நிறைஞ்சு உடுக்கவும் வயிறு நிறையத் திங்கவும் எனக்குக் குறைவில்லை, உடுக்கவும் தான் உடுக்கிறேன்' தின்னவும்தான் திங்கறேன். யாரிருந்தாலும் போனாலும் வயிறு கேக்கிறதா? அழுந்த வாரிப் பின்னிக்கவும் பின்னிக்கிறேன்; ஒரு சமயம் அரை சமயம் கனகாம்பரமும் டிஸம்பரும் சூட்டிக்கவும் தான் செய்யறேன். எனக்கு மிஞ்சி யாருன்னு வளையவும் வரேன். ஆனால் என் வீட்டில் மாஸம் எட்டணாவுக்குச் சாக்கடை வாரும் லச்சி நெற்றியில் காலணா அகலத்துக்குத் துலங்கும் குங்குமத்துக்கெதிரே என்ன விதவிதமான பட்டாடையும் நகையும் பண்டங்களும் ஐம்பம் சாயறதோ? ஒரு சமயம் போதுக்கு அவளுக்கு இருக்கிற யோக்யதை எனக்கு உண்டோ!—''

''ஸ--பா—''

தூரத்தில் ஸ்டேஷனை நெருங்கிக் கொண்டிருக்கும் ரயில் 'கிறீர் ஈச் ச்ச்'—என ஊதிற்று.

''என்னை என் பேரையிட்டே அழைக்காதே—என்னைக் கேலி வேறே பண்ணனுமா? ஸ--பாவாம்

ஸுபா! என் பேரே ஒரு பொய். அதனாலே நானும் ஒரு பெரும் பொய்—பொய்—பொய்—''

விக்கல்கள் துக்கத்தின் சுக்கல்கள்.

''ஸுபா. உன் கஷ்டம் எனக்குப் புரியலியா? ஆனால் இந்த வயசில் என் வயிற்றுப் பிறப்பு மூணும் மூணு கோலமா நிக்கறதைப் பார்த்து ஸஹிச்சுண்டு நான் இன்னும் இருக்கணும்னு என் தலையில் எழுதியிருக்கே. அதுக்கென்ன சொல்றே!''

''இதுதானே உன் பெருமை! ,நான் உலகத்தை எப்படித் தாங்கறேன்? எல்லோரும் என்னைப் பாருங்கோ?' —இதுதானே உன் பல்லவி!''

''என்னை என்ன பண்ணச் சொல்றேள்?''

''அம்மா, நீ என்ன தான் மேருவாயிரு. உன் பெண்களை நீ கல்யாணம் பண்ணிக் கொடுத்த விஷயத்தில் உனக்கு ராசியில்லை ஒப்புக்கறையா?''

''அத்தோடு இல்லை ஐயா. நமக்குப் பேர் வெச்சதிலும் ராசியில்லே.''

''நன்னாச் சொன்னே—நீ ஸுபா, நான் ஐயா. நாம் படிக்கிறோம் கேட்கிறோம். வெற்றியின் அறிகுறியா. இங்கே கட்டடம் கட்டினா, அங்கே ஸ்தூபி எழுப்பினான்னு. ஆனால் தோல்வியின் வெற்றிக்கு நான்தான் கோரி, இத்தனை நாள் கழிச்சு இப்போ சொல்றேன். என் வீட்டில் எனக்கு மாத்துப் பேர் என்ன தெரியுமோ? தொடைச்சல்ஸ்!'''

''சே!''

''சேயாவது சூயாவது! வீட்டில் யார் எப்படியிருந்தாலும், மாமனார் குதிரை வாலில் கட்டிப் பறக்க விட்டாலும், பிள்ளைக்கு வியாபாரத்துலே நஷ்டமானாலும், நாலு நாத்தனார்களுக்குக் கலியாணமாகி அதனால்

கடனானாலும்' மச்சினன் சினிமாவிலும் ஓட்டலிலும் அனுப்பற பணத்தையும் படிக்கிற நேரத்தையும் செல வழிச்சிட்டுப் பரீக்ஷையில் 'டக்' அடிச்சாலும். எல்லாம் வந்தவள் படி மிதிச்ச வேளை—! மாமியார் இப்போ இலை மறைவு. தலை மறைவு கூடப் பார்க்கறதில்லே 'மூத்த பிள்ளைக்குக் கலியாணம் பண்ணி. நாட்டுப் பெண் வீட்டுக்கு வந்த மிச்சம் ஆகாசமும் பூமியும்தான் போலிருக்கு! இன்னுமிருக்கு. இளைய பிள்ளை சீமந்தம் என்கிறார். இத்தனையிலும் வருஷம்' தப்பினாலும் குழந்தையோ. குறைப் பிரசவமோ தப்பரதில்லை' ஸுபா ஒரு பழம் புடவை தரமாட்டாளா. அம்மா ஒரு கல்சட்டி கொடுக்க மாட்டாளா, அம்பி சங்கராந்தி மஞ்சள் குங்குமம் பணத்தில் இத்த வருஷம் ஒரு ரெண்டு ரூபாகூட ஏற்ற மாட்டானா என்று அலையறேன், வலை போடறேன். மீன் சிக்காமல், பழம் பொத்தல் கூடை மாட்டிண்டாலும் அதையும் விடுவதற்கில்லை ஆண்டி அப்பன். ஐயாவின் ஐயபேரிகையை இன்னும் கொட்டணுமா, இது போதுமா?''

''நம்ம ரெண்டு பேரும்தான் இப்படி இருக்கோம்னா தயாவைப் பாரேன்!''

''தயா என்ன பேச்சு மூச்சே காணோம்? உடம்பிலே உசிர் இருக்கா. தொட்டுப் பாரு—''

''நமக்கெல்லாம் உசிர் அவ்வளவு லேசாப் போயி டுமா? உசிரோடு செத்திண்டிருந்தாலும் இருப்போமே ஒழிய, உசிர் விட்டுடுவோமா?''

''நாம் தான் வாயறியாமல் கத்தறோம். தயா வாய் திறக்கிறாளா பார்,''

''தயாவே கொஞ்சம் அழுத்தக்காரி.!'

"சும்மா சொல்லாதேயுங்கோடி அவளை! பிறர் கஷ்டம் துளிக்கூட சஹிக்க மாட்டாள் குழந்தை."

"அதனால் தான் அவள் தயா."

"அவள் பேர் தயா. அவள் புருஷன் பேர் தீனபந்து, கேட்கணுவா கிருபையின் பிரவாகம்!"

"தயா சிந்தோ தீன பந்தோ—என்ன தயா, பேச மாட்டையா," .

"தயா மௌன சாமியாராயிட்டாள் அம்மா."

"புருஷன் சாமியாரானால் அவள் மௌனமாவாவது இருக்க வேண்டாமா?"

"இந்த வேடிக்கை நிஜமா உங்களுக்கு வேண்டி யிருக்கா? உங்கள் மாதிரி கொட்டி ஆத்திக்கிற கஷ்டமா அவள் கஷ்டம்? குழந்தையை ஏன் கொத்திப் பிடுங்க றேள்?" ஸுபா தயாவின் கையை இழுத்துத் தன் கையுள் வைத்துக் கொண்டாள்.

"தயா. உன் கை எப்படிப் பட்டுப் போல் மெத்துனு இருக்கு! அம்மா சொல்றமாதிரி, எப்படி தயா நீ ஸஹிச் சிண்டிருக்கே? நான் சில சமயங்கள், நம்மைப் பற்றி யோசனை பண்ணுவேன். நான்தான் அழிஞ்சாச்சு. ஐயா மூழ்கிப் போயாச்சு. ஒரு தினுஸாய் எங்கள் வாழ்க்கையில் இனிமே மாறுதல் இல்லைன்னு முடிவு கட்டியாகி விட்டது. ஆனால், அப்படியுமில்லாது இப்படியுமில்லாத நிலைமையை நீ எப்படிப் பொறுத்திண்டிருக்கே? எங்கள் மாதிரி ஒரு சமயமேனும் வாய்விட்டுக் கத்த மாட்டே? அதுவே எனக்கு அதிசயமாயிருக்கு!"

"அஸிகையா யிருக்குன்னு நிஜத்தைச் சொல்லு."

"தயா, தயா ஏ ஊமை!"

''என்ன? சொல்ல என்ன இருக்கிறது?'' தயா பெருமூச்செறிந்தாள்.

''என்ன இல்லை! விட்டுப்போய் வருஷம் எட்டாறது. நீ குங்குமம் இட்டுண்டிருக்கே. நான் இட்டுக்கலே, எனக்கும் உனக்கும் என்ன வித்தியாசம்?''

''என்ன ஸ்பா, ஏன் கொடுமை பேசறே?''

''நான் கொடுமை பேசலேம்மா. உள்ளதைச் சொல்றேன். நெய்யில் வதக்கினால் தேவலையா. நெருப்பில் சுட்டால் தேவலையா பண்டத்தின் வேதனை ஒண்ணு தானே! தயா, நீயா என் எதிரில் தொட்டுக் கொள்ள மாட்டாய்; இதோ. உன் கையை உன் நெஞ்சில் வெச்சுக் கேக்கறேன், தீனபந்து திரும்பி வருவான்னு உனக்குத் தோணறதோ?''

''எனக்கென்ன தெரியும்? நாம் என்ன முக்காலமும் அறிஞ்சவளா?''

''உன் நம்பிக்கை தான் என்ன?''

''நம்பிக்கை இன்ன உருன்னு யார் கண்டது? நாமா நினைக்கிற உருவைத் தவிர அதுவா அவாவாளுக்குத் தக்கபடி சுயமா, தானா, தனியா எடுத்து அவாளே அறியாமல் அவாளைத் தாங்கற நிஜ உரு ஒண்ணு அதுக்கிருக்கே!''

''தயா, கொஞ்சம் தயை புரி, அப்பாவின் பாண்டித்ய மெல்லாம் உனக்கே ஸாஸனம்னு ஒப்புக்கறோம், ஆனால் பளிச்சுனு சொல்லேன்,''

''இப்போ நீங்கள் சொன்னதெல்லாம் விடப் புதிசா நான் என்ன சொல்லப் போறேன்!''

''சொல்லேன்.''

''நம் துக்கம், தோல்வி, அழிவு இவைகளே நம் பக்க பலங்கள்.''

"இதென்ன அர்த்தம் பண்ணற அனர்த்தம்?"

"ஆமாம். இதுவும் பொருள் காண்பதின் ஒரு விதம்."

"ஓ; நீ சொல்றையே, நம்பிக்கையின் நிஜ உரு இதுதானா?"

இல்லை என்பதற்கு உண்டோ?"

"இருந்தாலும் தயா, ஒரு நாளா இரு நாளா? நாளைக்கு, நாளைக்குன்னு ஒண்ணா, ரெண்டா? எட்டு வருஷம்! ஒரொரு சமயம், ஒரு ஒரு நிமிஷமும் கழுத்தின் மேல் இரும்புக் குண்டாய் இறுக்கறது எனக்குத் தெரியாதா?"

"நாளை, நாளை! இருக்கும் வரை காலத்துக்குக் கணக்கேது? நாம் போன பின்னும், இன்று போயும் 'நாளை' உண்டு. உசிரே அதுதானே! நம் தோல்வியும், துக்கமும் அழியுமா?"

"நீ என்ன தான் சொல்லு; இனிமேல் உன் புருஷன் திரும்பி வந்தால் அதிசயம்தான். ஒண்ணு: அன்னிக்குச் சாமியாரோடு ராவோடு ராவா ஓடிப் போனானே, அப்படியே அவனும் காஷாயம் வாங்கிண்டிருக்கணும்; இல்லாட்டா சொல்ல வாய் கூசறது—"

"சம்பந்தம் பிரஸ்தாபமாகும் போதே எங்காத்துலே சொன்னா. அவாளை என் மாமனாருக்குத் தெரியும். பையன் ஒரு தினுஸா எதிலேயுமே பற்றில்லாமல் ஒத்தரோடும் பேசாமல் மணிக் கணக்கில் உட்கார்ந்த இடத்தை விட்டு அசையாமல் ஞானம் மாதிரி ஒரு தினுசாய் இருப்பான்னு சொன்னார், ஆனால் அப்பாதான் பிடிவாதமா, 'பையன் தேஜஸ்ஸாயிருக்கான், ஜாதகம் பிரமாதமா பொருந்தியிருக்கிறது, தயாவுக்கு ஜாதகத்திலே இரண்டு பிள்ளையும் ஒரு பெண்ணும் இருக்கிறது'ன்னு

முனைஞ்சு நின்னுட்டார். யார் தலையெழுத்தை யார் மாத்தறது? எழுதினவனாலேயே முடியாதே!''

அதே சமயத்தில் மணவறையில் ஸம்பத் தன் மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்தான் :

''தயா தூய்மையானவள். வாழ்க்கை இன்னதென்று அறியுமுன்னால் சாந்திக்கு முன்னாலேயே அவள் கணவன் காணாமல் போய் விட்டான். தயா ரொம்பவும் பட்டவள். அவளை நாங்கள் எங்கள் உள்ளங்கையில் ஏந்திக் கொண்டிருக்கிறோம். அவள் மனம் நோக நீயும் காணக் கூடாது—''

—''அதெல்லாம் அந்தக் காலம்......''

—தெருவில் யாரோ உரக்கப் பாடிக் கொண்டே போனான்.

உள்ளே ஸம்பத் இரைந்து கொண்டிருந்தான்.

''அந்த நாளில் அம்மா பற்றுக் கைக்கு ஜலம் கேட்டால் காதில் விழாத மாதிரி போய்க் கொண்டேயிருப்பேன், இப்போ என்னடா என்றால் கைக் குழந்தைக்குத் தலை துவட்டிக் கொண்டிருக்கிறேன். அம்மா போய்ச் சேர்ந்தாளோ அவள் இடிச் சொல் தப்பித்தேன். வீட்டில் இரண்டு பொம்மனாட்டிகள் இருக்கிறீர்கள். இந்த மூணு பசங்களை மேய்க்க வக்கில்லை. ஒவ்வொருத்திக்கும் வீட்டு ஆண் பிள்ளையைவிட ஜோலி தலைக்கு மேல். நிற்கிறது தயா. ஏ தயா, தயா? எங்கேயாவது பரோபகாரம் பண்ணப் போயிட்டாளா?''

அடுக்குள்ளிருந்து ஜானகியின் குரல் எட்டிற்று.

''அக்காவுக்கும் எனக்கும் நீங்கள் வெளியில் போயிருந்தப்போ தர்க்கம்.''

''உங்களுக்கு வேறென்ன வேலை?''

"யாரோ பிச்சைக்கு வந்தவளை விரட்டிட்டேனாம்—"

காதில் வாங்கிக் கொண்டதும் வாங்கிக் கொள்ளாத துமாய் ஸம்பத் மாடியேறினான். "ஒரு நாளைப் பார்த்தால் போல், ஒரு நாளைக்காவது ஆபீஸைப் பத்து மணி முள் முனையில்லாமல் அடைந்ததில்லை. தினமும்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். வருஷக் கணக்காய்!— இதென்ன வீடோ, என்ன குடித்தனமோ."

தயா ஜன்னலண்டை நின்றிருந்தாள். அரவம் கேட்டுத் திரும்பிச் சட்டென, கண்ணில் ஏதோ தூசி விழுந்த மாதிரி கசக்க முயன்றாள்.

"என்ன தயா? இந்தப் பயலைப் பார்த்துக்கொள்ளக் கூடாதா?" அவன் சொல்லி முடியும் வரை பயல் காத்துக் கொண்டிருக்க வில்லை. 'அத்தே!' அப்பா கையிலிருந்து தாவி விட்டான். இரண்டு அடி முன் ஓடி வந்து தாங்கிக் கொண்டாளோ பிழைத்தது,

"என்ன மூக்கு நுனி சிவந்து 'பட் பட்' பண்றது? முட்டி ஜலதோஷமோ?"

அவள் முகத்தில் புன்னகை கட்ட வில்லை.

"ரொம்பக் கோபமோ? கோபம் வராதவாளுக்கு கோபம் வந்தால் பயமாயிருக்கிறதே!"

"கோபிக்க நான் யார் அண்ணா? எனக்குக் கோபம் இல்லை. மனம் தான் குழம்பறது. மறுபடியும் நிலைப்படும் வரை அவஸ்தை தானே!"

"தயா, ஒண்ணு சொல்கிறேன். வருவோருக்கெல்லாம் போடுவதனால், நாமும் ஓடு எடுத்துக்கொண்டு அவர்களோடு கிளம்பிவிட வேண்டியதுதான்! பிச்சையெடுப்பதில் வெற்றி பெறுவது எப்படி என்று முறை வகுத்துப் புஸ்தகம் போடும் அளவுக்கு அது தொழிலாய் முற்றிவிட்டது தெரியு மோன்னோ?"

அவள் செவி வாங்கியதோ இல்லையோ, தனக்குத் தானே பொருமிக் கொண்டிருந்தாள்.

‘‘படியேறி மரமாத் தழைஞ்சு ‘அட்சதை போடுங்கோ’ என்று கேட்கிறாள். ‘போ போ! உன் மாதிரி எத்தனையோ பேர், இதே வேலையாப் போச்சு!’ மன்னிக்கு ஏதோ குழந்தைப் பிடுங்கல், வேலையலுப்பு என்றே வைச்சுக்கறேன், வந்தவளும் அப்படித்தான் கொண்டாளோ என்னவோ, சாந்தமா, ‘அப்படிச் சொல்ல ஆகாது குழந்தை. நான் வயஸானவள், சுமங்கலி, வெள்ளிக் கிழமை வந்திருக்கிறேன். நான் பிச்சையெடுக்கிறவள் இல்லை. வேண்டுதலையில் மடியேந்தறேன். இல்லை என்காதே’ன்னு புத்தி மாதிரி. இன்னொரு சான்ஸ் கொடுக்கற மாதிரி சொல்றாள். ‘இது மாதிரி வேஷம் போடறவாளையும் எத்தனையோ பேர் பார்த்திருக்கிறேன்’ என்றால் என்ன அர்த்தம்? அரிசியை எடுத்துண்டு நான் வந்திண்டே இருக்கேன்; அதற்குள் அந்தப் பாட்டி ஒண்ணுமே பேசல்லை. குறுஞ்சிரிப்பு சிரிச்சுண்டு விருக்குனு போயிட்டா, ஏந்திய கையோடு துரத்திண்டே போய்த் தெரு முனை வரைக்கும் தேடினேன். ஆனால் மின்னலா மறைஞ்சுட்டா. ஒரு நிமிஷம் திக் பிரமை பிடிச்ச என் நினைப்பே எனக்கில்லை. நினைவு திரும்பினதும் பார்த்தால் கையில் அரிசி காணோம். ஆனால் தலைப்பு கனத்தது. என்னையுமறியாமல் மடியில் கட்டிண்டிருக்கேன். அப்படி நடுத் தெருவில் மடிப்பிச்சையோடு தனியா நான் நிக்கிறதைத் திடீர்னு நானே உணர்ந்ததும் அடி வயிற்றில் நெருப்பு வெச்ச மாதிரி சுறீல்னுது. அதிலிருந்து தான் தேறப் பார்க்கிறேன். ஆனால் தேறுதல் வரவில்லை அண்ணா; இதுவரை தெரியவில்லை. ஆனால் இன்னிக்குத்தான் பயமா யிருக்கு. என் நம்பிக்கை ஆட்டம் கொடுத்துப் போச்சோ? நான் இது வரை நினைச்சிருந்த மாதிரி ‘நாளை’ என்பது கிடையாதோ? இன்று தான் உண்டோ?’’

குரல் இழுத்த திரி மாதிரி சிந்தனையில் மங்கிற்று.

''அவளே வந்தாளா? இல்லை, வந்து காண்பிக்க வந்தவளா? தும்பையா நரைச்ச கூந்தல் மஞ்சள் கூடப் பூத்து விட்டது. மங்கலம் யாருக்கும் பிறவியோடு பிறந்தது. வேஷம் போடுவதும் போட்டுக்கறதும் நாமாத்தான் என்பதற்கு அத்தாட்சி மாதிரி. வேஷம் வேஷம் என்று கொண்டே ஒரு நாள் வேஷம் கலைந்த பின்னும் வேஷம் மாறாமல் இருந்தால் அப்போ அது வேஷமா? நிஜமா? அப்பவும் அது வேஷந்தானா, இல்லை, வேறு ஏதாவதா? எது நிஜம்?''

சம்பத் அடிக்கடி கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். நேரமாகி விட்டதே. ஜானகி தட்டுப் போட்டு விட்டாளா, இல்லையா. தெரியவில்லையே?

* * *

ஸம்பத் சாப்பாட்டின் முடிவை நெருங்கிக்கொண்டிருந் தான். எதிரே தயா தன் இலையில் சாதத்தை வைத்துப் பரிமாறிக் கொண்டு, தான் சாப்பிட ஆயத்தமாகிக் கொண்டி ருந்தாள். ஜானகி அடுக்குள்ளில் ஒழித்துக் கொண்டி ருந்தாள்.

மோருஞ் சாதத்தைக் கப்பிக்கொண்டே ஸம்பத், ''என்ன தயா இன்னிக்கு இலை மரியாதை?''

''என்னவோ இன்னிக்கு உனக்கு டிபன் பொட்டலம் கட்டிக் கொடுத்ததில் மிஞ்சினதை வீணாக்க மனமில்லை.''

''ஆனாலும் கையகலம்தானே இருக்கிறது?''

''சரியாப் போச்சு! இதை வைச்சுண்டு அசுவமேத யாகம் பண்ணலாம்!''

''ஜானகி. இன்னும் கொஞ்சம் சாதம் போடேண்!''

உள்ளிருந்து மொண மொணப்பும், சிப்பல் தட்டும் வெண்கலப் பானையும் இடித்துக் கொள்ளும் சப்தங்களும் வந்தன.

''என்ன ஜலதரங்கம் அடிக்கிறாய்?''

''ஆமாம்! பின்னே என்ன? வடியலிலேயே கொஞ்சம் குறைஞ்சு போச்சு, ராவேளை ஒரு கவளம் குறைஞ்சால் தான் என்னன்னு நான் அசுவாரஸ்யமா இருந்துட்டேன்னா இன்னிக்கின்னு உங்களுக்கு மோருஞ் சாதத்திலே சந்தேகம் வரது.''

''சரி சரி, வேண்டாம். ஆனால் ஜானகி நீ ஆனாலும் இவ்வளவு சுட்டிச் சமத்தாய் இருக்க வேண்டாம். இந்த வீட்டில் இருக்க வேண்டிய அவசியமுமில்லை. 'அரை' என்றால் 'உரை', 'உரை' என்றால் 'காணோம்' என்கிறாய்—''

''அன்ன பிச்சை!''

ஸம்பத்துக்கு வந்த சிரிப்பில் பசியெரிச்சலும் கலந்து குரல் கடுத்தது.

: போ'ப்பா போ! சாப்பாடு ஆகிவிட்டது!''

''இரு இரு. வந்துாட்டேன்.''

தன் இலையிலிருந்து சாதத்தை அள்ளிக்கொண்டு தயா வாசற் பக்கம் ஓடினாள்.

''தயா! தயா!'' அவனுக்கும் புரியாமல் ஸம்பத்துக்குச் சீற்றம் மூண்டது.

கலத்திலிருந்து எழுந்து கைகூட அலம்பாது வேகமாய்ப் பின்னாலேயே சென்றான். ஆனால் அதற்குள் தயா போய்த் திரும்பி ரேழி வாசற்படியில் எதிர்ப்பட்டு விட்டாள். ஓட இடமின்றி எதிர்ப்பில் திரும்பிவிட்ட வேட்டைபோல்

திடீரென அவளிடமிருந்து ஒரு உக்கிரம் வீசிற்று, கூடத்தின் மின்சார வெள்ளத்தில் அவள் நெற்றியின் வெளிர் பளீரிட்டது. விழி மேட்டில் விளக்கின் ஒளி பட்டு, கருவிழியின் உள் மணியிலிருந்து ஒளிச் சிதர்கள் தெறித்தன. நெற்றிக் குங்குமம் கண் சிமிட்டிற்று. உள் ஏற்றிக் கொண்டால் போல் உடல் முழுவதும் தகதகத்தது. வாய் குழறிற்று. கைகள் ரேழியிருளைக் காட்டிக் காட்டிப் பறந்தன.

“பாழு—பாழு—யாழு பாழ்—விழட்ட இழுந்தியே யாழு—பாழு—”

ஸம்பத் ஒரு அடி பின்னடைந்தான்.

அவள் மேல் ப்ரமித்த பார்வையைப் பெயர்க்க முடியவில்லை. முட்டியின் கீழ் கால் விட்டது.

# சுருதி

கானம் பெருகிக்கொண்டே வந்து அவனைக் கட்ட ஆரம்பித்தது.

குப்பை மேடுகளிலும் குன்றுகளிலும் குகைகளிலும் சுற்றிக்கொண்டிருந்த சிந்தனைகள் ஒரு முகப்படத் துவங்கின.

நெருப்பு உருகி ஒழுகுவதுபோல் சுருதியோடிழைந்த குரல் உள்வழிந்து நிரம்பி மற்ற ஓசைகளின் உணர்வை அப்புறப் படுத்தியதும், நிதானமாய், படிப்படியாய், வேகமாய் அகாரங்கள் மேலே கொக்கிகளை மாட்டி, குழந்தையைக் குளத்தில் முழுகக் கையைப் பிடித்து இழுப்பதுபோல், அவை அனைத்தும் அத்தனைக் கைகளாய் அவனைப்பற்றி தோட்டத்திலிருந்து வீட்டுள் இழுத்தன.

தன்னைத் தனக்கு ஞாபகமூட்டிக்கொள்ள, நெற்றிப் பொட்டைத் தேய்த்துக்கொண்டு நின்றான். இழுத்துப் பிடித்த கம்பியால் நினைவு ஒருகணம் நிலைத்து நின்றது. பெருமூச்செறிந்தான்; உள்ளே சென்றான்.

வாசற்படியில் சற்றுத் தயங்கினான். அவ்வறையிலேயே வெளிச்சம் மட்டும்தான்.

எப்போதும் அங்கு ஒரு சிறு இருட்டு தேங்கியேயிருந்தது. அவ்விடந்தான் அவனுக்கு இஷ்டம்.

தம்பூராவைத் தழுவிய அவள் முகம் அவன் பக்கம் திரும்பியது. உள்ளே வந்து அவள் அருகில் உட்கார்ந்தான்.

அவளுடைய விரல்கள், தந்திகளின் மேல் தாவிக் குதிப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, அந்நாதம் அவன் மனத்தைத் தன்னுடன் பிணைத்துக்கொண்டது.

அவள் கண்கள் திடீரென நிறைந்து கண்ணீர் கன்னங்களில் வழிந்தோடிற்று. அவன் அதைப்பற்றி ஒன்றும் செய்யவில்லை. அவளும் துடைத்துக் கொள்ளவில்லை. அதுவே அவளுக்குத் தெரியுமோ தெரியாதோ? பக்தியின் பரவசமா? ஆனால் அவள் பாட்டைக் கேட்கையில் அவனுக்கு உருக்கம் ஏற்படவில்லை. ஏதோ சொல்லவும் முடியாது மெல்லவும் முடியாததொரு சங்கடந்தான்; இன்னதுதான் பாடுகிறாள் என அறியக்கூட முடியவில்லை. அவள் எழுப்பிய ஓசையின் புதுமையைத்தான் நுகர முடிந்தது.

இடது கையால் மெதுவாய் அவன் முகத்தை அவள் தொட்டாள். விரல்கள் நெற்றியின் சரிவிலிருந்து ஆரம்பித்து, புருவங்களை விளம்பி, மூக்குத் தண்டின் வழி கீழிறங்கி, உதடுகளை எழுதி, கன்னங்களைத் தடவி நெளிந்தன.

அவள் விரல் நுனிகளின் வழி நீலப்பொறிகள் பறந்து அவனை எரித்தன.

புதிதாய் ஓர் எழுத்தை எழுதக் கற்றுக்கொண்ட குழந்தைபோல், அவள் முகம் மலர்ந்தது. கண்கள் மகிழ்ச்சியில் அகல விரிந்தன.

அவனுக்கு மூச்சுத் திணறிற்று. அருவருப்பில் உடல் குலுங்கிற்று. கழுத்தில் இறங்கிக் கொண்டிருக்கும் அவளுடைய கையைச் சற்றுக் கடுமையாகவே இழுத்துப் பிடித்துத் தடுத்தான்.

அவள் விடாது பயிலும் சுருதியும், அறையின் மங்கிய வெளிச்சமும் குரல் வளையை அமுக்கின.

''இதென்ன, புது விளையாட்டு?''

அவள் ஒன்றும் பதில் பேசவில்லை; புன்னகை புரிந்தாள். அவள் விரல்கள் சுட்டன.

''நீ இப்போது பாடினதென்ன?'' தம்பூராவின் ஓசை அறையை நிறைத்தது.

நிதானமாய்ப் பதிலை, அளந்துவிடுவதுபோல், ''உன்னை'' என்றாள்.

''புதிர் போடாமல், பளிச்சினு விட்டுப் பேசேன்!''

''நிஜமாய்த்தான்; உன்னைத்தான்.''

அவள் பதில் அவனுக்குப் பிடிக்கவில்லை.

''அப்படின்னா, எப்படி?''

இயலாத பதிலுக்கு அடையாளமாய் அவள் கையை விரித்தாள். உதடுகள் சிறு சிரிப்பில் பிதுங்கின.

''எப்படிச் சொல்ல? என்னவோ பாடறேன். எதுன்னு இன்னும் சரியாய்ப் பிடிபடல்லே. திடம் பண்ணிக்கத்தான் உன்னைத் தொட்டுத் தெரிஞ்சுக்க...'' பேசிக் கொண்டிருக்கையிலேயே பேச்சு மூச்சாய் அடங்கிப் போயிற்று. பேசிக்கொண்டே அவனை அணைத்தாள். அவன் வெறுப்புடன் தன்னை விடுவித்துக் கொண்டான்.

''எதில்?......''

கேள்வி முடியவில்லை? அவள் 'க்றீச்'சென்று அலறி அவன்மேல் விழுந்தாள். தம்பூரா அவன் மேல் சாய்ந்தது. அவனைப் பிராண்டிக்கொண்டு மடிமேல் விழுந்து ஏதோ குதித்தோடிற்று. அதற்கே சொந்தமான சுவரோரம் போய்ச் சேர்ந்ததும் ''கீச் கீச்...'' செனக் கீச்சிட்டது.

அந்த அலங்கோலத்திலிருந்து தெளிகையில் இரு வருக்கும் சிரிப்பு ஒருங்கே வந்தது.

தன்மேல் சரிந்திருந்த தம்பூரை அவளிடம் கொடுத்தான்.

"ஏது மறுபடியும் உபத்திரவம் ஆரம்பித்துவிட்டது போலிருக்கே!"

ஏனோ தெரியவில்லை. வீட்டில் எலிகள் சதா குடைந்தபடிதான். அவர்களுக்கு நினைவு தெரிந்தது முதல் அவை அடியோடு ஒழிந்த ஞாபகமேயில்லை. ஒரு பத்து நாள் சப்தமிருக்காது; மறுபடியும் ரகளைதான். பொறி வைத்துப் பார்த்தாயிற்று; பூனை வளர்த்துப் பார்த்தாயிற்று; எலிப் பாஷாணம் ஜன்னலில் எப்பவும் டப்பாவில் இருந்தபடியிருக்கும். வருஷத்திற்கு இரு முறை வீட்டைச் சுண்ணாம்படித்து சந்துபொந்தெல்லாம் அடைத்தாகும், ஆனால் எப்படியோ மறுபடியும் வளை வைத்தாய்விடும்,

"இந்த இடத்தைவிட்டால், இந்த வீட்டில் எனக்கு வேறிடம் இல்லையா?"

"எனக்கு இங்கேதான் பாடவறது?"

"இப்போ என்னைப் பாடறதாகச் சொன்னையே அதுமாதிரியா?"

அவள் முகத்தில் அடிக்கடி விளையாடும் முறுவல்மேல் அவனுக்கு எரிச்சலாய் வந்தது, அவள் பதில் பேசாது தம்பூராக் கட்டையைத் தன் தோள்மேல் சௌகரியம் பண்ணிக் கொண்டாள்.

"நீ இன்னும் சொல்லவில்லையே, எப்படி என்று?"

அவன் விரல்கள் தந்திகளின்மேல் தாவிக் குதித்தன. அவன் கேள்விக்கு விடையிறுப்பதுபோல் சுருதி மோதியது.

நச்சரிப்புடன் அவன் வெளியே சென்றான்.

## 2

"என்ன பண்றேள்?"

'உன்னை'. 'உங்களை' இரண்டும் அவளுக்கு இஷ்டம் போல்! அவைகளின் வித்தியாசமும் சமயங்களும் அவளுக்கு இல்லை.

அவன், குனிந்த தலை நிமிர்ந்துவிட்டு, மறுபடியும் புட்டிகளைக் கிளறுவதில் முனைந்தான்.

"எல்லாம் உன் அப்பா பிதுரார்ஜிதம்தான்."

"அப்படீன்னா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள்.

"உங்கப்பாவின் மருந்துப் பெட்டியில் எலிப் பாஷாணம் தேடிக் கொண்டிருக்கிறேன்."

"அப்-ப்-பா!" என்று உடம்பைச் சிலிர்த்துக்கொண்டாள். "பாவம்!"

"எது?"

"எலிகள்தான்!"

"இரக்கம் என்று ஒன்று இருக்கிறதே, அது ரொம்பப் பொல்லாது. நியாயத்துக்கும் அநியாயத்துக்கும் நடுவரையைக்கூட அது அழித்துவிடுகிறது. சமயமும் இடமும் தெரிந்து உபயோகப்படுத்தும் இரக்கம் தான் இரக்கம், பாக்கியெல்லாம் போலி உணர்ச்சி தான்."

அவன் பேச்சை அவள் கவனிக்கவில்லை.

"இதுவாயிருக்குமா?" அவளாகவே பெட்டிக்குள் கையைவிட்டு ஒரு புட்டியை எடுத்தாள்

சட்டென அவள் கையிலிருந்து அதைப் பிடுங்கினான்.

"சரி, சரி; வேறே வினையே வேண்டாம்! இரண்டு சொட்டு போதும், ஆளைக் 'குளோஸ்' பண்ணு!"

"யாரை?" அவளுக்கு முழுக்கப் புரியவில்லை.

"என்னைத்தான்னு வெச்சுக்கோயேன்!" அதை எடுத்த இடத்தில் மறுபடியும் வைத்தான்,

அவள் 'கிளுக்' கென்று சிரித்துவிட்டாள்.

"ஒஹோ? இது தமாஷாக்கும்! சிரிக்கணுமா?"

"அதான் சிரித்துவிட்டாயே!"

மறுபடியும் சிரித்துக்கொண்டே அவன் முழங்கையைச் செல்லமாய்த் தொட்டாள்.

"என்னை அடிக்கடி தொட்டுக் கொள்ளாமல் உன்னால் இருக்கமுடியாதோ? நான் என்ன ஊறுகாயா?"

அவள் குழந்தை மாதிரி உதட்டைப் பிதுக்கினாள் 'இதென்ன' பொம்மனாட்டிக்கு மேலே லஜ்ஜைப் படறேளே! இல்லாட்டா என்னை வெக்கம் கெட்டவள் என்கிறேளா?"

"அப்படியி...ல்...லே" என்று இழுத்தான்.

"பின்னே எப்படியாம்?"

"ஆம். பின் எப்படி?"

# 3

ஓர் இலை ஆடவில்லை என்றால் ஆடவில்லை. படுக்கையில் புரண்டு புரண்டு விரிப்பு முதல் ஆவி கக்கிற்று. அப்புறம் தாங்க முடியவில்லை. மொட்டை மாடிக்கு வந்து உலவ ஆரம்பித்தான்.

மேகங்கள் மதில்களாய் எழும்பி வானத்தை அடைத்து, நிலவை மறைத்து, காற்றையே சிறையிட்டு விட்டன. புழுக்கத்தில் மூச்சு திணறிற்று. தோட்டத்தில் தூரத்து மரங்களின் இலைகள், பதுங்கிய மிருகங்களின் உரோமம் போல் சிலிர்த்துக்கொண்டு அசைவற்று நின்றன.

அவள் இன்னமும் சாதகம் பண்ணிக்கொண்டிருந்தாள். எப்படிப் பண்ணுகிறாள், பாட்டே தன் பிராணனின் மூச்சுப்போல்! அம்மாதிரியான சாதகத்தைக் கேட்கையிலோ, பார்க்கையிலோ, மனத்தில் அச்சம்தான் தட்டுகிறது. பாட்டுக்கூட பிடிக்கவில்லை. பாட்டென்றால் அவனுக்கும் உயிர் என்றிருந்த நாளும் உண்டு. சுமாராயும் பாடுவான்; அவனையும் பாட்டில் விட்டிருந்தால் உருப்பட்டிருப்பானோ?

ஆனால் இப்பொழுது யோசித்துப் பார்க்கையில் மாமா அவனை வேணுமென்றே உருப்பட வைக்கவில்லை. என்று தோன்றிற்று. வீட்டோடிருந்து சொண்டு தன் பெண்ணுக்குப் பணிவிடை செய்துகொண்டிருக்கவே தனக்குள் அவனை நியமனம் பண்ணிக்கொண்டு விட்டார் என்றுதான் பட்டது. மாமா பலே கைக்காரர்.

ஆனால் அவனுக்கும் வேறு வழியில்லை. ஒன்றும் தெரியவும் தெரியாது. சிறு வயதிலேயே தகப்பனில்லை. தாய் குழந்தையைக் கையிலேந்திக்கொண்டு அண்ணனை

அண்டிவிட்டாள், பின்னர் ஒருநாள் அவளும் அவள் கணவன் போன வழி போய்விட்டாள்.

ஆகையால், அந்த நாள் முதல்கொண்டு தன்னை எடுத்து வளர்த்து ஆளாக்கிய மாமன், தன் அந்திப் படுக்கையில், அண்டக்கொடுத்த தலையணைகளுக்கிடையில் சாய்ந்துகொண்டு, தன் பெண்ணை அவன் கையில் பிடித்துக்கொடுத்து, மேல் மூச்சு வாங்க, "எனக்கு அப்புறம் நீதாண்டா இவளுக்கு கதி. இவளுக்கு நீயும் துணையில்லாட்டா இவள் கதி நிர்க்கதி" என்று சொல்லுகையில் மாட்டேன் என்று சொல்லிவிட முடியுமா, என்ன?

மாட்டேன் என்று சொல்லிவிட முடியுமா, என்ன?

மாட்டேன் என்று சொல்லிவிட முடியுமா என்ன?

**மாட்டேன் என்று சொல்லிவிட முடியுமா என்ன?**

அவள் கீழிருந்து அடுக்கும் அகாரங்கள் எழுப்பிய சுருள், படிக்கட்டின் வழி கீழிறங்கி, மன அடிவாரத்தில் புதைந்து கிடக்கும் இருள் கிடங்குகளில் வழி தப்பி அலைகையில், எதிரொலிகள் தாம் எழும்பி அவனை வளைத்தன.

முடியுமா என்ன?

ஒரு நாள் கேள்வியா, இரண்டு நாள் கேள்வியா இது?

முடியுமா என்ன?

அன்று இவள் எப்படி இருந்தாளோ அப்படியே இப்பொழுதும் அவன் முன் எழுகிறாள், வெட்கம் இன்னவென்று அறியாதவள், உள்ளுவகை முகத்தில் திணறத் தலையைக் கவிழ்த்துக் கொண்டு அவள் தகப்பனார் அவன் கையில் சேர்த்து வைத்த கையால் அவனை இறுகப்

பற்றிக்கொண்டு நிற்கிறாள். அரக்குப் புடைவை உடுத்துக் கொண்டிருக்கிறாள்.

'அட, நம்ம சாருக் குட்டியா இப்படி ஆகியிருக்கிறாள்?'

பசும் புற்றரையில் பனித்துளிகள் புல் நுனிகளில் நின்றன. மேல் நீலத்தில் பொன் வில் முளைத்திருந்தது; ஜல ஜரிகை புல் மேட்டிலும் தாழ்விலும் ஏறி இறங்கிக் கொசுவி மிளிர்ந்தது. 'இந்தச் சாரு, சாருக் குட்டியாயிருக்கையில் இவளை முதுகில் புளி மூட்டை தூக்கிக் கொண்டு 'லொங்கு லொங்'கென அவள் குலுங்க, தான் குலுங்க, அவள் சிரிக்க, நான் சிரிக்க இந்த மேட்டிலும் இதன் சரிவுகளிலும் எத்தனை இடவை ஓடியிருக்கிறேன்!"

"டேய்! டேய்! போறும்! போறும்! எனக்குச் சிரிக்க முடியல்லே! வயத்தை வலிக்கிறதே! போது—மே!"

"ஊஹூம்!"

அந்தச் சாருவா இது?

ஸ்ருதி தாரையின் மழைச் சாரலில் புற்றரைகள் கரைந்து வழிந்து அழிந்தன. பச்சைச் சாறு வெள்ளம் கணுக்காலள வுக்குக் கிளு கிளுத்துக்கொண்டு ஓடிற்று.

ஓசை மழையின் மங்கிய இருள் சுற்றிப் படர்ந்தது. இருளிலிருந்து வெள்ளித் திரிகள் பிரிந்து அவன் மேல் நெய்து கொள்ளத் தொடங்கின. தும்பியின் இறக்கையின் நயத்துடன் சன்னமான சல்லாக்கள் அவனைச் சுற்றிலும் மேலும் மோதி அலைந்து மிதந்தன. பல வர்ணப் பட்டுத் திரைகள் அவனெதிரே பிரிந்து அகன்று, அவன் உள் வந்ததும் பின்னால் கம்பீரமான உயரங்களினின்று, கள்ளிச் சொட்டின் கனத்துடன், மடி மடியாய்த் துவண்டு விழுந்து கூடிக் கொண்டன. பாதங்களினடியில் பூமி சிறு சிறு பீங்கான் சக்கிரங்களின் மேல் மேடை போல், மெதுவாய், சாவகாச

மாய்ச் சோம்பலுடன் திரும்பிற்று. விசித்திரங்கள் நெய்த வெண்பட்டுத் துணிதைத்த படிக்கட்டுகள் எதிரே எழும்பின. அவன் ஏற ஏற, அவை வானத்தின் உச்சியிலேயே முடிந்த மண்டபத்துள் சிவப்புச் சால்வை போர்த்தமேடை மேல் அவள் உட்கார்ந்து கொண்டு சுருதி மீட்டிக் கொண்டிருந்தாள். ஊசிமத்தாப்பிலிருந்து உதிர்ந்த நக்ஷத்திரங்கள் போல் அவள் கண்கள் ஜ்வலித்தன. புன்னகையிலிருந்து தலையவிழ்ந்த இதழ்கள் விழுந்து கொண்டிருந்தன. அவளுக்குப் பின்னால், விடி நேரத்தின் செவ்வானம் நாகப்படம்போல் விரிந்து எழும்பியது.

சாருவா? அப்படி அவளைக் கண்டதன் உள்ள எழுச்சியில் தொண்டையை அடைத்தது.

''சா-ரூ!''

அவளை அழைத்ததுதான் தாமதம். மண்டபம் இடிந்தது; செவ்வானம் வெடித்து நீலரத்தம் கோணக்கோடுகளில் கிளைபிரிந்து கொண்டு வழிந்தது, அலறக்கூட நேரமில்லை. மண்டபத்தின் கோபுரம் தன் மேல் இறங்குவதை உணர்ந்தான். வான் வரை வளைந்து வளைந்து ஓடிய படிக்கட்டுகள் சீட்டுக்கட்டாலாயன போல், அடியோடு தகர்ந்து வீழ்ந்தன. திடீரென மையிருள் அவனைச் சுற்றிலும் பிரம்மாண்டமான மதில்களாய் எழும்பி நெருக்கின, அவனின்று வீறலாய் எழுந்த அவன் குரலே, தனி உருப்பெற்று வேற்றுமையுடன் உறுமியது. ''ஜோ''வென்று இன்னொரு இரைச்சல். அதன் அர்த்தம் விளங்கவில்லை. தூரத்திலிருந்து கிட்டக் கிட்ட நெருங்கிக் கொண்டே வந்தது. தூரத்திலிருந்து கூடிக் கொண்டே வரும் நெருக்கத்தின் பயங்கரம் தாங்கவே முடியவில்லை. எதிரில் கண்டவையெல்லாம், வீடு, குடிசை, செடி, கொடிய மரங்கள் எல்லாவற்றையும் வேருடன் அழித்துக் கொண்டு சவங்கள் மிதக்க, அவனை நோக்கி, கக்கலும் கரைசலும் வண்டலும்

மண்ணுமாய்க் கோபக் கண்ணின் சிவப்புடன், புரண்டு வந்து கொண்டிருக்கும் புது வெள்ளத்தின்—

"ஜோ—ஓ! ஓ!"

"டாண்! டாண்!!" கூடத்துக் கடியாரத்து மணியோசையுடன் நினைவு அலறிப் புடைத்துக் கொண்டு திரும்பிற்று.

தான் இன்னும் மொட்டை மாடியில் உலாவிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

இதுவரை கண்டதெல்லாம் பின் என்ன; கனவில்லையா? இவ்வளவு தோற்றங்களும் விழித்துக் கொண்டிருக்கையிலேயே நேர்ந்திருக்கின்றனவா? புரியவில்லை. மணி இரண்டு என்பது ஒன்றுதான் புரிந்தது. அவள் இன்னமும் பாடிக்கொண்டிருந்தாள். புரியாததொரு சீற்றம் அவனுள் எழுந்தது. திடுதிடுவெனக் கீழேயிறங்கிச் சென்றான். மாடியின் அடிவாரத்தின் திருப்பத்தில் மாட்டியிருக்கும் மாமன் படத்திலிருந்து விசனம் நிறைந்த அவர் பார்வை அவனைக் குற்றம் சாட்டிற்று.

ஒருக்களித்திருந்த கதவைத் தடாலென்று திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

"ஏன் இன்னம் நேரமாகவில்லையா?" என்றான் எரிச்சலுடன்.

அவளுடைய கற்பனையின் ஓட்டத்தில் அவன் குறுக்கிட்டமையால், அவளுக்கு முகம் சுளித்தது. பெருமூச்செறிந்துகொண்டு, தம்பூராவை மடி மேல் கிடத்தினாள்.

"எனக்கு எல்லா நேரமும் ஒண்ணுதானே!" என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

"இருந்தாலும் நாங்கள் மனுஷ ஜன்மந்தானே!"

"அப்படியானால் நான் பேயா?" என்று சிரித்தாள். அவள் நீட்டிய கைக்கு எட்டாமல், அவன் அவளை மௌனமாய்க் கவனித்துக் கொண்டிருந்தான். விழிகளில் அவள் மைதீட்டியிருந்தாள். அவனுக்கு ஏனோ அது அருவருப்பாயிருந்தது.

திடீரென்று, "சாரு!" என்றான்.

'ஊம்?' என்றாள், குழந்தையைத் தடவுவது போல் தம்பூராவை அன்புடன் தடவிக் கொண்டு.

"உன்னிடம் ஒண்ணு சொல்லணும்"

"நானும் ஒண்ணு சொல்லணும்னு இருந்தேன். நீங்க சொல்லுங்கோ."

"என்னது?" ஒரு வேளை அவன் சொல்ல வந்ததை அவள் அறிந்து கொண்டு விட்டாளோ!

"ஒண்ணுமி—ல்—லே—ஏ—" என்று இழுத்தாள், அந்தப் பொல்லாச் சிரிப்பு அவளுக்கு மறுபடியும் வந்து விட்டது. சட்டென சிரிப்பை அடக்கிக் கொண்டு, மனத்தைத் திடம் பண்ணிக்கொண்டவளாய் "உங்களை நான் பாக்கறேன்னா நீங்கள் நம்புவேளா?" என்றாள்.

நெஞ்சு வேரோடு பிடுங்கிக் கொண்டு மறுபடியும் தன் குழியில் தடாலென விழுந்தது, கண்முன் பொறிகள் ஊஞ்சலாடின.

"சாரு!"

அவன் கேளாத கேள்விகள் அவனுள் எழு முன்னரே அத்தனைக்கும் ஒரே பதிலாய், "ஆனால். நீங்க நினைக்கற மாதிரியில்லே" என்றாள்.

"ஓ!" ஏமாற்றத்தின் அசதி அவன் மேல் படர்ந்தது.

''ஆனால் நான் எப்படி பார்க்கறேன்னு உங்களுக்கு எப்படிச் சொல்றது? புரியாததைப் புரிஞ்சதை வெச்சிண்டு சொல்லலாம். காணாததைக் கண்டதை வெச்சிண்டு சொல்லலாம். ஆனால் நீங்கள் காண்றதை நான் காணல்லே. ஆனால் நான் இப்போ காண்றதை நீங்கள் காணறத்துக்கில்லை. அப்போ நான் எப்படிச் சொல்றது?'' காரிய சிரமத்தாலேயே அவளுக்கு மறுபடியும் சிரிப்பு வந்தது. கலகலப்பற்ற தோல்விச் சிரிப்பு,

''இருந்தாலும் சொல்லாமலிருக்க முடியல்லே. நான் சொல்லித்தான் ஆகணும். சொல்றேன்—'' என்று மறுபடியும் ஆரம்பித்தாள். திடீரெனப் பேரிரைச்சலுடன் அவள் விரல்களடியினின்று சுருதி கிளம்பிப் பொழிந்தது. அதன் 'திடீர்' அவனைத் தூக்கி வாரிப்போட்டது.

''நான் பாடறேன்னு வைச்சுக்கோங்கோ. பாடறேனா? பாடிண்டேயிருக்கேன். பாடப் பாட என் குரல் சுருதியோடே இழைஞ்சு இழைஞ்சு அப்பறம் அது சுருதியிலேயே கலந்தூட்றது. எனக்கு, அப்பறம் என் குரல் கூட கேக்கல்லே. அது அதுலே மறைஞ்சூடறது, நேரம் இடம் எல்லாமே மறைஞ்சு, இந்தச் சுருதி ஒண்ணுதான் நிக்கறது. அதுவே ஒரு ராஜபாட்டை மாதிரி போறது, போயிண்டேயிருக்கு. போகப் போகக் குறுகிக் குறுகி ஊசிக் காதளவுக்குக் குறுகி, அப்பறம் அந்தக் காதுக்குள்ளே நான் புகுந்துடறேன். நான் அதுள்ளே நுழைஞ்சப்பறம் நான் கூட இல்லை. இந்தச் சுருதிதான்-இது ஒண்ணுதான் தனியே நிக்கறது-இது ஒண்ணுதான்—''

அவன் தம்பூரின் மீட்டலையே உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான். அவளறியாமலே அவள் விரல்கள் மீட்டிக் கொண்டிருந்தன. அவள் வார்த்தைகளே அம்மீட்டிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. தம்பூரின்

குடம் கர்ப்ப ஸ்திரீயின் வயிறு போல் உயிரோடு வீங்கி யிருந்தது.

கூடத்துக் கடியாரத்தில் வினாடிகள் சொட்டிக் கொண் டிருந்தன,

'அப்பொழுது நான் விழித்தெழுகிறேன்' என்றாள் திடீரென்று. அவள் வார்த்தைகளில் ஒரு புது இலக்கணம். குரல் தனி கம்பீரத்தைத் திடீரென அடைந்தது. கருவிழிகள் வெள்ளை விழிகளில் சுழன்றன.

"என் விழிப்பு எவ்வாறு எப்பொழுது நேருகிறது என்றெல்லாம் நான் அறியேன். உலகத்தின் ஆரம்பத்தையும் முடிவையும் ஒருங்கே தொட்டுக் கொண்டு எழும் இவ் விழிப்பின் விதத்தையும் வேளையையும் எப்படி என்னால் விளக்க முடியும்? அதில் நான் கூடயில்லையே! உணர்வைத் தவிர வேறெதுமில்லை. இந்த விழிப்பில் விழிப்புக்கும் முந்தின உணர்வுதான். இந்த உணர்வுதான் என் விழிப்பு. இந்த உணர்வில், இந்த விழிப்பில், விழிப்பாகிய உணர்வில், உங்களை நான் பார்க்கிறேன்.

"அதாவது உடம்பிலாது, சதையிலாமல், உருவே யிலாமல்!"—இரட்டை நாயனத்தில் எதிர் சுரம் அடுக்கும் மறு நாயனம் போல், அவன் வார்த்தைகளே வசியங் கண்டனவாய், அவையும் அவளுடைய சுருதியினின்றே வந்தன போல் ஒலித்தன.

"ஆமாம்! ஆமா ஆமா ஆமாம்!" அவளுக்குத் தொண்டையை அடைத்தது. அவன் கையைத் தன்னிரு கைகளாலும் பற்றித் தன் மார்பில் வைத்துக் கொண்டாள். "இது என்னென்று எனக்குச் சொல்லுங்களேன்! சொல்லுவேளா?"

அவனுக்கு உடல் உரோமங்கள் அனைத்தும் அத்தனை இரும்புக் கம்பிகளாய் விறைத்திருந்தன. வேர்வை நெற்றி

யிலிருந்து உதட்டில் வழிந்து உப்புக் கரித்தது. அவள் உணர்ச்சியின் வேகம் அவன் உடலில் ''விர்'' ரென்றது.

''நான் படித்தவன் இல்லை'' என்றான்.

''அப்போ நான் படிச்சவளா? எனக்கு மாத்திரம் என்ன தெரியும்?''

''இருந்தாலும் ஒன்று சொல்லுவேன்.''

''என்ன...? என்ன?''

''இந்த உலகத்திற்கும் அதற்கு அப்பாலும் ஆங்காங்கே எல்லைகளுண்டு. அவைகளுக்கப்பால் பார்க்கவும் முடியாது, தாண்டவும் முடியாது. ஒரு வேளை பார்க்கவும் கூடாது. தாண்டவும் கூடாது. அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.''

''அதுக்கு நான் என்ன செய்ய முடியும்? எனக்கு நேர்ந்தது இப்படித்தான் நேரும்னு நான் கண்டேனா? அல்லது நேரவே தான் போறதுன்னு கண்டேனா? ஆனால் எனக்கு நேர்வது நேருகிறப்போ எனக்கும்தான் பயமாயிருக்கு—'' முனகிக் கொண்டு அவன் மேல் சாய முயன்றாள். ஆனால் அவன் தடுத்துக் கொண்டான். இன்னும் மண்டையில் மயிர் வேர்களின் குறு குறுப்பு அடங்கவில்லை.

''இன்னும் ஒன்று தெரிகிறது'' என்றான்.

''என்ன?''

''உன்னிடம் நான் என்ன சொல்ல வந்தேனோ அதுவே இப்பத்தான் எனக்கு நன்றாகப் புரிகிறது.''

''ஆமாமா மறந்துட்டேனே, நீங்கள் என்ன சொல்ல வந்தேள்?''

''நான் உன்னைவிட்டுப் போய்விடப் போகிறேன். அதைத் தான் சொல்ல வந்தேன்'' என்றான்.

# 4

மூல சுருதிக்கும் முதல் சுருதி மௌன சுருதி உண்டோ?

அவ்விடம் திடீரென அப்படித்தான் ஆகிவிட்டது.

மைச் சொட்டென அவன் மண்டையுள் ஈயின் ''ஞொய்'' யுடன் ஒரு சத்தம் கிளம்பிற்று, வலுத்துக்கொண்டே வந்து ஏரோப்ளேனின் பேரிரைச்சலுடன் மண்டையுள் வட்டமிட ஆரம்பித்து விட்டது.

அவளுக்கு—

தந்திகளைச் சீண்டிக் கொண்டிருந்த விரல்கள் நின்று விட்டன. கூட்டை விட்டுத் தப்பி விட்ட குருவியைச் சிறகின் நுனியைப் பிடித்து இருத்திக் கொள்வது போல் இன்னொரு கையின் விரல்கள், மார்பண்டைப்போய் அங்குத் தங்க இடம் தெரியாமல் தவித்தன, அந்த ஊமையடித் தவிப்பு பார்க்கச் சகிக்கவில்லை.

''ஒண்ணும் புரியல்லையே!'' என்று முனகினாள்.

''நான் உன்னை விட்டுப் போயிடப் போறேன்'' என்றான் மறுபடியும். வார்த்தைகளின் அர்த்தம் இதய இரத்தத்தை வடித்துக் கொண்டுதான் புறப்படுகிறது; ஆயினும், அவ்வர்த்தத்தின் உருவாய் வார்த்தைகளுக்கு மாத்திரம் எப்படி இத்தனைக் கொடூரம்? ஏன் தவிர்க்க முடியாத இந்த உரு?

அவள் தன் நினைவில்லாது மருள் வந்தவள் போல் தான் பேசினாள்.

''எனக்கே காரணம் தெரியல்லே, இரண்டு நாளா ஏதோ ஒரு திகில். ஸ்நானம் பண்ணும்போது, இரண்டு வேளையும் மஞ்சள்கொம்பு கைவழுக்கி ஜலதாரைக்குள் போயிடுத்து, ஆமாம்! ரெண்டு வேளையும்.''

''ஏனாம்?''

''ஏன் என்று கேட்டால் எனக்குந்தான் தெரிய வில்லை. தெரிந்தால் எனக்கே ஒரு சமாதானம் தானே!''

''நான் ஏதாவது தவறு பண்ணிட்டேனா?'' பச்சைக் குழந்தைபோல் அவளால் தான் அதுபோல் கேட்க முடியும். அவனுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. நெஞ்சு தழுதழுத்தது,

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. சாரு. தப்பெல்லாம் என்னுடையதுதான்.''

''நீங்கள்தான் என்னை விட்டுப் பிரியும்படி அப்படி என்ன பண்ணிப்பிட்டேன்?''.

''நீ ஒண்ணும் செய்யவில்லை; வேளை வந்து விட்டது. அவ்வளவுதான். இப்போ நான் இது தவிர வேறென்ன சொல்ல முடியும்? எனக்குத் தெரிந்தால்தானே! தெரியாமலே, உன்னை விட்டுப் போகத் துணிந்துவிட்டேனே. இந்தத் தப்பே போதாதா?''

''இதென்ன விளையாட்டு? புரியாத விளையாட்டு. அடி வயத்தைக் கலக்கற விளையாட்டு!''

''விளையாட்டில்லை. நிஜமாத்தான் எனக்குச் செலவு கொடு.''

''ஏன்? ஏன்? ஏன்?''

மாறி மாறி அந்தக் கேள்வி அவள் வாயில் தவித்தது.

'மறுமடியும் ஆரம்பித்த இடத்துக்குத் தானே வரோம்!''—அவனுக்கு அசதியாயிருந்தது.

''இத்தனை நாளாயில்லாமல்—.''

இத்தனை நாள் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் எத்தனை நாளென்று இப்போத்தானே புரியறது.''

''எனக்குப் புரியவில்லையே. நீங்கள் சொல்றது.''

''வேதனையே இதுதான். எதுதான் புரிகிறது? புரியவில்லை என்று எதைத்தான் செய்யாமல் இருக்க முடிகிறது? சாரு நீயே வேறு உலகம்; நானும் வேறு உலகம்; இனி—''

''எனக்கு புரிஞ்சு போச்சு இப்போ—'' பாய் மேல் கையை அறைந்து கொண்டு ஆவேசத்துடன் கத்தினாள். அவள் முகம் கறுத்துவிட்டது.

''எனக்கு கண்ணவிஞ்சு போச்சுன்னு என்னென்னவோ'என்னை யறியாமலே என் கண்ணெதிரிலேயே நடந்துண்டிருக்கா? எந்த மூண்டை உங்களை மயக்கியிருக்கா? உம்கள் மண்டையிலே உண்டையை வெச்சுத் தேச்சிருக்கா? சொல்லிடுங்கோ, உண்மையைச் சொல்லிடுங்கோ. ஓஹோ? இவ்வளவு தூரத்துக்கு முத்திடுத்தா?''

இப்படிப்பட்ட வார்த்தைகள்கூட அவள் வாயிலிருந்து வரக்கூடும் என்று அவன் நினைக்கவில்லை. இப்படியும் அவள் நினைக்கக் கூடும் என்று அவன் நினைக்கவில்லை. அந்த ஆச்சரியத்திலேயே அவன் பேச்சிழந்துவிட்டான். அந்தச் சொற்ப நேரத்துக்குள். அவனில் கடைந்த எண்ணச் சூழலில் குப்பையும் கூளமும் போல், ஒன்றுக் கொன்று சம்பந்தமற்ற ஞாபகங்கள் எழுந்து மிதந்து ஒவ்வொன்றாய் மறுபடியும் அமுங்கிப் போயின,

முதலில் வீட்டு வேலைக்காரியின் உருவம் எழுகிறது. வென்னீருள்ளில் துணி துவைத்துக் கொண்டிருக்கிறாள். அவன் அவசரமாய் அங்கு நுழைய ஒரு சமயம் நேர்ந்து

விட்டது. முழங்காலுக்கு மேல் புடைவைக் கொடுக்கை யிடுக்கிக் கொண்டு. துவைக்கும் துண்டு கையிலிருந்து சாட்டை போல் தொங்க நிற்கிறாள். முகத்தில் வேர்வை பிழிகையில் மேலுதட்டில் அரும்பு கட்டியிருப்பது நன்றாய்த் தெரிகிறது. அந் நிலையில் அவளைக் கண்டதும் மூலமூர்க்கத்தின் சுடர் குபீரென்று அவனுள் எழும்புகையில் கண்ணில் மேலிமைக்குள் மின்னல் 'பளீ'ரிட்டு மறைந்தது. அவளும் அவனைப் பார்த்துவிட்டாள். அவள் கண்கள் மெதுவாய்த் தாழ்ந்தன. சிரிப்பு உதட்டின் ஒரு ஓரத்தில் ஆரம்பித்து, வர்ணத்தால் இழுத்த கோடுபோல் மறு நுனியில் போய் முடிந்தது: அவள் வென்னீருள்ளை விட்டு உடனே வந்து விட்டான். அந்த நிமிஷத்தைச் சமாளிக்க வெகு நேரம் சென்றது.

அடுத்தாற்போல் சமையற்காரப் பாட்டியின் பெண்—எப்பொழுதாவது தன் தாய்க்கு ஒத்தாசையாய் வருவாள். அவளுக்கு இன்னமும் கலியாணமாகவில்லை. வறுமையின் சோகமும் சிந்தனையும் ஒருங்கே அவள் முகத்திலும், ஒல்லி உடலிலும், ஓடி நடையிலும், செய்கைகளிலும் பூத்து அவளைச் சொல்ல முடியாத நளினமான அழகிலிட்டிருந்தன. அவளைப் பார்க்குந்தோறும் ஏனோ அவனுக்கு இலைகள் உதிர்ந்து கொண்டிருக்கும் செடியின் ஞாபகம் வரும். வாய்பேசாள். சிரியாள். அரிவாள்மணையில் கறிகாய் நறுக்குகையில் கட்டை விரலையும் சீவிக் கொண்டுவிட்டு வெட்டிலிருந்து துளிர்க்கும் ரத்தத்தை வலியால் அல்ல—சிந்தனையில் சுளித்த புருவங்களுடன் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருக்கிறாள். ஆனால் அவன் என்ன செய்ய முடியும்?

பிறகு வீட்டுக்கு வரும் வாடிக்கைத் தயிர்க்காரி. தலை மேல் கூடையுடன், அம்மா கொடுத்த வெற்றிலையை

அங்கேயே போட்டுக் கொண்டு சுண்ணாம்பை வாயில் சுண்டி யெறிந்து விட்டுத் தூணில் விரலைத் துடைத்துக் கொண்டு. சப்பாத்திப்பூ போன்ற செவ்வாயைத் திறந்து சிரித்துக் கொண்டு நிற்கிறாள்,

அப்புறம் ஓரிரவு நேரங்கழித்து எங்கிருந்தோ வீட்டுக்குத் திரும்புகையில், யாரோ ஒருத்தி வெள்ளை ரவிக்கையும் வெள்ளைப் புடைவையும் கொண்டையில் கொத்துப் பூவும் அணிந்துகொண்டு, தெருவில் ராந்தல் கம்பத்தின் மேல் சாய்ந்த வண்ணம் "ஏன்னா அய்யரே, ரொம்ப வேகமாப் போறே?" என்று கேட்டாள். அவன் லஜ்ஜையும் பயமு மடைந்து ஓட்டமாய் நடந்தான். ஆனால் அவளுடைய சிரிப்பின் ஒலி அவனை வெகுநாள் துரத்திக் கொண் டிருந்தது,

ஆதாரமும் தொடர்புமற்று மனத்தில் நாளடைவில் ஆங்காங்கு தங்கிப் போன அழுக்குகள்தாம். ஆயினும் அத்த னையும் இப்பொழுது எப்படியோ புத்துயிர்களும், அர்த்தங் களும் தாங்கிக் கொண்டு எழுந்தன. ஆம். இவர்களில் எவளேனும் ஏன் இருக்கக் கூடாது? அவளுடன்—

"ஏன் வாயடைச்சுப் போச்சு? புருஷாளே இப்படித் தானா?" அவள் போட்ட கத்தலில் அவனுக்கு மண்டை திகு திகுவென எரிந்தது.

"நீ நினைக்கிறபடி இல்லை. சாரு! நான் உனக்குத் துரோகம் பண்ணவில்லை. இல்லை சத்தியமாய்ப் பண்ண வில்லை!"

"பின்னே ஏன் என்னை விட்டுப் போகணும்?"

"மறுபடியும் அதே சுங்கஞ்சாவடிக்குத்தான் வரு கிறோம்!"

அவளுக்கு ஆத்திரம் வந்துவிட்டது.

''போங்கோ இங்கே விட்டு'' சீறி விழுந்தாள், ''அனா வசியமா மனசு நிம்மதியைக் கலைச்சுண்டு...''

''இல்லை சாரு நான் சொல்வதை—''

''போங்கோன்னா, போங்கோ!'' அவள் வெறி பிடித்துக் கத்தினாள். அவன் விசனத்துடன் எழுந்தான்.

''நான் பாடணும். எனக்கு மனசு சரியாயில்லே.''

அவள் இப்பொழுது குன்றிப் போயிருந்த நிலையில் உடலே திடீரெனச் சிறுத்துவிட்டது போலிருந்தாள்.

தம்பூரிலிருந்து விடுபட்ட சுருதி பாம்பு போல் சீறிக் கொண்டே வந்து அவனைத் துரத்திற்று. மாடிக்கு வந்து நின்றான், வானைத் தக்கையாயடைத்துக் கொண்டிருந்த மேகங்கள் பாறை பாறையாய் உடைந்து, அவைகளிடையில் நிலவு தெளிவாய்த் தொங்கிக் கொண்டிருந்தது.

தன்னறைக்குப் போய்க் கட்டிலின் மேல் தடாலென விழுந்தாள். கட்டிலின் 'ஸ்பிரிங்கு'கள் கிறீச்சிட்டன.

கண்கள் மூடிக் கொண்டன. ஆனால் தூக்கம் வரவில்லை.

இமைகளுக்கிடையில் விழிகள் விதைகளாய் விழித்துக் கொண்டிருந்தன.

இத்தனை நாட்களாய் அவனை அமுக்கிக் கொண்டிருந்த எதனின்றோ விடுபட்டு, இறக்கை முளைத்த குதிரைமேல் வேகமாய் எங்கோ போய்க் கொண்டிருந்தான், வானில் உடைந்து கிடந்த மேகப் பாறைகள் மீது குளம்புகள் தாளம் போட்டுக்கொண்டு தாண்டி தாவிச் செல்கையில், அவற்றின் லாடங்களிலிருந்து நீலப் பொறிகள் பறந்தன.

# 5

காலையில் கிளம்பி விடவேண்டும். கூட்டோடு கூடாய் ஒத்திப் போட்டால் ஆறிப் போனதுதான். கையோடு மூட்டை முடிச்சு ஒண்ணும் வேண்டாம். மாற்று வேஷ்டி அத்தியாவசியமான சில்லறை. இவை போதும் பிழைப்புக்கு அப்புறம் ஏதாவது பார்த்துக் கொள்ளலாம், இப்போதைக்கு நினைத்தவிடம் நினைத்த சமயம் போல் கண்ட இடத்தில் கிடைத்ததைச் சாப்பிட்டு விட்டு. அப்படியே தெருக் குழா யிலோ கிணற்றடியிலோ குளத்திலோ கையை அலம்பிவிட்டு ஜலத்தை அள்ளிக் குடித்துவிட்டு, மடியில் கையைத் துடைத் துக் கொண்டு, மரத்தடியிலோ சத்திரத்துத் திண்ணையிலோ கட்டையை நீட்டிவிட்டு, அண்ணாந்து பார்த்துக் கொண்டு, நக்ஷத்திரங்களை எண்ணுவதைப் பற்றி எண்ணுகிறேன், குஷியாகத்தானிருக்கிறது! இப்படியும்தான் அநுபவித்துப் பார்ப்போமே! தாக்ஷண்யத்திற்கு இத்தனை நாள் அடிமைப், பட்ட பிறகு, இம்மாதிரியும் வாழத்தான் ஆசையா யிருக்கிறது.'

'நினைத்தவிடம் நினைத்த சமயம்—'

"பல்லவி எடுப்பு, திஸ்ரத்ரிபுடத்தாளப் பிரமாணம், முக்கால் மாத்திரையில் எடுப்பு."

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் உயிர் ஒரு சாண். அதற்குள் அதற்கு எத்தனை ஒட்டு. தையல், கிழிசல்! மறு படியும் மாட்டிக் கிழித்தல் இதெல்லாமே ஏன் எனக்கு? ஹாய்யா...!"

இருட்டில் மூர்க்கமாய் அவன் மேல் இரு கைகள் விழுந்து மார்போடு மார்பழுந்த இறுகத் தழுவின. அவன் முகத்தைத் தஹித்த மூச்சில் தலை சுற்றிற்று.

"என்னை விட்டுடாதேங்கோ—! விட்டுடாதே—! நான் அனாதை—!"

''சாரு!'' எழுந்திருக்க முயன்றான். முடியவில்லை அவள் கனம் அழுத்திற்று.

''நான் சொல்றத்தை முழுக்க வாங்கிக்கோங்கோ. உங்களுக்கு யார் மேல் ஆசையோ, அவளைக் கொண்டு வந்து ஆத்தோடு வைச்சுக்கோங்கோ. எனக்குத் தங்கையா யிருந்துட்டுப் போகிறாள். எனக்குத் தங்கையில்லை.''

''சாரு; அப்படியெல்லாம் இல்லேடி!''

''இல்லை, பரவாயில்லைன்னுதான் நான் சொல்றேனே. எங்கே உங்கள் கையைக் காண்பிங்கோ. நான் கையடிச்சுச் சொல்றேன். வந்தவளைச் சீன்னு ஒரு வார்த்தை சொல்ல மாட்டேன். 'ஏன் இப்படி பண்ணலே'ன்னு ஒரு வார்த்தை அதிர்ந்து கேட்கமாட்டேன். ஆனா நீங்க மாத்திரம் என்னை விட்டுட்டுப் போயிடாதேங்கோ. நீங்கள் எனக்கு வேணும் நீங்கள்தான் என் தைரியம்—'' அவள் மூச்சின் இறைப்பில் அறை அதிர்ந்தது.

''சாரு!—''

அவன் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு ''ஹோ'' வென்று அலறினாள்.

கழுத்தில் கத்தி விழுந்துவிட்ட மிருகம்தான் அப்படித் தன் கடைசிக் கத்தலில் அலறும். அவனுக்கே சஹிக்க வில்லை.

அவளை இழுத்து மார் மேல் சாத்திக் கொண்டான். கூந்தல் அவிழ்ந்து துவண்டு சரிந்து அவன் தோள் மேல் விழுந்தது. அவள் கண்ணீரைத் துடைக்க முயன்றான். அவள் அப்பொழுது ஒரு பெரிய குழந்தையாய்த்தானிருந்தாள்.

''என்னடி சாரு! நான் செத்துப் போயிட்ட மாதிரி அழறே?''

''நீங்கள் செத்துப் போக...ல்லென்...ன்னு சொல்லுங்—உங்—கோ—ஓ ஓ ஓ!''

மார்பே வெடித்து விடும் போல் அவள் அப்படி விக்கிக் கொண்டிருக்கும் போதே. அவன் புறங்கை மேல் அவள் கண்கள் எரி நீர் கக்கிக்கொண்டிருக்கும்போதே, ஏற்கனவே திடமாகிக் கொண்டிருந்த தீர்மானம் இன்னமும் கல்லாய் இறுகுவதை உணர்ந்தான். இனி அவன் அதைக் கலைக்கவும் முடியாது. எடுக்கவும் முடியாது. உடைக்கவும் முடியாது. அது அவன் சக்தியை மீறியாகிவிட்டது. அவனே அது உருட்டும் பாய்ச்சிகையாயிற்று!

இப்படித்தான் ஒவ்வொன்றிற்கும் ஒரு கட்டம் வந்து விடுகிறது. செய்வதற்கு இஷ்டமில்லை. ஆனால் செய்து கொண்டிருக்கிறோம். செய்ய இஷ்டமுண்டு. ஆனால் செய்ய முடியவில்லை. இந்நிலைக்குக் காரணம் தெரிவதில்லை. அதன் அந்தக் கட்டத்தில் அதற்குக் காரணமுமில்லை. காரணத்தையொட்டிய காரியமுமில்லை, உலகில் நாம் எல்லோருமே, தூக்கத்தில் நடப்பவர்தாமா?

விடுதலையென்பதே கிடையாதா? ஒரு கூண்டிலிருந்து இன்னொரு கூண்டுக்கு மாறுவதுதான் உண்டா?

''இல்லேடி சாரு! நான் சொன்னதை மறந்துடு'' என்று சொல்லத்தான் வாய் திறந்தது; ஆனால் அதனின்று வந்த வார்த்தைகளோ?

''இல்லை, நான் போகத்தான் போகிறேன். நீ என்னைத் தடுத்துப் பிரயோஜனமில்லை-'' என்றுதான் கிளம்பின. அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. அவனே அவன் தீர்மானத்தின் பாய்ச்சிகை ஆயாயிற்று.

அவள் உடல் ஒரு குலுங்கு குலுங்கிற்று. அலர்ந்த இதழ் போலும் அவனுடைய ஆலிங்கனத்திலிருந்து அவள் நழுவினாள். அவள் மார்பில் அவன் வார்த்தைகள் ஈட்டியைச் சொருகி விட்டதை உணர்ந்தான்.

''கூகே?'' எங்கோ ஒரு பறவை அலறிற்று,

"இருட்டில் தன்னந்தனியாய் தன்னுள் பாய்ந்து விட்ட ஈட்டியைத் தானே பிடுங்க முயன்று தவித்துக் கொண்டிருந் தாள். அவனுக்கு அது நன்றாய்த் தெரிந்தது.

''கூ—கே கே! கூ—கே!—

''இந்தக் கொலைக்கு நான் சாக்ஷி கூகே!''

அவள் எழ முயன்றாள். அவசர அவசரமாய் எழுந்து விளக்கைப் போட்டான். அவளுக்கு ஏதோ அதனால் ஒத்தாசைமாதிரி. ஆனால் அவள் முகத்தை அவன் பார்க்க அது உதவியாயிருந்தது. அவள் அவனுள் இறந்து விட்டாள். மார்பில் சொற்கள் பாய்ந்த இடத்தை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, கதவையடைவதற்குள் உடல் தள்ளாடிற்று. குழந்தைக்குச் செய்வதுபோல், அவள் மேலாக்கைச்சரிப்படுத்தி விட்டான். உண்மையாகவே ஒரு பெரிய குழந்தைதான்.

"எப்போ?"

''நாளைக் காலை. சாரு, மன்னிச்சுடு. நாள் மறுபடி வரு—கூ!'' துள்ளிக் குதித்தான். காலைப் பிராண்டிக் கொண்டு விழுந்தடித்து ஏதோ ஓடிற்று. அவள் அப்புறம் ஒன்றும் கேட்கவில்லை.

அவள் வாசலைத் தாண்டியதும் காற்றில் கதவு நகர்ந்து தானே அவள் மேல் மூடியது.

# 6

அதற்குப்பின் அவனுக்கு நேர்ந்தது தூக்கமா அல்லது மூர்ச்சையா என்று தெரியவில்லை. கட்டிலில் திரும்பத் திரும்பப் புரண்டதுதான் நினைவிருந்தது.

''நாளைக் காலைப் போய் விடவேண்டும். போய்விடு வேன். பிய்த்துக்கொண்டு விடவேண்டும். இந்த ரகளை இனி என்றும் உண்டு. போவேன் வருவேன், இல்லை; போயே போகிறேன்.

தூ—ஊ—ஊ—ர—தூ—ர—''

கண் மறுபடி திறக்கையில் பொழுது நன்றாய் விடிந்திருக்கிறது: கீழிருந்து மேலே சுழன்று கொண்டே வரும் சுருதி நாதம்தான் அவனை எழுப்பிற்று. அவள் குரல் இன்னம் சுருதியைத் தொடரவில்லை. வெறும் சுருதி நாதம்தான்.

தன்னை உதறிக்கொண்டு எழுந்தான். பல்லை விளக்கி விட்டு உடனே ஸ்னானமும் பண்ணினான். குழாயிலிருந்து ஜலம் காலை வேகத்துடன் கனமாய்க் கொட்டுகையில் உடலில் சோர்வு தெளிந்தது. வெள்ளீருள்ளிலிருந்து பார்க்கையில் தோட்டத்துப் பச்சையும் ஆகாயத்தின் முழு நீலமும் கண்களுக்கு இதமாயிருந்தன. அவனுக்கே புரியாத ஓர் உற்சாகமும் பரவசமும் தம் சுழற்சியில் பிடித்துக் கொண்டன. ஜலத்துளிகள் மார்புடைப்பிலும் தோள் புடைப்பிலும் முத்துக்களாய் நின்றன.

மெட்டு ஒன்றை முனகிக்கொண்டே உடுத்திக் கொண்டான். சமையலறைக்குச் சென்றான். சமையல்காரப் பாட்டி உருத்திராக்ஷ மாலையை உருட்டி ஜபம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

''என் காப்பி ஆறிப்போயிடுத்தா? பரவாயில்லை கொடுங்கோ—''

''இப்போத்தான் சாருகிட்ட கொண்டு போய் வெச்சேன். அவளும் குடிக்கல்லே—''

''ஓ'' 'சரிசரி' எப்படியும் அவளிடம் விடை பெற்றுக் கொள்ள வேண்டாமா?''

சாருவின் அறையை நோக்கிச் செல்கையிலேயே, தம்பூரின் மீட்டல் அலை நுரை போல் பொங்கி வழிந்தது.

'சாருவும் ஸ்னானம் பண்ணிவிட்டாள். முடியாது உலர விட்டிருந்த கூந்தலில் அற்புதமான அழகுடன் ஒரு பூவை

சொருகிக் கொண்டிருந்தாள், முகத்தில் பற்றியிருந்த மஞ்சள் பளீரென்றது. சிவப்பு சால்வை போர்த்த பீடத்தின் மேல் உட்கார்ந்து கொண்டு சுருதியை மீட்டிக் கொண்டிருந்தாள். பக்கத்தில் கூஜாச் செம்பு.

அவன் வந்ததை அவள் அறிந்து கொண்டதால், கூஜாவை அவன் பக்கம் நகர்த்தினாள். இப்பொழுது ஏனோ அவனுக்கு அவள்மேல் தனிப்பரிவு எழுந்தது. ஒரு வேளை தான் வீட்டு விட்டுப் போய்விடப் போவதாலோ என்னவோ; சாரு இப்பொழுது அழகாய்த் தானிருந்தாள். அவன் வெறுக்கும் புன்னகை இப்பொழுது அவனுக்கு ரொம்பவும் ஒவ்வியிருந்தது.

ஆனால் காப்பி மாத்திரம் கொஞ்சம் ஆறிப்போய் விட்டது. அவனே கொஞ்சம் நெருப்புக்கோழி. ஆனாலும் பரவாயில்லை. இந்தச் சமயத்தில் இதைப் பற்றி என்ன தர்க்கம்.

''கொஞ்சம் சர்க்கரை? மட்டா கசக்கிறதே!'' என்று சொல்லிக்கொண்டே காலி டம்ளரைக் கீழே வைத்தான். குரலைத் திடப்படுத்திக் கொண்டான். ''சரி நான் போய் வருகிறேன்!—''

சிவப்புச் சால்வைக்கடியில் பீடத்தின் கீழ் 'கீச், கீச்' சென்றது.

அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவள் புன்னகை விரிந்தது. உடைந்த குழாய்ப்போல் திடீரென சுருதி அவள் மேல் பொழிந்தது. அப்பொழுது தான் அவன் அதைக் கண்டான், அவள் பின்னால் ஒரு சின்ன சீசா, மண்டை யோட்டின் பொம்மைச் சீட்டு ஒட்டிய சீசா.

அதை உணர்ந்ததும் உணர்விழந்தான்.

# நேரங்கள்

சட்டையைக் கழற்றி ஆணியில் இன்னும் மாட்டி யாகவில்லை.

"இன்னிக்கு உங்கள் அருமந்தப் பிள்ளை என்ன பண்ணான் கேளுங்கோ"

ஸாரங்கன் ஒன்றும் கவலைப்படுகிற மாதிரி தெரிய வில்லை. தன் விளையாட்டுச் சாமான் கூடையிலிருந்து ஒவ்வொரு சொப்பா யெடுத்து ஒன்றன்மேல் ஒன்றாய் அடுக்கிக் கொண்டிருந்தான்.

"வேறென்ன உனக்கு வேலை? அதைப் பண்ணான்னு இதைப் பண்ணான்னு எதையாவது சொல்லிண்டு!"

"தினம் போலில்லை இன்னிக்கு அவன் பண்ணது."

தினம் போல் எதுவும்தான் இல்லை இன்றைக்கு. மூணு நாளாவே இல்லை. என்றைக்குத்தான் ஒன்றே போலிருக்கிறது? ஒன்றுதான் ஒன்றேபோல் இருக்கிறது. 'இன்றையப்போது இன்று; நாளையப்போது நாளைக்கு.'

ஆபீஸில் ஹெட் கிளார்க்கின் உதடுகள் எப்பவும் அசைந்துகொண்டேயிருக்கும். வந்த புதிதில் வியப்பாய் இருந்தது. ஏதாவது நரம்புக் கோளாறா?

அவன் கவனிப்பதை ஒருநாள் பார்த்துவிட்டார்.

முகத்தில் வழிந்த அசடை கையால் மறைக்க முயன்றான்.

"ஒண்ணுமில்லே ஸார் நீங்கள் ஏதோ சொன்ன மாதிரியிருந்தது என்னைக் கூப்பிட்டேளோ என்று"

"உம்மை ஏன் கூப்பிடுகிறேன்? ராமனைக் கூப்பிடு கிறேன்."

"ராமனா? மன்னிச்சுக்கோங்க— இப்பத்தான் ஒரு கப் காப்பிக்கு அனுப்பினேன்— தொண்டை வரண்டாற் போலிருந்தது—"

"இந்த ராமனையில்லை. ஸ்ரீராமனைக் கூப்பிடுகிறேன். 'ஆபதாமப ஹர்த்தாரம்' சொல்கிறென், இன்னிப் பொழு துக்கு அவன் வாயில் புகுந்து புறப்படாமல் நல்ல பொழு தாப் போகணுமே! தினமே இப்படித்தான்."

"உங்க பிள்ளையை வெச்சிண்டு என்னால் சமாளிக்க முடியவில்லை, இன்னிப் பொழுது போச்சா இன்னிக்கு, நாளைக்குப் போச்சா நாளைக்குன்னு இதென்ன பிழைப்பு இதென்ன துஷ்டத்தனம்?"

இதென்ன எங்கேயும் இப்படித் தானா? ஆபீஸ் காற்று இங்கேயும் அடித்துவிட்டதா?

"என்ன நெற்றியை ஒத்தை விரலால் சுரண்டிண்டு நிக்கறேள்?"

ஏதோ ஒரு எண்ணம் திசை தப்பிய பட்சி போல் பிரக்ஞை தவறி மண்டையோட்டிற்குள் கண்ணாம்பூச்சி விளையாடுகிறது, இவள் ,என்ன சொல்கிறாள்? நான் என்ன சொல்லவந்தேன்?

"நான் சொன்னத்தை வாங்கிண்டேளா?"

' வாங்கிக்கலாம், முன்னால் குனிந்த தலை நிமிர், துணியைக் கீழே போட்டுவிட்டு காப்பி கொண்டு வா."

"இருங்கோ வந்துட்டேன். இந்த இடம் தையல் நிரடல்."

''நீ கீழே வைக்கிறையா! நான் பிடுங்கி எறியட்டுமா? ஒரு தரம் ரெண்டு தரம்.''

''இங்கே ஒண்ணும் ஏலம் விட வேண்டாம்.''

ப்ரேமை (frame) வீசி எறிந்து விட்டு கடுகடுத்த முகத்துடன் உள்ளே சென்றாள். கோபத்தின் குதிரை நடையில் இடுப்பு மிடுக்காய்த் திருகி ஓடிவதைப் பார்த்துக்கொண்டு நின்றான். கண்ணெதிரில் புருவ மத்தியில் மின்னிட்டது. மூண்டெழுந்த கோபம் கண நேரத்தில் சிரிப்பாய் மாறுவது மாறும்போதே தெரிந்தது. அதன் ரஸாயனம் தான் தெரியவில்லை. சிரிப்பை அடக்கிக் கொண்டான். அவ்விடம் காண்பித்துக் கொள்ள இஷ்டமில்லை; தன்னையே காட்டிக் கொடுத்துக் கொள்வது போல் வெட்கமாயிருந்தது. இருக்கிற சிரிப்பை இல்லாத கோபத்தால் மூடத்தான் தோன்றிற்று.

முதலில் வந்த கோபங்கூட வேஷந்தானோ? சிரிப்பும் வேஷந்தானோ? ஒரு ஒரு வேஷமும் ஒரு ஒரு நிழல். ஒவ்வொரு நிழலும் ஒரு ஒரு வர்ணம். அவை ஆடுவதும் பூசுவதும் வருவதும் மறைவதும் சில சமயங்கள் தெரிவது கூட இல்லை.

இன்று அதுமாதிரி தான் ஆகிவிட்டது. டிபன் பையை மேஜைக்கடியில் வைத்து இன்னும் தலை நிமிரக் கூட இல்லை.

''ஸார் உங்களை S.E. கூப்டுகிறார்,''

எதிரே பாப்பையா பின்னால் கையைக் கட்டிக் கொண்டு நின்றான். உதட்டோரங்களில் சிந்திய ஏளனத்தை மறைக்கக்கூட அவன் முயலவில்லை. இன்று வண்ணான் மடியில் இருந்து எடுத்த யூனிபாரத்தில் ரொம்பவும் துடியாயிருந்தான். உலசில் உள்ள தூர்ப்

பழக்கங்கள் அத்தனைக்கும் உறைவிடமாயிருந்தாலும் பாப்பய்யாவுக்கு நல்ல உடல் கட்டு. சிரிக்கையில் பல் வரிசை அணி வகுப்பாய் நின்றன. இப்பொழுது பளார் என்று பலம் கொண்ட மட்டும் வாய் மேலேயே ஒரு அறை அறைந்தால், ரெண்டு பல் உதிர்ந்தால் எப்படி இருக்கும்.

"ஏன் கூப்பிடுகிறார் இதுக்குள்ளேயே?"

ஏதுமே அறியாதவன்போல் உதட்டைப் பிதுக்கிக் கைகளை அகல விரித்தான்.

"எனக்குத் தெரியும்?"

"பின்னே ஏன் கேக்கறீங்க?"

"உனக்குத் தெரியும்னு எனக்குத் தெரியும்?"

"எனக்கென்ன தெரியும்?"

"ரிஜிஸ்தரை இவ்வளவு அக்குஸாய் உள்ளே கொண்டுபோய் வெச்சது நீதானே?"

"மணியைப் பாருங்க ஸார், பத்துலே முள் ஓடிஞ்சு அஞ்சு நிமிஷமாச்சு!"

"நீ ஏன் கொண்டு போய் வைத்தாய் என்றும் எனக்குத் தெரியும்."

"நீங்க சொல்றது எனக்கொண்ணும் புரியல்லீங்க!"

"அதனால்தான் புரியும்படி சொல்கிறேன்-" கோபம் தன்னுள் மூறுக்கேறுவது தெரிந்தது. "நேற்று அஞ்சு ரூபாய் கடன் கேட்டாய்; நான் கொடுக்கவில்லை என்று தானே? நான் பத்து ரூபாய் நோட்டை பர்ஸுள் சொருகுவதைப் பார்த்ததும் உனக்குப் பொறுக்கவில்லை தானே? ஆனால் அது நானே கடன் வாங்கினது என்று உனக்குத் தெரியுமோ? நான் எதற்கு வாங்கினேன் என்று தெரியுமோ?"

"அதெல்லாம் எனக்கென்னத்துக்கு?"

"வாஸ்தவந்தான். எவன் எக்கேடு கெட்டாலும் உனக்கு உன் காரியம் ஆகணும் அதானே!"

"நான் என் டூட்டி செய்யறேன். நீங்க உங்க 'டூட்டி' செய்யுங்க ஸார், இந்தக் கதையெல்லாம் எதுக்கு? துரை கூப்பிட்டார்; வந்து சொன்னேன். போறதுன்னா போங்க. இல்லாட்டி, உங்களுக்கு இஷ்டமில்லேன்னு போய்ச் சொல்லி டறேன். என்ன முளிச்சிப் பாக்கிறீங்க?" ஐயையோ பெல் அடிச்சிட்டாரே? என்னை ஏன் ஸார் பேச்சிக்கிளுத்து நிறுத்தி வைச்சிட்டீங்க?"—தலையிலடித்துக் கொண்டு ஓடினான்.

நெற்றியில் அரும்பிய வேர்வையைத் துடைத்துக் கொண்டு அவன் பின்னால் சென்றான்.

S. E. எதிரில் கிடந்த ஆஜர்ப் பதிவுப் புத்தகத்திலிருந்து நிமிர்ந்தார். எப்படி இந்த மனுஷன் ஒரு நாளைப் போல் அலுக்காமல் தினம் முக ஷவரம் செய்து கொள்கிறான், நமக்கு ஒருநாள் விட்டு ஒருநாளே கை வரமாட்டேன் என் கிறது. கத்தியை வைத்தாலே பிராணன் போகிறது, ஒரு மாசு மறு இல்லாமல், கன்னமும் மோவாயும் நீலச்சலவைக் கல் மாதிரி வழவழென... ஒருநாளைப்போல் எப்படி இவ்வளவு உயர்ந்த துணி, உடை நலுங்காமல், புத்தம் புதிதாய்—ஸீனிமாவில் விளம்பரம் பார்த்த ஞாபகம் வந்தது. பாரீஸ் பெப்பர் மிண்டு—கைபடாது செய்யப்படுவது. பாகிலிருந்து பதமாகி, அச்சாகி, 'ட்ரேஸ்' காகிதத்தில் சுருட்டும் வரை—எந்த இயந்திரம் ஆபீஸர்களை உற்பத்தியாக்கி வெளியே தள்ளுகிறது?

"நீர்தானே ஸம்பத்?"

"ஆமாம் ஸார்"

"சேர்ந்தாற்போல் மூன்று நாட்கள் லேட்."

''ஆமாம் ஸார்!''

''ரூல் பிரகாரம் இதே சாக்காய் நடவடிக்கை எடுத்து உம்மை வேலையிலிருந்துகூட நீக்கிவிட முடியும், தெரியுமா? உங்கள் 'யூனியன்' எல்லாம் சேர்ந்து என்ன சிப்பக் கட்டு கட்டினாலும் ஒண்ணும் பண்ண முடியாது. தெரியுமா?''

''யூனியனுக்கும் எனக்கும் எந்த ஸம்பந்தமுமில்லை ஸார்!''

''ஏன், உமக்கு இங்கேதானே வேலை?''

''ஆனால் நான் யூனியனில் மெம்பர் இல்லை ஸார்?''

''I don't care, ஏன் லேட்?''

''............''

S. E.க்கு முகம் சிவந்தது: மத்தியானம் தின்னும் ஆப்பிளும் ஆரஞ்சும் வீணாய்ப் போகுமா?

நல்ல பெரிய ஆப்பிள். ஸாரங்குக்கு வாங்கிப்போகலாம் என்று பழக்கடையில் விலை கேட்கப்போய் கடைக்காரன் 'பன்னிரண்டணா' என்றதும் 'கர்ரெண்டு! அடித்தாற்போல். கையிலெடுத்த பழத்தை அப்படியே கீழே போட்டு விட்டு—

''என்னய்யா சிரிக்கிறீர்?''

''சிரிக்கிறேனா என்னா?'' அவனுக்கே ஆச்சரியமா யிருந்தது.

''என்ன விளையாடுகிறீர்? யாரோடு பேசுகிறீர் என்று நினைவிருக்கிறதா? ஹெட்க்ளார்க்! ஹெட்க்ளார்க்!''

H. C. ஓடி வந்தார். அவர் அவசரமாய் எடுத்து வைத்துக் கொண்ட தலைப்பாகை முன்னும் பின்னுமாய்த் திரும்பி ஒரு பக்கமாய்ச் சரிந்திருந்ததைப் பார்க்க இன்னும் சிரிப்பாய் வந்தது. கடவுளே என் சிரிப்பிலிருந்து என்னைக் காப்பாற்றேன்? ஆனால் புருவ மத்தியில். மூக்குத்தண்டில் விழியோரச் சதையில், கன்னத்தின் மேட்டில், மோவாய்க்

குழியில், உதட்டோரங்களில் குறு குறுப்புத் தாங்க முடிய வில்லை.

"எக்ஸ்க்யூஸ் மீ—"

வாயை ஒரு கையால் பொத்திக் கொண்டே வெளியே ஓடினான். படிக்கட்டில் தடதடவென இறங்கி, இடை வேளையில் சாப்பிடும் அறைக்குப் போய் விலாவைப் பிடித்துக் கொண்டு இடி இடி என்று சிரித்தான், கண்கள் வடிந்தன. ஏன் இந்தச் சிரிப்பு, இவ்வளவு சிரிப்புக்கு என்ன நடந்தது என்று தனக்கே விளங்கவில்லை. ஆனால் அந்த சிரிப்பைச் சிரித்துத் தீர்த்தபின்தான் இம்சை சற்று அடங்கிற்று. இடத்துக்குத் திரும்பி வந்தபோது, சிரித்த அசதியில் மூச்சு லேசாய்த் திணறிற்று.

H. C. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "எங்கே போயிட்டீருங்காணும்? உம்முடைய சமாதானத்தை எழுதி வாங்கச் சொல்லியிருக்கார். ஏனய்யா காலங்காத் தாலே வந்ததும் வராததுமாய் அவனைச் சீண்டிவிட்டு அவன் குணத்தைக் கெடுத்து, எங்களை நாள் முழுவதும் கதிகலக்க அடிக்கிறீர்! நாங்கள் எல்லாம் சம்சாரிகளய்யா! எங்கள் பிண்டத்தைப் பெருங்காயமாக்கி விடாதேயும்!"

மறுபடியும் விழியோரங்கள் குறுகுறுத்தன. H.C.க்கா பிண்டம் பெருங்காயம்? H.Cக்குப் பட்டணத்திலேயே நாலு வீடுகள் இருக்கின்றன. பொங்கலுக்கு சுண்ணாம்பு கூட அடித்துத் தரமாட்டார். வாடகையை மாத்திரம் கறுக்காய் மாதா மாதம் மூணாந்தேதியே வசூல் பண்ணி விடுவார். ரெண்டு பிள்ளைகள் வியாபாரத்தில் சக்கை போடு போடு கிறான்கள், தவிர நிலபலம். மாமனார் வீட்டு சொத்து ஸ்வீகார சொத்து எல்லாம் வரவிருக்கின்றன. வீட்டுக் கணக்குகளைக் கவனிக்க தனி ஆளே போட்டிருக்கிறார். S. E. க்கே கடன் கொடுத்திருப்பதாக ஆபீஸில் சொல்லிக் கொள்கிறார்கள்,

இருந்தும் 'ஆபதாமபஹறத்தாரம்' சொல்கிறார். தலைப்பாகையை முன்னும் பின்னுமாய் ஒருபக்கமாய் சரிய மாட்டிக் கொண்டு அலறிப் புடைத்துக்கொண்டு ஓடி வருகிறார். டேப்பா!' ஒவ்வொருத்தனும் என்னென்ன வேஷம் போடுகிறான்!'

நாற்காலியை முன்னுக்கிழுத்துக்கொண்டு உட்கார்ந்தான்.

"'என்னத்தை எழுத?'"

அவன் இடம் ஜன்னலுக்குப் பக்கத்தில். ஆபீஸின் நாலாவது மாடி உயரத்திலிருந்து, கீழே பஸ்களும் மோட்டார் களும் வண்டிகளும், மரவட்டைகளும், வண்டுகளும் பூச்சிகளுமாய் ஊர்ந்தன ஆங்காங்கே, புடவைகளின் சிவப்புகளும் பச்சைகளும் சின்னஞ்சிறு வர்ணக் காயிதத் துண்டுகள் காற்றில் அலைவதுபோல் விட்டுவிட்டு நெளிந்தன. இங்கிருந்து தற்செயலாயோ வேணுமென்றோ ஆள் விழுந் தால் ஒரு எலும்புகூட முழுசாகத் தேறாது.

ஆயினும் மூன்று நாட்கள்—பதினஞ்சு, பன்னிரண்டு அஞ்சு நிமிஷங்கள் நேரங்கழித்து வந்ததற்கு சமாதானம் எழுதியாகணும்.

என்னத்தை எழுத? உள்ளதை எழுதினால் எடுபடு மோ? இவர்களுக்குப் புரியுமோ?

—"நேரம் கழித்து வந்ததற்கு
மிகவும் வருந்துகிறேன். இனி
இம்மாதிரி நேரிடாதபடி —"

## 2

உமா சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள். அவள் கைடம்ளரில் ஆவி பறந்தது.

"என்ன இப்படிக் கொதிக்கிறதே? அடுப்பில் சுட வைத் தாயா? இல்லை. வயிற்றிலேயே கொஞ்ச நாழி வைத்துக்

கொண்டு வந்துவிட்டாயா? பறக்கிறது அதன் ஆவியா? உன் ஆத்திரமா?''

உமாவின் முகம் இறுகியது. ''நான் இப்போ சிரிக்கணுமா?''

ஸைகிள் டயரில் காற்றை வாங்கி விட்டாற்போல் எதிர்ப் பேச்சில்லாமல் அடிப்பதில் உமாவை மிஞ்ச முடியாது. எந்தத் தர்க்கத்திலும் கடைசி வார்த்தை அவளுடையதுதான்.

''உமா உமா. கெஞ்சிக் கேட்கிறேன். நாலுபேர் வந்திருக்கிறார்கள். இந்த விஷயத்தில் என் வார்த்தையே ஓங்கி இருக்கட்டும், கொஞ்சம் விட்டுக் கொடு'''—என்று கேட்டுக் கொண்டாலும் ''ஹும் என்று ஒரு உறுமலாவது உறுமி அவனுக்கு வெற்றி யில்லாமல் அடித்து விடுவாள்.

காப்பியை எடுத்துக் கொண்டு வாசலறைக்குச் சென்றான். அதுவே அவன் கோட்டை, தனிவளை, பட்டறை, தர்பார் அறை எல்லாமே.

டம்ளரை வாய்க்கு எடுத்துச் செல்கையில்—இன்னும் தலை நிமிரவில்லை. அறையில் திடீரென புனுகு குபீரிட்டு, வயிறு குமட்டிற்று.

தெரு வழியே ஒரு ஆள் சென்றான். கழுத்தில் மைனர் சங்கிலி. மஞ்சள் பட்டு ஜிப்பா. புரள புரள நூலும் ரேயனும் கலந்த வேஷ்டி, ஏற்பாடாய்க் கலைக்கப்பட்ட முன்மயிர் நெற்றிமேல் திருகு சரங்களாய்த் தொங்கின. ஜன்னலுக்கெதிரில் கொத்துப் புகையிலைச் சாறை உமிழ்ந்து கொண்டே போய்விட்டான்.

மண்ணில் ரத்தம் போல்—

ரத்தம் போல்...

ரத்தம்—

கண்கள் திடீரென இருண்டன. கால் கட்டைவிரலிலிருந்து 'சுர்ர்' ரென ஆவியெழுப்பி, போகும் வழி யெல்லாம்

தீய்த்துக் கொண்டே போய் மண்டையை அடைந்தது, தலையை இரு கைகளிலும் தாங்கிக் கொண்டான். ரத்தக் குழம்பு தளைத்து சிவப்புச் சக்கிரம், இறுக மூடிய கண்களுள் இமைத்திரையை நார் நாராய்க் கிழித்துக் கொண்டு ஆடிற்று.

முந்தாநாள் புதன்கிழமை, காலை ஆபீஸுக்குப் போகும் வழியில் கட்டவிழ்ந்த பொட்டலம் போல் கலைந்து கொண்டேயிருக்கும் கூட்டத்தின் நடுவே நின்று கொண்டிருந்தான். பயங்கரத்தில் நிலைகுத்தி விட்ட கண்கள் காலடியில் இன்னும் முற்றிலும் காயாத ஒரு பெரிய சிவப்புத் திட்டின்மேல் வெறித்து விட்டது. செவிகளில் சமுத்திரம் இரைந்தது. ஒன்றும் இரண்டும், நாலும் அஞ்சுமாய் வார்த்தைகள் மீன் குட்டிகள் துள்ளி எழும்பி மேல் மோதி மூழ்கி அலை வேகத்தில் அடித்துக் கொண்டு போயின.

—''இப்போத் தானய்யா—ப்ளாட் பாரத்துலே தேமேனு போய்க்கிட்டேயிருந்தானே திடீர்னு நினைச்சுக்கிட்டு க்ராஸ் பண்ணான்யா' வரவன் புல் ஸ்பீடுலே வரான். ஏன் வரக் கூடாது? இது கிராஸ் பண்ற இடமா! ஏனய்யா க்ராஸ் பண்ணனும்? ஆனால் அவனா பண்ணான்? வேளை தான் பின்னாலே நின்னுட்டு புடரியைப் பிடிச்சுத் தள்ளுதே! 'ப்ரேக்' 'டேர்ன்', எதுக்குமே டைம் இல்லை. நேரே வந்து இந்தா கொடுக்கறேன் வாங்கிக்கின்னு சக்ரத்தடிலே பூட்டான். ஐயோன்னு சத்தங்கூட இல்லே. அதுக்குக்கூட டைம் இல்லேங்கறேன்னா. அந்த வண்டியிலேயே வாரியெடுத்துட்டு ஆஸ்பத்திரிக்குப் பூட்டானுங்க. ஆனால் அங்கே என்ன இருக்கும்? போன உசிரு வ்லாஸம் விட்டுட்டாப் போவும்?

''ஆமாய்யா இன்னிக்கு வீட்டைவிட்டுக் கிளம்பறப்போ பூடப்போறான்னு தெரியுமா? என்னமோ நீ சொல்றதைப் பார்த்தா, விலாஸத்தை எழுதி ஜேபிலே வெச்சுக்க?

"ஆனால் அது அவஸ்யம்னு நான் சொல்வேன்,"

"எது?"

"விலாஸம் எப்பவும் ஜேபிலே இருக்கணும். இந்தப் பட்டணத்திலே காலைலே 'டுட்டி, மேலே போனவன் மாலைலே உருவாத் திரும்பி வரான்னு என்ன நிச்சியம்?"

"இன்னிப் பொழுது போச்சா இன்னிக்கு. நாளைப் பொழுது நாளைக்கு"

'விலாஸம் தெரிஞ்சா வீட்டிலாவது கொண்டுபோய் சேர்க்கலாமில்லே—"

"இல்லாட்டி மூணுநாள் பொறுத்து போலிஸ்காரன் வந்து கதவைத் தட்டுவான்!"

"இந்த வூட்டுலேதானே—"

காதைப் பொத்திக் கொண்டான். நினைத்துப் பார்க்கக் கூடத் தைரியமில்லை.

"—காலைலே கன்னத்தைக் கிள்ளிட்டுப் போன அப்பன் பிக்கேட்டு வாங்கி வருவான்னு குளந்தை நடைக்கும் வாசலுக்குமா நடக்கும்."

—"வேலைவிட்டதும் கையோடு வாங்கிவரும் கதம் பத்துக்கு ஐடைபோட்டு கட்டினவ ஜன்னலண்டை காத் திட்டு நின்னுருப்பா—டிபனும் காபியும் சூடாறிப்போவு தேன்னு பெத்தவ அடுக்குள்ளே ஏந்தி இறக்கிட்டிருப்பா."

—"இது பாத்தியா, போனவன் என்னவோ ஒண்ணு தான். ஆனா ஒரே வீட்டிலேயே அதனுக்கு எத்தனை வேசம்? ஒண்ணுக்கு அப்பன். ஒண்ணுக்கு புருஷன், ஒண்ணுக்குப் பிள்ளை, ஒண்ணுக்கு உடன்பிறந்தவன். இன்னுங்கூட என்னென்னவோ கட்டலாம்—"

"எல்லாம் நொடி நேரத்துலே கலைஞ்சுட்டுதே என்ன அக்ரம்பு!"

—"ஆனால் இந்த சிந்திய ரத்தத்தையும் அது காரணமா வித விதமாக் கண்ணீரையும் வாங்கிட்டுத் தானே இந்தப் பூமி வளர்ரது அது பாத்தியா?"

—"அதுக்கு சுமக்கிற கூலி வேணாமா? உலகத்திலே எதுதான் சும்மா கிடைக்குது? சும்மா நினைச்சுக்கிட்டு வேணு மானா ஏமாறலாம். அத்தோடு சரி'"

"—இதுமாதிரி இன்னுன்னும் எங்கெங்கே இதைவிட என்னென்ன கொடுமையோ?—"

அப்பவே, அங்கேயே சாரங்கனின் நினைப்பு எழுந்தது. குழந்தையைப் பார்க்கவேணும் எனும் தாக்க முடியாத வேட்கை. குழந்தை வாசலில் விளையாடிக் கொண்டிருப் பான். தெருவில் வண்டி, காடி நினைப்பில்லாமலே உமா மூடாந்தகாரமாய் உள்ளே வேலையாயிருப் பாள். அம்மாவோ இல்லை. 'வீடா இது? காலை நீட்டி மடக்க இடமில்லை, என்னத்தையோ மடக்கி மடக்கிக் கட்டிப்பிட்டு இது வாசல், இது அறை, இது கூடங்கறான். ஐப்பசிமாதம் மூடவனுக்கு மோக்ஷமுமதுவுமாய் காவேரி ஸ்னானத்தை விட முடியுமா? நான் இருக்கிறது இன்னும் எத்தனை நாளோ?—அம்மா ஊருக்கு மூணு வாரத்துக்கு முன்னாலேயே போயாச்சு,

"அ—பா!—!' சிறகுகள் போல கைகளை விரித்தபடி சாரங்கன் சிரித்துக் கொண்டு வந்து தன் அணைப்புள் மோது வான். பயலுக்கு ஏகமாய் மயிர் வளர்ந்து விட்டது. அசல் பொட்டைக் குட்டியாயிருக்கான். போதும் போதாதற்கு அவன் அம்மா நடுவகிடு எடுத்து ரெண்டு பக்கமும் பின்னால் சும்மா சீவி விட்டிருக்கா. கையில் வேல் ஒண்ணுதான் பாக்கி. மொட்டையடித்து விபூதியையும் பட்டை பட்டையா இட்டு விட்டால் பழனி ஆண்டவனேதான். வைத்தீஸ்வரன் கோயில் மூடியிருக்கிறது, ஆனால் கையில் அம்பது ரூபாயில்லாமல்

அதைப்பற்றி நினைப்பதற்குக் கூட இல்லை. குடும்பம் அப்போ தத்தளிக்கிற நிலையைப் பார்த்தால் பயலுக்கு முடி, பூனூல் கலியாணம், தனக்கு ஷஷ்டியப்த பூர்த்தி எல்லாமே ஒரே பந்தலில்தான் போல்—

# 3

வாசலில் நிழல் தட்டியது.

''கலியாணமா வாவா. இப்போதான் வரையா?''

''இன்றைக் காலை வண்டியில் வந்தேன், உன்னை இன்று காலையிலேயே பார்த்துவிட்டேன். வண்டியிலிருந்தே கத்தினேன். உனக்குக் காது கேட்கவில்லை. காலடியில் ஈயடிக்கிற ஜட்கா வண்டிக் குதிரைபோல் ஒரு கால் மாற்றி ஒரு கால் தவித்துக் கொண்டிருந்தாய்.''

ஆமாம்பா; லெவல் கிராஸ்ஸிங்கில் மாட்டிக் கொண்டு விட்டேன். வரத்துக்குள் 'கேட்டை மூடிவிட்டான். இன்னிக்கு நான்' லேட். எக்ஸ்ப்லனேஷன் பழங் குப்பை எல்லாம் ஏக கலாட்டா. அதெல்லாம் அப்படித்தான் இருக்கும். ஸர்விஸனா முன்னாலே கையைக் கொடு. குழந்தையைப் பார்த்தையா. உன் தக்காளி மூக்கை அப்படியே உறிச்சி வச்சிருக்கு. டேடேடே விடுடா, விடுடா-என் கை தானா ஐயையோ மாவாப் போச்சே!'!

''ஸம்பத், லக்ஷ்மி எல்லாம் சொன்னாள். என் நன்றியை மப்படி நான் தெரிவிக்கப் போறேன்!''

''நீ ஒண்ணும் தெரிவிக்க வேண்டாம்; அதற்கெல்லாம் நமக்குப் போறாது. நமக்கு ஒருத்தருக்கு ஒருத்தர் புரிஞ்சுக்கத் தான் முடியும். தெரிவிக்க, அறிவிக்க அணு அணுவாய் அலுக்காமல் விஸ்தரிக்க அதெல்லாம் பொம்மனாட்டிகள் டிபார்ட்மெண்ட். நான் இல்லாததை ஒண்ணும் செய்துவிடவில்லை.''

"எல்லாத்தையுமே பூப்பூன்னுட்டா அப்புறம் என்ன தான் இருக்கிறது?"

"நான் என்னதைச் செய்தாலும் அவள் குழந்தையை அவள் தானே பெறணும்? பார்க்கப் போனால் நானே லக்ஷ்மிக்கு வந்தனம் செலுத்த வேண்டும்."

"...?"

"'நீ காம்பில் கிளம்பின சமயத்தில் பார்த்துக்கொள். நிறை மாதம். உற்ற துணையில்லை. உன் வீட்டிலேயே இருக்கட்டும்' என்று என்னிடம் ஒப்படைத்து விட்டுப் போனதற்கு சிக்கல், கோளாறு, விபரீதமில்லாமல், என் மூக்கை யறுக்காமல் சுகப் பிரசவமாச்சே! கலியாணம், நான் ஒன்று சொல்றேன். ஏதாவது ஒண்ணுக் கொண்ணு ஆச்சு வெச்சுக்கோ நீ கூட சிநேகிதத்தில் சும்மா இருந்து விடுவாய்; பெற்றவர்கள், மற்றவர்கள் சும்மாயிருக்க மாட்டார்கள். பழி யாரப்பா சுமப்பது? ஒருத்தரைச் சொல்லப் போவானேன்? உமாவே சும்மா இருக்க மாட்டாள், இப்போ என்னவோ என் மனைவியும் உன் மனைவியும் அக்கா தங்கையா ஒழுகினாலும், 'உங்களை யார் ஏத்துக்கச் சொன்னது?' என்று கேட்டால் எனக்குப் பேச வாய் எங்கே? நான் ஒருத்தரையும் குற்றம் சொல்லவில்லை இது மனித இயல்பு.

"உலக வழக்கு என்னமோ அப்படித்தான்."

"நாமும் இவ்வுலகத்தைச் சேர்ந்தவர்கள்தான். தெய்வப் பிறவியில்லை. அதனால் எல்லாம் நல்லபடியாக முடிந்ததே என்று நாம் எல்லோரும் சேர்ந்து சந்தோஷப் படுவதைத் தவிர எனக்குத் தனியாக மாலை சூட்டுவதில் அர்த்தமில்லை."

"இருந்தாலும்—"

"நாம் அதைப்பற்றி இனி பேச வேண்டாம்."

''சரி பேசவில்லை.''

இருவரும் சற்று நேரம் சும்மாயிருந்தனர். ஆறி மேலே வெண்மை பூத்துவிட்ட காப்பி மேல் ஈ தைரியமாக உட்கார ஆரம்பித்தது,

''மாமியார் நாளை காலை வண்டிக்கு வருகிறாள். கடிதம் வந்திருக்கிறது.''

''ஏனாம் முன்னால் வர முடியவில்லையாம்?''

''இப்போத்தான் மூணாம் பெண்ணுக்கு பிள்ளைப்பேறு செய்துவிட்டு, திரும்பி வந்தாளாம். தவிர அங்கங்கே ரயில் உடைப்பு வேறே, என்னப்பா என் மாமியார் என்னை விடப் பெரிய 'டூரா', மாற்றி மாற்றி ஏழு பெண்களுக்குப் போய்ப் போய்ச் செய்யத்தான் போது இருக்கிறது.''

''சரி கவலைவிட்டது. எங்கே அதுக்குள்ளேயும் கிளம்பிவிட்டாய்?;'

''தலைக்கு மேல் வேலை கிடக்கிறது. காலையிலே கலைத்த மூட்டையை போய் மறுபடியும் கட்டியாகணும். நாளை மத்யான வண்டிக்குக் கிளம்பறேன்.''

''எங்கே?''

''எங்கே? ட்யூடிதான்!—''

# 4

கலியாணம் போன சற்று நேரத்துக்கெல்லாம் தூறல் படபடத்து உடனே வலுத்து மழை கொட்ட ஆரம்பித்து விட்டது. பாவம், நடுவழியில் மாட்டிக் கொண்டிருப்பான், 'இதென்ன மழையோ. ஒரு ஒரு ஸீஸனுக்கும் சொல்கிறோம். இப்பப் போல் எப்பவுமே பெய்ததில்லை!' என்று. அதென் னவோ வருஷம் முழுக்க வெயில் பிளந்தாலும் ஸஹித்துக்

கொள்கிறோம். ஒருவார மழையில் நாறிப்போய் விடுகிறோம். அதுவும் முந்தா நாள் ராத்திரி கொட்டிற்றே அதற்கு மேலேயா?

முந்தா நாள் ராத்திரி ஓயாமல் பேயும் 'ஜோ'வின் தாலாட்டில் நன்றாய்த் தூங்கி விட்டான். ஆனந்தமான கனா. S, E. க்கு மாற்றல். ஆபீஸில் டின்னர் பார்ட்டி! கிளாஸ் டம்பளரில் யாரோ பாதாம்கீரை ஊற்றுகிறார்கள். கொடி கொடியாய் குங்குமப் பூவும். முழி முழியாய்ச் சாரைப் பருப்பும் சுழன்று மிதக்க ஸ்வரனை உருக்கி வார்த்தாற்போல் —டம்ளரை கையில் எடுத்து வாய்க்குக் கொண்டு போவதற்குள்—

My God! யாரோ தோளை இடித்து அத்தனையும் மேலே கொட்டிவிட்டது.

''இன்னொரு டம்ளர் ப்ளீஸ்''

''டம்ளராவது அடுக்காவது எழுந்திருங்கோன்னா!''

தோளாப் பட்டையில் உமா ஓங்கி அறைந்த பிறகுதான் தூக்கம் கலைந்தது.

''என்ன?''

''லக்ஷ்மிக்கு உடம்பு சரியாயில்லை. சுருக்க ஒரு ரிக்ஷா பாருங்கோ-''

இந்த மழையில் ரிக்ஷாவாவது? டாக்ஸியாவது? எதுவுமே கிடைக்கவில்லை. ஸ்டாண்டில் இருந்த ஒருத்தன் இருவரும் வர மறுத்துவிட்டனர். தெருத் தெருவாய்ச் சுற்றிக் கடைசியாக ஒரு வீட்டோரமாய் ஒரு மாடும் வண்டியும் அவிழ்த்து விட்டிருந்தது. வண்டிக்காரன் குறுந்திண்ணையில் ஒடுங்கிக் கொண்டிருந்தான்.

'கொஞ்சம் ஆஸ்பத்திரிவரையில் வாப்பா, பிரஸவக் கேஸ்—' என்று ஆனமட்டும் சொல்லியும் வண்டிக்காரனுக்கு மனம் இரங்கவில்லை.

'இந்த மழையிலே மாட்டுக்கு ஜுரம் வந்தூடும், என்று விட்டான். கடைசியாக 'நான் மாட்டை விட்டுட்டு வர முடியாது, என்னால் முடிஞ்சுது வண்டியை எடுத்துகிட்டுப் போய் திருப்பிக் கொணாந்திடுங்க? அதுவும் நீங்க ரொம்பக் கேட்டுக்கறத்தாலே. பாவ தோஷத்துக்கு அஞ்சி, உங்களை நம்பிக் கொடுக்கறேன்.'

உமா லக்ஷ்மியைத் தாங்கிக் கொண்டு வாசலில் காத்துக் கொண்டிருந்தாள். தெரு விளக்கு வெளிச்சம் நேரே லக்ஷ்மி முகத்தில் அடித்தது. உமா கட்டை விரலால் ரக்ஷையாய் இட்டிருந்த உதிர்விபூதி லக்ஷ்மி நெற்றியில் துலங்கிற்று.

அவன் வண்டியை இழுத்துக் வருவதைக் கண்டதும் அந்த நேரத்திலும் உமாவின் இடக்குப் போகவில்லை.

"இதென்ன கூத்து? எத்தனை நாளாய் இந்த 'பார்ட் டைம்' ஜாப்?"

"ஏறு ஏறு—"

அவர்கள் கிளம்புவதற்கென்றே காத்திருந்தாற் போல் மழை வலுக்க ஆரம்பித்துவிட்டது. ஜலம் முழங்கால் ஆழத் திற்கு ஓடிற்று, ஆகாயத்திலிருந்து பூமிமேல் எறிந்த ஈட்டிகள் போல் தெருவிளக்கில் தூறல்கள் பளபளத்தன. ஸொபாகள் திறந்து கொண்ட இடத்தில் மழை வெள்ளம் சுழித்தது. பகவானே, எதிலாவது நான் காலை விடாமல் இருக்கணுமே! கைகள் சட்டங்களைப் பிடித்துக்கொண்டிருந்தமையால், முகத்தின் மேல் வழியும் ஜலத்தை வழிந்தெறிய முடிய வில்லை. உதட்டிலிருந்து நக்கிக்கொண்ட ஜலம் நாக்கில் இனித்தது. கண்களை அடைத்த ஜலத்தில் விழிகள் நீந்தின, அந்த ஜலத்திரையில் மங்கின திருஷ்டியில், பூமியும் வானமும் ஒன்று சேர்ந்து ஒரு பிரம்மாண்டமான புஷ்பமாய் மலர்ந்து மெதுவிட்டுத் தோன்றிற்று. ஈரம் தோலுள் இறங்கி, சதையை ஊடுருவி, எலும்பை தெருப்பாய்க் காய்ச்சிற்று.

வண்டியிலிருந்து பின்னால் வெகு தூரத்திலிருந்து உமா வின் குரல் அவசரமாய் மழைத் திரையைத் துளைத்துக் கொண்டு எட்டிற்று.

''வண்டியை நிறுத்துங்கோ—நிறுத்துங்கோ''

ஆண்டவன் அந்தக்ஷணமே அவர்களுக்கென்றே படைத் தாற்போன்று எதிரே ஒரு வீடு திண்ணையோடு எழும்பிற்று. திண்ணை மேல் வண்டியை முட்டுக் கொடுத்துவிட்டு, குனிந்து வெளிவந்து முகத்தை கைகளில் புதைத்துக் கொண்டு திண்ணைமேல் உட்கார்ந்து விட்டான். ஒரு நிமிஷம் எங்கிருக் கிறோம், என்ன பண்ணுகிறோம். என்னத்துக்கு இங்கு வந்தோம்? எப்படி வந்தோம்? எதுவுமே நினைவில்லாமல் போய்விட்டது. மழையில் தான் எனும் தனிப் பிரக்ஞை கரைந்து, அழிந்து மழையோடு கலந்து விட்டாற் போலிருந்தது.

அந்தச் சமயம் பூமியே திறந்து, அதனின்று அதன் இதயத் துடிப்பு விடுபட்டாற்போல் புத்த புதிதாய் ஒரு குரல் வண்டி யின் உள் கும்மிருட்டிலிருந்து கிளம்பி அவனை இருகூராய் பிளந்தது. வாஸ்தவமாய் அவரைத் தோல் போல்தான், இரண்டாய்ப் பிளந்தாற்போலேயே இருந்தது. அப்புறமே, அந்த வியப்பிலிருந்து அவன் முழுக்க மீளவில்லை.

ஆஸ்பத்திரியை அடைந்தது. புதுக் கேஸ் வந்திருக்கும், அறிகுறியாய் அடித்த ஆராய்ச்சி மணியோசை, திரும்ப வண்டியைக் கொண்டுபோய் சொந்தக் காரனிடம் ஒப்படைத்துவிட்டு வீட்டுக்கு வந்து உடையைக் களைந்து படுக்கையில் விழுந்தது-எல்லாமே எங்கோ யாருக்கோ நடந்த தாய், கதைகேட்டாற்போல்-எல்லாமே, நாக்கில் எச்சிலைத் தொட்டு அழித்த கோடு போல் பளிச்சென்று ஞாபகத்தில் இல்லை. ஒன்றுதான் நினைவிருந்தது.

ஸாரங் பூட்டிக் கொண்டு, போனபடியே நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தான்.

தோளைக் குலுக்கி உமா காப்பி டம்ளரை வாயண்டை நீட்டியபோதுதான் மூர்ச்சை தெளிந்தது.

"பரவாயில்லை; குடிச்சிட்டே பல் தேயுங்கோ."

"மணி என்ன?"

"ஒன்பது."

"My God?—"

அன்று மாலை ஆபீஸ் விட்டதும் நேரே ஆஸ்பத்திரிக்குச் சென்றான். தாயின் கால்மாட்டில் கட்டிலோடு மாட்டிய தொட்டிலில் குழந்தை வளர்ந்திருந்தது. ஒரு கையை வாயில் அடைத்துக் கொண்டு, உடம்பையும் இன்னொரு கையையும் அவன் பக்கமாய் முறித்தது. 'டொமாட்டோ நோஸ்', இது தானா? இவ்வளவு ரகளையும் இதுதானா?

தன்னையறியாது மனம் பொங்கிற்று. இதன் ஆக்கலில் இதன் தாய்க்கும் தகப்பனுக்கும் என்ன பங்குண்டோ அது மாதிரி இதன் பிறப்பில் இதன் பிறப்பித்தலில் (வார்த்தைகள் எப்படித் தாமே தம்மிடத்தில் விழுந்து அடுக்கித் தம்மை சரிப்படுத்திக் கொள்கின்றன!) எனக்கும் என் பங்கு உண்டல்லவா?

உயிர் தன் விடுதலைக்குத் தன்னைப் புரிந்துகொள்வதற் காக திரும்பத் திரும்பத் தன்னைப் பிறப்பித்துக் கொண்டு இயங்கி படும் விசுவகர்ப்ப வேதனையில் என் உதவியும் அதற்கு வேண்டியிருக்கிறதல்லவா? என்னைத் தனக்கு சாக்ஷி யாக்கிக் கொண்டிருக்கிறதே அதுவே அதிலேயே அதற்கு நான் உதவிதானே! இப்படித்தானே! எல்லோரும் ஒருத்தரு

கொருத்தர் சாக்ஷி? என்னை யறியாமலே இவ்வுலகரங்கில் நடக்கும் எத்தனை நாடகங்களில் நான் பாத்திரமாய் இருக்கிறேன்! நான் அறிந்தவர் அறியாதவர் எல்லோருமே என்னை ஒவ்வொரு வகையில் பாதிக்கின்றனர். நேற்று விபத்தில் இறந்தவனின் ரத்தத்தில் அப்படித் துடித்தேன். இன்று இக் குழந்தையின் பிறப்பில் முக்கிய பாகம் தாங்கியிருக்கிறேன். நேற்று விடுதலையான ஜீவனே இக்குழந்தையின் பிறப்பில் புகுந்து கொண்டில்லை என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியுமோ? இப்படி ஒன்றுக்கொன்று ஒருவர்க்கொருவர் சாட்சியான இவ்வுயிர்ப் பிணைப்பில், நான் ஏது தனி? இன்று நேற்று நாளை நேரங்கள் ஏது? நேற்று விபத்தில் இறந்தவனும் நானே. நான் இழுத்த வண்டிக்குள் பிறந்து இத்தொட்டிலில் இருப்பதும் நானே. இன்று நேற்று நாளை எனும், நேரங்களினூடே ஓடும் இந்த உண்மை எந்த மட்டுக்கு என்னுள் அழுந்திற்றோ அந்த அளவுக்கு நான் வளர்ந்தவன்தானே?

தொட்டிலின் மேல் தாழ்ந்த பார்வை உயர்ந்ததும் தாயின் முகத்தைத்தான் சந்தித்தது, லக்ஷ்மியின் கண்கள் அவனைச் சிந்தித்துக் கொண்டிருந்தன. திடீரென்று அவன் காலடியில் பூமி விட்டது. அக் கண்களுள் புகுந்து அவைகளின் அகண்ட. நிர்ச்சலமான ஆழத்திலிருந்து தப்ப முடியாமல் அதில் தான் மூழ்கிவிட்டாற் போலிருந்தது. வார்டில் இருந்து வெளிவந்த பின்னரும் தன்னில் ஒரு பகுதியை அவள் கண்களின் ஆழத்துள் விட்டு வந்தாற்போல் தான் இருந்தது, நான் இங்குமிருக்கிறேன், அங்குமிருக்கிறேன்.

இதன் ரஸாயனம் என்ன?

அறைக்கு வெளியே ஆளரவம் கேட்டது. உள்ளே வந்து விளக்கைப் போட்டாள், கையில் பையனைப் பிடித்துக் கொண்டிருந்தாள், ஸாரங்கன் திமிர முயன்றான்,

"இதென்ன விளக்கைக் கூடப் போடாமல் எந்தப் பட்டணத்தைக் கட்டியாறது? இவன் பண்ற அக்ரமம் வரவர ஸஹிக்க முடியல்லே. என் மானம் போறது. இவனை நீங்கள் கண்டிக்கணும்;"

"என்ன நடந்து விட்டது?"

"காலையில் என்ன பண்ணானோ அதேதான் இப்பவும். கையும் பிடியுமாய்ப் பிடிச்சு இழுத்துண்டு வந்தேன். எதிர் வீட்டு மாமா எச்சிலை தின்னுண்டிருக்கான், அவரும் வஞ்சனையில்லாமல் கலத்திலிருந்து குழம்புஞ் சாதத்தை உருட்டி உருட்டி கொடுக்கிறார், இவனும் குருவிக் குஞ்சு மாதிரி வாயைத் திறந்து காட்டிண்டிருக்கான்.

"உமா நீ ஒன்றும் புதிதாய்க் கண்டுபிடித்து விடவில்லை. வீட்டுக்கு வீடு தலைமுறை தலைமுறையாய் நடக்கிறதைத் தான் சொல்கிறாய்,"

"இதென்ன வியாக்யானம்?"

"இது உள்ளது. இவன் வயதில் நான் என் தாத்தாவின் இலைப் பாலுஞ் சாதத்திற்குக் காத்திருந்தது இன்னும் மறக்கவில்லை. தாத்தாவுக்கு எச்சில் கொடுக்கப் பிடிக்காது. அதற்காகவே சாப்பிடாமல், நான் தூங்குவதற்குக் காத்திருப்பார். ஆனால் நானா ஏமாறுபவன்? தூங்காமல் கண்ணைக் கசக்கிக் கொண்டு காத்திருப்பேன். வேண்டா விருப்பாய் அவர் சபித்துக் கொண்டே என் வாயில் மேலும் கீழும் வழிய ஒரு கவளமாவது ஊட்டி. சர்க்கரை விரலில் தொட்டு என் நாக்கில் இழுத்த பின்தான் அந்த இடத்தை விட்டு அகலுவேன்.?'

"அப்படியானால் இப்படியே எச்சிலைத் தின்னுண்டேயிருன்னு இன்னும் கொஞ்சம் சொல்லிக் கொடுங்கோ."

ஆத்திரத்துடன் பையனை அவன் பக்கம் தள்ளினாள் குழந்தையை அப்படியே வாரியணைத்துக்கொண்டான்.

''மூஞ்சி குத்தறதப்பா கறுப்பு கறுப்பாயிருக்கே எப்போப்பா வெள்ளை வெள்ளையாய்ப் பண்ணிக்கப் போறே?''

ஸ்படிகத் தூய்மையில் சிரிப்பு. நெஞ்சில் நீர்வீழ்ச்சி யாய்ப் பீடுங்கிக் கொண்டு தான் பாயுமிடமெல்லாம் சுந்தம் செய்து கொண்டு உடல் அகலத்துள் பரவுவது தெரிந்தது.

# மாய மான்

இதென்ன இத்தனைக் கூட்டம். 'ஜே ஜே' தேரா திரு நாளா? இல்லை நான் ஊரைவிட்டுப் போய் வருடம் ஐந்தா ஐந்நூறா?

என் பெட்டி படுக்கை, மூட்டை முடிச்சுகளுக்கு நடுவே காட்டில் விட்டாற்போல் நான் நிற்கையில், என் தோளில் உரமாய் ஓர் அறை விழுந்து, திரும்பிப் பார்த்தால் அப்பா அவர் விழிகள் சிரிப்பைச் சிந்தி...

''என்னடா விழிக்கிறே. திருதிருன்னு. என்ன தேடு கிறாய். எதைக் கீழே போட்டாய்—ஓ என் பாதத்தைத் தொடுகிறாயா. இன்னும் கூட இதெல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறாயா? ஏது உயர்ந்து விட்டாயே!''

என்ன உயர்ந்தால் என்ன. இன்னும் நான் அப்பாவை அண்ணாந்துதான் பார்க்கிறேன்.

''உம்—not bad. என் தோளுக்கு வந்திருக்கிறாய் ஆனால் தோளுக்கு மிஞ்சினால்தான் தகப்பன்; அதனால் இப்போதைக்கு இன்னும் பிள்ளைதான்!''

அப்பாவின் உயரமும் காத்ரமும் என்னால் என்றுமே ஆகமுடியாது.

''என்ன எசமான் அடைச்சுட்டு நிக்கிறீங்களே, சின்ன அய்யாவை நானும் கொஞ்சம் பார்க்கறேனே!''

ஓ! மாடசாமியும் வந்திருக்கிறானா? மாடசாமி மீசை, மீசையா அது? அதிலிருந்து குருவி பறக்குமா, காடை பறக்குமா என்று அப்பவே கேட்பேன். அவனும் சளைக்

காது, மீசையை முறுக்கி விட்டுக்கொண்டு, "ராவுலே வந்து அடையும். பார்த்துச் சொல்றேன்" என்பான்.

"என்ன போவோமா? மடசாமி எடேண்டா பெட்டியை!"

அப்பா மடசாமி என்றுதான் அழைப்பார். ஆனால் அப்பா ஒண்டிதான் அப்படி அழைக்க முடியும்.

இரும்புப் பட்டை போட்ட தொட்டி மாதிரி கட்டை குட்டையும், குத்து மீசையுமாய் அவனைப் பார்க்கவே யாருக்கும் சற்று அச்சம்தான். ஒரு சமயம் அரை சமயம் அப்பா விடம்கூட அவன் சிலும்புகையில், சர்க்கஸ் கூண்டில், சிங்கமும் சாண்டோவும் ஒருவரை யொருவர் முறைப்பது போலிருக்கும்.

ஒரு சமயம் கோப வெறியில் அவன் யாரையோ கொலை செய்துவிட்டு, அப்பாவின் தலையீட்டால்தான். ஒருவருடக் கடுங்காவலுடன், கயிறுக்குத் தப்பித்ததாகக் கேள்வி. விஷயத்தின் மற்ற விலாசம் எங்களுக்குத் தெரியாது, அதெல்லாம் அந்த நாள். நான் பிறக்கு முன்பே, ஒன்றொன்று அப்படித் தான். ரொம்பவும் உட்புகாமல் இருப்பதனாலேயே நாட்களின் மூட்டத்தில் என்னவோ என்னவோ என்றே, அதில் அடவியின் இன்னிருள் கண்டு, அதன்மேல் ஒரு நளினமான அழகும் படர்ந்து விடுகிறது.

"என்னடா நடவேன்! இன்னும் மயங்கி மயங்கி நிற்கிற வழக்கம் போகவில்லையா?"

இரண்டு பேரும் என்னை எங்கே அழைத்துச் செல்கிறார்கள்? இந்த ராட்சஸக் கார் ஏது? அப்பாவே ஓட்டும் இடத்தில் அமர்கிறாரே!

"Come on, come on!" என்னை உள்ளே இழுத்துத் தன் பக்கத்தில் இருத்திக்கொண்டு. காரை 'ஸ்டார்ட்' பண்ணுகிறார்: பண்ணிக்கொண்டே, என்னை ஓரக்கண்ணால் பார்க்கிறார். அவர் விழிகள் கூத்தாடுகின்றன.

''ஆ பாலு, உனக்கு நான் ஒன்றிரண்டு விஷயங்கள் எழுத மறந்து போனேன். பாலு இந்த இரண்டு வருஷமாய் நான் பிஸிநெஸில் Lucky, கொஞ்சம் Lucky என்றால் என் அமெரிக்கை பாசாங்காகி விடும். ரொம்ப Lucky என்றேனோ எனக்கு மண்டை வீங்கிப் போச்சு என்பார்கள், ஆனால் உண்மை என்னவென்றால் I have been samned lucky!'

தன்னை மீறிய களிப்பில், அப்பா என்னை முதுகில் அறைந்த அறை எனக்குப் 'பக்'கென மூச்சை அடைத்தது.

பின்னாலிருந்து:

''எசமான், எசமான் உங்க சந்தோஷத்திலே சின்ன அய்யா ரத்தம் கக்கிடும்போல் இருக்குதே!''

zoom! முழுவேகத்தில் வெகு சொகுஸ்ஸாய். அப்பா ரோடு விளிம்பில் காரை வளைத்தார். ஒரு சைகிள் ஆசை தப்பித்தது.

''பின்னே என்ன. அம்மாவும் நீயும் சேர்ந்து இதுவரை இவனை நிழல் பயிர் செய்தது போதும், இனி என் பையனை இப்படித்தான் பதனம் பண்ணனும்!''

''இதென்ன மகனா, மாட்டுத் தோலா' பதனம் பண்ண?' நீங்க பண்ற தோல் வியாபாரம்னு நினைச்சுட்டேங்களா?''

''ஆமாம் நான் ஒரு கசாப்புக் கடைக்காரன்!''

கசாப்பு கடைக்காரன்!

கசாப்பு...ஆ...ஆ...ஆ...கசாப்பு
கடைக்காரன்!

அப்பா உரக்கப் பாட ஆரம்பித்தார், பாட்டா அது? களி வெறியின் எக்காளம். காரின் உள்ளடைப்பில் 'பூம்' என்று ஜாலர் போல் எதிரொலித்தது.

தூரத்துக்குத் தூரம் புள்ளி நகர்ந்தாற் போல் ஆள் நடமாட்டம், நாங்கள் போய்க் கொண்டிருந்த பாதையில்,

வெறிச்சிட்டுவிட்டது. வண்டி பருந்து வட்டத்தில் ஒரே நிதானத்தில் பறந்து கொண்டிருந்தது. தடவிக் கொடுத்த பூனைபோல் எஞ்சினின் சத்தம் மெத்தென செவியில் ஒத்திற்று.

கம்பி வேலி தடுத்த ஒரு பெரிய காம்பவுண்டினுள், நான் கண்டு தெளிவதற்குள் கார் புகுந்துவிட்டது, அடர்ந்த புற்றரைகளினிடையே எங்கள் எதிரே சாலை நெளிந்து ஓடிற்று. அரவம் கேட்டு, ஒரு மான் கம்பீரமாய்த் தலை தூக்கி எங்களைப் பார்த்துவிட்டு மறுபடியும் மேய ஆரம்பித்தது. அதன் முகத்தில் அமைதி குலையவில்லை, விழிகளில் மருட்சியில்லை. அதன் கொம்பின் கிளைகளில் சிக்குண்ட என் மனதை விடுவித்துக் கொள்ளும் முன்னரே, முட்ட வருவதுபோல் எங்களை நோக்கி விரைந்து வரும் மரமதிலின் மேல் இலைக்காடுகளின் பின்னணியிலிருந்து மாடி முகடு திடுமென திருப்பத்தில் தெரிந்ததும் எனக்கு உடல் புல்லரித்து விட்டது.

''என்னப்பா அது?''

''ஆ பாலு, உனக்கு நான் ஒன்றிரண்டு விஷயங்கள் எழுத மறந்து போனேன். மலிவா வந்தது வாங்கிப் போட்டேன், come on get down: ஒரு பயலுக்கும் ஒரு செப்புக் காசு இதன்மேல் பாக்கி கிடையாது, எவனாவது எதையாவது கொண்டாடிண்டு வந்தானோ, முறிச்சுட்டேன் காலை! ஆமாம். துலுக்கன் தர்பார்தான்; முன்னாலே தண்டனை, பின்னால் விசாரணை!''

அப்பாவின் கண்களில் திடீரென சிவப்பேறிவிட்டது. காளைக்குத் திமில் சிலிர்ப்பது அவர் தோள்கள் குலுங்குகையில் நிஜமாவே பயமாயிருக்கும். அப்பா சொன்னபடி செய்யமாட்டார் என்று சொல்ல முடியாது. ஒரு தடவை வென்னீருள் பாயிலரை நிறைஜலத்துடன் அப்பா அலக்காகத் தூக்கிப் பார்த்திருக்கிறேன்.

யாரை மனதில் வைத்துக்கொண்டு, அப்பா யார்மேல் கோபம் கொள்கிறார் என்று சமயங்களில் சொல்ல முடியாது. எனக்குத் தோன்றுவதுண்டு;தன் எதிரிகளை அவ்வப்போது தன்னிலேயே ஆவாஹனம் பண்ணிக்கொண்டு தன் மேலேயே ஆவேசங் கொள்வதிலேயே அப்பாவுக்குத் தனிக் 'குஷி'யோ? கோபத்தை ஒத்திகை பார்த்துக் கொள்கிறாரோ?

வந்த கோபம் வந்ததுபோலவே சட்டென விட்டது. என் தோள் மேல் கை போட்டுக்கொண்டு, "அம்மாவைப் பார்க்கப் போவோமா?" என்கிறார்.

வளை மாடியேறி ஒரு அறையுள் நுழைகிறோம். மேகத்தின் பின் நிலவு ஒளிந்தாற்போல், அறையில் நீல இருள் சூழ்ந்திருக்கின்றது,

"பாலசந்திரா!"

இம்மாதிரி இக்குரலில் என் பெயர் கேட்டு எத்தனை வருடங்களாகிவிட்டன என்று தோன்றுகையிலேயே, என் கண்கள் சர சரவென நிறைந்துவிட்டன.

"பாலு."

"பாலன்."

"மிஸ்டர் சந்தர்,"

உரிமையுடன் ஓரிருவர் என் உடல் மென்மையைக் கேலிசெய்ய.

"பாலா!"

"ஏடி பாலம்மா!"

என இத்தனை நாட்கள் அழைத்துப் பிறை தேய்ந்து போனபின், இவ்வறையின் இருளிலிருந்து அசரீரிபோல் அம்மாவின் தீனக்குரலில் என்னிடம் என் முழுப்பெயர் திரும்பி வருகையில், நானே ஏதோ கிரஹணத்தினின்று

விடுபட்டு, எனக்குப் புத்துயிர் ஊட்டினாற்போல், உடல் பூரா ஒரு விறுவிறுப்பு பாய்ந்தது. என் பெயருக்கு முழுமை தந்து அழைப்பது அம்மா ஒண்டிதான்.

"அம்மா!"

"ஊஹூம். நமஸ்காரம். பண்ணாதே. படுத்துண்டிருக்கிறேன்—என்னடா ஓரேயடியாய் இளைச்சுப் போயிருக்கையே!"

"விஜயா. இதுவரையில் எந்த அம்மாவுக்கு அவள் பிள்ளை பயில்வானாய்ப் பட்டிருக்கிறான்? உன் பிள்ளை பயில்வானாய் இல்லை. ஆனால் மோசமாயில்லை. கொஞ்சம் உயர்ந்திருக்கிறான்."

"ஏது உங்கள் கண்ணே பட்டுவிடும் போலிருக்கே!"

"அதுவும் சரிதான். என்ன இருந்தாலும் நான் தகப்பன் தானே! கவலைப்படாதே. மற்றபடி உன் பிள்ளை. மாறி விடவில்லை. நீ அனுப்பிவைத்த மாதிரியே பேசாமடந்தையாய், ஊமைக் கனா கண்டு கொண்டு..."

பூம்! அந்த ஆண்சிரிப்பு அறையின் மூட்டத்தைக் கலைத்து திருகொளி காட்டுகின்றது.

அம்மாவால் இதற்குமேல் வற்ற முடியுமோ? நாங்கள் திகைக்கத் திகைக்க இப்படியே நித்யகாண்டம் பூரணாயுசாய் இழுபட்டுக் கொண்டிருக்கிறாள். நான் பார்த்ததற்கிப்போது இன்னும் சுண்டி, குறுகிப்போய், பெருக்கியெடுத்து முகத்தில் வாரிய குப்பைபோல், எலும்புக் குவியலாய், கட்டிலில் கிடக்கிறாள். என்னைப் பெற்றதிலிருந்தே ஒன்று மாற்றி ஒன்று ஏதோ கோளாறுக்கு வைத்யம் பண்ணி, அதில் வேறு சிக்கல் கண்டு கடைசியில் இரைப்பைக்குத் தீரா பழுது வந்துவிட்டது. இப்பொழுது ஜலம்கூட தங்க மறுக்கின்றது. அவளுக்கு இனி விமோசனமில்லை என்று அவரவர்க்குத் தெரிந்தும், அதை

நாங்கள் ஒருவருக்கொருவர், தம் தமக்கே ஒப்புக் கொள்ளாத உண்மை.

என்னைப் பெற்றெடுத்ததே சாக்காய்; நான் அவளுடைய மெது யமனாய் வாய்த்து விட்டதை நினைத்து புழுங்கு கையில் என்னையே எனக்கு வேண்டியில்லை. ஆனால் ஊசலாடும் தன் உசிரை அவள் என் மேலேயே விடுவது காணக் காண இன்னும் நெஞ்சையறுக்கிறது.

"என்னப்பா பாலு சௌக்யமா?"

குரல்கேட்டுத் திரும்புகிறேன், சாலா மாமி இரண்டு கைகளிலும் இரண்டு டிபன் தட்டுகள் ஏந்தி நிற்கிறாள்.

"படிப்பு படிப்புன்னு வருடக் கணக்கில் போய் உட்கார்ந் துட்டியே எங்களை மறக்கக்கூட நாளாச்சு!"

மாமி குரல் கம்மியது காண எனக்கு நெஞ்சு நெகிழ்கின்றது.

மாமி—நா என்ன. எங்கள் குடும்பமே உங்களை மறக்க முடியுமோ? ஆனால் ஒருவேளை நீங்கள் ஞாபகமூட்டுவது போல் மறந்து போனோமோ என்னவோ? உயிரோடு இழையும் மூச்சு எப்பவும் ஞாபகத்திலேயே இருக்கிறதா? மூச்சு தடைபடும் போது தானே மூச்சின் நினைவு? நினைவே மூச்சாய்த் தவிக்கிறது.

அம்மா படுத்த படுக்கையாகிவிட்டபின், வீட்டில் உள்ள அரிசியைச் சாதமாய்ப் பொங்கிப்போட யாருமிலாது குடும்பம் தவித்துக்கொண்டிருக்கையில், எங்கள் கஷ்டம் விடியவே போல், மாமி தனக்கும், தன் கையில் குழந்தைக்கும் திக்கிலாது வந்து சேர்ந்தாள். இதெல்லாம் சொல்லத்தான் கேள்வி. எனக்கே தெரியாது, எனக்கு நினைவு தெரிந்து, நான் என் தாயின் மடி அறியேன்; ஆனால் சாலா மாமிதான் எனக்கு மறுதாய்! என் தாய்க்கு செவிலித்தாய், அம்மாவுக்கு மலஜலம் முதல் எடுத்து, துணி மாற்றி, ராக்கண் விழித்து—

எங்கள் குடும்பத்துடன் தானும் ஒன்றாகிவிட்டதன் அடையாளமாய், மாமி சம்பளம் வாங்குவதுவிட்டு வருடங்கள் ஓடியாச்சு.

அவள் துயரம் எங்கள் உழவால்; இனி அவள் சந்தோஷம் என் கடமை.

''பாலசந்த்ரா, சாலாவின் அன்பான கவனத்தின் அக்ஷயமாய், அவள் சிச்ருஷை வளர்த்த உயிர்பிச்சையில்தான் நான் வாழ்கிறேன்; எனக்கு சில வேளைகளில் இப்படித் தோணுவதுண்டு; 'சீ, இத்தனை அவஸ்தை பட்டுண்டு பூமிக்குப் பாரமா, எல்லாருக்கும் கடனா வாழணுமா, ஒரு மாத்திரைக்கு நாலு மாத்திரையா ஒரே சமயத்தில் முழுங்கி, ஆட்டத்தை 'க்ளோஸ்' பண்ணிட்டால் என்ன?' ஏன் முழிக்கிறாய்? இது தேகம் தானே. ஒரு சமயம் இல்லாட்டா ஒருசமயம் இதுக்கே அலுப்புத் தட்டாதா? அப்போ சாலா சொல்லுவாள்: ''அப்படியெல்லாம் அவசரப் பட்டுடாதேங்கோ, அசட்டுத்தனமா, உங்கள் பேரன் உங்களுக்கு நெய்ப்பந்தம் பிடிக்கவேண்டாமா? ஆனால் நீங்கள்தான் பார்க்க முடியாது.''

''நீயாவது பார்த்து வந்து என்னிடம் சொல்லு'' என்பேன்.

''தாராளமா, இது கூட உங்களுக்கு நான் செய்யக் கூடாதா? சக்குவைக் கையைப் பிடிச்சுக் கொடுத்துட்டேன்னா அப்புறம் எனக்கு இங்கே என்ன வேலை?''

''ஐயோ, இந்தப் பொம்மனாட்டிகள் பேச்சே!''

''ஆமாம். வேறென்ன பண்ணுவது, இப்படிக் கொட்டி ஆத்திக்கறதில்தான் எங்களுக்கு ஒரு ஆறுதல்.''

''சரி, சரி, ஜாலா, டிபனை நாங்கள் சாப்பிடக்கொண்டு வந்தையா, இல்லை எங்களுக்குத் தட்டை நைவேத்ய காட்டிவிட்டு எடுத்துப் போக வந்தையா?''

மாமி புன்னகை புரிகிறாள்,

"பாலு, உங்கப்பாவின் கோபத்தை எப்படி அடையாளம் கண்டுகொள்வதுன்னு எனக்கு இன்னும் தெரிஞ்சபாடில்லை."

ஒருக்களித்த கதவின் பின் கைவளை குலுங்கக் கேட்டுத் திரும்புகிறேன். கதவை வெடுக்கெனத் திறந்து கொண்டு கையில் கூஜாச் செம்புடன் ஒரு பெண் வெளிப்பட்டு, உள் நுழைகிறாள். என்னைப் பார்த்துச் சட்டெனத் திக்பிரமை பிடித்தாற்போல் நிற்கிறாள்.

"யாரம்மா இது, நம்ம கொக்கு பாலுவா?"

மாமி முகம் சட்டென மாறியது. "உஷ் அசடே! இனிமேல் அப்படியெல்லாம் பேசக்கூடாது! பாலு, நீ விட்டுப் போன இடத்திலேயே வருஷங்கள் நின்னு போச்சுன்னு சக்கு நினைச்சுண்டிருக்காள்,"

சகுந்தலாவா இது? பாவாடை சொக்காயிலிருந்து தன் வசமிலாது கையும் காலும் குச்சி குச்சியாய் நீட்டிக் கொண்டிருந்த சுக்கு சக்குவா? இந்த சாரத்தின்மேல் இந்தக் கட்டிடத்தை எழுப்பியிருக்கும் வருடங்களின் வேலைப் பாட்டைக் கண்டு வியப்பதா? சப்பாத்திக் கள்ளி பூச் செண்டாய் மாறிவிட்ட மாயத்தைக் கண்டு பிரமிப்பதா?

எனக்கும் சக்குவுக்கும் என்றுமே ஒத்துக்கொள்ளாது, மஹா கோபக்காரி. அடிக்கடி கை மிஞ்சிவிடுவாள். எனக்குத் திருப்பியடிக்க அதிகாரம் கிடையாது, "பெட்டைக் குழந்தையைத் தொட்டு அடிக்கிறதாவது! வெட்கமா யில்லை?.' என்று அம்மாவே கண்டிப்பாள். "குழந்தையாம்! என்னைவிட ரெண்டு வயதுதானே அவள் சின்னவள்' அப்போ நான்மாத்திரம் பெரியவனோ?" என்று நான் பொருமுவேன்.

மாமி தலையிடமாட்டாள். அவள் புன்னகைக்கு அவரவர்க்கு இஷ்டமான அர்த்தம் பண்ணிக்கொள்ளலாம்.

அம்மாதிரி இப்போது மாமியின் புன்னகைக்கு என்ன அர்த்தம் கொள்வது?

கீழிருந்து மாடசாமி குரல்: "எசமானுக்கு டெலி போன்!" அப்பா எழுகிறார்.

"சக்கு, பாலுவுக்கு அவன் அறையைக் காண்பி!"

அவள் முன்னால் போக நான் பின் தொடருகிறேன். பின்னலா அது? இரைதின்ற பாம்பு. ஓரிருமுறை என்னைத் திரும்பிப் பார்த்துப் புன்னகை புரிகிறாள். கன்னம் குழிகின்றது,

"சரி, நீ மென்னு முழுங்கிண்டுதானிருப்பாய். நானே முந்திக்கறேன். ஏன் பேயறைஞ்ச மாதிரி முழிக்கிறாய்?"

நான் திக்குமுக்காடிப் போனேன்,

"நாங்களே இப்படித்தான். பருவ வேகம் எங்களுக்கே எங்கள் அடையாளம் மாறிப் போயிடறது. அதிலும் நான் சுபாவத்திலேயே வாளிப்பு. ரொம்பவும் பருத்திருக் கேனா?"

தன் கவலையில் தன்னையே திரும்பிப் பார்த்துக் கொள்கிறாள்.

"பட்டினியிருந்தால் குறையுமோன்னு பார்த்தால், இப்போதான் ஒருபிடி கூட இழுக்கிறது!" வாய்விட்ட அவள் சிரிப்பின் அவுட்டு நக்ஷத்திரங்கள் அவைகளின் பல்வேறு வர்ணங்களுடன் என் நெஞ்சில் பெய்கின்றன. என்னுள் அலை விழுந்த இடங்கள் வர்ணங்கள் மாறுவதை உணர்கிறேன்.

சட்டென சிரிப்பு ஒடுங்குகிறது,

"அம்மா அப்பப்போ என்னை மட்டந் தட்டிண்டு தானிருக்கா. என்னவோ பழமொழி அடிக்கடி சொல்றா; பொட்டலம் பிரிச்சா போச்சாம், பொண்ணு சிரிச்சா

போச்சாம். நீ வரப்போறேன்னு என்னை என்னென்ன எச்சரிக்கை பண்ணியிருக்கா தெரியுமா? ஆனால் நான் 'ராபணா'. உன்னைக் 'கொக்கு பாலு'ன்னுட்டேனே, அதுக்கு எனக்குக் கீழே போனால் பாட்டு இருக்கு. ஆனால் அம்மா சுபாவம் பாட்டு இல்லை. முந்தியெல்லாம் அடித் துடைவில் துளிச் சதையைக் கட்டை விரலுக்கும் சுட்டு விரலுக்கும் நடுவில் அள்ளித் திருகுவாள். பிராணன் போகும். ஆனால் இப்போ சொல்லே, நெருப்புக் கொட்டையைத் தேய்ச்சு அங்கே வெச்சாப்போலே, அதுக்கு மேல் சுறீலாயிருக்கு. ஆனால் கறுப்பு நாயை வெள்ளை நாயாக்க முடியுமோ? நீ பார்த்ததுக்கிப்போ எனக்குக் கறுப்பு உதிர்ந்திருக்கோ? ஆனால் நீ நன்னா செவந்துப் போயிட்டே. போன இடத்தில் உனக்கு உடம்பிலேயே ஒருதோல் உரிஞ்சு போச்சு. பாம்புச் சட்டை மாதிரி. பாலு, உனக்கு ஞாபகமிருக்கா? ஒரு தடவை நமக்குள்ளே சண்டையில்—நம்மில் சண்டையைத் தவிர வேறென்ன இருந்தது?—ஆத்திரத்தில் உன் தோளை வகையாக் கடிச்சுட்டேனே! கடிச்ச இடம் சிவந்து, சுழிச்சு அப்புறம் கறுத்துப் போச்சு. அம்மாகூட விஷக்கடின்னு என்னை அடிச்சா. அதுமாதிரி எல்லோருக்குமே விஷக்கடி இருக்காமே! பாலு, நான் கடிச்ச தழும்பு இன்னும் இருக்கோ? அம்மா சொல்றா: சில தழும்புகள் சாகும்வரை இருக்குமாம். ஆனால் வெளியே தெரியாதாம். அப்படி உண்டோ? உன் அப்பா, "உன் அம்மா பேசறது அது ஒரு பாஷை" என்கிறார். பள்ளிக் கூடத்தில் படிச்சிருக்கேன் தேசங்கள்தோறும் பாஷைகள் வேறுன்னு. ஆனால் இந்த வீட்டில் மனுஷாளுக்கு மனுஷாளே மாறியிருக்கு, நான் பள்ளிக்கூடத்தை விட்டு நின்னுட்டேன், தெரியுமோன்னோ? எனக்குப் படிப்பு வரல்லே. நீ என்னவோ ஒஸ்திப் படிப்புப் படிச்சிருக்தாயாமே! நிஜமாவா? இந்த மாடி உயரம் இருக்குமா? ஊமைக் கோட்டான்? நான் பேசிப் பேசியே, இதோ உன் ரூமும்

வந்தாச்சு. சரி நான் போறேன். அம்மா இப்பவே பல்லை நற நறன்னு கடிச்சுண்டிருப்பா—''

மண்டி, சிதறிக்கிடக்கும் சோபாக்கள், நாற்காலிகள், திண்டுகள் மத்தியில் திகைத்து நிற்கிறேன். தரை தெரியவில்லை. காலடியில் விரிப்பு மெத்தென அழுந்துகிறது. சுவரையடைத்த அலமாரிகளில் புத்தகங்கள் வழிகின்றன.

அறையல்ல. இது ஒரு தனி உலகம்.

''எப்படி?'' என் பின்னால் அப்பாவின் குரல் 'பூம்' இடுகின்றது. திடுக்கிட்டுத் திரும்புகிறேன்.

''How do you like it? Good show, Isnt it?''

அப்பா கையை வீசுகிறார். இன்னும் அந்தப் பச்சைக்கல் மோதிரத்தை அணிந்து கொண்டுதான் இருக்கிறாரா என்ன? அம்மா எப்பவோ வாங்கினாளாம், அப்பாவுக்கு என்று. நாளடைவில் அது மோதிர விரலிலிருந்து சுண்டு விரலுக்கு மாறிவிட்டது.

தழையத் தழைய வெள்ளை ஜிப்பாவும், பாதம் தெரியாது தரைபுரள—அப்படியும் கரையில் ஒரு இம்மி அழுக்கு படாது—மல் வேட்டியும் அப்பாவின் வாட்ட சாட்டத்தை எடுத்துக் காட்டுகின்றன. அப்பாவுக்கு இன்னும் ஒரு மயிர் நரைக்கவில்லை. ஒரு மயிர் உதிரவில்லை,

''You know, சிலர்போல், இது ஏழையின் குடிசையென்று நான் வேஷம் போடமாட்டேன். அமரிக்கையாயிருக்கிறார்களாம்! ஹம்பக்! நன்றாய் அனுபவி, நன்றாய் அனுபவிக்க நன்றாய் உழை. நன்றாய் உழைக்க நன்றாய் அனுபவி, இது தான் என் கொள்கை. இவை அத்தனையும்''—மறுபடியும் கை வீச்சில் மோதிரக்கல் 'பளிச்'— ''என் சித்தாந்தத்தின் அத்தாட்சிகள்.'' கூட்டில் புலிபோல் அப்பா உலாத்த

ஆரம்பித்து விட்டார். அப்பாவை இப்படி உக்கிரத்தில் பார்க்கப் பார்க்க அப்பா அலுக்காத காட்சி.

"You know, பாலு, நானும் யோசனை செய்துதான் பார்த்தேன். செயலை விட மனிதன் கண்ட காணக்கூடிய விடுதலை எது? விருப்பு வெறுப்பற்று, பலனை எதிர்பாராத செயல் எனும் சிக்கல் எல்லாம் எனக்குத் தெரியாது. நான் கீதை படிக்கவில்லை, உழைத்துவிட்டு, உழைப்பின் பலனை எதிர்பாராவிடில் நான் மனுஷனா? எதிர்பார்த்த பலனை அடையாவிடில் என் பௌருஷம் ஆகும் கதிதான் என்ன? ஆகையால் இந்த வீடு, வாசல், சாமான், தோட்டம், போர்ட்டிகோவில் காத்திருக்கும் கார், மற்ற வசதிகள், சுகங்கள் அத்தனையும் நான். அந்த முறையில் இந்த உலகமே நான். ஏன், பயமாயிருக்கிறதா? என் பேச்சு அகந்தையின் சிகரமாயிருக்கிறதா? இருக்கட்டும். அகந்தை என் சித்தமிசை குடிகொண்டது. கொள்ளட்டும். எனக்கு என் உணர்வு இல்லாவிடில், உயிரே ஏது? இவ்வுணர்வு முற்றின உச்சம்தானே அகந்தை! சிந்தனையால்தான் சித்தத்திற்கு அமைதியென்றிருந்தால் இவ்வுலகில் செயலுடன் சிந்தனையும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் mind you!—" தன் வழியில் திடுமென நின்று, நான் குற்றவாளி போல் என்னைச் சுட்டிக்காட்டுகின்றார். அவர் கண்கள் கொதிக்கின்றன. "என்னிடத்தில் செயலுக்குப் பின்னிடம் தான் சிந்தனை. சிந்தனையென்பது ஒரு போதை. ஹா ஹா!"

அப்பாவின் எக்காளத்தில், அறையில் ஆங்காங்கே அலங்காரமாய், பெரியதும் சிறிதுமாய், உயரமும் குட்டையும் தட்டையுமாய் நிறுவியிருக்கும் வெண்கலக் கிண்ணங்கள் 'கிண்'ணென்று அதிர்கின்றன.

"நான் படிக்கவில்லை. நான் கடவுளை வழிபடவில்லை. ஒப்புக்கொள்கிறேன். ஆனால் உங்கள் சிந்தனையில் எனக்கு

நம்பிக்கையில்லை. சிந்தனையாளர்கள் விஞ்ஞானிகள் நீங்கள் சாதித்ததென்ன? நீங்கள் செய்வதே என்ன, செயலின் ஆராய்ச்சிதானே! சிலந்தி தன் எச்சிலிலிருந்து திரித்த நூல் கொண்டு கூடு கட்டுவது போன்று, செயல் என்று ஒன்று நேர்ந்தபின் அதனின்று உருவான சரடுதானே! செயல் எனும் சிலந்தி—ஆ! இது எனக்குப் பிடித்திருக்கிறது—இது இப்படி வரும் என்று எனக்குத் தெரியாது. ஆகவே இதுவே செயல் தான்—செயல் எனும் சிலந்திதான் என் கடவுள், செயலின் ஒடுக்கம் புலனின் ஒடுக்கம், புலனின் ஒடுக்கம் மனதின் ஒடுக்கம்; மனதின் ஒடுக்கம் உயிரின் அமைதி—இதுதானே சிந்தனையின் சாதனை! கொக்கு தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிப்பது எப்படி என்று கண்டுபிடிப்பதுதானே விஞ்ஞானம்; செயலின் புலிப்பசிக்குப் புல்லைக் காட்டும் புல்லர்கள்! செயலை செயல் வழி ஏற்காது அதைப் பெருக்குவதே நீங்கள்தான்!''

அப்பாவின் முகத்தில் தணல் நக நகக்கின்றது. அவரே, உடல் பூரா ஒரு சுடராகி விட்டார் என்று எனக்குத் தோன்றுகிறது.

''பிரமாதமாய் சிந்தனைக்கும் விஞ்ஞானத்திற்கும் போய்விட்டோம். முதலில் இந்த உடலைச் சொல்—'' தேங்காயைச் சுண்டுவதுபோல், தன் மார்பில் சுண்டிக் கொள்கிறார்.—'' முதலில் இந்த உடலைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியதெல்லாம் நாம் தெரிந்து கொண்டு விட்டோமா, தெரிந்து கொள்ளத்தான் முடியுமா? யூகமும் தர்க்கமும் தவிர. சாட்சி பூர்வமாய், பிறப்புக்குமுன் தெரியுமா, சாவுக்குப்பின் தெரியுமா? இடையில் இயங்கும் உயிரின் உண்மையான தன்மை தெரியுமா? இதையே நேரம்என்கிறோம். சிந்தனையென் கிறோம்; இந்த நேரத்திற்குள் குருவிதலையில் பனங்காயை வைக்கிறோம். ஆனால் இதையும், இத்தனையையும் உடல்

தாங்கிக் கொள்கிறதே, அதுதான் ஆச்சரியம்! இவ்வுடல் பலம் பெரும்பலம் தம்பி! செயலுக்கே. ஆமாம், சிந்தனையும் உள்பட எச்செயலுக்கும் அடித் தடவாளம் உடலைத்தான் நான் செயலுக்கும் முன் வணங்குகிறேன். எனக்கு சிந்தனை வேண்டாம். பெரும் பெரும் யோசனைகள் செய்திட புத்தி, அறிவு, என ஆயிரம் கூர்மை வேண்டாம். செயல் கொடு. போதும், அது தோலோ, தோலுரியோ. கசாப்போ, அதனினும் ஈனமோ, செயல்கொடு, அச்செயலின். முழுமையுடன் இயங்க உடல்கொடு போதும் வேறெதும், வேண்டிலேன், துயரமோ, வாழ்வோ நான் இயங்குகிறேன் என்பதே எனக்கு ஒரு பெரிய உண்மை. இந்த உண்மைக்கு இந்த உடல் சாட்சி. ஆகையால் இந்த உடலை முதலில் நான் புரிந்து கொள்ளப் பார்க்கிறேன். இந்த உடலை மறுக்க உண்மைக்கே உரிமை ஏது? அதைத் தாங்குவதே உடல் தானே! ஆகையால் நான் என் உடலை மறுத்தால் உண்மையை மறுத்தவனாவேன். பிறகு நான் வாழவே லாயக்கற்றவன். பிறகு வாழ்வதற்கே ஏதுவுமில்லை — ஓ, எங்கோ ஆரம்பித்து எங்கெங்கோ போய் வந்துவிட்டோம். நான் வேலையா வெளியே போகிறேன். எப்போ திரும்புவேனோ? எனக்காகக் காத்திருக்க வேண்டாம். சாப்பிட்டுவிட்டுத் தூங்கு. உனக்கு ரயில் அலுப்பு இருக்கும்.''

அப்பா போய் எந்நேரமோ ஆகிவிட்டது. ஆனால் என்னை ஒரு புயல் ஊடுருவி, தன் வழியில் என்னைச் சக்கையாய்த் துப்பி விட்டுச் சென்றாற்போல் எனக்கிருக்கிறது. அந்த மயக்கத்திலேயே நான் சாய்ந்த இடத்தில் அயர்ந்துவிட்டேனோ, என்னை யாரேனும் எழுப்பி சாதம் போட்டார்களா, அல்லது நான் உறங்கும் அசதிகண்டு எழுப்பாமலே இருந்துவிட்டார்களா தெரியாது. நான் தூங்கினேனே? அதுவும் அறியேன், நினைவுக்கும் நினைவு தன்னை இழக்கும் எல்லைக் கோட்டிற்கும் இடையே

உணர்வு தத்தளித்துக் கொண்டிருந்ததோ என்னவோ? திடீரென என் எதிரே, பெரிய ஜன்னலை அடைத்துக் கொண்டு ஒரு ராட்சதச் சிலந்திக் கூடு காற்றில் படபடக் கின்றது. அதில் அங்குமிங்கும் முகங்கள் மாட்டிக் கொண்டு தவிக்கின்றன; தெரிந்த முகங்கள் தெரியாத முகங்கள், அப்பா, அம்மா, சாலா மாமி, நான். எங்கள் முகங்களும் தெரிகின்றன. கூட்டின் நடுவே சிலந்தியின் இடத்தில் கனத்ததொரு பின்னல் சுருண்டு கிடக்கின்றது, இரைதின்ற பாம்புபோல் அவ்வளவு கனம்,

இருந்தாற்போல் இருந்து அது சுருள் சுழன்று என் முகம் நோக்கி ஊர்ந்து வருகிறது. உடல் பின்னல், முகம் பாம்பு என்னால் எதுவும் செய்ய முடியவில்லை, நான்தான் கூட்டில் மாட்டிக் கொண்டிருக்கிறேனே! என்மேல் ஏறி என் கழுத் தைச் சுற்றிக் கொள்கிறது. எனக்கு மூச்சு திணறுகிறது: ஆனால் அது விடுவதாயில்லை. என் முகத்தில் இடம் தேடி, கழுத்தைக் கவ்வுகிறது, திடீரெனக் கைகள் எனக்கு எப்போது முளைத்தன? பாம்பின் உடல், சிண்டு சிண்டாய் என் கையில் பிய்ந்து வருகிறதேயொழிய கவ்விய கடி விடுவதாயில்லை. பற்கள் இரக்கமற்ற தீர்வையுடன் பதிந்து, அழுந்தி, சந்திக் கின்றன. ஐயோ! ஐயோ!! ஐயோ!!! எப்படியோ பாம்புத் தலையை வெடுக்கென்று பிடுங்கி யெறிகிறேன். அதுவும் மற்ற முகங்களுடன் கூட்டில் அது விழுந்த இடத்தில் மாட்டிக் கொண்டு விட்டது. அதன் வாயில் என் கழுத்துச் சதை கொத்தாய் அடைத்துக் கொண்டிருக்கிறது. என் கழுத்தில் கடித்த இடத்தைத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறேன். ஐயோ! எவ்வளவு பெரிய, கோரமான தழும்பு! என்ன மறைத் தாலும் மறைக்கவே முடியாது. இந்தத் தழும்பு போகவே போகாது.

பாம்பின் முகத்தில் எவ்வளவு பெரிய துயரம்! 'பெரிய' என்றால் பற்றாது. துயரம் என்று விட்டதால் மட்டும்

சொல்லி ஆகிவிடாது. உலகம் உற்பவித்த நாள் முதலாய் அதன் சோகம். தன் வண்டல்கள், வருடங்களாய்த் தெளிந்த பனி நீராகி, இரண்டு குளங்களில் தேங்கி, அக்குளங்களுக்கு விழிகள் எனப் பெயரிட்டாற் போல் அவ்வளவு மகத்தான துயரம். இந்தத் துயரம் என்னால் சகிக்க முடியவில்லை. அழுது அழுது கண்ணீராய்க் கரைந்து இவ்விழிகளுள் கலந்து விட மாட்டேனா. அப்படிக் கலந்து நானே அற்றுப் போனா லும் என் வேதனையின் 'விண் விண்' அற்றுப் போகுமோ?

பாம்பின் விழிகள் அதன் கரைகள் கரைந்து வேறாய் இழைகின்றன. ஆ! புரிகிறது. நான் இவ்வீட்டுக்குள் வரும் வழியில் புற்றறையில் மேய்ந்து கொண்டிருந்தது. என்னை நிமிர்ந்த மான் விழிகள் அல்லவா இது! பயமற்ற பார்வை— இல்லை இது. யார், சக்குவா?

"இன்னும் விடியல்லியா பாலு? உன் அம்மாவுக்குப் பல் தேய்க்க வென்னீர் பேஸின் எல்லாம் கொண்டு வந்தேன். கதவு திறந்திருந்தது. எட்டிப் பார்த்தேன். எத்தனை நாழியா உன்னைப் பார்த்துண்டிருக்கேன் தெரியுமா? அம்மா கூட கண்டிப்பாள், தூங்கறவாளை அப்படி கவனிக்கலாகாதுன்னு அது என்ன சாஸ்திரமோ? ஆனால் அதுவே எனக்கு ஒரு கெட்ட பழக்கமாய் போச்சு. நீ தூங்கறபோது ஏதோ ஒரு தினுசில் அழகாய்த் தானிருக்கே. ஆனால் பார்த்தால் ஏதோ பாவமாயிருக்கு, ஏன்? ரெண்டு மூணுதரம் உன் மூச்சு தேம்பித்து, அடிச்ச குழந்தை அதே சாக்காய் தூங்கிட்டாப் போல. ஏன்? மறுபடியும் நம்ம ரெண்டுபேரும் சண்டை போட்டுக்கறாப்போல கனாக் கண்டாயா? ஏன். பேசவே மாட்டேன்கிறே? குரல் ரொம்பவும் கட்டை ஆயிடுத்தா? ஆண்களுக்கு குரல் மாறினால், சிலபேருக்கு ரொம்பக் கண்றாவியாயிருக்குமாமே. நிஜமாவா? குரல் மாறினப்புறம் ஆயுசுக்கும் அதே குரல்தானாமே? அதுதான் குரலைக் காட்ட மாட்டேன்கிறையா? அதென்ன, அவ்வளவு பெரிசா? என்

குரலை விடவா? அட, அதையும்தான் பார்த்து விடுவோமே! அம்மா என்னை அடிக்கடி, ''குரலைக் காட்டாதேடி காட்டாதே''ன்னு கன்னத்தைப் பிடித்து இழைச்சுண்டு தானிருக்கா. இந்தப் பெரியவாள் எல்லாம் என்னத்தை அப்படித் திருத்துவாளோ? அது என்ன கிழக்கே நிற்காதே, மேற்கே திரும்பாதேயோ? சரிதான் போறேன்...''

அவன் மாடியிறங்கிப் போகும் 'திடும் திடும்' செவியில் மோதுகின்றது.

எழுந்திருக்க மனம் இல்லை. வெளியே எட்டிப் பார்க்கிறேன். இரண்டு மேகங்கள் வெள்ளை எருதுகளின் உரு வெடுத்து ஒன்றோடொன்று மோதுகின்றன. 'டங்' கென்று நெற்றிகள் முட்டிக்கொள்ளும் சப்தம் கேட்காமலிருப்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

ஜன்னலின் கீழ் நேற்று நான் கண்ட மான் மேய்ந்து கொண்டிருக்கிறது, ஒரே கோட்டில் வரைந்தாற் போன்று எழுந்த அதன் உருவ லகு ஏதோ ஒரு தினுசில் என் இதயத்தில் ஓசையற்ற இசையை மீட்டுகையில் நெஞ்சு விம்முகின்றது. அந்த நடையில் என்ன மென்மை, பூமிமேல் பாதம் படுவதே அதற்கு அச்சம் போல்! மொழு மொழுவென சதைப்பற்றாய், வழு வழுத்து அழுத்தமான அதன் இடை அசல் மனித இனத்தது போலவே இல்லை? இடையை ஒடித்து ஒடித்து அது நடக்கையில், சக்கு மாதிரி—

அப்படித் தோன்றியதுதான் தாமதம்.

மதகின் கதவுகள் திறந்து கொண்டாற்போல் என்னுள் ஒரு பெரும் வெள்ளம் பெருக்கெடுத்தது. என்னை அடியோடு சுரண்டி, என்னை ஓலைப் பாயாய்ச் சுருட்டி மறுபடியும் என்னுள்ளேயே வீசியெறிந்த பாய்ச் சுருள் என் காலடியில் கழன்று விரிந்து ஓடுகையில், ஓலை பட்டாய் மாறி, அதில் வர்ணங்கள் சரசரவென விதவிதமாய் மாறி மாறி நெய்து கொண்ட மின்வேகம் கண்ணைப் பறித்து புருவ மத்தியில்

குடைந்து துருவியெடுத்தது. நான் களைத்துப் போய் தலையணையில் சாய்ந்தேன்.

"சக்கு! சக்கு!! சக்கு!!!" நெஞ்சு முனகிற்று.

பால் விஷமாய்த் திரிந்த பயங்கரத்தைக் காட்டிலும் திரிந்த நஞ்சு மறுபடியும் முன்னைக்காட்டிலும் அதிமதுர மான அமிர்தமாய் மாறும் இன்பத்தில், அவ்வின்பத்தின் வேதனையில், என் காலடியில் பூமியே குலுங்குகிறது.

உண்மையில் எங்கள், ஏன் யாருடைய சச்சரவுகளும் அடி, தடிகளுமே மூலபாசத்தின் தோலுரிப்புகள் தாமோ?

நானும் யோசித்துப் பார்க்கிறேன். ஹாஸ்டலில் இருக்கையில் எப்போதாயினும் உன்னை நினைத்திருப் பேனோ? அம்மா என்ன பண்ணுகிறாளோ, அம்மாவுக்கு மூச்சு சரியாக ஓடுகிறதோ? என்று ஏமாந்துவிடப் போகி றோமோ என்றெல்லாம் அம்மாவைப் பற்றிக் கவலைப்பட்ட துண்டு. ஓரிரு சமயங்கள் அம்மாவை நினைத்து என்னையறி யாமலே, தூக்கத்தில் கன்னம் நனைந்ததுண்டு சாலா மாமியைப்பற்றிக் கூட நினைக்கப் பிடிக்கும். அம்மாவுக்குப் பக்கபலமாய். தக்க துணையாயிருக்கிறாள் என்று ஆறுதலா யிருக்கும்.

சக்கு படகாமணி. பத்ரகாளி, சமையல்காரி பெண்ணைப் பற்றிப் பரிவாய் நினைக்க என்ன இருக்கிறது? ஆகையால் இப்போது இதுவே எனக்குப் பிரமிப்பாயிருக்கிறது. இம்மாதிரி காலைவாரி விடும் பரிவு நிலை ஒன்று இருக்கிறதா என்ன?

சக்கு, என், என், என்—

இல்லை, என் தவிப்புக்கு வார்த்தை காணாமல் தவிக்கும் தவிப்பில், சொற்களே பித்தங்களாய் மாறி வயிறு குமட்டுகிறது.

''என்னப்பா பாலு, ஹோட்டலில் கண்டதைச் சாப்பிட்டு, வயிற்றைப் பாழ் பண்ணிண்டுட்டியா? பரிமாறின பண்டம் அப்படியே இருக்கே, தொட்டுப்பார்த்ததோடு சரியா, உடம்பு சுகமில்லையா?''

''இல்லேம்மா, பாலு பெரிய மனுஷனாயிட்டான்!''

என்னைக் குற்றுயிராக்கியதல்லாமல் கொத்தி வேறு ஆகணுமா!

அப்பா அவசரமாய் வருகிறார், போகிறார்.

''ஒரு முக்கியமான deal. மூச்சுவிட நேரமில்லை. இந்தத் தோல் மார்க்கெட் இருக்கே. இது ஒரு பெரிய தண்டா. இன்னிக்குச் சிகரத்தில் இருக்கோமென்று தங்கி, மூச்சு வாங்கிக்கொள்ள முடியாது. விலை சரிஞ்சால் தடால் சாக்கடைதான்—என்ன ஒருமாதிரியாயிருக்கே, what is wrong with you?''

சக்கு, சக்கு, சகுந்தலா—

நாமம் என்ன திவ்யமானாலும் ரூபத்துக்கு இணையாகுமோ?

ரூபத்தின் நிழல்களைத்தான் நாமம் தரமுடியும். தவிர, நாம ஜபத்தில் நாமரூபம்தான் கிட்டும். அதுவும் நிழல்கள்.

ரூப தரிசனம், தானே தந்த பின் நாமஜபம் என்ன பயன்?

அதுவும் என்னைத்தானே வந்தடைந்த தரிசனத்தை என்னென்று சொல்வது? நாமம் தாண்டியபின் நாமமே நெஞ்சில் பாய்ந்த கோடாரியாகி விடுகிறது. சகுந்தலை, சக்கு என்னும் நாம தூரத்திற்கு அவளை நாம் பிரிந்திருப்பதே என்னால் தாங்க முடியவில்லை. நாமக் கோடரி பிளந்த கூறாய் நெளிகிறேன்.

திக்குத்தப்பி அறைகளைச் சுற்றி வருகிறேன்.

வீடு ஒரு காடு.

மாடசாமி வருகிறான். அவன் தோள் மேல் ஒரு குழந்தை குப்புறப் படுத்துக் கொண்டிருக்கிறது.

''நம்ம பையனுதானுங்க, இவன் ஆத்தா மூணு நாளா இவனுக்குப் பாலை மறக்கடிக்கப் பாக்கறா. நெனச்சு நெனச்சு வீல் வீல்னு கத்தறான். எங்களுக்கு ராத் தூக்கம் போயிட்ட ஆத்திரத்தில் நானும் ரெண்டு மொத்தறேன். நான் என்ன செய்வேன்? என் பெண்சாதியையும் குத்தம் சொல்றதில் குணமில்லை. மகவைப் பெத்து அவளும் உடம்பு சலிச்சுட்டா. இதுவும் அட்டையாட்டம் அவள் ரத்தத்தை உறிஞ்சுது. குடிக்குது. இதோ பாருடா கண்ணு, சின்னய்யா வைக் கண்ணெடுத்து, பிக்கெட்டு தருவாரு.''

குழந்தை தலை தூக்கி என்னைப் பார்க்கிறது. ஆனால் உண்மையில், அதன் கண்களில் பார்வையில்லை. அழுது அழுது வீங்கிப்போன கண்களில் ஒரு பெரும் சீறல்தான் தெரிகின்றது. உலகத்தில் யாருமே இப்போது அதற்கு எதிரிதான். முடிந்தால் உலகத்தையே எரித்து விடும் ருத்ரம், அதே சமயத்தில் தன் கோபம் தனக்கே புரியாத ஒரு திகைப்பு.

மறக்கடிக்கிறார்களாம்!

பின்னால் சிரிப்புக் கேட்டுத் திரும்புகிறேன்.

இடையில் குடத்துடன் நிற்கிறாள்.

''பாலு, நிஜம்மா இப்போ உன் முகம், பால் ஏக்கம் பிடுச்சுப்போன இதன் முகம் மாதிரிதான் இருக்கு. கண்ணாடி யில் பார், நான் பொய் சொல்றேனா பார்த்துக்கோ!''

மாடசாமி தன் பையனைச் சமாதானம் பண்ணிக் கொண்டு கீழே போகிறான்.

அவள் அம்மாவின் அறையை நோக்கிப் போகிறாள். நடையில் அவள் இடையின் ஒடிப்பினின்று என் கவனத்தை மாற்ற முடியவில்லை. அப்படியே அவளை என் கண்களால் விழுங்கி, விழிகளுள் வாங்கிக் கொள்ள மாட்டேனா? பிறகு அவளைத் தேடத் தேவையில்லை அல்லவா?

மாலை வருகின்றது.

ஆனால் எனக்கு வெறும் மாலை வருவதாக இல்லை. எதற்கோ நேரம் நெருங்குவது போல்தான் தோன்றுகிறது. ஆனால் ஒவ்வொரு நிமிடமுமே இப்படித்தான். ஏதோ ஒரு நேரத்தை, ஒரே நேரத்தைக் குறித்து நெருங்கி வருவதுபோல் வருகிறது? வந்து போகிறது, ஆனால் நேரம் நிமிடத்தில் பிடிபடாமல் நழுவி விடுகின்றது, இப்படியே நிமிடம் மணியாகி, மணி மாலையாகி, வாழ்நாளே நேரத்தின் ஏமாற்றமாகி, நேரம் கழுத்திலிட்ட சுருக்கில் உயிர் போகாமல் ஊசலாடுகிறது.

என் துக்கமே, என் வதைப்பே இதுதானா? காரணங் கண்டும் கொள்ள முடியவில்லை. இவளேதான் என் நேரம், இனி என் காரணி. என் கண்ணில் அவள் பட்டுக் கொண்டிராத ஒவ்வொரு கணமும் நான் உயிர்ப் பிணம்.

இனி என்னால் ஒரு நிமிஷமும் பொறுக்கமுடியாது.

இதோ அவள் திடுதிடுவென மாடியேறி வரும் சப்தம் கேட்கிறது. எனக்குப் பரபரப்பு தாங்க முடிய வில்லை. எழுந்து வந்து என் அறைவாசலில் நிற்கிறேன். மாடி வளைவினின்று படிக்குப்படி, படிப்படியாய் அவள் உருவம் உயருகையில், மூழ்கிய கோபுர வெள்ளம் வடிந்து கலச தரிசனம் ஆவது போல் வெளிப்படுகிறாள்.

நெற்றியின் நடுவகிடிலிருந்து கூந்தலின் வங்கிகள் சரிந்தன. புருவத்தில் அகல் வளைவில் கீறிய சாந்தி லிருந்து குங்குமம் குபீரெனச் சுடராய் எழுந்தது, விழி யோரங்களில் நீட்டிவிட்ட மை, கத்திப் பிடிபோல் காது வரை ஓடிற்று. மடிப்பினின்று குதித்தெழுந்த கத்தியின் அலகுபோல் விழிகள் எஃகொளி வீசின.

என்னைப் பார்த்ததும் சட்டென நின்றான். ஓடியேறி வந்த வேகத்தில் அவள் மார்பு லேசாய் மிதந்தது.

அவள் கைகளை எட்டிப் பிடித்தேன்.

அவள் தன்னை விடுவித்துக் கொள்ள முயலவில்லை. ஆனால் விழிகள் சஞ்சலித்தன.

"சக்கு"

மாமியின் குரல் கணீரென ஒலித்தது. அந்தக் 'கணீரே' துப்பாக்கி ரவை போல் என் மார்பில் பாய்ந்தது,

சக்குவை என்னால் பார்க்க சஹிக்கவில்லை. திடீரென அப்படி அலண்டு போனான், கண்கள் வட்டமாய்ச் சுழன் றன. கைகள் கூப்பி விரல்கள் பின்னிக் கொண்டன. திகிலுக்கு ஒரு பெயர் சக்கு.

"இல்லேம்மா."

"சக்கு, கீழே போ!"

மாமி என்னை நெருங்கினாள். என்னை அடிக்கப் போகி றாளா? இல்லை, மாமி முகத்தில் கோபம் இல்லை.

"பாலு சக்கு உன் தங்கை!"

மாமியின் விழிகள் நிறைந்தன.

"உன் தங்கை, நான் சொல்றது புரியறதாடா, சக்கு உன் தங்கை!"

கண்ணீர் பெருகி கன்னங்களில் வழிந்தோடியது.

"என்றைக்கேனும் இப்படி ஏதேனும் நேர்ந்துடுமோன்னு நான் வயிற்றில் நெருப்பைக் கட்டிண்டுதானிருக்கேன். அவளும் வெகுளியாயிருக்காள். நான் என்ன செய்வேன்? ராமா, என்ன செய்வேன்?"

மாமி வாய்மேல் முன்றானையை மூடிக்கொண்டு மெதுவாய்க் கீழே யிறங்கிப் போகிறாள்—தள்ளாடுகிறாள்.

நான் பஸ்மமாய்க் குமுங்கிக் குன்றி விட்டேன்,

என்னுள்ளேயே நான் இல்லை,

தூங்கிவிட்டேனா, நினைவிழந்தேனா, இறந்து போனேனா, என்மேல் கூரை சரிந்து விழுந்து விட்டதா? எல்லாமே ஒன்றாய்த்தானிருக்கிறது.

அறையில் இருள் சூழ்ந்திருக்கிறது. இரவா? இருட்டா தெரியவில்லை, தெரிந்து என்ன ஆகவேண்டும்? எங்கோ கடிகாரம் மணியடிக்கிறது. எத்தனை தரம்? இப்போ தெரிந்து என்ன ஆக வேண்டும்? வீடே அரவம் அடங்கிக் கிடக்கிறது. இனி எனக்கு இங்கே என்ன வேலை?

வீடு என்னும் காடு.

எழுந்து இருளில் என் வழியைத் துழாவிச் செல்கிறேன். கால்போன வழி.

"பால சந்த்ரா!"

ஓ, இங்கே வந்திருக்கிறேனா? வாசலில் நிற்கிறேன்.

நான் உள்ளே போகவில்லை' ஏன் போகணும்?

அம்மாவே எனக்கு அவள் குரலில்தான் வாழ்கிறான்.

''பாலசந்த்ரா, உன் மன நிலையை நான் அறிவேன். நீ வருவதற்கு முன்னாலேயே சக்குவுக்குக் கல்யாணம் கூடியிருந்தால் உனக்கு இது தெரிய வேண்டிய அவசியமேயிருந்திருக்காது. அப்படித்தான் நாங்கள் நினைச்சுண்டிருந்தோம். ஆனால் தக்க வரன் இதுவரை கிடைக்கவில்லை, உனக்காக, கையை விட்டுக் கழிஞ்சுதுன்னு கண்ட இடத்தில் தள்ளிவிட முடியுமா? இனி நீயும் சேர்ந்து உன் தங்கைக்கு நல்ல வரனாய்த் தேடணும், சாலாவுக்கு நம்மாலான கைம்மாறு இதுதான்,''

சற்றுத் தயங்கி அசரீரி மறுபடியும் வருகின்றது.

''பாலசந்த்ரா, நீ இனிமேல் குழந்தையில்லை. இதெல்லாம் நீ தெரிஞ்சுக்க வேண்டியதுதான். முதல் முதலில் எனக்கு உன்போல்தானிருந்தது. ஆனால் அலை அடங்கினப்புறம் நியாயம் தெரியாமல் இல்லை. அர்ச்சுனன் போல ஆம்படையானுக்கு வியாதிக்காரப் பெண்டாட்டியா வாய்ச்சுட்டு எனக்குப் பேச வாய் என்ன இருக்கு? அதுவும் ஒருநாளா, ரெண்டு நாளா, என்னால் அவருக்கும் ஆயுசுக்கும் தண்டனையா? நாம் எல்லாரும் மனுஷாள்தானே! இது ஒண்ணு நீ புரிஞ்சுண்டால் போதும்.''

ரூபதரிசனம் கிட்டிவிட்டால் போதாது. தரிசனத்தின் உறவும் புரிந்துகொள்ள வேண்டுமோ?

அதற்குத்தான் நாம ரூபமோ?

ரூபதரிசனத்தை நாமரூபத்தில் அடையவே நாம ஜெபமோ?

அம்மா குரல் அடங்கிவிட்டது. இதுவே அவளுக்கு அசதியாயிருக்கும், கீழே யிறங்கிப் போகிறேன்.

எங்கே வந்திருக்கிறேன்? அப்பா, என்ன இருட்டு!

காலை ஏதோ முகர்கின்றது, குனிந்து உற்று நோக்கு கிறேன். எது என்று புரிந்ததும் என்னைப் பெரும் சீற்றம் பற்றிக்கொண்டது. என் பலம் கொண்ட மட்டும் ஓங்கி அதை அறைந்தேன். அடி சப்பையில் விழுந்ததும், மிரண்டு அது ஒரு துள்ளு துள்ளிற்று.

“மாயமான்! மாய மான்!!” என்று அலறியபடி அதைத் துரத்திக்கொண்டு ஓடினேன், இருளில் வேர் தடுக்கிக் குப்புற விழுந்தேன்.

குளம்போசை என்னின்று எட்ட எட்ட ஒய்ந்து கொண்டிருந்தது.

அழுகையும் வந்தது.

# ராணி

கண்ணைத் திறக்க மனமில்லை. கண்ணுக்குள்ளே "ரோஸ்" கண்ணைத் திறந்தால் மூட மனமில்லை. வானத்திலே மப்பு மலையா குவிஞ்சு கிடக்குது. நேற்று மாலையிலிருந்தே மழை பெய்யாமல் சொகுஸ்ஸா ஒரு மப்பு. காலையா மாலையா அசப்பிலே கலக்கமாயிருக்குது. ரெண்டு பெரிய மனுசங்க பேசிட்டுப் போறாங்க. இதான் ஊட்டி வெதராம். ஊட்டிக்கு எவன் போய்ப் பார்த்தான்? அதான் நம்மைத் தேடிட்டு வருதே!

கண்ணைத் திறக்க மனமில்லை. கண்ணை மூட மனமிலை. காதண்டை வண்டு ஏதோ சந்தோஷம் சொல்லுது. என்னவோ நெஞ்சு நிலையிலே நிக்கலே, குதிக்குது. வயிறு கனமில்லாமல் உடம்பு லேசா காற்றிலே மிதக்குது. பசி இன்னும் கிள்ள ஆரம்பிக்கல்லே. ஆனால், இந்த நிமிஷம் வரைக்கும் வழியும் தென்படல்லே. ஆனால், இன்னும் அவசரமும் வல்லே. பொழுதிருக்கு. இவ்வளவு பெரிய பட்டணத்திலே ஒரு வவுறு கழுவத்தானா வழியில்லே?

"ஸ்டேஷன்வரை பெட்டியெடுத்து வரேன் ஸார்."

"டாக்ஸிதானே, இதோ ஒரு நிமிடம். இப்படி நிழல்லே நில்லுங்க. குழந்தைமேல் வெய்யில் படுது பாருங்க."

"பலாத் தோப்புக்கு வழியா பாட்டி? என்னோடு வா—"

"தாங்க்யூ மாஸ்டர், தாங்க்யூ."

"எஸ், ஸார்,"

"நோ ஸார்."

"ரெடி ஸார்."

"ஓ எஸ் ஸார்."

வழிதானா இல்லே, வாயிலே இருக்கு வழி. தினம் பிழைப்பு நடந்துட்டுத்தானே இருக்குது! அப்படியும் தலையைத் தடவ ஆள் கிடைக்காட்டி, ஒரு மிட்டாய்க் கடையிலோ, ரொட்டிக் கடையிலோ ஆள் ஏமாந்த சமயம் பார்த்து ஒரு பன்னோ, லட்டோ லவுட்டினாலும் போச்சு! ஆனால், எடுக்கத்தெரியாமல் எடுத்தால் மாட்டிக்க வேண்டியதுதான். சாமர்த்தியம் இல்லாட்டா தண்டனை சரிதானே! இல்லாட்டி போர் போரா கொட்டி வெச்ச பண்டத்திலே ஒண்ணு எடுத்து, கடைக்காரன் குடி பாழா போச்சுன்னா, அஞ்சுரூபா அவதாரம் அல்லது முப்பது நாள் காவல்? ஆனால், இத்தனை யோசனைக்கும் அவசரம் வல்லே. இன்னும் பொழுதிருக்கும்—அட சீ இதென்ன மூக்கிலே குறு குறு!

கண்ணைத் திறவாமலே முகத்துக்கெதிரே கையை வீசினான். ஆனாலும் மூக்கைப் பிடிவாதமாய்க் குடைந்தது. அட சூ—!

அரை மயக்கம், முழு நினைவும் கூடவில்லை. மனமில்லாத அரைக் கண் திறப்பில் பார்வையில் முதலில் படர்ந்தது அவனையும் தன்னுள் முழுக்கும் ஒரு பால் வெளிறு; பிறகு அதை விளிம்பு கட்டிய செந்தளிர். இரண்டும் சேர்ந்து சிரிப்பில் பல்வரிசையென உணர்வில் முன் தோய்ந்த பின்தான், அதன் பின்புலமாகி அதன் முகம் மனமயக்கத்தின் படலத்தில் பிதுங்கிற்று. இலை

களினின்று சிதறும் மழைத் துளிகள்போல். மார்மேல் சிரிப்பு கொட்டிற்று.

முழுக் கண் திறந்து, மூக்கைக் குடைந்துகொண் டிருந்த புல்லைப் பிடுங்கியெறிந்தாள்.

"இதென்ன விளையாட்டா?"

"நீ குறட்டைவிட்டே பாரு, என்னால் தாங்கவே முடியல்லே"

"நான் குறட்டை விடல்லே" பிடரியில் சினம் சிலிர்த்தது.

"இல்லே விட்டே."

"இல்லே விடல்லே, நான் தூங்கவேயில்லை, கண்ணை மூடிக்கிட்டிருந்தேன்."

"நான் மூணு தரம் மூக்கில் விட்டப்பறம்தான். நீ அசைஞ்சு கொடுத்தே. இந்தப் புல் தரை அவ்வளவு சுகமா என்ன?"

"நீ உருண்டுட்டு வந்த மெத்தை இதன்கிட்ட என்ன பண்ணும்?"

"நீ சொல்றதும் சரிதான். இங்கே பூமியைத் தொட்டால், புலிக்குட்டியைத் தடவரமாதிரி. மெத்து மெத்துன்னு, பூமி மூச்சுவிடறமாதிரி, உள்ளங்கைக்கு உசிரோடு ஒரு மிதப்பு தெரியறது."

"ராஜகுமாரி! புலிக் குட்டியைத் தடவினா ளாம்! ஹு!"

"நான் தடவியிருக்கேன். ஒரு தடவை ஜூவிலே— நீ ஏன் இங்கே படுத்திருக்கே, உனக்கு வீடில்லையா?"

தன்னைச் சுற்றி அணைத்தாற்போல், அலட்சியமாய் ஒரு கையை வீசினான்.

''ஏன். இதெல்லாம் உனக்கு எப்படிப் படுது?

''இத்தனையும் உன்னுதா?''

கண்ணை மூடியபடியே தலையை அசைத்தான். ''உனக்கு உன் ராஜ்யம், எனக்கு என் உலகம்.''

''நீ யார்?''

''நான் ராஜா.''

''ஓ!''

அதென்ன, வாயிலே கிளிப் பொந்து?''

''ஓ!''

''சரிதான், கொஞ்சம்'லூஸ்' போல இருக்குது''.

அவள் கண்கள் அச்சத்தில் சுழன்றன,

''என்னைப்பற்றி உனக்கு ஏற்கெனவே தெரியுமா?''

''உன்னைப்பற்றி எனக்கு இன்னும் என்ன தெரியணும்?''

அவள் பெருமூச்சின் கோடு நெஞ்சில் வீழ்ந்த இடத்தில் கீறல் விழுந்தது. விளையாட்டில் நேர்ந்துவிட்ட நகத்தின் பிராண்டல்போல் ஒரு வேதனை, எழுந்து உட்கார்ந்து கண்ணைக் கசக்கிக்கொண்டான். கண்ணைக் கசக்கியும் கலையாத கனவைக் கனவென்று நினைப்பதா, நனவென்று கொள்வதா?

கிலியும் சோகமும் தனக்குப் புரியாதவொரு பக்குவத்தில் சேர்ந்த விழி வார்ப்பில், திடீர் திடீரென முன்னூறு வயதின் அலுப்புடன், முப்பது நாள் பச்சைக் குழந்தையின் விளக்குப் பார்வையும். மாறி மாறியும் இழைந்தும் மருள் காட்டுகையில் நெஞ்சை என்னவோ செய்தது; அச்சமாய்க்கூட இருந்தது. பயத்துக்கொரு தேவதை அது இதுபோல் தானிருக்குமா?

தன் தைரியத்துக்குக் கனைத்துக் கொண்டான்.

"நீ யார்?"

"நீதான் சொன்னையே நான் ராஜகுமாரின்னு!"

"விளையாட்டிருக்கட்டும்."

அவள் அவசரமாய் இடைமறித்தாள்,

"ஏன். அப்படியே இருக்கட்டுமே! இதுவேதான் நிஜமாயிருக்கக் கூடாதா?"

"என்ன பெரிய பேச்செல்லாம் பேசறே. எனக்குப் புரியாத பேச்சு!"

"நான் மாத்திரம் புரிஞ்சா பேசறேன்!"

"எங்கே வந்தே? எங்கே இருக்கே? வழி தப்பிப் போச்சா? பயப்படாதே. இடம் சொல்லு. கொண்டுபோய் விடறேன்."

அவள் பதில் பேசவில்லை. தன் நகங்களைச் சிந்திக்க ஆரம்பித்துவிட்டாள். விரல்களுக்குக் கோப்பை வைத்தாற் போல் "பாலிஷ்" ஏற்றிய நகங்கள், ஐந்து விரல்களையும் சேர்த்துப் பிடிக்கையில், ஐந்து வண்டுகளின் முதுகுகள் ஒன்று சேர்ந்தன! விழிமேல் தாழ்ந்த இமைகள். அமைதியில் அசை வொடுங்கின, எண்ணெய்க்குளி கண்டாற்போல் கூந்தல் சற்றே சீறிக்கொண்டு, அதன் அலைவாகில் அடங்காப்பிரிகள் கருஞ் ஜ்வாலைக்கென முகத்தைச் சூழ்ந்து, காற்றில் அலைகையில்—

இந்த முகம் காற்றிலே ஒரு தோற்றமா?

நான் கையைத் தொட்டு அழிச்சால் கலைஞ்சு போயிடுமா?

நினைப்பா நெஞ்சில்தான் பதியும். எத்தனை நாழி பார்த்துக்கிட்டேயிருந்தாலும் கண்ணுக்கு நிச்சயமாகாதா? என் முழிப்பு நிஜமா. இல்லை இந்த முகம் நிஜமா? யாரை நிமிண்டிப் பார்த்துக்கறது?

மேலே மரத்தினின்று ஒரு அணில் தொப்பென்று அவள் மடியில் விழுந்து புரண்டு எழுந்து உருண்டடித்துக் கொண்டு ஓடிற்று. புற்களின் புதரினின்று "ட்வீப் ட்வீப்" அதன் கத்தல் விண் விண் எனத் தெறித்தது. பூமி தன் பாரம் முனகுது.

"எனக்குப் பசிக்கிறது."

"ஓ. அப்படியானா நீ நிஜந்தானா?"

"நிஜமாத்தான்? எனக்குப் பசிக்கிறது. பசிக்க ஆரம்பிச்சுட்டா பசி தாள மாட்டேன்-"

"பசிதான் நிஜம். நீ பசித்தால் நீ நிஜம்."

"எனக்குப் பசிக்கிறதே!" முகம் மாற ஆரம்பித்து விட்டது.

"என்கிட்ட ஒண்ணுமில்லையே! நான் நாடிழந்த ராஜா. நீ துட்டு வெச்சிருக்கையா?"

ஆச்சரியத்தில் கையை விரித்தாள். "அப்படி ஒன்று இருக்கிறதா என்ன?" என்று விழிகளில் வியப்பு,

விரித்த அவள் கைமேல் அவன் கண்கள் ஊன்றின. இந்த உள்ளங்கை அகலானால்? விரல்கள் தனித் தனித் திரி. நகம் திரிநுனியில் தீச்சுடர். சட்டென ஒரு யோசனை பளீரிட்டது.

"ஒண்ணு சொல்றேன்— ஆனால், கேட்பையோ மாட்டையோ?"

"என்ன? எனக்குப் பசிக்கிறதே?"

"எனக்குக் கேட்க உரிமையில்லை' நியாயமில்லை, நான் கேட்டாலும் நீ சம்மதிக்க அவசியமில்லை."

"சுருக்கச் சொல்லேன்?"

"அரிச்சந்திரன் கேட்டாப்போல கேக்கறேன்—மோதிரத்தைக் கழட்டிக் கொடுக்கறையா?"

அவள் பதில் பேசவில்லை. மோதிரத்தை நீக்கி, அவன் கையில் வைத்தாள், ஆச்சரியத்துடன் உற்று நோக்கினான். ஆனால், அங்கு எவ்விதமான மாறுதலுமில்லை.

"சரி வா எழுந்திரு,"

"இங்கே நில்லு, நான் உள்ளே போய் வரவரை இங்கேயே காத்திருக்கணும் தெரிஞ்சுதா?"

தலையை ஆட்டினாள்.

நாலு அடி நடந்து திரும்பி வந்தான்.

"உனக்கு ஒண்ணும் கஷ்டமில்லையே?"

புருவங்கள் வினாவில் நெறிகையில், நெற்றிச் சுருக்கத்தில் திலகம் குழைந்தது.

"இந்த மாதிரி உன் பொருளை எடுத்துக்கிட்டுப் போறேனேன்னு!'

உதட்டோரம் குழிந்த புன்னகை அவன் அறியாமைக்கு இரங்குவது போன்றிருந்தது.

ஏன் பேசாமடந்தை ஆயிட்டா? ஆனால் நமக்கென்ன,

ஆனால், உள்ளே நுழையுமுன் வாசற்படியில் நின்று ஒரு முறை திரும்பிப் பார்த்தான். கைகளைக் கோர்த்த வண்ணம் அவனைப் பார்த்தபடி நின்றிருந்தாள். பாவாடை மேல் நீலத் தாவணி அடியில் பச்சைப் பட்டு ரவிக்கையின் முடிச்சு தெரிந்தது? நிஜமாகவே ராஜகுமாரிதானா?

"என்ன முதலாளி வா, வா. ஏன் வாசல்படியில் நிக்கறே?"

தன்னை மூடும் மயக்கத்தைக் கலைக்கத் தலையை உதறிக்கொண்டு உள்ளே வந்தான்.

"வா உக்காரு, பாய்மேலே தள்ளி வா. என்ன கண்ணி லேயே படறதில்லே? ரோந்து மாறிப்போச்சா?"

"உன் கண்ணிலே பட்டுக்கிட்டே இருக்கணுமா என்ன?"

"நம்ம கஷ்டமர் ஒவ்வொத்தனும் அப்படி சொல் லிட்டா, கடையை மூடவேண்டியதுதான்."

"பின்னே சுகப்படறவனா உங்கிட்ட வரப் போறான்?"

"கோவம் பண்ணிக்காதே முதலாளி! கஷ்டம்னு சொன்னால்தானே கஷ்டம்? வேணுமானா அவஷ்யம்னு வார்த்தையை மாத்தி வெச்சுக்கோயேன்!

மோதிரத்தை விரிப்பின் மேல் வைத்தான்.

சீ, இவனோடு எனக்கென்ன பேச்சு? பேச்சிலே இன்னிக்கு எனக்குக் கோவம் ஏனோ வருது தெரியல்லே. கையில் கொடுத் தால் இவன் உடம்பு என்மேல் படும். அதுகூடப் பிடிக்கல்லே. மூக்குக் கண்ணாடி பின்னாலிருந்து திருட்டுத்தனமாக என்னைப் பார்க்கிறான் பார்,

விருட்டென எழுந்து பின்னால் கையைக் கட்டிக்கொண்டு கடையைச் சுற்றிவர ஆரம்பித்தான்.

இதோ இந்த ப்ருச் நல்லாயில்லே? மாரிலே சொருவினால் பட்டுப்பூச்சி குந்தின மாதிரியேயிருக்கும். இதோ இந்த தந்தச்சீப்பு, இந்த வெள்ளிப் பவுடர் டப்பா— சில்லுண்டி சாமான் ஒண்ணு ரெண்டு வாங்கிக் கொடுக்கலாம். ஆனால், பிரயோஜனம்? வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளியே வெல்லம் நிவேதனமா? இவன் பொருளைப் பார்த்துப் பார்த்து ஓய மாட்டேன்றானே!—ஏ ஸேட் என்ன பண்றே?"

"உரைக்கிறேன்."

"ஏன் இல்ட்டுனு சந்தேகமா?"

"இது பொன்னுதான். நீயும் நானும்தான் கில்ட்."

"பின்னே என்ன நீ உரைக்கற உரை, மோதிரம் தேறுமா? உரை கல்லையே அடமானம் வெக்கலாமா?"

"நாங்க உசிர்போனாலும் உரை கல்லை விட மாட்டோம் தம்பி. இதிலே பொன்னைத்தானா உரைக்கறோம், ஆளையே உரைக்கறோம், இதெப்படி உன் கைக்கு வந்தது? மயங்காதே. சும்மாச் சொல்லு!"

"இது என் பெண்சாதியினுடையது." அப்படிச் சொல் கையிலேயே இடது கன்னத்தில் நரம்பு விலுக்விலுக்கென்று உதைத்துக் கொண்டது. அந்த இடத்தை அழுத்தித் தடவிக் கொண்டான்,

மூக்குத் தண்டுவரை ஸேட்டின் மூக்குக் கண்ணாடி சரிந்தது. இந்த ஜாதிக்கே எவ்வளவு பெரிய முழி பார்த்தையா? அவங்களே விக்கறாங்களே தொன்னையிலே ஜீராவுலே மிதக்குதே ரஸகுல்லா, அதுமாதிரி!

"அப்படியா? எப்போ ஆச்சு கலியாணம்? எனக்குத் தெரியாமலா?"

"ஏன் உன் பெண்ணைக் கொடுக்கலாம்னு இருந்தையா?"

ஸேட்டுக்குக் கோபம் வரவில்லை. மோதிரத்தைக் ட்டை விரலுக்கும் நடு விரலுக்குமிடையே நாஸூக்காய்ப் டித்துத் திருப்பிக் கொண்டிருந்தான். ஒற்றைச் சுருளில், லையும் வாலும் முடிச்சிட்டுக் கொண்ட பாம்பின் கண்ணில் பதித்த பச்சைக் கல்லில், துணவில் தெரியும் அளவின் நீரோட்டம்போல், ஒளி மங்கி நெளிந்தது.

அவனுக்கு சீற்றம் மேலும் பொங்கியெழுந்தது-

"இல்லை. மோதிரத்தோடு தாலியையும் ஏன் கொண்டு வந்து வெக்கல்லேன்னு கேக்கறையா?"

ஸேட்டின் கீழுதடு புன்னகையில் பிதுங்கிற்று.

"முதலாளிக்கு என்ன கோவம் வருது! ஹூம்— இளரத்தம்!"

பெருமூச்செறிந்து மோதிரத்தை அவன் கையில் வைத்தான்.

"அப்படின்னா?"

"பொன்னை உருக்கிடலாம். ஆனால் கல்லை என்னால் ஜரிக்க முடியாது. இப்பவே இதுமேலே எந்த வேட்டை நாயை விட்டிருக்காங்களோ?"

அடிவயிற்றில், குடல் சதையை ஒரு குத்தாய், 'ஐஸ்' அள்ளிப் பிடித்தது.

"எனக்கு ரூபா அவசரமா வேணும்!"

"ஆ. அவஷரம் அவஷ்யம், கஷ்டம் இது இல்லாட்டி நாங்கள் என்ன செய்வோம்? இதுதான் எங்கள் முதல்."

"ஸேட் இது உன் காலம், கொஞ்சம் இரக்கம் பாரு! நீ இப்போ கை கொடுக்காட்டி என் மானமே போச்சு!"

"மானம்? இதுவும் ஒரு முதல்தான். இரக்கம்?"

"அந்த சரக்கை வெச்சுகிட்டேன்னா கடையோடு நான் காலி."

"ஸேட்!"

"இருந்தாலும் உன் விஷயத்திலே—"

கல்லாப் பெட்டியிலிருந்து இரண்டு நோட்டுக்களை யெடுத்து, உதறி, நிமிண்டி அவன் கையில் திணித்தான், புது நோட்டுக்கள்-மொடமொடத்தன.

"இது இரக்கமில்லே. இது பிஷினெஸ் உங்ககிட்டே வஷூல் பண்ணிக்க எனக்குத் தெரியும்."

இவன் இரக்கம் காட்டறானா? கேலி பண்றானா? பயமுறுத்தறானா? இவனும் இவன் முண்டாசும். குத்து மீசையும், அடுக்கடுக்கா மூணு மோவாய்க் கட்டையும்!

''ரைட்டோ ஸேட்!''

''ஸலாம் முதலாளி!''

மரத்தடியில். நிறுத்திய இடத்தில், நின்ற நிலையில், நின்றபடி—

கனவிலே வந்த காக்ஷி, காற்றிலே எழுதிய தோற்றமாகி, பேச்சடங்கி கல்லாயும் சமைஞ்சு போச்சா?

நெருங்கி வந்ததும்தான் தெரிந்தது. விழிகளின் கலங்கல். புருவங்கள் உள் வலியில் நெரிந்தன. சமுத்திரக் கரையோரம் அலை ஒதுங்கி, காற்றில் மிளிரும் நுரைபோல், உதடுகளில் அழுகை நடுங்கிற்று.

அவனைக் கண்டதும் அவள் விழிகள் விரிந்தன. புலு புலுவென கண்ணீர் கன்னங்களில் மாலை மாலையாய் வழிந்து அவன் நெஞ்சை நனைக்கையில், நெஞ்சு சுட்டது.

அவள் கை அவன் முழங்கை மேல் தங்கியிருப்பதை உணர்ந்தான். சட்டென நினைவு வந்து மோதிரத்தை ஜேபியிலிருந்து எடுத்து அதற்குரிய அவள் விரலில் செலுத்தினான். காத்திருந்தாற்போல் மேலே மரத்திலிருந்து இரண்டு பூக்கள் அவன் கையுள் அவள் கையில், மோதிரத்தின்மேல், அவன் செய்கைக்கு முத்திரை பொறித்தாற் போன்று உதிர்ந்தது. உடல்பூரா மின்னல் ஊடுருவிற்று.

''வா. ராஜகுமாரி!''

''பாமிலி.''

அந்த அடைப்பை அடைவதற்குள். வழியில் என்ன கூட்டம், குறுக்கே எத்தனை மேஜை நாற்காலிகள்! முகங்கள் அவர்கள் பக்கம் திரும்புகையில், ஒரு பக்கம் லஜ்ஜை, ஒரு பக்கம் பெருமை, ஒரு பக்கம் வெறுப்பு. தெரியாத முகங்களுடன் தெரிந்த முகங்கள்.

''ராஜா!''

தோள் மேல் ஒரு முரட்டுப்பிடி விழுந்தது.

திரும்பினான். இந்தச் சமயம் இது பார்க்கப் பிடிக்காத முகம்.

தோள் மேல் கையை உதற முயன்றான். ஆனால், பிடி பூணாய்க் கவ்விக் கொண்டிருந்தது.

''என்னடா அவசரம், கடிச்சா முழுங்கிடுவேன். எப்படா உனக்கு இந்த 'ஷோக்' பிறந்திடிச்சு? ஆனால், போணி வகையான போணிதான்.''

லேசாய் இருண்ட கண்ணுக்கெதிரே பாய்ந்த இருள் தூலங்கள் பவள நுரை கக்கின.

''என்ன சொல்றே?'' அவன் குரலின் அமைதி அவனுக்கே வியப்பாயிருந்தது.

''என்ன ப்ரதர், எனக்கே ஜாலம் காட்டறியே!''

கண். அவனைக் காலிலிருந்து தலைவரை மேனோக்கி வெள்ளோட்டம் விட்டது.

உடலை, எலும்பு வெள்ளை தெரியும்வரை கண்ணா லேயே சுரண்டிவிடும்போல் கண். தோள்மேல் கையை மெதுவாய் விடுவித்துக் கொண்டான். தொப்புளில் ஏதோ சுருள் கழன்றது. அது ஊர்ந்து மேலேறி வருகையில், தொண்டை லேசாய்க் குமட்டிற்று.

''இதென்ன கைபடாத ரோஜாவா?''

சொல்லி வாய் மூடவில்லை. வாய்மேல் விழுந்த அடி இடம் பூரா அதிர்ந்தது, கப்பென்று சப்தம் அடங்கிப் போன திடீரே திக்கென்றது.

அவனுக்கே நிச்சயமாய்ப் புரியவில்லை. அடி எப்படி நேர்ந்தது? நானா? அதுவும் இவனையா? இது நல்லத்துக்கா? அடி வயிறை வளையமா வில்லை போட்டுடுவானே!

தடைபட்ட இரைச்சல் வெள்ளமாய் மீண்டு மேலே இறங்கிற்று.

ஏன் இன்னும் ஒண்ணும் நேரல்லே? வாயைத் துடைச்சிட்டு நிக்கறானே? இத்தோடு சரியா? வேளை பார்க்கறானா? இல்லே இதுவும் குரைக்கற நாய்தானா? சிரிக்கிறானா என்ன?

நேரம் கொடுத்து நின்றும் ஒன்றும் நேரவில்லை,

''பாமிலி.''

தடுப்புள் விர்ரென்று நுழைந்தான். அங்கிருந்த மணியைப் படபடவென்று தட்டினான், ''யாரங்கே? அய்யர்! ஏ அய்யர்!''

வெளியிலிருந்து ஆள் ஓடி வரும் காலடி.

அவன் முகத்தில் கலவரம் ஏதும் தெரியவில்லை. விழிகளில் மாத்திரம் ஒரு புது ஆழம். அவன் வெற்றியைத் தன் வெற்றியாய் ஆக்கிக்கொண்ட ஒரு சொந்தம்.

''இதெல்லாம் நீன்னா நினைச்சிருக்கே?

அட முட்டாளே, இத்தனையும் நான்னா!

உன் மூலமா நான். உனக்கு ரக்ஷை நான்.''

வாய் பேசாமே மனம் பேசினால் இப்படித்தான் இருக்குமா?

'ரக்ஷை'ன்னு இது என்ன புதுவார்த்தை என்னிலிருந்தே வருது?

நடக்கறோம்.

நடக்கறா.

குதிரையாட்டம், வேக் வேக்குனு, 'ஜிங்கு ஜிங்கு'னு.

நடக்கறா.

அப்பவே மோதக்கொண்டு நடக்கறோம்.

இன்னும் சளைக்கல்லே. நடக்கறா.

பொழுது சாய ஆரம்பிச்சுட்டுது.

நடந்துகிட்டேயிருக்கோம்.

காற்றிலே 'ஜில்' வந்துட்டது.

நடக்கறாளோ?

எனக்கு ஏன் அடிக்கடி இந்த சந்தேகம்?

பாதம் பூமியிலே பதியுதோ?

பதியுது. சுவடு தெரியுதே!

முன்னாலே, எனக்குப் பாவுதோ?

என் பக்கத்தில் இவள் இருக்கிற நினைப்பிலே, நான் தான் ரெக்கை மேலே போறேன்,

நடை வேகத்தில், தோளோடு தோள் இடிக்குது.

காற்றிலே, பாவாடை குடை போட்டு என் முழங்காலில் மோதுது.

அழுக்குப் போக அலசி, அந்தரத்திலே உலர்த்திட்ட மாதிரி, நெஞ்சு என்னைவிட்டுப் பிரிஞ்சு, தனியா, எங்கவோ டேயே, காற்றிலே தத்தித் தத்தி, கூத்தாடிக்கிட்டு வருது.

நாங்கள் பூமியைச் சுற்றிவரக் கிளம்பிட்டோம்.

ஒரொரு கனவு, நொடி நேரத்திலேயே, மனுசன் பிறந்து இருந்து, சாவறவரைக்கும் கூட, கனவாலே கண்டுடுமாமே! அதனாலேயே, இந்த உலகமே ஒரு கனவாமே! முட்டையி

லிருந்து பொரிஞ்ச குஞ்சாட்டம் இவ சுத்திச் சுத்திப் பார்க்கறதையெல்லாம் முழுங்கிடற மாதிரி முழிக்கிறாளே, இவ பாக்கறது என்ன? இவள் முகம் காட்டும் நிழல் சிரிப்பு வருது. தனியா விட்டால், படாதவன் கண்ணில் பட்டுட்டா, கழுத்தை முறிக்காமல் கூட, முளுசாவே முழுங்கிடுவா னேன்னு நினைச்சுப் பார்த்தால் வேதனை பண்ணுது.

இது ஒரு நாளைக்கு ஒரே குடம் தண்ணி வார்த்து நிழல்லேயே பயிரான செடி, நல்லாத் தெரியுது. என் மாதிரியா?

—பெத்துப்போட்ட ஆயி அப்பன் தெரியாமல், தவழ்ந்து வந்து ப்ளாட்பாரத்துலே எச்சில் சோற்றைக் கைநீட்டிப் பிச்சை கேட்கத் தெரியற வரைக்கும்கூட என்னை யார் வளர்த்தாங்கன்னு தெரியாமல் வெய்யிலிலேயே வளர்ந்துட் டேனே என் மாதிரியா?

யுத்தம் தந்த பரிசா ஏதோ ஒரு வெள்ளைத்தோல் என்னைக் கொடுத்துட்டு கப்பலும் ஏறிப் போச்சு. நான் வெங்காயத் தோலோடு பிறந்துட்டேன். அவ்வளவு தானே? தோலைப்பார்த்து ராஜான்னும் பேரும் வெக்காமலே விளங்கிப் போச்சு. அவ்வளவுதானே?

இதெல்லாம் இப்போ ஏன் நினைப்பு வருது?

இவள் சொல்லாமலே, இவளைக் கேக்காமலே இவள் கதை என் கதை ரெண்டும் இப்படித்தானா ஏடு புரளுது?

இதுவும் மனதின் பேச்சில் சேர்த்தியா?

ஒண்ணுமே புரியல்லே.

ஒரு சமயம் ஒரே குழப்பமாயிருக்குது, சந்தோஷமா ருக்குது. தேன் குடிச்ச மயக்கமாயிருக்குது.

ஆனால். ஒண்ணு நிச்சயமா விளங்குது. என் வெய்யில்லே இவள். குளிர் காயறா. இவள் நிழல்லே நான், என் வெய்யிலுக்கு ஒதுங்கி நிக்கறேன்.

எங்களுக்கு இந்தப் பக்கம் மைதானம். அந்தப் பக்கம் வயல் காடு.

அதைத் தாண்டி ஏரிக்கரை.

வயல் நடுவே ஒரு காம்பவுண்டுக்குள்ளே நெல் மெஷின். புகைப்போக்கியிலே குப் குப்புனு புகை தாளம் போடுது. ஏரிக்கரை மேலே ஒரு ரயில் வண்டி அதோ நெளிஞ்சு வருது.

இந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கிறேன். மைதானம் தாண்டி, மலைமேலே மாதாகோவில். அதன் பின்னாலே பாறை பாறையா மேகம் நகருது.

அவள் என் தோளைத் தொட்டு அவசரமா எனக்கு சுட்டிக் காட்டறா. முழி வெளியிலே குதிச்சுடும்போல் அவ்வளவு பெரிசாப் போச்சு.

மேகத்திலே ரெண்டு முகம் பிரம்மாண்டமாக உருவாவுது. சடை சடையா தலை, நெற்றி, மூக்கு, வாய் எல்லாம் சந்தேகமில்லாமல் தெரியுது. ஒண்ணை யொண்ணு நெருங்குது. முகத்தோடு முகம், வாயோடு வாய், திரும்பிப் பாக்கறேன். அவள் என்னைப் பார்க்கலே. அங்கே வெச்ச முழி மாறல்லே, என் தோளைத் தொட்ட கை அங்கேயே தங்கி நிக்குது..

நெஞ்சு ஆயிரம் பதைச்சாலும், தானே தொட எனக்குக் கை அஞ்சுது.

சாலையோரம் மரத்தடியில் ஒரு கிழவி இளநீர் விக்கறா.

''ஆயா. பெரிசா, இனிப்பா, ரெண்டு சீவு!''

அவளுக்குக் குடிக்கத் தெரியல்லே. மூக்கிலே பாதி, வாயிலே பாதி வழியுது. மார்த் துணி நனைஞ்சு போச்சு. மார் முகப்புலே ரவிக்கையோடு ஈரத்துணி 'ஜில்'வுனு எப்படிக்

கவ்விக்குது பாரேன். அவள் குடிக்கறப்போ நெஞ்சங்குழி 'பட் பட்'டுன்னு அடிச்சுக்கறப்போ எனக்குத் தோணுது; எனக்கு ஒரு தங்கையிருந்தால் இப்படித்தான் சொல்லிக் கொடுப்பேனோ? நெஞ்சில் ஒரு ஏக்கம் தொட்டுட்டுப் போவுது.

வழுக்கையை வழிச்சு வாயிலே போடறேன். குழந்தை யாட்டம் வாயை 'ஆ' காட்டறா. இவள் இளநீரை எங்கே பாத்திருக்கப் போறா?

எனக்கு உடம்பெல்லாம் இன்பம் பொங்குது, பொங்கி வரப்பவே. துக்கமாக மாறுது, ஒரு பொம்மையிருக்குதே. ஆள் சிரிப்பான், தலைகீழாப் பிடிச்சா, அவ்வனே அழுவான், அது மாதிரி. மனசுக்குள்ளே 'மாஜிக்' ஏதோ நடக்குது. நடந்துகிட்டேயிருக்குது.

"ஏஞ்சாமி, நோட்டைக் கொடுத்துட்டு சில்லரை வாங்காம போறையே!"

"நீயே வெச்சுக்கோ ஆயா!"

"நீங்க இப்ப இருக்காப்பலே எப்பவும் சந்தோசமா யிருக்கணும். உங்களுக்குப் பிறக்கறதும் உங்க மாதிரியே நல்ல குணமாயிருக்கணும்!"

நான் அவளைப் பார்க்கிறேன்,

அவள் என்னைப் பார்க்கறா.

எங்கள் சிரிப்பு, வாணமாட்டம் சீறிக்கிட்டு மேலே போவுது.

வர்ணக்குடை இறங்குதான்னு பார்க்கறோம். நக்ஷத் திரம்தான் ஒண்ணொண்ணா, சரம் சரமா இறங்குது.

மலைமேலே மாதா கோவில் மணியோசை வீசி வருது.

ரயில்வே கிராதியருகே இருவரும் நிக்கறோம். எதிரே ஜலம் விரியுது.

இப்போ என் நெஞ்சு நிறைஞ்ச நிலையில் என் நெஞ்சைப் பிழிஞ்சு ஊத்தினால், இவ்வளவு பெரிசுதானிருக்கும். இங்கேயும் மனிதன் மனசு போலவே, விளிம்பு இங்கே கொஞ்சம் தெரியுது, அதோ கொஞ்சம் தென்படுது. நடுவிலே, பாதிக்கு மேலே இருள் தேங்கி நிக்குது.

எதிர்க்கரையில் பாலம் மேட்டில் ஏறி மறுபடியும் வளைவா கீழே இறங்குது, காரும் வண்டியும் வண்டாப் பாலத்துக்குமேலே பறக்குது. ஊருது. பாலத்து மேலே சாக்ஷிக் கம்பங்களா நிக்கற எலெக்ட்ரிக் லைட்டுகளிலிருந்து ஒளி கீழே ஜலத்தில் பட்டுச் சிதறி ஒளித் தூண்களா நீண்டு உள்ளே வானத்து நிழலைத் தூண் தூணா தாங்குது,

''ராஜகுமாரி, அதோ பார், உன் அரண்மனை!''

அவகிட்டேருந்து வந்த பெருமூச்சு, ஒஸ்தி ஸல்லாத் துணியா என்மேல் படர்ந்து, பெருகி, வழிஞ்சு, அலைமோதி என்னைச் சுத்திச் சூழ்ந்துட்டுது. இது அசதியா, அவள் நெஞ்சின் நிறைவா, ஏதேனும் பழைய நினைப்பா, இன்பத்தின் எல்லையா?

இன்பத்தின் எல்லையே தொடுவானத்தின் துயரம் தானா?

''ராஜகுமாரி!''

முகம் மெதுவா என் பக்கம் திரும்புது.

''ராஜகுமாரி! நீ நிஜமாவே ராஜகுமாரிதான், என் வரையில் எனக்குச் சந்தேகமில்லை. அவனவனுக்கு அவனவன் மனமார்ந்த நினைப்புதான் சத்தியமானால், என் கற்பனையின் சத்தியத்தில் நீ ராஜகுமாரிதான்-ராஜகுமாரி கூட இல்லை. ராணி!''

சாமி வந்தாப்போ அந்த முகத்தில் ஏறிப்போன ஜ்வலிப்பு எனக்குக் கண் கூசுது. தலை குனியறேன், ரெண்டு கையாலும் என் முகத்தைத் தாங்கியிழுத்து மார்போடு சேர்த்து அணைச்சுக்கறா. பஞ்சிலும் மிருதுவான கடலில் நான் மூழ்கிப் போனேனா? எனக்கு மூர்ச்சை போட்டுட்டுதா? ஜலத்துக்குள்ளே அரண்மனையில் நானே புகுந்துட்டேனா. இல்லே பகல்பூரா நடந்த அசதியிலே அப்படியே தூக்கத்திலே நழுவிட்டேனா. அப்படி வருடமாத்தான் நினைவு தப்பிப் போச்சா? நிமிடம் தான் வருடமாக நீண்டு போச்சா?

தெரியாது.

கண் திறந்தப்போ, நினைவுகூட்டி சுத்துமுத்தும் பார்த்தால், ரயில் கிராதியண்டை நான் மட்டும் தனியாக் கிடக்கறேன்.

''ராஜகுமாரி! ராஜகுமாரி!!'' குறுக்கும் நெடுக்குமா ஓடினேன்.

தண்டவாளம் ஓரமா நடந்து போறவங்க ஒருத்தர் ரெண்டுபேர் திரும்பி, என்னை முறைச்சுப் பார்க்கறாங்க.

நடந்தது அத்தனையும் கனவா? கண்ணைக் கசக்கிக்கறேன். கனவாயிருந்ததால்தான் நான் பிழைச்சேன். இல்லே, எனக்கு நிச்சயம் பைத்தியம் புடிச்சிடும். புடிச்சாச்சு.

விரலில் ஏதோ பளிச்சிடுது. பார்க்கிறேன்.

மோதிரத்தில் பாம்பு தலையும் வாலையும் முடிச்சு போட்டுகிட்டு கண்ணிலே பதிச்ச பச்சைக்கல் என்னைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டுது.

''நீ கண்டது கனவில்லை. உன் கற்பனையின் சத்யம்.''

கரையோரம் குந்திக்கிட்டுக் குழந்தையாட்டம் தேம்பித் தேம்பி அழுவறேன்.

# ஜிங்லி

பள்ளியிலிருந்து ஜிங்லி வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அவன் நடைக்கேற்ப தோளில் புத்தகப் பை, கடியாரத்தின் பெண்டுலம்போல் ஆடியது. அவன் வந்து கொண்டிருக்கும் இடத்தில் ஆள் நடமாட்டம் கிடையாது. அதுவும் இந்த ரயில் தண்டவாளம் தாண்டற இடம் வரதே, சரியான பொட்டல் காடு. யாராவது அடிச்சுப் போட்டால் கேட்க ஒரு ஆள்—'கண்டேன்'னு கத்த ஒரு காக்காகூட கிடையாது. அந்த மாதிரி ஏதாவது நேர்ந்துட்டால் "நீ ஏன் அங்கே தனியா போனே?"ன்னு கேட்டு அடிக்கத்தான் பெரியவாளுக்குத் தெரியும், "ஐயோ, பட்டது பல்லா, கல்லா?" ன்னு பதைக்கறது அப்புறம்தான்.

ஆனால் ஜிங்லிக்கு—('ஜிங்லிக் கண்ணாட்டான்'—கண்ணாட்டிக்கு ஆண்பால்!) இந்த இடம் எல்லாம் தண்ணி பட்ட பாடம். 'கர்ர்ர்' வாணம் போன்ற அவன் ஓட்டத்துக்கு முன்னால் எவனாவது நிற்க முடியுமா? ஜிங்லிக்குப் பாட்டி இட்டபேர் 'சிட்டிக் குருவி'ன்னா! ஆனால் அந்த வேப்ப மரத் தண்டை—அரசமரம்னு இன்னொருத்தர் சொல்றா. இரண்டுக்கும் வித்தியாசம் என்னன்னு அவனுக்குத் தெரியாது. ஆனால் அது முக்யமில்லே—அந்த மரத்தண்டை வரபோது மாத்ரம் மார் தவறாமல் 'பட்பட்'னு ரெண்டு அடி—காதுக்கு நன்னா கேக்கற மாதிரி—அடிச்சுக்கும். ஏன்னா, அதிலே மூணு வருஷத்துக்கு முன்னாலே—அப்பாவுக்கு இந்த ஸ்டேஷனுக்கு மாத்தல் ஆறதுக்கு முன்னாலேயே—ஒரு ஆள் தொங்கி

னானாம். வேலைக்காரி சின்னம்மா பிள்ளை கடம்பாடி. "அதோ பாத்தியா, அந்தக் கிளைதான்!"ன்னு கூடவர்ற போதெல்லாம் சுட்டிக் காமிக்கத் தவர்றதேயில்லே. பொம்ம னாட்டிபோல் மயிரை வளர்த்து. பின்னல் போட்டுண்டு—

"காத்தாளுக்கு முடி கொடுக்கறேன்னு வேண்டுதல் அம்மா. இன்னும் வேளை வல்லேம்மா. பையனைக் கண் ணாலே பார்க்க முடியுமாம்மா அப்போ! உடம்பெல்லாம் கண்ணாயிருந்தான். நான் என்னத்தைச் சொல்லப்போறேன் போ. அந்தக் கோலத்தை! அவளுக்குத்தான் புண்ணியமா யிருந்தான். ஆத்தா தெருவையே சூறையாடிட்டா. அந்த வருசம் ஊரிலே ஒரே வூட்டிலே எத்தினி பேருக்கு ஆயுசைக் கவுத்துப் போட்டு அளந்துட்டா தெரியுமா? காலையிலே ஒண்ணு ஏணையிலே போனா அன்னி மாலையிலேயே இன் னொண்ணை பாடையிலே தூக்கிட்டு குடுகுடுன்னு ஓடுவாங்க. "ஐயோ மவனே, கப்பலைக் கவுத்துட்டியேடா'... ஐயோ எமனே. என் மஞ்சளுக்கும் குங்குவத்துக்கும் உலைவெச்சுட்டி யேடா"ன்னு வாய்வுட்டு அலறி வவுத்தெரிச்சலைத் தீர்த்துக்க முடியுமா என்ன?—ஊம்—மூச்சு! வந்து மேலே குளுந்து போனது யாரு? ஆத்தான்னா? அப்பறம் அவ கோவம் தணியற வரைக்கும் ஊருக்கே மோசம்னா? இந்த விசயத்து லெல்லாம் அந்த நாள்ளெ ரொம்பக் கட்டுப்பாடா இருப் பாங்க. இப்போ மாதிரியா? பரமாத்மா ஊர்க்கட்டைப் பேசப் போயிட்டேன். முன்னாலே குடும்பம் கட்டாயிருக் குதோ? கொயந்தைக்குக் கஞ்சிக்கு வாங்கி வெச்ச பாலை, ஆத்தாளே காப்பிக்கு ஊத்திக் குடிச்சுட்டு மவனுக்குக் கையை விரிக்கிறா. இந்த நாளைச் சொல்லு! என்னவோ ஆத்தா ளுக்கும் சோவம் ஒரு வகையாத் தணிஞ்சுது, அவ மலை யேறிப் போவு முன்னாலே, தான் அளந்த படியை சும்மா உருட்டக் கூடாதுன்னு அவளுக்கும் அந்த நாயம் அந்த சமயத் திலேயும் நெனப்பிலே இருந்து என் பையனை ஒரு கண்ணிலே

பூவோடு மாத்திரம் விட்டுட்டுப் போயிட்டா. அவளிட்ட பிச்சை என் மவன். எங்கே இருந்தானாச்சும் ஆயுசோடு அவன் நல்லாயிருக்கணும்: எனக்கு உதவாட்டியும் போறான். நான் எப்படியோ அய்யாமாரு வீட்டுக் காப்பித்தண்ணி குடிச்சி—கஞ்சித்தண்ணி போட்டா கஞ்சித்தண்ணி, அமாவாசை, பண்டிகை சோறு போட்டால் சோறு—இப்பிடியே என் வவுத்தை வளத்துட்டு எண்ணிக்கேனும் ஒருநாள் இந்தப் புளக்கடையிலேயே தலைப்பை விரிச்சுப் போட்டவ திரும்பி எழுந்திராமே போனாலும் போறேன். எம் புள்ளை எனக்கு ஒதவ மாட்டான்; எனக்கே தெரியுது. அப்பன் சரியா இருந்தாத்தானே அவனும் சரியா இருப்பான்? அப்பனில்லாப் புள்ளை. நான் என் வவுத்துக் கய்ட்டத்துலே என் பொம்புளே சன்மத்திலே என்னாத்தை அவனைக் கட்டி ஆள முடியுது? ஜாண் புள்ளையானாலும் ஆண்புள்ளையில்லே? இப்பவே துண்டு பீடி பிடிக்கிறான். எனக்கே தெரியுது. என்னையே வண்டையாத் திட்றான். எனக்குக் காது அவிஞ்சா போச்சு?

ஒருசமயம் இல்லாட்டி ஒருசமயம் கோவம் பொறுக்குதில்லே; 'அடப்பாவி, ஏற்கனவே ஒரு கண் அவிஞ்சு போச்சே?'ன்னு கையை ஓங்கறேன். ஆனால் கை இறங்குதப்போ தானா வேகம் கொறைஞ்சு போவுதே. அது என்ன ஆச்சரியம் அம்மா? அதுவும் அந்த மாரியாத்தா வரம்தானா. பையன் மேலே கை படறப்போ பஞ்சாத்தான் ஒத்திப் போவுது, ஆனா அதுக்கே அந்த சமயம் மவன் மனம் எந்த கோணத்துலே இருக்குமோ, எனக்குத் தெரியறதில்லே? அவனே வாய்விட்டு சிரிச்சாலும் போச்சு, இல்லாட்டி, "ஐயோ அப்பாடி! அம்மாடி! கொல்றானே, கொல்றானே!"ன்னு தெருவைக் கூட்டினாலும் போச்சு. 'ஏண்டி அறிவு கெட்டவளே! அம்பனில்லாக் கொயந்தை—ஒனக்கு ஒரு தலைக்கு ஒரு மவன்—அவனை அடிச்சு ஒனக்கு என்ன லாபம்?'னு மத்தியஸ்

தம் பண்றவங்க ஒரு வார்த்தை சொன்னா எனக்குத் துக்கம் நெஞ்சைப் பிடுங்கிக்குது. அம்மா ஒங்கிட்ட மாத்ரம் விட்டுச் சொல்றேனே; ஒங்கிட்டச் சொன்னா என் ரகசியம் எங்கும் போவாது; எனக்குத் தெரியும். எனக்குக் கடம்பாடி கிட்ட கதிகலக்கம்தான். இந்தக் காலத்துப் பசங்களைத் தைரியமா ஒரு வார்த்தை பேச முடியுதா? தொட்டதுக்கெல்லாம் வூட்டைவுட்டு ஓடிப்போவுதுங்க. ரயிலடியிலே தலையைக் குடுக்குதுங்க, ஒருநாள் கண்ணப்பன் புள்ளையார் கொளத்திலே மிதக்குதுங்க. அதுங்கதான் ரோசக்காரப்புள்ளைங்களா. இல்லே, பண்டமெல்லாம் வெலையேறிப் போச்சுன்னு உசிர் மாத்திரம் அப்படி மலிஞ்சு போச்சா?—இங்கிலீசு படிச்சவங்க, ஒங்களைத்தான் கேக்கணும்.

"ஆனா என் மவன் மேலே யாராச்சும் கைவெச்சாங் கன்னு தெரிஞ்சுது, எனக்குத் தாங்காது; சும்மா வுட மாட்டேன். காளி கோவம் என் மேலே சாமி வந்துடும். முந்தா நேத்து இசுகூலுக்குப் போயி அவனோடே வாத்தியாரம்மா கிட்ட நானே சொல்லிவிட்டேன்: "இதோ பாரு, என் மவன் மூணாம் கிளாசை மூணு வருசமாத் தாண்டாட்டியும் எனக்கு அக்கறையில்லே. அவன் அப்பா உசிரோடே இருந்தா எப்பவோ தாண்டியிருப்பான், அவன் அப்பன், அரிவாள் மீசை ஆறு முகக் கிராமணி, ஒரு பேச்சு பேசக்கூட வேணாம்—முளங் காலுக்கு மேலே கெட்டி செவப்புச் சாய வேட்டி, பானை வவுத்துலே பாதி சரிய, புள்ளையை ஒரு கையிலே புடிச்சுக் கிட்டு வந்து நின்னு மாங்கொட்டை முளியை ஒரு தரம் முளிச்சாப் போதும், பெரிய வாத்தியாரே நேரே வந்து புள்ளையைக் கூட்டிக் கிட்டுத் தன் கிளாசுலேயே குந்த வெச்சுடுவாரு. அதனாலே என் புள்ளைக்குப் படிப்பு ஏறாட்டிப் போவுது. அவனுக்கு ஏறாது. அவனுக்கு ஏற வேணாம். நீங்கதான் ஒசந்த சாதி. பொண்ணானாலும் படிப்பு வேணும்; வேலை வேணும், கலியாணம் ஆவல்

லேன்னா, கலியாணத்துக்குத் துட்டு சேர்க்க, வேலைக்குப் போவீங்க. கலியாணம் ஆச்சுன்னா செலவுக்குப் பத்த லேன்னு, பெத்த கொயந்தையைத் தொட்டிலில் வளர்த் துட்டு, வாயிலே சீப்பானைச் சொருவிட்டு, புருசனும் பொஞ்சாதியும் ரெண்டு பேரும் மூலைக் கொத்தரா உத்தியோவம் பார்ப்பீங்க, என் புள்ளே உங்க மாதிரி யெல்லாம் உத்தியோவம் பார்க்கப் போறானா? அந்த நாளிலே அவன் அப்பன் பாளையைச் சீவி கள்ளை இறக்கி னான்னா இந்த நாளிலே என் மவன் பனஞ்சாறை இறக் கிட்டுப் போறான். அவன் அப்பன் கத்தி இன்னும் ஏரவாணையில் சொருவித்தான் இருக்குது, அதன் கூர் இன்னும் மங்கல்லே. என் மவன் கண்ணாலம் கட்ட உங்க மாதிரியெல்லாம் ஒறவு தாண்டி, ஊர் தாண்டிப் போக வேணாம். எங்க குலம் போறதில்லே, என் மவனுக்குப் பொண்ணு என் அண்ணி வவுத்துலே வளருது. இந்த ஆவுணிக்கு மாசம் அஞ்சு, நான் அண்ணி வவுத்தைத் தொட்டுப் பார்த்துச் சொல்லிட்டேன், 'இது என் வூட்டுப் படியிலே வலது காலை முன் எடுத்து வெச்சு வர என் மருமவ தான்'னு. பொண்ணுதான் பிறக்கும்; எனக்குத் தெரியும். அது எங்க குலச் சத்தியம். என் அண்ணாத்தை என் பேச்சுக்கு மறுவார்த்தை சொல்லுமா என்ன? ஆமான்னு தலையை ஆட்டினாலே அது ஆணையிட்ட சொல்லுதான். என் அண்ணிதான் எதிர் சொல்ல முடியுமா? என்னாச்சும் மொனகினாலே, வவுறும் புள்ளையுமா தெருவிலே நிறுத்திடு வான், நான் சொன்னாலும் கேட்கமாட்டான். "உன் பொண்ணுக்கு நீ தேடி வெச்ச புள்ளை பினாங்கிலேருந்து வருவான், நீயும் அவங்களோடு கப்பலேறிப் போய், அவுங்களுக்கு சமைச்சுப் போட்டுக்கிட்டு மூணு பேரும் குசாலாக் குடும்பம் நடத்துங்க'ன்னு சொல்லிடுவான். அதனாலே வாத்தியாரம்மா. ஒங்க சாதிக் கவலையெல்லாம்

எங்களுக்கில்லே. என் பையனை நீ தொடாதே''ன்னு சொல்லிட்டேன்.

''சரிம்மா. பேசிட்டே இருந்துட்டேன். பொளுது சாஞ்சு போச்சு. ரெண்டு வெத்திலை இருந்தாக் குடேன். தொண்டை காஞ்சு போச்சு. எனக்கு நல்ல வெத்திலேயா வேணாம். கட்டைப் புகையிலைக்குக் காஞ்ச வெத்திலை பத்தாதா? துளிர் வெத்திலையை நீயே போட்டுக்க. குளி குளிச்சிருக்கே, பாவம் அந்தக் கொடிக்கால்காரனை வளியிலே கண்டா இங்கே தெனம் ஒரு கவுளி கொண்டாந்து போடச் சொல்லவா, இல்லே, நானே வாங்கி வந்துடவா? வவுத்தை இழுத்துக் கட்டும்மா; இல்லாட்டி: தொப்பை வுளுந்துடும். இந்தத் தடவையும் பொண்ணைப் பெத்துக்கிட்டே, போ. அப்போ நம்ம ஜிங்லிப் பையன்தான் செல்லமவன். மூணு பொண்ணுக்கு நடுவுலே ஒரு ஆம்புள்ளே. ஜிங்லி அதிர்ஸ்டக் காரப் பையன், நான் அன்னிக்கே சொன்னேனே—ஒனக்கும் ஆயாளுக்கும் கையாலே ஆவல்லேன்னு அவனுக்குத் தலைக்குத் தண்ணி போட்டேனே. அன்னிக்கே கண்டு சொன்னேன்! பையனுக்கு மச்சம் எங்கே இருக்குது, பார்த்தியா?

''இதென்னடியம்மா, உள்ளதை சொன்னா ஒனக்கு ஏன் இப்படி மொவம் செவக்குது? ஆனா நான் அதியப் பிரசங்கி தான்; ஒப்புக்கறேன். புள்ளை ஒடம்புலே இருக்குது பெத்தவளுக்குத் தெரியாமே மத்தவங்க என்னைத்தைக் கண்டுசொல்ல முடியும்? ஆனா என் மேலே தப்பா எதுவும் எண்ணம் வெக்காதே, அம்மா. நான் கள்ளங் கவடு அத்தவ. என் வாய்க்கு வந்ததை என்னவோ குறி சொல்றாப்போல சொல்லிட்டே போறேன்.

''உன் புள்ளையும் என் புள்ளையும் எப்பிடி ஒத்துமையா இருக்காங்க, பார்த்தியாம்மா? உன் மவன், புத்தகம் சிலேட்டு

பையிலே தொங்க விட்டுக்கிட்டு என் குடிசைக்கெதிரே நின்னுக்கிட்டு "கடம்பாடீ!"ன்னு கொரல் குடுக்கிறபோது, என் பையன் அந்த நேரம் எந்த முருங்கை மரத்திலே ஏறிக்கிட்டு இருக்குதோ, எனக்கு எம்மாம் சந்தோசமா இருக்குது தெரியுமா? ஒனக்குத் தெரியாது; நீ பொய்னா பொய், மெய்னா மெய், வெச்சுக்க எனக்குக் காது குளுகுளுங்குது, ரெண்டு பேரும் சேர்ந்தாப்போலே பள்ளிக்கூடம் போவச்சே எட்ட எட்டப் போற அந்த ரெண்டு முதுவையும் சுத்தி நெத்தியிலே கையை முறிச்சா திஸ்டி எப்படிக் களியுது தெரியுமா? இந்த பாப்பார சாதிதான் படிச்ச சாதி. இது தான் எதிலேயும் நம்பிக்கையில்லாத சாதி. அசப்பிலே அவுங்களைப் பார்த்தா ரெட்டைன்னு சொல்லுவாங்க. அதுக்கென்ன, என் புள்ளை நிறம் கொஞ்சம் மட்டு. உன் புள்ளை திரேகம் கொஞ்சம் இளைப்பாக் காட்டுது—பச்சையும் புளுங்கலும் கலந்தாப்போல, அவ்வளவுதானே! போன வாரம் பளம் டாயரும் சொக்காயும் நீ குடுத்தியே, கடம்பாடிக்கு என்ன அச்சா இருக்குது தெரியுமா; அவனுக்கே தைச்சாப்போலே! களுத்துலேதான் புடிப்பாயிருக்குது. இதுக்குன்னு இருந்தா அதுகூட இருக்காதா என்ன—என் வவுத்துலே என் புள்ளே, உன் வவுத்துலே உன் புள்ளேன்னு பொறந்தா? கடவுளோட எண்ணம் இல்லாட்டி ஒலகத்துலே எல்லாரும் ஒரு வவுத்துலே பொறந்திருக்க மாட்டாங்களா! ஆனா நான் கடம்பாடிக்கு தைரியம் சொல்லியிருக்குறேன். 'இரு இரு' அய்யர் வூட்டுப் பொண்ணுக்குக் கண்ணாலம்—ஆனை மேலே, குதிரை மேலே, ஸாரட்டு வண்டி மேலே—அவசரமா வந்துட்டேயிருக்குது. ஒனக்கு டாயர். சொக்கா, எனக்குப் புடவை புதுஸ்ஸாவே எடுப்பாங்க'ன்னு. என் புள்ளைக்கு நான் கொடுத்த வாக்கைக் காப்பாத்தறது, நான் சொல்லிட்டேன், உன் பாடு. எங்களுக்கு வார்த்தைதான் பெரிசு. நாங்க பொய் சொல்லுவோம், குடிப்போம், காவலிலே இருந்துட்டு வந்துடுவோம், எங்க சாதிக்கு அது

ஒண்ணும் பங்கமில்லே. ஆனா வார்த்தையைப் பொறுப்பாக் குடுத்துட்டா தலைபோனாலும், என் அம்மா தாலி போனாலும், காப்பாத்தியே ஆவணும். தெரிஞ்சுதா? எப்போ அம்மா நாள் பார்த்திருக்குது? உன் மவளைக் கேட்டா, அடி போடி சின்னம்மா!'ன்னு சிரிச்சுக்கிட்டே மொவத்தை வெட்டறதைப் பார்த்தாலே, நான் ரொம்பக் கிட்ட வந்துக் கிட்டேயிருக்குதுன்னு தோணுது. எப்போ வந்தா எனக் கென்னம்மா? அது எங்கே இருந்தானாச்சும் சரி, இருக்கற எடத்துலே தோளோடு தாலி தொங்கத் தொங்கக் கட்டி பதினாறும் பெத்து திருக்காசா இருக்கணும். அப்போ என்னிக்காச்சும், வெள்ளிக்கிளமை தலை முழுவிட்டு தண்ணி காய கூந்தலை தோளாப் பட்டையில் இறக்கிவுடறப்போ, அது அலுவாத் துண்டாட்டம் அவுந்துவுளறப்போ, மயிரை ஒண்ணொண்ணாப் பிரிச்சு சிக்கு எடுக்கறப்போ, "அண்ணிக்கு ஒருநா நான் என் ஆத்தா வூட்டுலே இருக்கறப்போ, சின்னம்மா, பாம்புக்கும் முள்ளுக்கும் அஞ்சாம, தாளம் புதரிலிருந்து தாளம் பூவைத் தன் கையாலே புடுங்கி வந்து எனக்குத் தன் கையாலேயே சடை தெச்சு வெச்சாளே!"ன்னு ஒரு சமயம் நெனைச்சாலும் அந்த நெனைப்பின் மணம் அத்தனை இடம் தாண்டி வருசம் தாண்டி என்னை இங்கே வந்து எட்டும்; எனக்கு அது போதும். நீ என்னம்மா சொல்றே? இந்த ஒலகத்துலே யாரு வேறே என்னத்தைக் கண்டது? நீ என்னம்மா சொல்றே? எல்லாத்தியும்விட எண்ணந்தானே பெரிசு? அதுகூட இல்லாட்டி உயிர் வாளவே என்ன இருக்குது?

"நான் இப்டீ ஒரொருநா, பாக்கை ஊதி வாயிலே போட்டு, வெத்திலையிலே சுண்ணாம்பு தடவிக்கிட்டிருக்கற நேரம் வரைக்கும், பாக்கை மெல்லற வேளைக்கு... அது பாக்கு மயக்கமோ, என் ஆசைதானோ, எனக்குத் தெரியாது—இப்டீ நெனைச்சுக்குவேன்—நம்ம ஜிங்லிப் பையன் சின்ன அய்யர் ஆனப்புறம் பெரிய அய்யராட்டமே இதே டேஸனுக்கு

டேஸன் மாஸ்டரா வந்துட்டா, அவர்கிட்ட கடம்பாடி வேலைக்கு அமந்துட்டா—அட, வர ரயிலுக்கு கொடி காட்டவும், வந்த ரயிலை ''போ''ன்னு அந்தத் தண்ட பாளத்தைத் தொங்கவிட்டிருக்காங்களே, அதைத் தட்டவும் ஒரு ஆள் வேணாமா? அட, அதுவே வேணாம், ஐயா வேட்டியைத் தோச்சுப் போடவும், பசங்களுக்கு வேடிக்கை காட்டவும், டேஸனுக்கும் வூட்டுக்கும் பாதையிலே புல் செதுக்கவுமாவது ஆள் வேணாமா?—அப்போ அது எவ்வளவு நல்லாயிருக்கும்! என்னவோ வெள்ளி மொளைக்கறதுக்கு முன்னாலே நான் எளுந்து உன் வீட்டு வாசல்லே தண்ணி தெளிச்சக் கோலம் இளுத்த வேளை வீணாப் போவல்லேன்னு அந்த நிம்மதியிலேயே கவலையில்லாமே கண்ணை மூடிடுவேன். அட, நான் நெனைச்சபடித்தான் நடக்குமோ நடக்காதோ, அந்த முத்தாலம்மைக்குத் தான் வெளிச்சம். நெனைச்சுட்டாவது இருக்கேனே, நெனைப்புக்கு யார்கிட்டே யாவது லசேன்ஸ் வாங்கியாவணுமா? நீ என்ன சொல்றே? எனக்குப் பேசிப் பேசித் தொண்டை காஞ்சே போச்சு நீ தலையைக்கூட ஆட்டாம கள்ளுக்கடை கருவேல் மரத்துப் புள்ளையாராட்டம் குந்திட்டிருக்கியே! நான் கேட்ட விசயம், காஞ்ச வெத்திலை, என்ன ஆச்சு?—

அந்த மரத்தண்டை வரும்போதெல்லாம் ஜிங்லிக்கு மார்பு 'பட் பட்'—

ஓடிவந்தால் ''படபட''

பயந்தால் ''படபட''

கால் அந்த இடத்தைக் கடுகியும் கடக்கத் தவித்தாலும். கண்காணாத கைகள் ஆயிரம் மரத்தினின்று பிரிந்து வந்து நெஞ்சை இறுகத் தழுவி மனத்தை (நெஞ்சில் தான் மனம் என்று விதித்தவர் யாரோ?) தடுக்கும். ஒரு கணம்தான் அந்த அணைப்பு. அதிலும் பாதிதான் அவ்வணைப்பின்

தடுப்பு. உடனே அக்கைகள் விட்டுவிடும். கூடவே நேரும் கால்களின் வெலவெலப்பு, நெஞ்சையழுத்தும் அம்மூச்சுத் திணறல், கண்ணுக்கெதிரே காற்றில் தன்னை எழுதிக் கொண்டு எழும் அந்த நிழலடைந்த உருவம்—அதெல்லாம் நேரத்தையும், அந்த சமயத்தின் மனோதைரியத்தையும், பக்கத்திலிருக்கும் துணையையும் பொறுத்தவை.

இன்னிக்கு அந்தக் கடம்பாடிப் பயல் சேர்ந்து வரவில்லை. திடீர் திடீர்னு ஏன்தான் அவனுக்குக் கிறுக்குப் பிடிக்கிறதோ தெரியவில்லை. இருந்தாற் போலிருந்து காணாமற் போய் விடுவான். தேடிப்பிடிச்சால், பூமிமேல் கூர்ந்த கண்ணோடு, குனிஞ்ச முதுகு நிமிராமல் அடிமேல் அடிவைத்து, காசோ நகையோ தொலைச்சுட்ட மாதிரி தேடிக்கொண்டிருப்பான்.

''என்னடா கடம்பாடி, தேடறே?''

அவனுக்கே தெரியாது. அதுதான் அவன் கிட்ட விசேஷம்.

''அதுவே ஒரு ஸ்குரூ லூஸ், அத்தோடு சேராதேன்'னு அக்கா திட்டம் பண்ணறாள்.

ஆனால் கடம்பாடியும் ஜிங்லியும்தான். bracket( ).

ஆனால் அக்கா சொல்றதுக்கேற்றபடி கடம்பாடியின் காரியங்களும், எல்லைக்கோட்டின் அந்தண்டையா இந்தண்டையா என அச்சுறும்படி விளிம்பு படிந்திருக்கும்.

கடப்பாடிக்கு அசிங்கம், பயம் ரெண்டுமே என்னென்று தெரியாது. அவனுக்குப் பூனைக்குட்டி 'ஷோக்'.

ஒவ்வொருத்தருக்கு ஒரு ஒரு ''ஷோக்''.

அக்காவுக்குக் கண்ணாடி ஷோக், நிலைக் கண்ணாடி எதிரே நின்னுட்டாள்னா அதில் தன்னைக் கண்டே தான் ப்ரமிச்சு நின்னுடுவாள். பாட்டி திட்டி அங்கிருந்து கலைச்சு விட்டாள்னா, போக வர கூடத்தில் புழங்கற போதெல்லாம்

வழியிலே கண்ணாடியிலே கழுத்தை நீட்டிய வண்ணந்தான். உதட்டை முறுக்கிண்டு, புருவத்தை நகத்தால் கீறிண்டு, நெற்றியில் தொங்கும் மயிர்ப் பிரியை வளையமாய்த் திருகி விட்டுண்டு—அது என்னென்ன கோணங்கியோ!

அப்பாவுக்கு photo ஷோக். யார் எங்கே எடுக்கப் போறான்னு எப்படி மோப்பம் தெரியுமோ! அது தெரிஞ்சவாளோ தெரியாதவாளோ—அவாளுக்கு சம்மதமோ இல்லையோ—no mind ஓரத்திலாவது டக்குனு தலையை நீட்டிடுவார்.

பாட்டிக்கு கற்சட்டி ஷோக். அடுக்காய் ஒண்ணுக்குள்ளே ஒண்ணு—இது வெத்தல் குழம்புக் கச்சட்டி, இது ரஸக் கச்சட்டி, இது தோசைமாவு கரைக்கிற கச்சட்டி இது கறி வதக்கற கச்சட்டி, இது வடுமாங்காய் ஊறுகாய்க் கச்சட்டி.

அதுமாதிரி கடம்பாடிக்கும் ''பூனைக்குட்டி'' ஷோக். ரெண்டு மூணு தன் மேல் ஏறி விளையாட விட்டுக் கொள்வான். ஒண்ணு அவன் கழுத்து வளைவில் அடிவயத்தை ''ஈஷி''ண்டு உறங்க. ஒண்ணு அவன் உச்சந் தலை மேல் வாலை முறுக்கிண்டு நிற்கும். ஒண்ணு மடியில் விளையாடும். பக்கத்தில் தாய்ப்பூனை—நான் கிட்ட வந்தாலே சீர்றதே—கண்ணை மூடி, சுகமாய் வெயில் காய்ஞ்சுண்டிருக்கும்.

கடம்பாடிக்கு எங்கிருந்துதான் செத்தபூனை கிடைக்குமோ! உடனே அவன்பாடு கொண்டாட்டந்தான். சவ ஊர்வலத்திற்கு தடபுடல் ஏற்பாடென்ன, சவந்தூக்க சம வயதில் அவன் சேர்க்கும் ''ஜமா'' என்ன, பாடையலங்காரத்திற்குப் பொன்னரளிப் பூவென்ன, கொட்டு முழக்குக்கு ஓட்டை டப்பாக்களென்ன!

சவத்தின் கீழ்வாய்ப்பல்லின் இளிப்பைக் காட்டி: "பாருடா ஜிங்லி, அதன் சிரிப்பைப் பார்த்தியாடா? எல்லாருக்கும் நடக்கிற மாதிரி நமக்கும் நடக்குதுன்னு அதுக்கு சந்தோஸண்டா! நம்மை வாழ்த்துதுடா!"

அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு ஜிங்லி தலையை ஆட்டுவான். இல்லாட்டா அவனுக்குப் பிடித்தமான விளையாட்டு எவ்வளவோ இருக்கே, அதில் எல்லாம் சேர்த்துக்க மாட்டான். "இப்படி எனக்குக் குமட்டறதே. இந்த நாத்தம் இவன் மூக்கை மாத்திரம் துளைக்காதா?"

இன்னொரு ஆச்சரியம் என்ன தெரியுமா? கடம்பாடியைத் தேள் கொட்டாதே! ஒருதரம் உப்புச் சட்டியில் கை விட்டதும் அம்மாவை ஒரு போடு போட்டுட்டு—அம்மாவுக்கு வாந்தி வாந்தியா எடுக்கறதும், மயக்கம் போடறதும் மாரடைக்கறதும்...அடேயப்பா! ஒரே அமர்க்களப்படுத்திட்டா. பாட்டி, புளியைக் கரைச்சுண்டே ("புளி கரைக்க ஒரு கச்சட்டி!") "ஏற்கெனவே சொல்ல வேண்டாம், இக்கிலி பிக்கிலி! யோறாத்துக்குக் கர்ப்பிணி வேறே!"

அம்மாவுக்கு வலியைவிட ஆத்திரம். தேள் கண்ணுக்குப் படாமலே மின்னலாய் மறைஞ்சுடுத்து. கொட்டின தேளை அடிச்சாலே பாதி விஷம் இறங்கும் என்கிற ஆறுதலுக்கு வழியில்லாமலே போச்சு.

ஆனால் கடம்பாடி தேளைப் பிடித்துப் புறங்கையில் விட்டுக் கொள்வான். அது வாலைத் தூக்கிக் கொண்டு அவன் தோள் வரை ஏறும், ஆனால் ஒன்றும் செய்யாது. அது அப்படி ஊர்கையில், அதன் செயலுடன் சோபையையும் இழந்து விட்டது போல் தோன்றும். படிப்படியாய் ஒய்ச்சல் கண்டு ஓட்டமும் தளர்ந்து, முழங்கை முட்டில் இகைத்து நின்று விடும். 'அதன் பலத்தையும் வாங்கிக்கற அளவிற்கு கடம்பாடி ரத்தத்தில் எந்த விஷம் ஓடறது?'

''எப்படிடா அது, கடம்பாடி?''

பதிலுக்குப் பதிலாக கற்சிலையின் புன்னகைபோல், கடம்பாடியின் வாயில் பூக்கும் ரகஸ்யம் என்னென்று கண்டவர் யார்? அவனைப்பற்றி ஒண்ணுமே புரிஞ்சுக்க முடியல்லே,

ஒரு நாள் ''குட்ஸ்'' போச்சு. ''கார்டுவானை''ச் சேர்க்காமல் இருவத்தியாறு பெட்டி, வண்டி ஸ்டேஷனை தாண்டிப் போறபோது ஊதித்து. [இதுக்குன்னு ரயில்னு இருந்தால் ''விசில்'' அடிக்காதா என்ன? இல்லாட்டா அது என்னதான் ரயில்?] ஒருதினுசா, மூக்கி முனகிண்டு தொண்டையில் சளை அடைச்சுண்டு, பலஹீனமா, கூர்ப் பென்சிலால் கோடு கிழிச்ச மாதிரி-பாட்டி, தள்ளாமையில் ''ஊங்'' கொட்டிண்டே தயிர் கடையறாளே அது மாதிரி—

[ஆனால் கூடவே; ''நடக்கிறது நடக்கட்டும். நான் வெண்ணெய் எடுத்துப் பார்த்துடத்தான் போறே''ன்னு பல்லைக் கடிக்கிறாளே, அதுதான் முழுக்கப் புரியல்லே. பாட்டிக்கு மோர் மேல் கோபமா, இல்லை. வேறு யார் மேல் கோபம்?]

கடம்பாடிக்கு மூஞ்சி, நெருப்பில் காய்ச்சின அப்பளாம் மாதிரி வதங்கி, சவுங்கி, நசுங்சி. உதடு பிதுங்கிடுத்து. விசிச்சு, திடீரென விக்கி விக்கி அழறான். ''என்னடா? என்னடா?''ன்னு பத்துத்தடவை பதறிக் கேட்டும் மூஞ்சிதான், உப்பறது. பதில் வரல்லே. ஜிங்லிக்கும் தொண்டை அடைக்கிறது. சிரங்கு, கொட்டாவி மாதிரி துக்கமும் ஒட்டுவாரொட்டியா?

ஆமா. சில சமயங்களில் எனக்கு என்னைப்பத்தி நினைச்சுக்கறபோது நான் இப்படி செஞ்சேன், நான் அப்படி செஞ்சேன்னு எண்ணிக்கறதைவிட;

ஜிங்லி சிரிச்சான். ஜிங்லி காப்பியைக் கொட்டிட்டு பாட்டி கைக்கு அகப்படாமல் ஓடிப் போயிட்டான். சாயங்காலம் அப்பாகிட்ட ஜிங்லி சக்கை உதை வாங்கினான்—

இப்படி என்னைப் பத்தியே நானே வேத்தாளாய் நினைச்சுப் பாக்கறதுலே ஏதோ ஒரு தமாஷ் இருக்கு. நெஞ்சிலே என்னவோ குறுகுறு பண்ணினாலும் அப்புறம் ரொம்ப நாழி கழிச்சு ஆயிரம் தேம்பலுக்கு நடுவே.

''அத்தினி பாரத்தை இழுக்கமாட்டாமே இழுத்துட்டுப் போவுதே, அந்த எஞ்சினுக்கு எவ்வளவு கஷ்-ஷ்-டமா-ஆ-ஆயிருக்-க்-கும் ஊ.ஊ!''

ஆனால் அன்னிக்கு ஒருநாள், ஜிங்லியும் கடம்பாடியும் கூடத்தில் விளையாடிண்டிருந்தபோது ஒரு பிள்ளைப் பூச்சி தத்திப் பறந்தது, கடம்பாடிக்கு திடீர்னு கோரம் வந்தது. அவனுக்கு மூஞ்சியே மாறிப்போச்சு, அதைக் காலாலேயே தேச்சுட்டான்- ''சொதக்''—ஐயே!—பாட்டி லபலபன்னு அடிச்சுக்கறா.

''அட கடம்பாடி கொடும்பாவிt முழியா.பழிகாரா! ஏற்கனவே உன் தாய்க்கு ஒரு பிள்ளையா வாய்ச்சிருக்கே, இன்னும் அவள் வயத்தெரிச்சலை என்ன கொட்டிருக்கக் காத்திண்டிருக்கேடா!''

கடம்பாடி அசடு வழிய, மூஞ்சியைத் தொங்கப் போட்டுண்டு நிக்கறான். எனக்கு சிரிப்பா வரது. இஞ்சின் ''குட்ஸை'' இழுக்கறதைத் தாளாத மனசுலே பிள்ளைப் பூச்சியைக் கொன்ற கொடூரம் எப்படிக் குடி கொண்டிருக்கும்;

''டே ஜிங்லி, இங்கே வாயேன்!''

கடம்பாடி தன் இரண்டு கைகளையும் முதுகின் பின்னால் மறைச்சு வெச்சுண்டிருக்கான்.

''என்னத்துக்கு?''

''வாயேன், உனக்கு ஒண்ணு காண்பிக்கப் போறேன்.''

கிட்ட வந்ததும் கடம்பாடியின் கைகள் முரட்டுத் தனமாய் ஜிங்லியின் வலது கைமேல் பாய்ந்தன, திடீரென கட்டை விரலில் கண்ட ''சுரீலி''ல் ஜிங்லி அலறி விட்டான். அது முள்ளா, ப்ளேடா, நெருப்புக் கொட்டையா? விரலின் உள்சதைக் குமிழில் சிவப்பு சட்டெனத் துளித்து உடனே பரவவும் ஆரம்பித்து விட்டது. மண்ணில் கூட ஒரு சொட்டு விழுந்து உறிஞ்சிப் போச்சு.

உடனே கடம்பாடி குனிந்து அந்த விரலைப் பிடித்துத தன் வாயுள் வைத்துச் சப்பினான். அவன் வாயின் வெத் வெதப்பு வலிக்கு எவ்வளவு இதமாயிருக்கு!

''ஜிங்லி, உன் ரத்தம் என் உடம்பில் கலந்துட்டுது. இனிமேல் நீ எனக்குத் தம்பி. அண்ணனாயிருக்கணும்னு உனக்கு ஆசையிருந்தால் அப்படியே இருந்துக்க; எனக்கு அக்கறையில்லே. ஆனால், நம்ம ரத்தம் ஒண்ணுக் கொண்ணு கலந்துட்டுது. இனிமேல் நாம ரெண்டு பேரும் ஒத்தருக் கொருத்தர் துரோகம் நினைக்கமுடியாது. இனி எத்தனை வருசமானாலும் சரி—நாம பிரிஞ்சு எங்கிருந்தாலும் சரி—உன் கஷ்டம் இனிமேல் என் கஷ்டம், எனக்கும் இனிமேல் அப்படித்தான். ஜிங்கி-ஜிங்லி-இதுக்கு நீ என்ன சொல்றே? ஏதாவது சொல்லேண்டா! நீ சொன்னாலும் சொல்லாட்டி யும் நம்ம ரத்தம் போனது சத்தியம்-ஆமான்னு சொல்லு! சொல்லு! சொல்றியா இல்லியா?''

''ஐயோ, ஐயோ!''

கடம்பாடிக் காண்டாமிருகம் கையைப் பிடிச்சு முறுக்கறது, பிராணனே போறது. ஆனால், அதைவிட அவன் சொன்னது தொண்டைக்குள் புகுந்து கொண்டு அடைக்கற

அடைப்பு எனக்குப் பேச்சு வரமாட்டேன்கறது. என்னவோ அழுகையா வரது, ஆனந்தமாகவும் இருக்கு. ரெண்டும் ஒரே சமயத்தில் எப்படி இருக்க முடியும்னு திகைப்பாவும் இருக்கு,

அந்த மரத்தண்டை நெருங்கும் போதெல்லாம் கடம் பாடியின் குரலில் ஒரு அடக்கம். கைகால் ஆட்டத்தில் கூடத் தணியாத ஒரு ஒடுக்கம். ஒரு சிரத்தை, ஒரு அச்சம். ஒரு ரகஸ்யமான பக்தி என்று கூடச்சொல்லலாம். முகத்தில் தனியாய். அதற்கு ஒவ்வாத ஒரு சூடிகை. முழுத் தோற்றத் திலேயே ஒரு "உஷ்."

ஜிங்லியை பக்தியான தூரத்தில் நிறுத்திவிட்டு. ஒரு முறை அந்த மரத்தை வளையவருவான். அதன் அடியில் ஒரு பாம்புப் புற்று இப்போதுதான் குழல் விட்டுக் கொண்டு உருவாகி வருகிறது, மரத்தடியில் இலைச் சருகுகளும், காற்றில் சுழன்று அடித்துக் கொண்டு வந்த வேறு குப்பை களும், ஜமக்காளம் விரித்தாற் போன்று நெருக்கமாய், அடர்ந்து உதிர்ந்திருக்கின்றன.

"இதோ இங்கே-இங்கேதான்—" தடவைக்குத் தடவை அவன் சுட்டிக்காட்டும் இடம் மாறிக்கொண்டே இருக்கும், ஆனால் அதைப் பற்றி இருவருக்குமே அக்கறை இல்லை. உடனே அண்ணாந்து பார்ப்பான். "அதோ. அந்தக் கிளை தான். தேன் கூடு தெரியுது பாரு. அதான்—"

"பாதம் கூட பூமியிலிருந்து முழுக்க. "அலேக்கா" தூக்கல்லே. ஆள் தொங்சினபடி கையைக் காலை உதைச்சுக் கிட்டப்போ. கால் கட்டை விரல் தரையைக் கீறின இடம் பள்ளமா எத்தினி நாளைக்கு அப்படியே இருந்திச்சு, தெரியுமா? அதை பார்த்துப் பார்த்து எனக்கே பயமாப் போய், நானே மண்ணை அள்ளிப் போட்டுட்டேன். ஜிங்லி, கழுத்து ஒடியறப்போ அந்த ஆளுக்கு எப்படித் துடிச் சிருக்கும்?"

ஜிங்லி தன் கழுத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டான். "திடீர்னு தொண்டையை வரட்டினாப்போல் இல்லை? நேரமாயிட்டாப் போல் இல்லை? நெஞ்சை வலிக்கறாப்போல இல்லை?"

இருவரும் அவரவர் எண்ணங்களில் தம்மையிழந்து அந்த இடத்தைச் சிந்தித்தபடி நின்றனர்.

"கடம்பாடி நின்னபடியே தூங்கிட்டானா என்ன? ஒரேயடியாய் இருட்டிப் போயிடுத்தே! பாட்டி கவலையோடு வாசலில் காத்துண்டு நிப்பாள்"—

"என்னடா மஹாதேவா, உன் பிள்ளையைக் காணோமேடா! விளக்கு வெச்சுப் போச்சேடா!"

"அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே? இந்தப் பொட்டல் காட்டில் விளக்கு வெக்கறவாளும் நாம்தான், அணைக்கறவாளும் நாம்தான். வேணுமானால் அந்த விளக்கை ஒரு அரைமணிநேரம் தள்ளி வெச்சுக்கோ உன் பேராண்டி வந்தப்புறம்!"

"தேடறதுக்கு முருகேசனை அனுப்பேண்டா!"

"ஏன், அவனைப் பார்த்தால் உனக்கு வேட்டை நாயாத் தான் படறதா? மனுஷனாப் படல்லியா? ரெண்டு night சேர்ந்தாப்போல செஞ்சு பார்த்தால் தெரியும், அவன் கண் எப்படிக் கெஞ்சும்னு! நீ ஏம்மா கவலைப் படறே? அவனுக்கு ஒரு மெய்க்காவல்காரன் இருக்கானே அவனோடுதானே போயிருக்கான்? ஒருத்தனுக்கு ஏதாவது நேர்ந்தால் இன்னொருத்தன் வந்து சொல்ல மாட்டானா?"

"நான் ஏற்கெனவே வயத்திலே நெருப்பைக் கட்டிண்டிருக்கேன். நீ ஏண்டா சுப வாக்கியம் சொல்றே?"

"என்னை என்னம்மா பண்ணச் சொல்றே? நீ உத்தரவு கொடு, இன்னிக்கே அவன் காலை இங்கே கிடக்கிற ஏதாவது

ஒரு தண்டவாளத் துண்டாலே ஒடிச்சுடறேன். உனக்குப் பேரன் தக்குவான். நாள்பூரா நீ கண்ணெதிரே பார்த்துண்டு மகிழலாம்.''

அம்மா, உள்ளே குழந்தையைத் தூளியிலே ஆட்டிண்டே, 'நாள்பூரா அம்மாவும் பிள்ளையும் சேர்ந்துண்டு ''அவன் இதைப் பண்ணினான். அதைப் பண்ணினான்''னு ரெட்டை நாயனம் வாசிச்சிண்டு கரிக்கறத்துலே குறைச்சலில்லை. இப்போ குழந்தை மேல் அலாதியாப் பொத்துண்டு ஒழுகிற தாக்கும்! எனக்கு வேண்டியே இல்லை!''

ஆனால், அம்மா மொணமொணக்கறாள்னு பாட்டிக்கா தெரியாது? மனசிலிருக்கறதையே மோப்பம் பிடிச்சு ஏடு மாதிரிப் படிச்சுச் சொல்லிடுவாளே! இல்லாட்டா பாட்டி மூக்குக்கு எப்படி அத்தனை கூர்ப்பு வந்தது?

'பாட்டி உன் மூக்கு ஏன் அப்படி கத்தி மாதிரி இருக்கு?'

பேரன் கேள்வியினால் பாட்டிக்கு உள்ளூரச் சந்தோஷம்.

''ஓ அதுவா? அரவான் மாதிரி தீட்டி வெச்சிருக்கேண்டா! நான் சாகறத்துக் குள்ளே சில பேர் மூக்கையும் நாக்கையும் அறுக்கணும்னு காத்திண்டிருக்கேன்!''

''நீ காத்துண்டு வேறே இருக்கையா என்ன, பாட்டி? அப்பப்போத்தான் 'பட்பட்'னு போட்டுண்டேயிருக்கையே!''

அம்மா தலை சட்டுனு சமையலுள்ளிலிருந்து நீட்டறது, அப்பா ''நைஸ்ஸா!'' நியூஸ் பேப்பரைத் தாழ்த்தி அதன் பின்னாலிருந்து திருட்டுப் பார்வை பார்க்கறார், எல்லோரும் பூனைக்கெதிரே எலி மாதிரி என்ன நேருமோ?

ஆனால், அதென்னமோ வாஸ்தவம்தான், எல்லோ ருக்கும் பாட்டியைக் கண்டாலே அஸ்தியிலே கொஞ்சம் ''ஐஸ்'' தான். பிடாரி மாதிரிப் புரளும் அந்த மஞ்சள் நரைக் கூந்தல் நடுவே, சிரிப்பில்லாத முகத்தில் ஜ்வலிக்கும் அந்த

மஞ்சள் பூத்த கண்களை நிமிர்ந்து பார்த்துப் பேச யாருக்குமே கொஞ்சம் அச்சம்தான். பாட்டிக்கு அலாதியா ஒரு தோரணை உண்டு. அவள் எதிரே எப்படிப்பட்ட தைரிய சாலிக்கும் கையும் பிடியுமா அகப்பட்ட திருட்டுக் களை கொஞ்சமாவது சொட்டத்தான் சொட்டும்.

அதனால் ''ஜிங்லி, உனக்கு அசாத்தியத் துணிச்சல் தாண்டா! நாங்கள் வளையில் பதுங்கிண்டிருக்கோம். நீ என்னடான்னா குறைக்குள்ளேயே அனாயாசமாப் போய் வளையவரயே!''ன்னு அவா ப்ரமிக்கறா.

பாட்டி ஒரு சிங்கம்தான்.

(ஆனால் ஆண் சிங்கத்துக்குத் தானே பிடரியுண்டு; பெண் சிங்கத்துக்கேது? இதென்ன குழப்பமோ தெரியல்லியே!)

''நீ சொல்றதும் சரிதான். களைக்கக் களைக்க வெட்டிண்டேயிருக்கும்.''

இதுதான் பிடிக்க மாட்டேன்கறது, இந்தப் பெரியவாள் பாஷையில். பளிச்சுனு போயிண்டேயிருக்கற பேச்சில் திடீர்னு இருட்டடிப்பு.

அவன் சிந்தனையைக் கலைத்து இருட்டைத் துளைத்துக் கொண்டு கடம்பாடியின் குரல் அவன்மேல் இறங்கியபோது, அந்த இடத்தில் தேங்கிவிட்ட நிசப்தம் சொட சொடத்தது.

''அந்த ஆள் யார், தெரியுமாடா''

ஜிங்லி திகைத்தான். ''எந்த ஆள்?''

''அதுதான் இங்கே தூக்குப் போட்டுக் கிட்டு செத்துப் போன ஆள்!''

''எனக்கு எப்படித் தெரியும்?''

"அது எங்க அப்பாடா?"— கடம்பாடியின் குரல் தேம்பிற்று.

தான் கண்ட அதிர்ச்சி ஒருபுறம் இருக்கட்டும்; இந்த மாதிரி சமயங்களில்தான் கடம்பாடி ஒரு புதிர்ப் பொட்டலம் ஆயிடறான்: (இங்கே திறக்காதே! வீட்டுக்குப் போய்த் திறந்து பார், உள்ளே என்ன இருக்குன்னு. களிமண்ணா, பப்பர்மின்டா நீயே கண்டுக்கோ! லக்கி ப்ரைஸ்! லக்கி ப்ரைஸ்!)

இது. எவன் துக்கத்தையோ தன் துக்கமாக ஆக்கிக் கொள்வதில் அவனுக்கிருக்கும் அலாதி வரத்தில் சேர்த்தியா. எஞ்சினுக்கு அழுதாற்போல்? (பாட்டுக்கு, படிப்புக்கு, நடிப்புக்கு, பரோபகாரத்துக்குன்னு பட்டம் வழங்கறாளே, அதுமாதிரி கடம்பாடிக்கு துக்க திலகம்னு பட்டம் சூட்டு வோமே?) இல்லை, ஏற்கெனவே லூஸ், பௌர்ணமீ, அமாவாசைன்னு பருவக் கோளாறாமோ, அதுவா?

ரெண்டுமேயில்லாமல் நிஜம்மாவே இருந்துட்டாலோ—!

ஜிங்லிக்கு மயிர்க்கூச் செறிந்தது. கடம்பாடி திடீரென ஒரு புது தரிசனமாகப் பிதுங்கினான்.

எல்லாப் பெரியவாளையும் போல், படுக்கையாப் படுத்து, நாளடைவில் நாறாய்த் தேய்ந்து. நாத்தமாயெடுத்து (பாட்டி படுக்கையை-அது அம்மாவைப் பெத்த பாட்டி; இந்தப் பாட்டிக்குத்தான் அழிவே இல்லையே! அந்தப் பாட்டி படுக்கையை சுட்டே யெரிச்சுட்டா) செத்ததே தேவலைன்னு இருக்கறவா மூச்சுவிடும் படியில்லாமல், "பட்"னு தூக்கில் உயிர் போறதில், ஒரு தீராத ஆச்சரியம் இருக்கத்தான் இருக்கு.

அப்படி ஏன் சாகணும்?

தற்கொலையா?

பிறர் கொலையா?

கடன் தொல்லையா?

எதிரியின் வஞ்சமா?

குடி வெறியா?

ஏன்? எப்படி?? எதற்காக???

பார்க்கப் போனால் இதெல்லாம் என்ன அசட்டுக் கேள்விகள். அர்த்தமற்ற கேள்விகள்! எப்படியோ செத்துட்டான். உன்னைப் போல் சாவல்லே, என்னைப் போல் சாவல்லே; தன்னாலோ, மத்தவனாலோ, இந்த உயிர் தன் முழு அளவுக்கு வாழாமல் தியாகமாயிட்டுது. இதுக்கு என்ன சொல்றே?

தர்க்க ரீதியாய்த் தன்னில் வந்தடைந்த இந்தக் கேள்வியினால் ஜிங்லி மூச்சுத் திணறிப் போனான்.

தியாகம்,

என்ன அழகான வார்த்தை!

தேசத்திற்குத் தியாகம்.

மக்கள் மேல் அன்பிற்குத் தியாகம்—மூணாம் பாடத்தில் வரதே சித்தார்த்தன் கதை! அது மாதிரி இது எதற்குத் தியாகம்?

"ஜிங்லி, என் அப்பாவுக்கு சாவே கிடையாது. எனக்கு நிச்சயமாய்த் தெரியும், ஏன் தெரியுமா? இந்தப் புத்தைப் பார்த்தியா? நேத்து என் கனாவிலே வந்து சொன்னாரு; டேய் பையா, புத்திலே நான்தாண்டா பாம்பாய் வாழறேன். நீ ஆளாவற வரைக்கும் நான் இங்கேயே இப்படிச் சுத்திக்கிட்டிருப்பேன்!"

மரத்தடியில் இலைச் சருகுகளடியில் எதுவோ சலசலத்தது.

"டேய், வீட்டுக்குப் போகலாண்டா!"

"நீ போ! நான் இன்னுங் கொஞ்ச நேரம் இருந்து என் அப்பனோடு பேசிட்டுத்தான் வரப்போறேன்!"

கடம்பாடியைப் பார்த்தால் கொஞ்சம் பொறாமை யாத்தானிருக்கு. நாள் ஆக ஆக அவனுக்குப் பெருமை பெருகும்.

"இவன் யார் பிள்ளை, தெரியுமா?"

"அதான் தெரியாதா, அந்த மரத்திலே அன்னிக்குஒத்தன் தொங்கினானே, அவன் மகன். அவனுக்கென்ன குறைச்சல் அப்பனே பாம்பாயிருந்து மகனைக் காப்பாத்திட்டிருக்கான்."

ஓஹ்ஹோ! இப்போ புரிஞ்சுது. அதனால்தான் கடம்பாடிக்கு விஷம் ஏறல்லியா?

யார் கண்டது. ஒரு நாளைக்கு அவனுக்கு அவன் அப்பா புத்திலிருந்து மாணிக்கம் கிடைச்சாலும் கிடைக்கும்.

கடம்பாடி அதிர்ஷ்டசாலி,

## 3

ஆனால் இன்று மரத்தின் மந்திரக் கட்டிலிருந்து சுருக்கவே விடுபட்டாச்சு, அதையொட்டி விசன விஷயங்களில் மயங்கி, பிறகு மங்கி உழல, மனசில் மனம் இல்லை. மனம் இன்று குஷி. கடைசி பீரியட் வாத்தியார் வரவில்லை. பையன்களை முன்னாலேயே அவிழ்த்து விட்டாச்சு.

ஜிங்லி தன்னைக் குதிரையாய் பாவித்துக் கொண்டு விட்டான்..."க்ளொப் க்ளொப் க்ளொப்..." வாயில் குளம்புத் தாளம் போட்டுக் கொண்டு ஒரே நிதானத்தில் ஓடிக் கொண்டிருந்தான்.

இந்தமானம் இருக்கே—மானமா. வானமா?—வீட்டுக்குப் பின்னால் அவரைப் பந்தல் அடியில் உட்கார்ந்து இலைகளின் சந்து வழியாப் பார்த்தால் சின்னதாயிருக்கு: இங்கே எப்படி இவ்வளவு பெரிய மைதானமாயிருக்கு? மேகங்கள் அடைச்சுண் டாலும் சிறுத்துப் போயிடறது. ஆனால் இன்னிக்கு ''ஜம்''னு தோச்சுப் பிழிஞ்சு இழுத்துப் பிடிச்சு உலர்த்தின மாதிரி இருக்கு? பளிச்சினு நீலம், பூமி விளிம்பில் தொடற இடத்தில் லேசாய் உப்பிண்டு அங்கே செந்திட்டு படர்ந்திருக்கு.

அக்காவின் கன்னம் மாதிரி.

அவ்வளவுதான், ஜிங்லி வாய்விட்டு உரக்கப் பாட ஆரம்பித்துவிட்டான்.

''பங்குனி மாதம்
பருப்புக் கலியாணம்''

பத்தாந்தேதி.

சொல்லிச் சொல்லிக் கலியாணம் கிட்டவே வந்தாச்சு.

வீட்டுக்கு வரவாளும் போறவாளும் திடீர்னு அதிகமா யிட்டா. பண்டமும் பாத்திரமும் வீட்டில் நிரம்பிய வண் ணமா இருக்கு. இடம் போதல்லே. தினம் ஒரு பச்சை நோட்டை மாத்தியாறதுன்னு அப்பாவும் பாட்டியும் ஆத்திரப்படறா.

' செலவில்லாமல் கலியாணம் ஆகுமா?''ன்னு அம்மா கேக்கறா.

''பணம் இல்லாமல் செலவு பண்ண முடியுமா?''ன்னு அப்பா கேக்கறா,

சண்டை, சமாதானம். மறுபடியும் குஸ்தி.

ஆனால், யார் மண்டை உடைஞ்சால் என்ன. என் பாடு கொண்டாட்டம், சமையல்கார மாமாவை சிநேகிதம்

கட்டிக்கணும். "அது மிக்ஸ்சரோ; கேசரியோ, முந்திரிப் பருப்பு நிறைய இருக்கிற பக்கத்தை என் பக்கமா வெட்டிடுங் கோ, மாமா—நான் கலியாணப் பெண்ணின் தம்பி."

கற்கண்டைக் கையில் குத்தா அள்ளிப்பேன்.

என் பெருமையே எனக்கு இவ்வளவு பெரிசாயிருக்கே. கலியாணப் பெண்ணைக் கேக்கணுமா? என்னிக்குமே அவள் சண்டி. இப்போ ஒரு எச்சில்கூட இடுவதில்லை, எல்லாம் அம்மாவே பார்த்துக்கறா. "அங்கே போய் நீ கஷ்டப்படறது இருக்கவே இருக்கு' இனிமே நீ இங்கே இருக்கிற வரைக்கும் என்னாலே முடிஞ்ச வரைக்கும் நீ சுகமாயிருந்துட்டுப்போ" ன்னு அம்மா கண் கலங்கறா. துணைக்குப் பொண்ணும் மூக்கைச் சிந்தறா;

"இந்த நாடகம் யார் கண்காக்ஷிக்கு நடத்தியாகறது? பொண்ணுக்கு இப்பவே இந்த உரையேத்தம் கண்டால் தான், அங்கே போனால் ஆம்படையான் அம்மியிலே குழம்புக்கு அரைச்சுக் கொடுப்பான்னு—ரேழியில் சிங்கம் உறுமறது.

அக்கா இப்போது தன் நினைப்பில் இல்லை. பொம் மையை ஸ்குரூ முடுக்கினால் ஸ்குரூ இறங்கற வரைக்கும் அது ஒன்னையேதான் திருப்பித் திருப்பி செஞ்சுண்டிருக்கும். அது மாதிரி அவள் புதுசு புதுசா உடுத்திக்கிறதும், கண்ணாடி யெதிரே முகத்தைத் திருப்பித் திருப்பி முதுகைப் பார்த்துக் கறதும், உடனே உதட்டை முறுக்கிண்டு உடுத்தினதைக் களையறதுமா இருக்கா.

ஸ்குரூ ஓயவில்லை, (Full-tight)

"டேய் ஜிங்லி, என் க்யூடெக்ஸைப் பார்த்தியாடா?"

"ஏன். அடுத்தது உன் சவுரியை நான் வெச்சுப் பின்னின் டேனான்னு கேளேன்!"

உடனே, அக்காளுக்கும் தம்பிக்கும், சண்டை, கைகலப்பு அடி, உதை.

'இனி அவளை நீ தொட்டியோ.'' என்று கத்திண்டே அம்மா கையில் அப்பளக் குழவியுடன் ஓடி வருகிறாள்,

''வா, வா. எங்கே போயிட்டே, உன்னைப் பார்த்துக் கறேன்! இன்னி ராத்ரி இங்கேதானே சோறு?''

''ஜங்ஷனில், வெற்றிலைப்பாக்கு, பீடா சாமான் விக்க றானே, அவன் மாதிரி கோமதி கழுத்தில் ஒரு கண்ணாடி ஸ்டாண்டை மாட்டி, அதில் அவளுடைய அரிதார சாமான் களை வெச்சுக் கொடுத்துட்டால் போதும். அன்னி முழுக்க அவளுக்குச் சோறு வேண்டாம். தண்ணி வேண்டாம்'' பாட்டி கேலி பண்ணுவதற்கேற்ப அக்கா என்னவாவது மினுக்கிண்டுதான் இருப்பாள்,

ஆனால், மினுக்கிண்டப்புறம் அக்கா ''ஜோக்'' காகத் தான் இருக்கா, அப்போ அவளைப் பார்த்தால் வண்ணான் மடி மாதிரி இருக்கு, கலைக்க மனமில்லை. ஆனால், கலைக்காமல் கட்டிக்க் முடியாதே அதுமாதிரி புரியாத ஒரு குழப்பம், பார்க்க மகிழ்ச்சி, லேசா ஒரு வேதனை, மனக்கஷ்டத்தில் முடிஞ்ச கதை போல். தொட்டால் நலுங்கிடுவாளோ? ''பூ''ன்னு ஊதினால் காற்றில் கரைஞ் சுடுவாளே? அப்புறம் அவள் ஜிங்லியைக் கூப்பிட்டாலும் சரி, ''என் சிவப்புச் சாந்தைக் காணோமே!''ன்னு வாய்விட்டு முன கிண்டே தேடினாலும் சரி. நமக்குக் காதில் கேட்கப்போவது ''உஷ்! உஷ்''ன்னு காற்றின் அசைவுதான்.

''உஷ்! உஷ்!'' ஜிங்லி சட்டெனத் தன் ஓட்டம் தெறித்து நின்றான். உடல் முழுக்க ''விர்ர்ர்ர்—''

''உஷ்! உஷ்!''

''குஷ்! குஷ்!''

இது காற்றின் அசைவு அல்ல. காற்று கொஞ்ச நாழியா கவே விழுந்து விட்டது. யாரோ பேசறா. முழு ரகஸ்யமா வும் இல்லை, குரல் தாழ்ந்து—ஆனால், பேசறது புரியாதபடி அவ்வளவு தாழ்ந்து இல்லை.

''கோமதி' கோமதி!''

இதென்ன அக்கா பேருன்னா அடிபடறது! இது எங்கள் குஹையிலிருந்துன்னா வரது! இது எப்படி யாருக்குத் தெரிஞ்சுது?

சுயத்திலேயே மோதிரம் போல். நெருக்கமாய் ஒரு மரக் கூட்டத்தின் வளையத்தின் நடுவே ஒரு புல் திட்டுத்தான் அவர்களுடைய குஹை. அதன் உள்ளேயே ஒரு புதரை நடுவில் விலக்கிக் கொண்டுதான் நுழையணும், அதை பேச வோ, விளையாட்டுகளுக்குத் திட்டம் போடவோ, பெரியவர் களின் அத்துமீறி ஏதேனும் செய்தபின் அந்த அலை ஓயும் வரை பதுங்கிக் கிடக்கவோ கிடைத்த அவர்களுடைய ரகஸ்ய பூமி-அது பூமியே அல்ல; சொர்க்கம்.

ஆனால் ரகஸ்யம் குலைஞ்சு போன பின் இனி எப்படி அது சொர்க்கமாயிருக்கும்? இன்னும் யாருக்கோ தெரிஞ்சு போச்சே! பாரு, கணக்கு வாத்தியார் குரலாட்டமாயிருக்கே? ஆமாம்' கணக்கு வாத்தியாரே தான்?

''கோமதி, இனி என்னால் பொறுக்கவே முடியாது.''

''சே! இதென்னன்னா?''

அக்காவும் இருக்காளா என்ன?

அவன் காலடியில் ஒரு அணில் மரத்தின் மேலிருந்து விழுந்து புரண்டு அடித்துக் கொண்டு ஓடிற்று. பின்னாலேயே விரிந்த இரு பெரும் சிறகுகள்-அவற்றின் ''விர்ர்'' முகத்தில் மோதிற்று-துரத்திப் பாய்ந்து வந்து, பூமியில் அணில் விழுந்த

இடத்தை ஒற்றி, ஏமாந்து: எழும்பிப் போயின. இத்த னைக்கும் இமை துடிக்கும் நேரம் கூட ஆகவில்லை.

மரத்தின் வேரின் அடியிலிருந்து "ட்வீக்! ட்வீக்!! ட்வீக்!!!"

பயமா? ஏளனமா?? வெற்றியா??

"ஆமாம். என்னை நெடுந்தூரம் ஆசைகாட்டி இப் போது நடு வழியில் விட்டு விட்டாய்,"

"நீங்கள் என்ன சொல்றேள்? கால் ஆற மாலையில் உலாவக் கிளம்பினவளை, இங்கே எங்கேயோ ஒரு கல் வெட்டு காண்பிக்கிறேன்னு அழைச்சுண்டு வந்துட்டு, 'நான் உங்களை நடு வழியில் விட்டுட்டேன்' என்கிறேளே'''

"நான் இந்த வழியைச் சொல்லவில்லை. உனக்கு அன்னிக்கு நினைவிருக்கா? உனக்கு மறந்து போனாலும்நான் என் நெஞ்சில் கல்வெட்டாய்க் காப்பாற்றித்தான் வைத்திருக் கிறேன்."

"ஓ, இதுதான் நீங்கள் காண்பிக்கப்போற கல்வெட்டா?"

"ஆமாம். ஏன் கூடாது? இதைவிடக் கல்வெட்டு ஓசத்தி யாமோ?- இது கல்வெட்டு கூட இல்லை. இது நெஞ்சின் பிளவு, இது இதயத்தின் விரிசல்!"

ஏதேது! கணக்கு வாத்தியார். தமிழ் வாத்தியாராகவும் இருக்கலாம் போல இருக்கே! செய்யுள் பேசறாரே!

நீ என்னோடு பேசிய ஒவ்வொரு வார்த்தையையும், என் மேல் வீசிய ஒவ்வொரு பார்வையையும். புரிந்த புன்னகையை யும்; என் எதிரே நடமாடுகையில் உன்ஒவ்வொரு அங்க அசை வையும் என் நினைவில் பொக்கிஷமாய் எப்படி சேகரித்து வைத்திருக்கிறேன் தெரியுமா? ஒரு சமயம், காற்றுவாக்கில், உன் முன்றானையின் தலைப்பு என் முகத்தில் மோதிய

மூர்ச்சையிலிருந்து நான் தேற எனக்கு எத்தனை நாளாச்சு தெரியுமா?''

இதுக்குத்தானே பாட்டி அடிச்சுக்கறா: ''அடக்கம்! அடக்கம்! முனையைத் தூக்கி இடுப்பில் சொருகு!'' ன்னு.

' நான் ஒண்ணும் உங்களுக்கு ஆசை காட்டல்லே- எல்லாம் நீங்களா நினைச்சுக்கறதுதான்.''

''அப்படியேதான் இருந்துட்டுப் போகட்டும். என் னுடைய எத்தனையோ சுமைகளில் இதுவும் ஒன்று. என்னைப் போல் நீயும் நினைக்கணும்னு எதிர் பார்க்க எனக்கு உரிமை யில்லைதான். ஆனால் என் எண்ணங்கள் நான் இப்படித் தான் எண்ணணும் என்று மாற்றியமைக்க யாருக்குமே உரிமை கிடையாது. என்னால் என் எண்ணங்களை எண்ணா மலும் இருக்க முடியாது!''

''நீங்கள் என்னென்னவோ பேசி என் மூளையைக் குழம்ப அடிக்கறேள்!''—கோமதி சிணுங்கினாள்.

''உனக்கு இப்போது அப்படித்தான் இருக்கும். பின்னால் என்றேனும் ஒருநாள் நினைக்காமலா இருப்பாய். ''ஸ்ரீகாந்த் என்று ஒருவன் இருந்தான், அவன் என்மேல் வைத்திருந்த ஆசையில் என் காலடியிலேயே தன் உயிரைத் தியாகம் செய்யத் தயாராயிருந்தான்'' என்று?'

தியாகம்! அப்போ இதுமாதிரியும் ஒண்ணு இருக்கா?

''ஓ!''

அக்காவுக்கு ஆச்சரியமா? சந்தோஷமா?? பீதியா???

சந்தோஷமாய்த்தான் இருக்கும். ஏன் இருக்காது? தனக் காக ஒருவன் உயிரைவிடக் காத்திருக்கான் என்றால் அவனிடம் என்ன வேணுமானாலும் வேலை வாங்கிக்க லாமே! கிணற்றிலே சொம்பு விழுந்துட்டால் அவனை முழுகி

எடுக்க வைக்கலாம். எடுத்து வந்தால் சொம்பு லாபம். ஆள் மூழ்கிப்போனால் அப்பவும் எனக்காக ஒருத்தன் செத்தான் என்கிற பெருமை.

—"நீங்கள் ஏன் இப்படியெல்லாம் பேசறேள்? இன்னும் உங்களால் உங்களைப் பெற்றவர்கள் சுகப்பட வேண்ட"... எவ்வளவோ இருக்கு. உங்களுக்கு உத்தியோகம் வேண்டாமா? உங்களுக்கும் கலியாணம் கார்த்திய நடக்கவேண்டாமா? காலம் எப்பவுமே இப்ட இருக்குமா?"

"என் வாழ்வின் கட்டிடமே இடிந்து விழுந்த பின் என் மேல் சவரனாகவே மழை பெய்தாலும் எனக்கு என்ன ஆச்சு?"

"சரிதான்! இதெல்லாம் என்ன பேச்சு? நேரமாச்சு. எனக்கு வழிவிடுங்கள்."

"இல்லை, இதை நீ கேட்டுவிட்டுத்தான் போகணும். அன்றொரு நாள் நான் ஜிங்லிக்குப் பாடம் சொல்லிக் கொடுக் கையில் நீ காப்பி கொண்டு வந்தாய். டம்ளரை என் எதிரில் வைத்ததும் காப்பி கொஞ்சம் சிந்திற்று. நீ, தலையை ஒரு விதமாய்ச் சாய்த்துக் கொண்டு "Oh I am sorry!" என்ற அந்த நிமிஷத்திலிருந்து நீ எனக்கு உன் தடம் மாறிப் போனாய். நீலப் பொற்கிரணம் வீசினாற்போல் உன் ஒளி—ஆனால் உன் ஒளியை நீ அறியாமலே வளைய வந்ததே உன் ஒளியைப் பன் மடங்கு பெருக்கிற்று—நான் உங்கள் வீட்டு வாசற்படியை மிதிக்கும்போதெல்லாம் முகமனில் உன் தலை யசைப்பும். புன்னகையும்—ஹா! கோமதி, நீ ஏன் அப்பவே முகம் சுளித்திருக்கக் கூடாது?"

"உம்மணாமூஞ்சிச் சுபாவம் எனக்குக் கிடையாது. உங்களிடம் மெனக்கெட்டு வந்து நான் குழையவுமில்லையே!

நீங்கள் ''மணி என்ன?'' என்று கேட்டால், அதுக்கு நான் பதில் சொன்னால், அதுவே உங்களுக்கு இடம் கொடுத்தாச்சு என்கிறேளா?''

''கோமதி, இதுதான் நமக்குள் வித்தியாசம், உனக்கு சாதாரணமாய் இருந்ததெல்லாம், எனக்குக் காய்ந்த பூமியில் பொழிந்த அமுத தாரையாய் இருந்தது. கோமதி, இனி என்றேனும் ஒருநாள், நான் உன் வீட்டுப்படியேறி வந்தால் உன் கணவனோ, உன் குழந்தைகளோ, என்னை ''வா'' என்று வரவேற்பதைவிட நீ என்னை வாய்திறந்து ''வாங்கோ'' என்று சொல்லாமல் என்னை அடையாளம் கண்டுகொண்டு கனிவு காட்டும் உன் மௌனமான தலையசைப்புக்கே பெரிதும் ஏங்கி, வாசலிலேயே நிற்பேன், இந்த மனோ நிலை எனக்கு என்றுமே மாறாது; இது உண்மை. இது சத்தியம்.''

''ஐயையோ. இதென்ன! என்னை ஏதேனும் வில்லங்கத்தில் மாட்டி விடாதேயுங்கள். நான் ஒரு பாவமும் அறியேன். பாட்டி என்னைப்பார்த்துப் பல்லைக் கடிக்கறதெல்லாம் என் நல்லதுக்குத்தான்னு புரியறது.''

''அப்படீன்னா?''

''பாட்டி சொல்வா; ''நீ வெகுளி'' ன்னு நிருபிக்கறதே. உன் முழு ஜோலியாய், உன் புக்ககத்தில் இருக்கப் போறதுன்னா, அதைவிட வினையேவேண்டாம். கட்டினவன்கிட்ட என்னிக்குமே ஜாக்கிரதையா இருக்கணும். புருஷாள் நம்ம மாதிரி தொட்டதுக்கெல்லாம் சந்தேகப் படமாட்டா. ஆனால் அவாள் மனசில் களங்கம் விழுந்துடுத்தோ, அப்பறம் அந்த முள்ளின் வேரை யானைகட்டி இழுத்தாலும் அசைக்க முடியாது. அப்பறம் அந்தப் பெண் செத்துத்தான் தான் நிரபராதின்னு நிரூபிக்கணும். அதனால் எப்பவும் இதை யோசனை பண்ணிக்கோ: நான் வாழக்கத்துண்டேனா? என் நல்ல குணத்தை நிரூபிக்கக் கத்துண்டேனா?'' கிழவி

ஏதோ தொண தொணப்புன்னு நான் சலிச்சுக்கறதுண்டு. ஆனால் அத்தனையும் வாக்குன்னு எனக்குப் புரிஞ்சு போச்சு. வழி விடுங்கோன்னா—''

''கோமதீ'''—

''ஹஹ்—ஹ— ஹச்—சூ!''

ஜிங்லியே மிரண்டு போனான்! ''இவ்வளவு பெரிய தும்மல் என்னிடம் எங்கே ஒளிஞ்சுண்டிருந்தது?''

குகையில் ''கப்''ன்னு சத்தம் அடங்கிப் போயிற்று. பிறகு முயலை அதன் பதுங்கலிலிருந்து கிளப்பி விட்டாற்போல், திடுதிடுவென்று ஏதோ விழுந்தடித்துக் கொண்டு ஓடும் ஒரு சப்தம், ஒன்றிரண்டு நிமிஷம் கழிந்த பின்னர் புதரில் ஜாக்கிரதையாய் ஒரு சலசலப்பு. உடனே விறுவிறுவென நடை கிளம்பி, முன் சப்தத்தின் எதிர்திக்காய்ச் சென்று ஓய்ந்தும் போயிற்று.

ட்வீக்! ட்வீக்!! ட்வீக்!!!

அந்த இடத்தில் ஏறிப்போன முறுக்கைக் கலைப்பது போன்று சில் காற்று படமெடுத்துக் கொண்டு எழுந்தது.

## 4

அத்திம்பேரை இப்பத்தான் கிட்டப்பார்க்க முடியறது அவரே எடுப்பாயிருக்காப் போலத் தோணறது. அத்திம் பேரிடம் ''ஸ்டைல் இருக்கு. மனுஷாள் வந்தவுடன் ''டக்''னு சிரிக்கிறதும், வந்தவா தாண்டிப்போனவுடனே, டப்பா மூடி மாதிரி சிரிப்பை ''டக்''னு மூடிக்கறதும், வந்தவாள் உயரத்துக்குத் தக்கபடி, தன் உடம்பை வளைஞ்சு

கொடுக்கறதும், வந்தவா தாண்டிப்போனவுடன், நாணறுந்த வில்மாதிரி ("ட்ரொய்ஞ்ஞ்!") நிமிர்ந்துக்கறதும் அடேயப்பா!

மாமிகள் எல்லாரும் பேசிக்கறா: மாப்பிள்ளை முடுக்குத்தான்!"

ஆனால் ஒண்ணுதான் முழுக்கப் புரியல்லே; முழுக்கப் பிடிககல்லே—ஒரேடியா இங்கிலீஷில் பொரிஞ்சு தள்ளறார்.

"ஆ! Who is the young gentleman?"

அட. ஒரு செக்கண்டில், என் குட்டைக்குச் சரியா. மாப்பிள்ளை தன் நெட்டையை வளச்சிட்டாரே!— அவனுடைய கைக்குள் அவனுடைய பொம்மைக் கை மறைஞ்சு போச்சு.

"He is my little brother"

(வெட்கம் கெட்டவர்! தாலி கட்றதுக்கு முன்னாலேயே ரெண்டுபேரும் பேசிக்க ஆரம்பிச்சுண்டாச்சு!)

"How do you do. young man? Charming little fellow! and this—?

(ட்ரொய்ஞ்ஞு! ) அத்திம்பேர் நிமிர்ந்தாச்சு, அத்திம்பேர் புருவம் ஒரு துள்ளு துள்ளித்து, தலைமயிரையே தொட்டுடும் போல. (முடியுமோ?)

"இவர் பேர் ஸ்ரீகாந்த், அத்திம்பேர் கணக்கு வாத்தியார்."

"Oh, very glad to meet you."

[இவர் பெயர் ஸ்ரீகாந்த். இவர் ஏ. எஸ், எம். முக்கு மச்சினன். இவர் அவாத்துக்கு வந்து நாலு மாசமாச்சு. இவர் எப்போ திரும்பிப் போவார்னு அவாளுக்கே தெரியாது. இவருக்கு அதைப்பற்றி அக்கறை கிடையாது. சாப்பாடு அவாத்துலே; எனக்குக் கணக்குக் கத்துக்கொடுக்கிற சாக்கிலே மத்தியான டிபன் எங்காத்துலே, இன்னிக்கு ஒண்ணும் பண்ணலேன்னு குழம்பு சாதத்தை உருட்டி வெச்சா, அது

வும் ''க்ளோஸ்.'' அக்காவைப் போக வர முறைச்சுப் பார்க்கிறதும், ''புஸ் புஸ் ன்னு பெருமூச்சு விடறதும் ஏன்னு நாலு நாளைக்கு முன்னால்தான் எனக்குத் தெரிஞ்சது)—இப்படிச் சொல்ல நாக்கு தவிக்கறது. ஆனால் தோணறதை யெல்லாம் சொல்லக் கூடாதுன்னு உள்ளே ஒன்னு எச்சரிகை பண்ணறது.

''அத்திம்பேர்!''

அத்திம்பேர் மறுபடியும் அவன் பக்கமாய்க் குனியறார், ராமபிரான் அணில் மேல் குனிஞ்ச மாதிரி. அவர் முகத்தில் புன்னகை. ''அத்திம்பேர் ரொம்பப் பிரியமாய் இருப்பார் போலிருக்கே!''

''You want to say something?''

''அத்திம்பேர் அத்திம்பேர், என் அக்கா ரொம்ப நல்லவ, மனசில் ஒண்ணும் இல்லாதவ, நெருப்பில் குளிச்ச சீதையைப்போல் புனிதமானவ.''

ஏன் இப்படி அவன் வாயிலிருந்து வந்தது? அவனுக்கே தெரியாது. அந்த பாஷைகூட அவனுடையதல்ல.

அத்திம்பேர் நிமிர்ந்தார். ராமர் வில்! அவர் புன்னகை மாறவில்லை.

''What is he Saying?''

அக்கா முகம் பார்க்கச் சகிக்கல்லே, வெளுத்து, கறுத்து, செவந்து மாறி நிழலடிச்சு— ஆனா எப்படியோ சமாளிச்சுட்டாள்.

''என்மேல் அவனுக்கு ரொம்ப ஆசை. என்னை உங்களுக்கு சிபாரிசு பண்றான்-''—அவனைத் தன்பக்கம் இழுத்து இறுக அணைத்துக் கொண்டாள்.

"எங்கள் வீட்டுக்கு ஒரே பிள்ளை. எனக்கு ஒரே தம்பி!" அவள் விழிகள் பெருகின. அத்திம்பேர் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தார்— Good Chap!"

"என்னடி உன் பிள்ளை "கிண்டியாய நமஹ"ங்கறது, தாக்கல் மோக்கல் இல்லாமே?"

"பாட்டி பின்னாலே இருக்கேளா?"

"யார் கண்டது? பிஞ்சுலே பழுத்த வெம்பல்! உங்களோடு கதை கேட்கப் போறதோன்னோ?"

இரவுப் பந்தியில் அவன் பக்கத்தில்தான் கணக்கு வாத்தியார் உட்கார்ந்திருந்தார், வெங்காயச்சாம்பாரில், வெங்காயத்தானைத் தனியாக ஒரு கரண்டி இலையில் வடிக்கச் சொல்லி, உருளைக்கிழங்குக் கறியை ஒருகை பார்த்து ("நான் பார்த்துக்கறேன், நீர் சும்மா தள்ளும் ஓய்) பாயாஸத்தை மூன்று தொன்னை கேட்டு வாங்கிக் குடித்ததைப் பார்த்துக் கொண்டிருந்த ஜிங்லிக்குத் திடீரென்று வாய்விட்டுச் சிரிப்பு வந்துவிட்டது.

"இவரா உயிரைத் தியாகம் பண்றவர்?"

"என்னடா சிரிக்கிறே?"

"எனக்கு என்னவோ நினைப்பு வந்தது"

"என்ன?"

நல்ல வேலையாய் ஜிங்லிக்குப்பதில் சொல்ல நேரவில்லை.

"பாயஸம்? பாயஸம்! அண்ணாவுக்கு சந்தேகத்துக்குப் பாயஸம்!"

மணி அய்யரே கோகர்ணம் தூக்கி விட்டார், அவர் சட்டையில் தங்கமெடல் ஸேப்டி பின்னிலிருந்து தொங்கிற்று.

"ஐயர்வாள்! இந்தப் பக்கம்!!"— தொன்னையை ஏந்தியபடி, கணக்கு வாத்தியார் கத்தினார்,

# மன்னி

இருவரும் வண்டியிலிருந்து இறங்கும்போதே, நான் மாடி ஜன்னலின் பின்னிருந்து இவர்கள் என்னை வாழ்விக்க வந்தவர்கள் என்று கண்டு கொண்டேன். எனக்கு இப்படித் தோன்றுவானேன் என்று கேட்டால் என்ன சொல்வேன்? கல்கத்தா கரண்டி, கைநழுவித் தரைமீது விழுந்ததும் எழும் கிண்கிணிக்குத் தனிக் காரணம் ஏது? அந்தத் தற்செயல்தான் காரணம்.

—''வா, வா; மாமிக்கு நமஸ்காரி! இன்னும் ஜோடனை முடியவில்லையா? அவாளுக்கு வண்டிக்கு நேரமாச்சே!''

இரண்டு கைகளிலும் டிபன் தட்டுகளுடன் அம்மா, அப்போதுதான் சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள்.

''நன்னாயிருக்கு உங்கள் தமாஷ்! பெண்ணைப் பார்க்க வந்தவாள் வந்தவுடனே வந்தவாளிடமே அவா போறதைப் பத்தி ஞாபகப்படுத்தறது!''

''அப்படின்னா, அப்படின்னு அர்த்தமாடி? உங்கள் சுபாவத்தைத் தெரிவிச்சேன்—''

''உங்கள் சுபாவத்தை என்ன சொல்லவாம்? நீங்கள் எப்போ விளையாடறேள், எப்போ வினை பேசறேள்னு உங்கள் இடக்கு எங்களுக்கே இன்னும் புரியல்லியே, சம்பந்தம் பண்ண வந்திருக்கறவாளுக்குப் புரிஞ்சுடுமா?''

மழையில் நனைந்த குருவிபோல் கேலி வருத்தத்தில் அப்பா தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டதும் வந்தவர்களுக்கே சிரிப்பு வந்துவிட்டது.

''உங்கள் தர்க்கம் எதுவோ. ஒண்ணு நிச்சயம். இந்த ரயில் தப்பினால் எங்களுக்கு மறு ரயில் இன்னிக்கு இல்லை'' என்றார் மாமி.

''ஜாடை தெரிந்து கோள்ளவேண்டும்.''

''ஜடையை முன்னேயே தைத்திருக்கவேண்டும்'' என்று அப்பா பாட ஆரம்பித்துவிட்டார்,

''ஏதேது, இதுவும் சங்கீதக் குடும்பம் போல இருக்கு! பேச்சே பாட்டாய் வரதே!''

இதுதான் சமயம் என்று மடக்கின ஆட்டுக்குட்டி போல நான் உள்ளிருந்து ஓடிவந்து நமஸ்கரித்து நின்றேன்,

''வா, குட்டி, பக்கத்தில் உட்காந்துக்கோ. டே, சம்பத்! நன்னாப் பாத்துக்கோ. அப்புறம் ரயிலில் போற வழி யெல்லாம் அது சரியா, இது சரியான்னு என்னை அரிச் செடுக்காதே. உன் மன்னி சொல்லியனுப்பியதெல்லாம் ஞாபகப்படுத்திக்கொள். பெண்ணே, உனக்கும் அதே வார்த்தைதான். அவா பண்ணி வெச்சான்னு ரெண்டுபேரும் பெரியவாளைக் குத்தம் சொல்லிண்டிருக்காதேங்கோ.''

மாமி 'ஜாலி'ப் பேர்வழிதான்.

''என் பிள்ளை, நான் பெத்தது எனக்கு ராஜா. உன் கழுத்தில் கயிறு ஏறினப்புறம்தான், அவன் உனக்கு ராஜா. அதையும் சொல்லிப்பிட்டேன்.''

அவருக்கு என்னவாம் குறைச்சல்? மாமிக்கே என்ன குறைச்சல்? ராஜாவைப் பெற்றவள் ராணியில்லாமல் தாதி யாவாளா? கூடத்தில் முன்னேரத்திலேயே கவிந்துவிடும் இருளைப் போக்கத் தட்டிவிட்ட மெர்குரி விளக்கு வெளிச்சத்தில் மாமி தக்காளிச் சிவப்பில் ரஸத்துடன் தகதகத்தார்.

''எங்கே, சுவாமிபேரில் ஒரு பாட்டுப் பாடேன்!''

''பாட்டா, உஷ்! மூச்சு விடக்கூடாது!''—அப்பா உதட்டின் மேல் விரலை வைத்தார்.

''என் பெண்ணுக்கு சொல்லிக் கொடுக்க வந்ததிலிருந்து பாட்டு வாத்தியாருக்குத் தொண்டை அவர் ஜன்மத்துக்கும் கட்டிப்போச்சு! பாருங்கோ என் எஜமானி என்னை முறைக்கிற முறைப்பை! அடியே! அடியே! ஜாக்கிரதை! ஏற்கெனவே துவாரபாலகி மாதிரி மேட்டு விழி, கொட்டிவிடப் போறது! ஏன், குட்டை அவிழ்த்துவிட்டேன்னு கோபமா? நீ பின் குரல் கொடுத்து ஏமாற்றி விடலாம்னு பார்த்தையா? உன் குரலைத்தான் இவா வந்ததிலிருந்து கேட்டிண்டிருக்காளே!''

அப்பா, அப்பா! உங்களுக்கு இரக்கமில்லையா?

''சம்பத்துக்குப் பாட்டுன்னா உசிர். அவனே பாடுவான். வெந்நீருள்ளில் அவன் ஒரொரு சமயம் வெளுத்து வாங்கற கச்சேரியில், பின்னால் குளிக்கக் காத்திண்டிருக்கறவா பாடு லாட்டரி. என்னடா சம்பத்!''

''என் பெண் நன்றாய்க் கல்சட்டி, வாணலியெல்லாம் தேய்ப்பாள். வெங்காய சொஜ்ஜு வைப்பாள் பாருங்கோ, அடாடா, அமாவாசை, சனிக்கிழமை விரதங்கள் எல்லாம் கலைஞ்சுடும்''—அப்பா நாக்கில் ஊறிய ஜலத்தை ஸூர்ர் என்று உள்ளுக்கிழுத்துக் கொண்டார்.

மாமி காதில் வாங்கிக்கொண்டாரோ? தெரியவில்லை.

''என் மூத்த பிள்ளைக்கும் சங்கீதத்தில் நல்ல ஞானம், எங்காத்து ஆண்களுக்கே சங்கீதத்தில் பிரியம் ஜாஸ்தி.''

''இந்தாத்து மாமாவுக்கு சிறு தீனி சில்லுண்டியில் பிரீதி ஜாஸ்தி''—அம்மா இடைமறித்தாள். ''இட்டிலி பாதின்னா சட்னி ஒண்ணேகால்; அப்புறம் டாக்டர் பில் $3\frac{3}{8}$''

மாமி காதில் வாங்கிக்கொண்டாரோ? தெரியவில்லை.

"போதும் போதாதற்கு மூத்தநாட்டுப் பெண் வந்து சேர்ந்ததும் முத்தாய்ப்பு வெச்ச மாதிரி ஆயிடுத்து. சாதம் கூடத் தாளத்துக்குத்தான் கொதிக்கிறதுன்னா பார்த்துக் கோங்கோளேன். மன்னியும் கொழுந்தனும் ஓசையை அப்படி அலசியிருக்கா. என்னடா சம்பத், அப்படித் தானே?"

அவர் முகம் தழலாடிற்று.

"மாமியார் மெச்சறேன்னு நினைச்சுக்கப்படாது. மற்ற தெல்லாம் எப்படியோ, என் நாட்டுப்பெண் பாட்டு கந்தர்வ கானம்தான். ஆள் பார்வைக்கும் பங்கரையில்லை. இத்தனைக்கும் சிக்ஷையில்லை, பிறவியோடு வந்ததுன்னு தான் சொல்லணும். சும்மா சொல்லக்கூடாது."

"வாஸ்தவம்தானே! அஞ்சு விரலும் ஒரே மாதிரியா யிருக்கா?" என்று அப்பா தன் கையை அல்லாசாமி காட்டினார். கரணை கரணையாய் முடிச்சும் முறுக்கும் ஏறிய முரட்டு விரல்கள். எங்கள் விரல் பத்து பண் ணலாம்,

"பிள்ளையார் ஏதோ காத்திண்டிருக்காரே, தன் அம்மா மாதிரியே தனக்கு அமையணும்னு, அது மாதிரி சம்பத் தன் மன்னிபோல் தனக்கு வாய்க்கத் தவங்கிடக்கான். என்னடா சம்பத். அப்படித்தானே?"

என் மனம் அதன் விளிம்பில் தத்தளிக்கின்றது. வாழ்க்கைப் படுதல், பரீக்ஷை தேறுவது இது எல்லாம் முதல் கல்லிலேயே மாங்காய் விழுந்தால்தான் மணத்தது. மன்னி: உன் பேரைச் சொல்லி என் வாழ்வு பறிபோகாமல் பார்த்துக் கொள், மன்னி! உன்னை நான் பார்த்ததில்லை. மானஸ மாய் உன் காலில் விழுகிறேன். மாமி இதயத்துள் புகுந்து அவர் மனஸை மாற்று. இந்த வரன் தவறி—வரிசை வரிசையாய் என்னை நாலு பேர் வந்து பார்த்துப் போய்

அவர்கள் கண்ணெச்சிற் படாமல் என்னைக் காப்பாற்று—நான் கோரினது நடந்துண்டிருக்கா? மாமி ஏதோ பேசறாரே!—'' ஒண்ணிருந்தால் ஒண்ணு இல்லை. நீங்கள் சொன்ன மாதிரி அஞ்சு விரலும் ஒரே மாதிரியாயிருக்கா?''

''லக்ஷத்தில் ஒரு வார்த்தை. அப்படியிருந்து விட்டால் உலகம் ஏது? அப்புறம் அதுவே என்னத்துக்கு?''

''என் உயிர் ஊசலாடறது; நீங்கள் ரெண்டு பேரும் சிலம்பம் விளையாடிண்டிருங்கோ.''

''—இவனுக்கும் என் மூத்த பையனுக்குமிடையே எனக்கு மூணு பெண்கள். மூணு பேரும் பாட்டுன்னா வாய்ப்பாடு ஒப்பிப்பார்கள். மூணும் கணக்கில் புலி. $16 \times 1 = 16$...''

''My God!''

மாமி காதில் வாங்கிக்கொண்டாரோ? தெரியவில்லை.

''ஆனால் கலியாணம் ஆகாமல் போயிடுத்தா? மூணும் அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லாமல் குடியும் குடித்தனமும் நடத்திண்டுதானிருக்கு ''

''இருக்கட்டும் இருக்கட்டும், பகவான் புண்ணியத்தில் இருக்கிற இடத்தில் சௌக்யமாய் இருக்கட்டும்.''—அப்பா பக்தியுடன் கரங் கூப்பினார்.

''அவாவாள் இருக்கிற இடத்தில்தான் இருக்கா.'' மாமி என்னைப் பார்த்துக் கண்சிமிட்டினார். ''அடி பொண்ணே, உங்க அப்பா பயப்பட வேண்டாம்; உனக்கு நாத்தனார் பிடுங்கல் இருக்காது'' என்று அதற்கு அர்த்தம்.

இன்றைக்கென்றே தோட்டத்து மரத்திலேயே பழுக்க விட்டுப் பறித்து, ஒவ்வொரு முத்தாய் உதிர்த்துப் பழத்தட்டில் குவித்திருந்த மாதுளை விதைகள் தங்கள் ரஸமிகுந்த அர்த்தத்துடன் மாமிக்கு ''ஒத்தான்சாய்க்'' கண் சிமிட்டின.

"ஹுூம், நாங்கள் கிளம்பறோம். நிஜமாகவே நீங்கள் சொன்ன மாதிரி ரயிலுக்கு நேரமாகிவிடும் போல் தானிருக்கு. ஊருக்குப் போய்த் தெரிவிக்கிறேன், எல்லாம் அந்தத் தையல்நாயகி புண்ணியத்தில் நான் நினைக்கிறபடி நேருவதாயிருந்தால், ஆனியிலேயே முகூர்த்தத்தைக் குறிச்சுடுவோம்."

அப்பா பேந்தப் பேந்த விழித்தார், "இதுதானே ஆனி?"

"ஆமாம். இன்னிக்குத்தான் இரண்டோ மூணோ பதினைஞ்சு, இருவது வாக்கில்—"

அப்பா அம்மாவைப் பார்த்தார். அம்மா அப்பாவைப் பார்த்தாள். மாமி எங்கள் மூவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

"அதுக்கில்லே—" என்று அப்பா தன் குரலை பாகு இழுத்தார்.

"எதுக்கில்லை?"—மாமி முகத்தில் என்ன ஆச்சரியம்! எவ்வளவு பாங்கான பாசாங்கு பேசுகின்றது?

'சில ஏற்பாடுகள் பண்ணவேண்டியிருக்கு" என்று அப்பா முனகினார்.

"அதென்ன ஏற்பாடுகள்? உமக்கு இங்கே கஷ்டமாயிருந்தால் பட்டணத்துக்கு வாரும். கலியாணத்தை நடத்தித் தரேன். காலையில் தாம்பூலம் மாற்றி, மத்தியானம் தாலிகட்டி, மாலை வண்டி ஏறிண்டிருக்கையிலேயே அன்னி ராத்திரி மாப்பிள்ளையழைப்புக்கு இன்னொரு கோஷ்டி சத்திரத்து வாசலில் ஜட்காவிலிருந்து இறங்கிண்டேயிருக்கு, இந்த நித்ய கல்யாண வைபோகம் கண்கூடான ப்ரத்தியக்ஷம். காசை வீசியெறிஞ்சால் கான்ட்ராக்டிலே பண்ணுவான்கள்— ஒவ்வொருத்தனுக்கு இதுவே பிழைப்பு—"

''நீங்கள் கடைசியிலே சொன்னேளே, அதுதான் இழுப்பு'' அப்பா உண்மையான பீதியுடன் கையைப் பிசைந்தார். ''சில ஏற்பாடுகள் ஒன்றுகூட வேண்டி யிருக்கு.''

''அப்படியானால் உம்முடைய உத்தேசம்தான் என்ன?''

''என் பெண்ணுக்குக் கலியாணம் பண்ணுவதாய்த்தான் உத்தேசம்.''

மாமி ஆச்சரியத்துடன் தலைநிமிர்ந்தார். ஆனால் அப்பா முகத்தில் எவ்வித மாறுதலுமில்லை. அப்பா, இப்படித்தான் சில சமயங்களில், தானறியாமலே ஒரு ''விதூஷக்.''

' பிள்ளையை நிச்சயம் பண்ணி வெச்சிண்டால்—''

''ஏன், எங்களிடமிருந்தே வாங்கிப் பண்ணிவிட லாம்னா?''

அப்பாலின் விழிகள் விரிந்தன. மாமி சொன்னது அப்பாவுக்கு நிஜமாகவே யோசனையாய்ப் பட்டுவிட்ட தோன்னு எங்களுக்குப் பயமாப் போச்சு, ஏன் என்றால் அப்பா அப்படிச் சில சமயங்களில் இன்னதுதான் பண்ணுவார், பண்ணமாட்டார்னு நாங்களே அறிய முடியாது. அவருக்கு மேல் யோசனைக்கு இடம் கொடுக்கக் கூடாது என்றே அம்மா இடைமறித்து, ''எல்லாத்தையும் உத்தேசிச்சு ஆவணிதான் சௌகரியப்படும்'' என்றாள்.

மாமி முகம் விழுந்தது.

''என் மூத்த நாட்டுப் பெண் இந்தக் கலியாணம் நேர எப்படித் துடிதுடிச்சுண்டிருக்கா தெரியுமா?''

''இருக்க வேண்டியதுதானே? சிறிசுகள்.''

''இப்போ வரத்துக்கே ஒற்றைக் காலில் நின்னாள்,''

"அழைச்சிண்டு வந்திருக்கலாமே!"

"ரயில்காரனுக்குக் கொட்டியிறைக்கிறதுலே என்ன லாபம்? சுபகாரியத்துக்கு மூணு பேராய்க் கிளம்ப வேண்டாம்னுதான். ஆமா, இப்போ ரெண்டு பேராய் வந்தே ஒத்திப் போட்டாறது. சுபஸ்ய சீக்கிரம்—ஆச்சா ஆச்சான்னு நடந்துடணும்..."

நாங்கள் குற்றம் செய்தவர்களாய்த் தலைகவிழ்ந்தோம். நாங்கள் "பெஞ்சு மேல்" நின்றது கண்டு மாமி முகம் சற்று இளகிற்று.

"சரிதான், அவள்தான் ஆசைப்பட்றாளே நான் தங்கிட்டு அவள் வரட்டும்னு விடறதுக்கும் இல்லை. ஏழு பூரா ரொம்பி யாச்சு."

"ஆ!"

"வெட்கம் கெட்டு முகூர்த்தத்துக்குத் துடியா ஏன் நிக்கறேன்னு இப்போ புரிஞ்சுதா? ஆவணியில் நீங்கள் உங்கள் மீனாக்ஷி கலியாணத்தை நடத்தறப்போ, அகஸ் தியர் விந்திய மலைக்குப் போயிட்டாப்போல, அவள் பிள்ளைப் பேறுக்குப் பிறந்த வீட்டுக்குப் போயிடுவாள். மனசையெல்லாம் இங்கே விட்டு விட்டு. மாதமும் அவளுக்கு அப்போத்தான்—"மாமி குரல் அதன் மேல் பட்டு விரிச்சாப் போல் தனக்குத்தானே அடங்கிப் போயிற்று. "இத்தனை நாள் கழிச்சு இப்போத்தான் தரிச்சிருக்கு. ஏற்கனவே சற்றே பூஞ்சை—"

பாய் நடுவே பொம்மை யானைத் தலையில் சொருகிக் கனிந்து கொண்டிருக்கும் ஊதுவத்திப் புகையுடன் மாமி யின் சொற்கள் இழைந்து போயின.

என் கூந்தலில் பதிந்த பந்துச் சரத்தில் மல்லி மலர்ந்து மணம் கம்மென்று கூடம் முழுதும் எழுந்தது: குத்து விளக்கை விட்டில் வட்டமிட்டது. பட்டாபிஷேகப்

படத்திலிருந்து ஸீதையின் அபயகரமும் கண்களும் கருணை சொரிந்தன. மன்னி, உன் பேர் ஸீதையோ? அப்படி நினைத்ததுமே எனக்கு நெற்றியில் வேர்வை முத்திட்டுக் குளிர்ந்தது.

சமையல் அறையில் சாமான் ஏதோ உருண்டது.

''ஹூம்—'' தன்மேல் கவிந்த யோசனைகளைக் கலைக்கத் தலையை உதறிக்கொண்டு மாமி எழுந்தார். பெரிய சரீரம். தரையில் கையை முன்னால் ஊன்றிக் கொண்டுதான் எழ முடிகிறது. எல்லோரும் எழுந்து நிற்கிறோம்.

''நம் இஷ்டத்தில் என்ன இருக்கு? இதிலேயே பாருங்கள். நான் என்னவோ நினைச்சுண்டு வந்தேன். என் யத்தனம் என்ன பண்ண முடிகிறது? காலமே இப்போ எப்படியிருக்குன்னா, அப்பப்போ அது அதுன்னு உலகத்திலே எல்லாத்துக்குமே சமாதானமடைஞ்சுபோக வேண்டியிருக்கு. டே சம்பத், எழுந்திரு. ஆவணியில் தான் கலியாணமாம். மாமி, குங்குமம் கொடுங்கோ. பெண்ணே, நமஸ்காரம் பண்றையா? சரி, பண்ணு; சமத்தாயிரு. பயப்படாதே, நான் காலத்தோடு ஓட்டிப் போற மாமியார்தான். கிறிசுகளைப் பிரிச்சு வெக்கறதில் எங்களுக்கென்ன லாபம்? எல்லாம் ஆவணி வரைக்கும் தான், பொறுத்துக்கொள்!''

நள்ளிரவில். தூக்கத்தில்—(அல்ல விழிப்பா?) அரை மயக்கத்தில் திடுக்கென விழித்துக்கொண்டேன். செவியருகே, ரகஸ்யமாய் ஏதோ கீதம் ஒலித்து, நான் விழித்த தருணமே அதுவும் மறைந்தது. அது அப்படி ''திடுதிப்''பென நின்றதுதானோ எனக்கு விழிப்பு வந்துவிட்டது. அதன் இன்ப அயட்டல் விண் விண் எனத்தெறித்து இதயம் நொந்தது, அறையில் சூழ்ந்த

கும்மிருட்டில், அதன் இசைக் கோடுகளின் ஸன்னமான ஜ்வாலைகள் சற்று குரூரமான அழகுடன் ஒளிர்ந்து நெளிந்து ஒன்றுடனொன்று நெய்த கோலக் கூட்டினின்று எண்ணெய்க் குளியல் உலர்ந்து பிசுபிசுவென அடர்ந்து வங்கியிட்டு லேசான பொன்னிறத்தில் பொங்கிய கூந்தலலைகள் நடுவே ஒரு முகக்கோடு விளிம்பு கட்டிக் கொண்டு உருவாகி மிளிர்ந்தது...அட, நான் அவரை நினைக்க முயன்றால், இவள் எங்கு வந்தாள்?

என் உள்ளுணர்வில் நான் கேட்ட இசையிலேயே உருவாகி, அதில் தன்னை மறந்த தவத்தில் கண்கள் மூடியிருந்தன. வான்முகட்டில் இறங்கிய மழை மேகங்கள் போல் கன்னங்களின் மேல் தாழ்ந்த இமைகளின் அடிப் பாரத்திலிருந்துதான் உள் உறங்கும் விழிகளின் தன்மையை ஒருவாறு யூகிக்க முடிந்தது. நீண்ட ரப்பை மயிர்கள் நுனி சுருண்டு, நட்ட அரிவாள்கள் போல் கன்னச்சரிவில் தவழ்ந்தன.

என் விழிகளைக் கசக்கிக் கொண்டேன். சீனாப் பொம்மை போல் வழுவழுத்த கன்னங்களின் பனி வெளுப்பு, அதைச் சூழ்ந்த ரோஜாத் திட்டுடன், இமைத்திரையை மெத்தென்று அடைத்துக்கொண்டது.

தந்தி நாதம் மறுபடியும் செவியோரம் ஒதுங்குகையில், புலி நகங்கள் தொண்டையில் பிராண்டின.

யார் நீ அலோகி?

ஆனியின் பொன்னான வெய்யிலில் மனம் உருகித் தவிக்கின்றது. போனவர் கடிதம் போடுவாரோ? அல்லது போடவே மாட்டார்களோ?

என்னைப் பார்த்துப் போனவர் மன்னியிடம் என்ன சொன்னாரோ?

"அந்தப் பெண் வாயைக்கூடத் திறக்கவில்லை. திறக்க விட்டால்தானே? அந்தப் பிராம்மணன்தான் தாய்க் கோழி மாதிரி குறுக்கே விழுந்து தடுக்கிறானே!"

மன்னி என்ன சொன்னாளோ?

"பெண் பாடாட்டாப் போறது. அத்தை, பேசு வாளான்னாவது தெரிஞ்சுக்க வேண்டாமா?"

"அப்படியே மூடிவெச்சு ஆனாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை, பிராம்மணன் பலே கெட்டிக்காரன், ஆவணியில் தான் பண்ணுவானாம். கேட்டையோ? விட்டுத் தள்ளு."

இந்த மானஸப் பேச்சு கேட்டதுமே எனக்குப் பகீரென்றது.

விட்டுத் தள்ளா?

வயதில் மணமாகாத சிநேகிதிகள் எனக்கு இருக் கிறார்கள். கலியாணம் ஆகாதா ஆகாதா எனக் காத் திருந்து காத்திருந்து ஆவல் இற்றுப் போய், கடைசியில், யார் வந்தாலும் சரி—வாழ்வு தந்தால்போதும் எனும் ஏக்கத்தில் வயதிலேயே வதங்கிவிடும் கதி எனக்கு நேராமல் இருக்கணுமே!

பெண்ணாய்ப் பிறந்தவள் சொந்த வீட்டுக்காரன் மாதிரி. சொந்த வீட்டுக்காரனுக்கு வீடு பிடித்ததோ பிடிக்கவில்லையோ. அவன் வீடு ஒரு வீடுதான். குடி யிருப்போருக்கு எந்த வீடு பிடித்ததோ, அதுதான் கணக்கு.

நியாயமும் அதுதானே?

ஆனால் மன்னி என்ன சொன்னாளோ?

ஒரு வாரம் ஆனபின் "கலியாணத்துக்கு வேண்டிய மேல் ஏற்பாடுகளைக் கவனிக்கலாம்" என்று பிள்ளை வீட்டார் தோரணை குறையாமல், கடிதத்தில் சம்மதம் வந்த பின்தான் தெரிந்தது.

மன்னி மனம் நல்ல மனம்தான்.

உள்ளபடி மன்னி சொல் எவ்வரை சென்றதோ அறியேன். ஆனால் என் இஷ்டப் பிரதிஷ்டையில் அவள் ஏகபோகம் செலுத்தினவளாய்த்தான் பட்டாள்.

இந்த ஆடிமுட்டம் நெஞ்சிலும் புகுந்து கவிகின்றது, இந்த மப்பு ஒன்று. மழையாவது விட்டுப் பெய்யணும். அல்லது வெய்யிலுக்காவது வழி விடணும். இரண்டும் இல்லை. கவலை விட்டவர்களுக்குத்தான் மந்தாரம் மனோகரம். என் நிலையில் உள்ளவளுக்கு மனம் புழுங்கிப் பிட்டாய்ப் பிசையும் வேதனைதான்.

வர வர, இந்த அப்பா ஏன் இப்படி இருக்காரோ? அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அறுபது நாழியும் மோதல், ஏற்கெனவே எட்டுப் பொருத்தம். இப்போ கேட்கவே வேண்டாம்.

"இந்தக் கலியாணத்துக்குன்னு நீங்கள் இந்தத் துரும்பை இந்தப் பக்கம் நகத்தினேள்னு நெஞ்சைத் தொட்டுண்டு சொல்ல முடியுமா? பெண்ணுக்கு இந்த வருஷம் குருபலன் வருமான்னு சாஸ்திரத்துக்காவது ஜோஸ்யரைச் சந்திச்சுக் கேட்டிருப்பேளா? ஒரு தடவை விரல் மடக்குங்கள்—"

அப்பா "பின்னி" கறுப்பு. பெட்ஷீட்டில் "ஸாலிடேர்" விளையாடிக் கொண்டிருக்கிறார்.

"எட்டுப் பெண்ணைப் பெற்று ஜாதகக் கட்டைத் தூக்கிண்டு, ஊர் ஊரா அலைஞ்சு, வீடுவீடா ஏறி, முட்டி

விட்டுப் போச்சா? நமக்கு இருப்பது ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு—''

அப்பா, சீட்டின் மேல் வைத்த கண் மாறாமலே, 'அதுவும் பொண்ணு—''

''அது சரி, சொல்லமாட்டேளோ? சரி, அதுக்கு நீங்கள் பண்ணினது என்ன தட்டுக் கெட்டுப் போச்சு? எதுக்கும் எல்லாத்துக்கும் தலையில் அக்ஷதையைப் போட்டுண்டு நானல்லவோ கிளம்ப வேண்டியிருக்கு! எத்தனை நாளைக்கு உங்கள் ஆட்டம் இப்படியே செல்லும்னு நினைச்சுண்டி ருக்கேள்? எத்தனை பேர் என்னைக் கேக்கறா தெரியுமா?— ''ஏண்டி முகூர்த்தத்தைக் குறிச்சுக்கூட எழுதிட்டேளே. உங்காத்து மாமா சும்மா உக்காந்திண்டிருக்காரே! இந்த ரீதியிலே ஐப்பசியிலாவது நடக்குமா? இல்லை, தைக்குத் தள்ளிண்டு போயிடுவேளா?''ன்னு!''

அப்பா சுவாரஸ்யமாய் சீட்டை மாற்றி வைக்கிறார். அப்பா, உங்களைக் கரிக்கிறேன். என்னதான் ஆண்களுக்கு ஆயிரம் நாங்கள் அடங்கினவர்கள் ஆனாலும் எங்களுக்குரிய மரியாதை எங்களுக்குக் கிடையாதா என்ன?

''உண்மையைச் சொல்லுங்கள், கலியாணத்துக்குப் பணம் கொடுக்கறவன் கொடுக்கப்போறானா இல்லையா? இல்லை, நீங்கள் வாங்கி இட்லியும் சட்னியும் சொஜ்ஜுமாவே கரைச்சிட்டு நிக்கறேளா?''

ஊஹூம், அப்பா அசைஞ்சு கொடுக்கக் காணோம்.

பால் தீய்ந்த நாற்றம் திடீரென மூக்கைப் பொசுக்கு கிறது.

தலையில் அடித்துக்கொண்டு வைதவண்ணம் அம்மா உள்ளே ஓடுகிறாள்.

கலியாணம் விசாரிக்க மாமிகள் வருகின்றனர்,

"'இந்த நாளில் எங்களது எல்லாம் எங்களுக்கு மேல் மாமியாய், குதிர் குதிராய் நிக்கறத்துக்குப் பாலாவுக்கு இவ்வளவு சுருக்கக் கூடினது அவள் செய்த புண்ணியம்தான். ஆனால் ஒண்ணு—நான் சொல்றேன்னு நினைச்சுக்காதே, அகிலா! நிச்சயம் பண்ணியாச்சுன்னு மீசையை முறுக்கறத்துக்கு இல்லை. கலைக்கிற மந்திரிகள் எங்கேயும் இருக்கா. கழுத்தில் தாலி ஏர்ற வரைக்கும் எதுவுமே நிச்சயமில்லை. அத்தனை நாள்வரைக்கும் அவாளுக்கு ஏன் விட்டுக் கொடுக்கணும்? நீங்கள் பார்த்திருக்கிறதை விடக் கிளியாய்ப் பெண்ணை வெச்சிண்டிருக்கேன். குயிலாய்ப் பாடுவாள். எல்லாம் ரெடி. நாளைக்கே பண்ணிடலாம். அந்தப் பெண்ணைப் பத்தி உங்களுக்கென்ன கவலை? எவனாவது கட்டறான். முன்னே பின்னே — அவ்வளவுதானே?' அப்படீம்பா."

என் வயிற்றில் புளியைக் கரைக்கிறது.

"ஆமா மாமி, பாட்டி சொல்றது வாஸ்தவம்தான். கேவலம் அம்பது நூறிலே கடைசி நிமிஷத்தில் எத்தனையோ சம்பந்தம் பிரண்டு போயிருக்கு. தாரைவார்த்துக் கொடுத்த பிறகு தாலி கட்டற நேரத்துக்குள்ளே தகராறு வந்துடுத்தாம். கேஸ் கோர்ட்டு வரைக்கும் போச்சாம்."

"நீங்கள் சொல்றது எனக்குப் புரிஞ்சு நான் என்ன பண்றது? யாருக்கோ கலியாணம்னு இவரைப் பத்திரிகை வெச்சு அழைக்கணும்போல் பிராம்மணன் ஹாய்யா இருக்காரே!"

"பாலா தலையில் என்ன எழுதியிருக்கோ! ஒண்ணு நிச்சயம். ஒருவர் தாலியை இன்னொருத்தன் கட்ட முடியாது."

இது எனக்கு ஆறுதலா அங்கலாய்ப்பா? ஈசுவரா, ஒண்ணுமே புரியல்லியே!

அப்பா என்னவோ சீட்டாடிக்கொண்டு எதிர்வீட்டுத் திண்ணையில் அரட்டையடித்துக் கொண்டு, புகையிலையைப் பொடியாய் நறுக்கிக்கொண்டு, அல்லது வாசலில் இலை பொறுக்கவந்த பசுமாட்டின் கழுத்தைச் சொறிந்து கொடுத்துக்கொண்டு, கொல்லையில் பவழமல்லி பக்கத்தில் கிளைத்திருக்கும் கீரையைக் கிள்ளி அதன் நரம்பு பார்த்துக் கொண்டுதானிருக்கிறார்.

ஆனால் எப்படியோ தெரியவில்லை. திருடன் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனதுபோல் சாமான்கள் சேர்ந்து கொண்டிருக்கின்றன. ஏற்பாடுகள் கண்ணெதிரில் வளர்வது தெரியாமலே படிப்படியாய் நடந்து கொண்டிருக்கின்றன. கட்டை வண்டியில் மூட்டைகள், மூட்டை மூட்டையாய் இறங்குகின்றன. கொல்லைப்புறத்தில் கோட்டையடுப்புக் காக அகழ் எடுத்தாகிறது. தட்டான் திருட்டுத்தனமாய் வந்துபோகிறான். மாயவரம் வேணுகோபால் பிள்ளை, குழலை அக்குளில் இடுக்கிய படியே, கூழைக் கும்பிடு போட்டுத் தாம்பூலம் பெற்றுக்கொள்கிறான். பூக்காரன் அச்சாரம் வாங்கிப் போயாச்சு. பந்தலின் அடைப்பில் வாசல் திண்ணை திடீரென இருள்கின்றது. இந்த இருள் எவ்வளவு இன்பமாயிருக்கின்றது!

உக்கிராண உள்ளில் வாழைப் பழ வாசனை தேங்கிப் போச்சு. சந்தனச் சேறு கூடத்தில் இப்பவே கொட்டியிறைய ஆரம்பிச்சாச்சு.

பெண்களைப் போல், வாய் ஓயாமல் அரற்றாமல், காரியங்களை அவையவை வழியில் இயங்க வைத்து அவை

களைத் தாமே நிறையக் காண்பது ஆண்களுக்கே உரிய வரம் என்று நினைக்கிறேன். "எல்லாம் எங்களால்தான்" என்று கத்திக் கத்தி நாங்கள் காணும் வாய் வெற்றிக்கு அவர்கள் காட்டும் நேர்த்தியான மௌனத்தை மழுங்குணி மாங்கட்டைத்தனம் என்று ஏசி, நாங்கள் எங்கள் ஆத்தி ரத்தைத் தீர்க்கப் பார்க்கிறோம்.

அப்பா, இப்போ உங்களைப் பார்க்க எனக்கு எவ்வளவு ஆசையாயிருக்கு தெரியுமா?

இத்தனை சந்தடியிடையே அப்பா ஒரு தரம் பட்டணம் போயும் வருகிறார்.

"அப்பா, மன்னியைக் கண்டேளா' எப்படி யிருக்கி றாள்?"

"மன்னியா அது யாருடா மன்னி? கலியாணத்துக்கு முன் னாலேயே கண்டாகிற உறவு?"

அம்மா, பருப்புத் தேங்காய்க்கு பாகைக் கிளறிக் கொண் டே, "ஆமாம், இப்பவே அழைச்சுப் பார்த்துப் பழக்கிக்க வேண்டியதுதான். சிலருக்கு அக்கான்னு கூப்பிட்டால் பிடிக் காது. நாலு பேருக்கு நடுவே பிறந்து வளர்ந்திருந்தால்தானே தெரியப் போகிறது? போன இடத்தில் கர்ப்பிணியாய் ஒரு பெண்ணையும் நீங்கள் பார்க்கல்லியா?"

"சரிதான், அங்கே ரெண்டு மூணு பேர் பிள்ளையார் வேஷம் போட்டிண்டிருந்தா. யாரென்று நான் கண்டேன்? இதென்ன பிள்ளையாண்டிருக்கிற "சீஸனா?" விநாயக சதுர்த்தி வரதே அதனாலா?"

அம்மாவுக்குக் கன்னம் கதுப்பாடுகிறது.

"பாலா, போயும் போயும் உங்கப்பாக்கிட்டே வாயைக் கொடுக்கிறையே! ஏதாவது கேட்டால் ஏதாவது ஒரு பதில்— பஞஷன் ரத்தத்தில் ஊறிப்போச்சு!"

"வண்டிச் சப்தம் கேட்கிறது? எதிர்கொண்டு அழைக்கணுமே. சமயத்தில் மேளக்காரன் எங்கே போயிட்டான், டே வாஞ்சி, ஓடடா வெற்றிலைத் தட்டைத் தூக்கிண்டு, சந்தனப் பேலாவை மறந்துட்டையே! மணி அய்யர். என்ன இப்பத் தான் சாவகாசமாய் இலையைப் பாளம் போடறேள்?"

"ஒண்ணும் கவலைப்படாதேங்கோ. அண்ணா! இது நாளைக் காலைக்கு, டிபன் பந்தி அங்கே நடந்திண்டிருக்கு."

கலியாண கோஷம் திடீரென அலைபுரண்டு வந்து செவி மோதுகையில், தன்னுடன் என்னை அடித்துக் கொண்டு போகையில், என்னைப் பம்பரம் சுற்றிவிட்டாற்போல். நானே நினைவின் அரைவசத்தில்தான் இருக்கிறேன்.

எண்ணின எண்ணங்கள் எல்லாமே பலியாது. காத்திருந்த தவம் மாத்திரம் பலித்த நன்னாள் நிஜமாகவே வந்து விட்டதா? என்னைச் சுற்றி நேர்வனவெல்லாம் நிஜந்தானா? ஜலத்துள் அமிழ்ந்தவளுக்குக் கேட்கும் கரை நிகழ்ச்சிபோல், பேச்சுகள் இரைச்சலினின்று அப்பப்போ பிரிந்து வந்து அரைக் காதடைப்பில் கேட்டு, திரும்பவும் இரைச்சலிலேயே கலந்து விடுகின்றன.

இஷ்டம் இஷ்டப்படி நடந்தாலும், அப்படி நடந்து விட்டதை நம்ப முடியாமல் அதுவே ஒரு சிறு பயமாகவே இருக்கிறது,

கண்ணைக் கசக்கிக் கொள்கிறேன். என் மாமியாரின் தேஜஸ் கண் கூசுகிறது. ஒன்று நன்கு தெரிகின்றது; அவர்கள் வீட்டில் எத்தனை பேராயினும் சரி. அத்தனை பேரும் அவரைச் சுற்றி இயங்கும் கிரஹங்கள் தான்.

"என்ன பெண்ணே, முழிக்கறே? வா, வா, எல்லோரும் உன்னைப் பார்க்கத்தானே வந்திருக்கோம். இன்னிக்கு எல்லோருக்கும் ஒரு நமஸ்காரம் போட்டால் போதும்,

நாளைக்கு முகூர்த்தத்துக்குப் பின்தான் ஆளுக்குஆள் முதுகை ஒடிக்கிறது இருக்கவே இருக்கே! எது கிழக்கு? புது இடம் வந்தாலே திக்குத் தப்பிப் போறது. இவர்தான் உன் மாமனார். இரு, சேர்ந்து நிற்கிறோம். எங்களுக்கு ஒண்ணு தனியாப் போடு. இவள் உன் நாத்தனார்மார்கள். எல்லோரும் உனக்குப் பெரியவாள்தான்—இவர்தான்—''

என்னையறியாமலே மன்னி முகம் தேடுகிறேன். சபலம் அடித்துக் கொள்கிறது, ஒரு வேளை—கடைசி நிமிஷத்தில்—ப்ளான் மாறி—மன்னியும்—!

''இதுதான் உன் மச்சினன்,''

ஒற்றைநாடி தேகம் ஜியோமிதி வளைவுபோல் துளிக்கூட பிசகாது இறங்கிய நெற்றிக்கோடு தன் பாதத்தில் கிளைப் பிரிந்த அடர்ந்த புருவங்களின் கீழிருந்து என் மேல் தங்கியும் என்னைப் பாராத விழிகள். நெற்றிப் பொட்டில் அடைநரை,

அந்த நிமிஷத்தின் அவசரத்தில், மனதின் பரபரப்பில் என்னைச் சூழ்ந்த இரைச்சலில் அதற்குமேல் பதிவாகவில்லை. இவர் பக்கலில் என் அரைத் தூக்கத்தில் (அல்ல விழிப்பா?) கற்பனையாய்த் தோன்றிய முகத்தைப் பொருத்திப் பார்த்துக் கொள்கிறேன். இவ்விருவரில் எவர் நிஜம், எவர் கனவு? கனவுக்கும் உண்மைக்கும் வித்தியாசம் என்ன? இந்தக் கேள்விகளே ஏன்? இவைகளால் எனக்கென்ன பயன்? ஆனால் வெல்லப்பாகு போல் பிசுக்காய், நெஞ்சில் சுற்றிச் சிக்காகின்றன,

எதிர்க்சாரியில் இரண்டு வீடு தாண்டி சம்பந்திகளை இறக்கியிருக்கின்றது?

நேற்றைய அலுவல்கள் ஓயவே மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகிவிட்டது, ஆச்சு, இன்னும் இரண்டு மணி நேர

இடைவேளைதான். மறுபடியும் காரியங்கள் ஆரம்பித்து விடும். ஆனால் எனக்குத் தூக்கம் வரவில்லை. தலையணை யில் தலைசாய மறுத்துவிட்டது. இருப்புக் கொள்ளவில்லை. மொட்டை மாடிக்கு வருகிறேன். என்னையறியாமலே பார்வை சம்பந்திகளின் விடுதிப்பக்கம் செல்கிறது, அங்கும் ஓர் உருவம் நிற்கின்றது, என்னைப் போலவே அங்கும் யாருக்கோ பாவம் தூக்கம் இல்லை.

ஒற்றை நாடி,

இருந்தாற் போலிருந்து அதனின்று இரு கிளைகள் பிரி கின்றன. மாதா கோவில் ஸ்தூபி உச்சியில் சிலுவைக்குறி போல்.

ஊரோசை அடங்கிய அந்நேரத்தில். பட்டை வீறும் நிலவில் ஆகாயத்தையே தழுவ முயலும் அளவாய் ஆகிவிட்ட அவ்வுருவை, வாழ்வின் ஏக்கச் சின்னமாய்க் காண்கையில், உடல் புல்லரிக்கிறது, தொண்டையை அடைக்கிறது.

மன்னி, நீ கொடுத்து வைத்தவள். இதுவரைகூட அவரால் உன்னைப் பிரிந்திருக்க முடியவில்லை.

ஒன்று புரிகிறது. உலகத்தில் யாவருமே, இருவர் ஒருமைக்கு! அவ்விருவரும் உள்படத்தான், ஒருவருக் கொருவர் குறுக்கே நிற்பவர்தான்.

பிறகே, முகூர்த்தத்தின்போது கூட அவர் கண்ணில் பட வில்லை. சங்கோசமோ, கபாலத்தில் இரைச்சல் ஆகவில்லை யோ. அல்ல வேறு என்ன நினைப்போ!

பெண்ணும் பிள்ளையும் மஞ்சள் நனைத்த துணியுடன் பிள்ளை விடுதிக்குச் சென்றபோது மாமியாரும் இல்லை.

"அம்மாவும் அண்ணாவும் ஊருக்குக் கிளம்பிப் போயிட்டா. அண்ணாவுக்கு அவசரமா ஆபீசுக்குப் போகணுமாம், வாசற் கதவைப் பூட்டிண்டல்லவா வந்திருக்கோம்! நாங்கள் இருக்கிற இடம் கொஞ்சம் ஒதுக்கு. கதவை உடைச்சிண்டு பட்டப் பகலில் ஆள் உள்ளே புகுந்தாலும் பக்கத்தில் கேட்பாரில்லை. கலியாணம் முடிஞ்சு திரும்பி வரவாளை வாவென்று அழைக்கக் கூட அங்கே ஆள் இல்லையே! அதனால் அம்மாவும் போயிட்டாள்."

சேஷ ஹோமம் முடிந்த வீடு என்பது சரியாயிருக்கிறது. போட்டது போட்டபடி, கண்டது கண்டபடி, குப்பையோடு குணமும் கொட்டிவாரி இறைஞ்சு கிடக்கு. ஒரு பக்கம் புஸு புஸுன்னு அவிழ்த்துப் போட்டுக் குவிஞ்சுக் கிடக்கும் புடவைகள், கூடம் பூரா. அக்ஷதையும் பொரியும், பூவும்,

என் சாமான்களுடன் சிதறிய என் மனதையும் சேர்த்துக் கட்டுகிறேன். ஆமாம். எனக்கு இனி இங்கு என்ன வேலை?

நன்றி கெட்டவளே!

அதற்கென்ன செய்வது? பிறந்த வீட்டு நன்றியை இனிக் கொண்டாடிக் கொண்டிருந்தால் ,புகுந்த வீட்டுக்கு விசுவாசம் எப்படிச் சரியாய்ச் செலுத்துவது?

வண்டியேறிய பிறகுகூட என் வீட்டுக்கு நான் போகும் ஆவல் எஞ்சினுக்கு முன்னால் பாய்ந்து செல்கிறது,

"தோ பாருடீ!"

வயலில் ஒரு யானை மேய்ந்து கொண்டிருக்கிறது. ரயிலைக் கண்டு தும்பிக்கையை உயரத் தூக்கிப் பிளிறுகின்றது.

இவர்கள் யானை பார்த்ததில்லை; நான் பட்டணம் பார்த்ததில்லை.

வண்டியை விட்டிறங்குகிறோம். ஆனால் வீடு வெறிச் சென்றிருக்கிறது. வாசலில் கோலமில்லை. செம்மண் இல்லை. ஆரத்தியுடன் காத்திருப்பார் யாருமில்லை. உள்ளே போவதா? வாசலிலேயே நிற்பதா? ஒன்றுமே புரியவில்லை.

"அம்மா!"

அம்மா உள்ளிருந்து வருகிறார். இருகைகளிலும் சற்று நீள வாகில் ஒரு மூட்டையை ஏந்தியபடி நேரே என்னிடம் வந்து அதைக் கொடுக்கிறார், என் திகைப்பில் என்னென்று புரியாமலே வாங்கிக் கொள்கிறேன். சுற்றிய துணியிலிருந்து மூஷ்டித்த இரு பொம்மைக் கைகள் நெளிகின்றன.

அம்மா கன்னங்களில் கண்ணீர் வழிந்து கொண்டேயிருக் கின்றது. உதடுகள் நடுங்குகின்றன.

"மன்னீ!"

என் பக்கத்திலிருந்து கிளம்பிய வீறல் என் கணவருடைய குரலாகவே தெரியவில்லை. அவர் வாயினின்று ஒரு பக்ஷி பறந்து போன மாதிரி எனக்குத் தோன்றிற்று.

பிறகே அவர் பாடிக் கேட்டதாகவே எனக்கு ஞாபக மில்லை.

# பிராயச்சித்தம்

உச்சி வெயில், அவள் நடுக்கூடத்தில் படுத்திருந்தாள். வாசற்புறம் மூங்கில் கவான் மேல் படர்ந்த கொடியின் இலை சந்துகளிலும் அங்கிருந்து நேர-அதுதான் மாம்பலம் வீடுகளுக்கே ஓர் அந்தரங்கம், தனிமை கிடையாதே, ரயில் வண்டி மாதிரிதானே-கொல்லைப்புறத்தில் யானைக் காதுகள் போல் ஆடும் வாழையிலைகளின் பச்சையிலும் கானல் கண கணத்தது,

கொல்லை ரேழியில் இரண்டு அம்மாளும் காலை நீட்டி விட்டார்கள். அங்கு வாழை வழி தென்னை வழி வடி கட்டி வரும் தென்றல் 'ஜில்'லாகி மூடிய இமைகளின் உட்புறத்தின் எரிச்சலையும் நெற்றி வேர்வையையும் ஒற்றி எடுத்தது.

மாதம் முதிர முதிர, தூக்கம் அறவே கெட்டுப் போச்சு, இரவு முழுதும் படுக்கையில் புரண்டு புரண்டு விடி நேரத்துக்கு மிளகாயைத் தீற்றினாற்போல் இந்தக் கண்ணெரிச்சல்தான் மிச்சம். பெற்றவள் என்னதான் தனக்கு வாரிசாய்ச் சமைத்து உழைத்தாலும், புக்ககத்தில் இருக்கையில் ஓர் எச்சிலாவது இடாமல், தேய்த்த பாத்திரங்களைக் கழுவி எடுத்து, வடித்து அடுக்காமல் இருக்க முடியுமா?

''உடம்பை நன்றாய் வளைத்துக் குனிந்து நிமிரு. மாமியார் சொல்றது இப்போ வேம்பாக இருந்தாலும் இடுப்புவலி எடுக்கறப்போ கிழவி நல்லதுக்குத்தான் சொன்னாள்னு மனசு ஒரு தரமேனும் நினைக்காமல் போகாது, நினைக்காவிட்டால் அது மனமில்லை,''

ஐயே, இந்தப் பெரியவர்களின் பெரிய தனமே! சிங்காரச் சொல்லே!

"ஏற்கெனவே பட்டது போதும், இந்தத் தடவையும் கிராமத்தில் மருத்துவச்சியிடம் மாட்டிக்கொள்ள வேண்டாம். பிரசவம் இங்கேயே நடக்கட்டும்" என்று தனக்கு துணைக்கும் தங்களுக்கு வேலைக்கும் பங்கமில்லாமல், அம்மாவை இங்கு வரவழைத்து விட்டார்கள்.

ஆனால் யார் வந்தால் என்ன? யார் ஆதரவிலும் ஆறுதல் காணும் நிலையை அவள் உதரம் கடந்தாகிவிட்டது. அதன் உலகத்துள் அது அவளை விழுங்கிக் கொண்டிருந்தது, நாள் ஆகஆகப் பெரிதாகிக்கொண்டே வரும் வயிற்றின் கனத்தில் கீழ் அமிழ்ந்து கொண்டேயிருந்தாள். மற்றெது பற்றியும் அக்கறையிழந்தாள்.

இல்லாவிடில், அவளால் ஒரு நிமிஷம் படுத்த இடத்தில் இப்படிக் கிழித்த நாராய்க் கிடக்க முடியுமா? எதையேனும் தட்டிப் பெருக்கி, எடுத்து, அடுக்கிக் கொண்டிருக்க மாட்டாளா?

"சும்மா துடைச்சிண்டேயிருந்தால், துடைச்சிண்டே போயிடும், துடைக்காதே. உன் சுத்தத்துக்கும் ஒரு அத்து உண்டு" என்று மாமியார் எரிந்து விழுவார்.

"நீ கறுப்பு நாயை வெள்ளை நாயாக்கச் செலவழிக்கும் புளிக்கும் சோப்புக்கும் ஒரு புளியந்தோப்பும் பாக்டரியும்தான் கட்டுப்படியாகும். ஆனால் உன் சுகத்துக்கு ஈடுகொடுக்கும் அந்தஸ்து எனக்கு இல்லையே!" என்று அவள் கணவன் கேலி செய்வான். யார் என்ன வேணுமானாலும் சொல்லிக் கொண்டு போகட்டும் என்று இருந்தவளுக்கு, இப்போது எது எப்படி வேணுமானாலும் போகட்டும் என்ற நிலை வந்து விட்டது.

அவள் இப்போது வேண்டியதெல்லாம், இமை கொட்டினால் போதும், தன்னை மறந்த நித்திரையில் ஒரு நிமிடமேனும் தன்னை மறந்தால் அதுவே சுகம்.

பஞ்சணையில் தூக்கமில்லை. தூக்கமேதான் பஞ்சணை; மல்லிகைக் குவியலில் புதைவது போன்ற நித்திரையில் ஆழத்தில் அழுந்தும் இன்பக் குளுமை, வெள்ளை விழி மேட்டில் ஊசியால் கிறுக்கினாற் போன்று கிளைபிரிந்து தெறிக்கும் செந்நரம்புக் கொடிகள் தம் எரி குளிர்ந்து படிப்படியாய் அடங்கும் இரவு......

தூக்கம்தான் சுவர்க்கம்.

அரை மயக்கத்தில் விழிகள் செருகின.

வெயிலின் வெண்மையில் நேரமே உருகிக் கொண்டிருந்தது.

குடித்தனக்காரக் குழந்தைகள் மாடியில் ஓடியாடும் 'திடும் திடும்'.

அவள் கத்தக் கத்த, அதுகள் கீழே வந்து, பென்சிலிலும், கரிக் கட்டியிலும் சுவரில் கிறுக்கியிருக்கும் கோடுகள்.

சுவரில் படபடக்கும் ஷீட் காலண்டரில் தேதிகள்.

சமையலறையில் பூனை ஏதோ பண்டத்தை உருட்டும் ஒலி.

கொல்லை ரேழியிலிருந்து கிளம்பி விட்ட மாமியாரின் குறட்டை.

கிணற்றடியில் பிடிசுவர் மேல், தொட்டி ஜலம் காட்டும் நிழலாட்டம்.

கொலுப் பெட்டியடியில் எலிகள் ''கீச் கீச்'' சத்தம்.

கொடியில் புடவை.

உடலுக்கு நேர் காற்றில் மிதக்கும் மின்சார விளக்கு.

எல்லாம் தம்தம் தனித்தனி அடையாளங்கள் குலைந்து, ஒரே மொத்தாகாரமான உடைப்பின் பெருக்காய்த் தோன்றின. தன்னையழுத்தும் வயிறு கனம் தளர்ந்து, தன் கனமுமிழந்து, இறகு இலேசில் தான் மிதப்பது காற்றிலா தூக்கத்திலா?

இந்த நெகிழ்ச்சி நிலையில்தான் அந்தச் சத்தம் அவளை எட்டிற்று.

அது நேரிடையாய் வந்து அவள்மேல் மோதவில்லை. தான் உணர்ந்த இந்தப் பேருருகலின் தொப்புளிலிருந்து இழை நூற்றபடி வெளிவந்து கொண்டேயிருக்கும் ஒரு நுட்ப ஓசை. காற்று தன்னைத்தானே கடைந்துகொள்ளும் ஒரு சுழிப்பு, வெளியேறிய மூச்சு, திரும்ப உள்ளுக்கு வாங்கும் வழி பிசகி, மிரண்டு, திசை தப்பித் தவிப்பதுபோல் ஒரு ரீங்காரம் வீங்கிக்கொண்டே உள் வந்து கூட்டத்தில் கிறுக்கி . வட்ட மிட்டது.

இப்போதெல்லாம் தன்னை அடிக்கடி வருத்தும் வாந்திக்கும் குமட்டலுக்கும் முன்னறிவிப்பாய், கண்ணிருட்டலில் காதின் 'குப்'படைப்பென்று முதலில் நினைத்தாள்.

இல்லை, தன் வயிறுதான் விரிசல் காண்கிறதா?

தொப்புளைத் திருகிக்கொண்டு கிளம்பிய பயங்கரத்தில், மயக்கத்திலிருந்து வெடுக்கென விழித்துக் கொண்டாள்.

''ரொய்ஞ்ஞ்ஞ்—''

அவள் பயத்துடன் அவளைப் பிணைக்க மேலும், மேலும் அவள்மேல் விழும் கயிறுபோல் சத்தம் அவளைச் சுற்றி வளைத்தது. கண்களைக் கசக்கிக்கொண்டு முழு விழிப்பை அடையுமுன் அவளை விட்டகன்று வெளியேறி, எட்ட எட்ட ஓய்ந்து மறைந்தும் போயிற்று.

சே, என்னகோரமான கனவு! அல்லது நினைவா? உள் பலத்தை வருவித்துக்கொண்டு சோம்பலை உதறி, வெடுக்கென்று எழுந்து, சுறுசுறுப்பாய் அலமாரிச் சாமான்களைத் தட்டிக் கொட்டி அடுக்க ஆரம்பித்தாள்.

வெறும் நினைவேதானானாலும் அதன் அதிர்ச்சி வயிறு நொந்தது. அதிலேயே நினைப்பை ஓடாது தடுக்கக் காரியத்தில் முழு மனத்துடன் முனைந்து விட்டாள்.

சே, என்ன மனுஷனோ, கலைப்பதேதான் கருத்தாய் அது என்ன வீம்போ? இவர் க்ஷவர செட்டைத்தான் அதன் இடத்தில் வைத்திருக்கிறேனே, என் குங்குமம், சாந்து, பவுடர், சீப்பு, கண்ணாடி மூலையில் இவருக்கு என்ன வேலை? எல்லாத்தையும் தலைகுப்புறத் தள்ளி, கீழே சிந்தி, மசியைக் கொட்டி—இந்த அக்கிரமம் எங்கே அடுக்கும்? கேட்டால் அதற்குத் தனியா ஒரு கோணல் சிரிப்பு, "அதான் அடுக்காசுரி, நீ இருக்கியே!" என்று ஒரு கிண்டல்.

அம்மாவும் பிள்ளையும் தங்களுக்குள்ளே ஆயிரம் பரிமாறிக் கொள்கிறார்கள், அடுக்ினதைக் கலைக்காமல் ஒழுங்காய் வைக்கக்கூடாதா? 'வேஷ்டி விளிம்பைச் சேற்றில் தோய்த்துக்கொண்டு வராமல் இருக்கக் கூடாதா?' என்று பிள்ளையை நான் ஒரு வார்த்தை கேட்டு விடக்கூடாதாம். தூணில் கயிற்றை அணைந்து, அதில் மத்தை மாட்டித் தயிரைக் கடைந்துகொண்டே பொருமுகிறார்.

"ஆமாம், அவன் தங்க ஊசிதான், கண்ணைக் குத்திக்கத்தான் குத்திக்கணும் போ! வா வா, இந்தச் சுத்தத்தின் நேர்த்தியெல்லாம் கையில் ஒண்ணு ஏந்திண்டபின், இந்தக் கண்ணாலே, இந்தச் சதை வளர்ந்த கண்ணாலே பார்க்காமலா போகப் போறேன்! என்னை இன்னும் ரேழியில் தூக்கிப் போட்டு விடவில்லை. அதுக்குள்ளே, சந்து முனையில், பாசக் கயிறுடன் யமன் எனக்காகக் காத்துண்டும் இல்லை,"

"பாரேன், அழுகையா வரது, புஸ்தகங்கள் அத்தனையும் இப்பவே ஒரே மூச்சில் படிச்சு முடிச்சுடறாப் போல் தான் ஒரே தோசைக் கடை—"

சட்டெனக் கையில் புத்தகங்களை ஏந்தினபடி, அடுக்கலில் தடைப்பட்டு நின்றேன். அலமாரிக் கூரையில் சுவர்கள் முட்டு மூலையில் மண் கூடு கட்டியிருந்தது.

செவி ஆவி பறந்தது. கையில் என்ன கிடைத்ததென்று கூடப் பார்க்கவில்லை. அது கோணி ஊசியோ, கொண்டை ஊசியோ, நீள ஆணியோ, ஒடிசல் கம்பியோ—ஆத்திரத் துடன் சுரண்டி, ஒரு துண்டுக் காகிதத்துள் தள்ளி. வாசலுக்குக் கொண்டு போனாள். அளளுக்கென்றே காத்திருந்தாற் போல் எதிர்க் காற்று, திட்டாய்க் கிளம்பி, கைக் காகிதத்தைப் பிடுங்கி அவள் மேலேயே கேலியில் வீசி யிறைத்தது.

அருவருப்பில் உடல் குலுங்கிற்று. கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்றாள். விழியோரங்களில் கோபக் கண்ணீர் உறுத்திற்று. கோபம், அவமானம். அலுப்பு, யார் மேலும் எதன் மேலும் நியாயமற்ற, பயனற்ற சீற்றம் எல்லாம் ஒருங்காய் அவளை அழுத்தின.

இப்படிக் கையாலாகாமல் போய்விட்டேனென்று காற்றுக்குக்கூட எளக்காரமாய் இருக்கிறேன். நான் யாருக்குத்தான் மதிப்பு?

ஆனால் இந்தக் கீழ் வாடைக் காற்றுக்கு இன்று என்ன தான் குஷியோ? மேலும் மேலும் அவள் மேல் அலை மோதிற்று, துகில் உடலின் மேடு பள்ளங்களில், சிதறிய முகில்போல் ஒட்டிக் கொண்டது. கூந்தல் கலைந்து நெற்றி ஓரங்களிலிருந்து பிரிகள் தப்பி முகத்துள் மோதி அலைந்தன. அவைகளை ஒதுக்கக் கைகளைத் தூக்குமுன் காற்று மேலாக்கைத் தோளிலிருந்து பிடுங்கிற்று.

"யார் என்னைப் பற்றி என்ன வேணுமானாலும் நினைத்துக்கொள்ளுங்கள். எனக்கு யாரைப் பற்றியும் மதிப்பில்லை. எவர் ஆத்திரமும் என்னை ஒண்ணும் பண்ண முடியாது, தெரியுமா? என் இச்சையின் மிச்சம் தான் எல்லாம், தெரிஞ்சுதா? என் சீண்டலை உன்னைக் கொண்டவன்கூடத் தடுக்க முடியாது. தெரிஞ்சுதா? ஹெஹஹேஹ!" என்று கேலியாடிற்று.

தெருவில் ஒரு கோழி தன் குஞ்சுகள் புடை சூழச் சென்றது. இரை தேடலில் நொடிக்கு நொடி அதன் கழுத்து ஒயிலாய்க் குலுங்கிற்று. அலகு நாசூக்காய்க் குப்பையைக் கிளறிற்று.

காற்றின் அலைப்பில் ஒன்றிரண்டு குஞ்சுகள் உருண்டன. தாய் அலறி அவைகளை அணைக்கச் சிறகுகளை விரித்தபடி அதன் முன்னிரண்டடியிலிருந்து குலுங்கக் குலுங்க வேகமாக ஓடோடி வந்தது,

ஒரு நிமிடம் அந்தக் காட்சியில் தன்னை மறந்து நின்றாள். திடீரென்று அவளுக்குத் தோன்றிற்று. தாய்க் கோழியின் சிறகின் மேல் வெறித்த பார்வையை அங்கிருந்து பெயர்க்க முடியவில்லை என்று. உடல் இமை நேரத்தில் பாதி நேரம் அற்புதமான அமைதியில், சொட்டாய்த் துளும்பி நின்றது, அடுத்தாற்போலேயே புயல் புகுந்தது.

மேலே தண்டவாளம் விழுந்தாற் போன்று வலி, திடீரென்று விலாவை முறித்தது. நிலை வாசலின் மேல் சாய்ந்தபடியே சரிந்து குன்றி, இரு கைகளாலும் இடுப்பைப் பிடித்துக்கொண்டாள். உடல் இடுப்புக்கு மேல் இடுப்புப் பூட்டில் மத்துக் கடைந்தது. முகத்தில் வேர்வை கொப்புளித்தது.

"ரொய்ஞ்ஞ்ஞ்—"

எட்டு விமானங்கள் அணிவகுத்துப் பறந்தாற் போல், மறுபடியும் காதைப் பொளியும் அதே ரீங்காரம். வலியில் மலர்ந்த விழிகள், மேனோக்கி ஆகாயத்தில் விமானங்களைத் தேடின. ஆனால் அங்கு நீலம்தான் வெறிச்சிட்டுத் துலங்கிற்று,

மேலும் மேலும் அந்த வெண்கல நாதம் அவள்மேல் கூடு பின்னி அவளை மூடிற்று.

"அம்மா!"

தொண்டையில் அலறல் உருக்கூட்ட முழு வேகத்துடன் முயன்றதுதான் அறிவாள். உடனேயே நினைவு தப்பி விட்டது.

தும்பை வெள்ளை தரித்துப் பால் ஒழுகும் சிரிப்புடன் உருவங்கள் வளைய வருகின்றன. அவள் கை நாடியை ஒரு நர்ஸ் பற்றுகிறாள். ஒருத்தி ஒரு 'பேஸினை'த் தூக்கிக் கொண்டு வருகிறாள். அதனின்று ஆவி பறக்கிறது. இன்னொருத்தி, நீலக் காகிதத்துள் சுருட்டிய பஞ்சுடன் வருகிறாள்.

திடீரென ஒரு வீறல், பக்கத்தறையிலா, தான்தானா வலியின் மீறலில், தன் வலியா பிறர் வலியா, யார் வலி என்றுகூடக் கண்டுகொள்ள முடியவில்லை. இது பூமியின் வீறல், தன்னுள் நேர்ந்து கொண்டிருக்கும் பூகம்பம். இதில் நான் உயிரோடிருக்கிறேனா,செத்து விட்டேனா? செத்து விட்டால் எங்கிருக்கிறேன்! மறுபடியும் அதைத் திறந்த வாயி லிருந்து அவள் கூந்தலைப் பிடுங்கிக்கொண்டு "வ்றீச்"சென்று ஒரு புதுக் குரல் கிளம்பியது,

''இதோ' கண்ணைத் திறந்து பாரம்மா! ஆணாய்த் தான் பெத்துக்கிட்டே போ! தொடையிலே மச்சம் பாரு ரொம்ப அதிர்ஷ்டம்!'' அவள் குழந்தையைப் பார்க்கக்கூட வில்லை. குஞ்சுக் கைகளும் பஞ்சு வாயும் மார்பில் அழுந்தி யதுமே பரவசம் தாங்காது மூர்ச்சையாகி விட்டாள்.

இருவரும் ஒருவரையொருவர் முகம் காணாமலே ஒரு வரில் ஒருவர் கலந்து இருந்தோம். இருவர் பிரிவின் ஒரு மித்த உச்சரிப்பாய் நேர்ந்து விட்டேன்,

திடுக்கென விழித்துக் கொண்டாள். கால்மாட்டில் கட்டிலோடு கட்டிய தொட்டிலில் குழந்தை உறங்கிக் கொண் டிருந்தது.

செவியண்டை வந்து ஓதியது யார்? உடல் புல்லரித்தது, அச்சொற்கள் நெஞ்சின் அடி வேர்களில் ஓடி ஒளிந்து விளை யாடும் இன்பம் தாங்காது மார்பு மடை யுடைந்து திரும்பத் திரும்பப் பெருக்கெடுத்தது,

மறுநாள் காலையில்தான் அவள் கணவன் காப்பியுடன் வந்தான். அவன் வரும்போது அவள் குழந்தையை அணைத் துக் கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும் குழந்தையை அவனிடம் பெருமகிழ்ச்சியுடன் நீட்டினாள். அவள் கண்கள் ஒளி வீசின.

''இருவர் பிரிவின் ஒருமித்த உச்சரிப்பாய் நேர்ந்திருக்கும் நம் செல்வனைப் பாருங்கள்.

''ஏதேது, குழந்தைக்குக் கொசுராய்க் கவிதையும் பிறந்தி ருக்கிறாற் போலிருக்கிறது......!''

''ஏன், கையில்தான் வாங்குங்களேன்! தொட்டால் ஒட்டிக் கொள்ளுமா? அப்படியே ஒட்டிக் கொண்டாலும் வீட்டுக்குப் போய் ஸ்நானம் பண்ணினால் போகிறது!'' அவள் ஏந்தலில் குழந்தை கையையும் காலையும் முறித்து பெரி தாய்க் கோட்டுவாய் விட்டது. பால் மயக்கம்.

அவன் முகத்தில் இலேசாய் அருவருப்பின் ரேகை நெளிந்தது. புழு! புழு! இது வரும் என்று நினைத்தேனா? வரணும் என்று வேண்டினேனா? அவன் கண்கள் திகைப்பில் சலித்தன.

"நான் தொடும் வேளை வர இன்னும் நாள் இருக்கிறது. என்ன, இதற்கு வாய் இப்பவே உன்னைவிடப் பெரிதாகக் கிழியும் போலிருக்கிறதே...!"

"ஏன் உங்களுக்கு வாய் சின்னதோ? அந்தக் குடமிளகாய் மூக்கைப் பாருங்களேன். எல்லாம் உங்கள் அச்சுத்தான்!"

"பின்னென்ன, உன் மாதிரி ஜடாயுவாய் இருக்கணுமா?"

"என் மூக்குக்கென்ன?" தன் மூக்கை ஒரு தடவை இழுத்துப் பார்த்துக் கொண்டான். "மூக்குக்கு என்னைக் கொண்டிருந்தால் எல்லாம் நன்றாய்த்தான் இருக்கும்!"

"அப்போ இப்போ நன்றாயில்லையா?" அவன் முகம் விழுந்தது. தொடப் பிடிக்கவில்லை; ஆனால் தன் மூக்கை அவள் செய்யும் கேலி குழந்தையையும் தாக்குவது பொறுக்க வில்லை, அவன் நெஞ்சு நசிவலைக் கண்டு கொண்டுதானோ என்னவோ அவள் புன்னகை புரிந்தாள்.

"காக்கைக்கும்......"

"காக்கை யார்? எப்படியும் நிறம் உன்னைவிட நான் ஒரு மாற்று கூடத்தான்."

"இருந்துக்கோங்களேன்! அதுவும் என் பெருமைதான். எப்படியிருந்தால் என்ன? கறுப்போ, சிவப்போ நம்முடையது நமக்கென்று ஒண்ணு..." எனப் பெருமூச்செறிந்தாள்.

அவள் அப்படிச் சொன்னதும் அவன் முகத்தில் ரத்தம் குபுகுபுத்து முகம் செந்தழலாகியது. அவள் கையை அவன் கை பற்றியது, மூச்சுத் திணறிற்று!

"நான்...நான்...நீ...நீ சின்ன உசிர். பெரிய உசிர், இரண்டில் இப்போ நீதான் எனக்கு முக்கியம்."

நெஞ்சத்தின் தந்திகள் எப்படியெல்லாம் அமுங்குகின்றன! என்னென்னவெல்லாம் பேசுகின்றன.

அவள் மடியில் சின்ன உயிர், அங்கங்களை அசைத்து கழுத்தை முறுக்கிக் கொண்டது. அதன் முகம் ஜன்னலின் வெளிச்சத்துக்குத் திரும்பியது. கறுகறுவென மயிர் அடையாய் நெற்றியில் வழிந்தது. நிலைபெறாத வெறிச்சிட்ட பார்வையில் இமையின் கீறல்கள் அகன்றன, வெளியே கவிந்த வானத்தின் நீலத்தில் கடுகளவு வழித்துத் தீட்டினாற் போல் விழிகளின் பொறி நீலம், வெளி நீலத்தை அடையாளம் கண்டு கொண்டதோ என்னவோ குழந்தை அந்தப்பக்கம் திரும்பியபடி உறக்கத்தில் ஆழ்ந்தது.

உறக்கம், விழிப்பு, சின்ன உயிர், பெரிய உயிர், நீ, நான், —வித்தியாசங்கள் எதுவும் அதற்கு இப்போதைக்குத் தெரியாது.

அது உறங்குவதைப் பார்த்தபடி இருவரும் தம்மை மறந்தனர்.

அது குழந்தையா? அவர்கள் குழந்தையா?

**யா**ரோ தோளைப் பிடித்துக் குலுக்கினாற்போல் திடுக்கென விழித்துக் கொண்டாள், தூக்க அயர்வில். வேளையின் மந்தாரம் மாலையா, காலையா தெரியவில்லை. ஆஸ்பத்திரியினின்று வந்தாயிற்று. ஆனால் பெற்ற சிரமம் இன்னும் தீரவில்லை. சுமந்தபோது இழந்த தூக்கம் சுமை இறங்கியதும் வட்டியோடு வந்தது.

பூம்ரொய்ஞ்ஞ்ஞ்—

சுவர்களுக்கும் உயிர் உண்டோ? தனக்கு நரம்புகள் அனைத்தும் அமர்ந்திருக்கும். இந்தச் சமயத்தல்தான் சுவர் களுள் துடிக்கும் அவைகளின் உயிர்த் தாது கேட்குமோ? பூமியின் உயிர்ப்பு, படுக்கையைத் தாண்டி முதுகுத் தண்டில் விறுவிறுப்பதுபோல் தோன்றிற்று. பீதி பற்றிக்கொண்டது. எழுந்து உட்கார்ந்தாள். சத்தம் அலமாரியிலிருந்து வந்தது, அலமாரிக் கூரையில் சுவர்கள் முட்டு மூலையில் மொய்த்துக் கொண்டிருந்த இடத்திலிருந்து அது புறப்பட்டுக் கொண்டி ருந்ததை அப்போதுதான் கண்டாள். பிடரி சிலிர்த்தது, அவளைக் கவ்விய பயத்தின் கண்ணிருளில் அதன் உரு பளிச் சென்று பிதுங்கிற்று.

பெரிதும் சிறிதுமாய் ஒட்டிக் கொண்ட இரண்டு ரத்தச் சொட்டுக்கள், தலையும் உடலும் சிவப்புக் குரூரத்தில் தெறித்த கணுக்கள், பிய்ந்த சரிகைத் துணுக்குகள் போன்ற சிறகுகளின் கனவேகத்தின் விறைப்பு. அதன் நடுவே அந்த ரத்தில் அது அலை மிதந்தது, வளைந்த கொடுக்குகள் முகத் தினின்று துருத்திக் கொண்டு நின்றன. ரம்பத்தினின்று உதிரும் மரத்தூள் போல் அதன் ரீங்காரம் துருவிக் கொட்டும் தொனிப் பொடி மேலும் மேலும் அவள் மேல் சொரிந்து அவள் உருமழுங்கிய பிண்டமாய்த் தன் இடத்தில் ஒடுங்கி னாள்,

மீண்டும் ஒரு சக்கரம் அடித்துவிட்டு, அது ஜன்னல் வழி வெளியே சென்று விட்டது. அந்தச் சததம் தூரத்தில் ஓய்ந்த பின்தான், அவளுக்கு உயிர் திரும்பிற்று.

அலமாரியில் அதற்கென்ன வேலை? தேன் சீசாவை மூட மறந்து விட்டேனா?

எழுந்து பார்த்தபின்தான் தெரிந்தது. அலமாரி மூலை யில் சிரங்கு போல் முடிச்சிட்டுக் கொண்டு மண்கூடு படர்ந்தி ருந்தது. அருவருப்பின் சீற்றம் திகுதிகுவென மண்டைக்குப்

பாய்ந்தது. உச்சி மண்டையுள் நரம்புகள் தீய்ந்து கருகும் நெடியில் மூக்கு நுனி துடித்தது. அந்த அருவருப்பைக் காட்டிலும் பயங்கரம் ஒன்று நினைவில் புரண்டது.

குழந்தை!

ஒரு காகிதத்தைத் தேடி அலமாரியில் அவர் சாமான்களுடன் அடுக்கியிருக்கும் பேனாக் கத்தியால் நெம்பிப் பெயர்த்து. காகிதத்துள் தள்ளினாள். மண் இலேசில் கழலவில்லை. கெட்டித்துப்போயிருந்தது அடையாளம் அழியும் வரை சுவரை நன்றாய்க் கீறிச் சுரண்டித் தூளையும் காகிதப்தில் சேர்த்தாள். ஜன்னலுக்கு வெளியே கொட்டுகையில் ஜன்னல் சீம்பியில் கையிடித்து கூட்டின் சீள்கள் கீழே சிதறின. அவைகளினூடே ஒரு பச்சைப் புழு நெளிந்தது. வயிற்றைக் குமட்டியது.

"என்ன பண்ணறே?"

தூக்கிப் போட்டது. திருட்டில் கையும் களவுமாய் அகப்பட்டுக் கொண்டாற்போல் திருதிருவென விழித்தாள். ஒரு வேளை அலமாரிச் சாமான்களையெல்லாம் நான் இன்னும் தொடக் கூடாதோ?

"ஒண்ணுமில்லேம்மா. அலமாரியில் செல்லு கட்டியிருந்தது. அதை..."

"செல்லா? குளவிக் கூடுன்னா அது? அட ராமா, என்ன பண்ணினே? அழிச்சூட்டியா?"

"ஆமாம்!" அழித்தால் என்ன? இந்த வீட்டில் தொட்டதற்கெல்லாம் சாட்சிக் கூண்டுதானா? கன்னங்கள் குறுகுறுத்தன.

"ஆமாவா? யாராவது குளவிக் கூட்டைப் போய் அழிப்பாளா? வீட்டில் குளவி கூடு கட்டினால் வூட்டுக்கே நல்லதுன்னு உனக்கு யாரும் சொல்லித் தந்ததில்லையா?

கிராமத்திலிருந்துதானே வந்திருக்கே? பேரன் பிறந்தான் கூடவே குளவியும் கட்டியிருக்குன்னு மகிழ்ந்திண்டிருந்தேன். நீ வீட்டுக்கு வந்ததும் வராததுமாய் உன் சுத்தத்தைக் கொண்டாட ஆரம்பிச்சுட்டாயாக்கும்— துடைச்சுப் பெருக்கற சுத்தத்தை!''

'சுத்தத்துக்கில்லேம்மா. குழந்தையைக் கொட்டிவிட்டால் என்ன செய்கிறது?''

''ஏண்டி பெண்ணே! நீ கிராமத்திலிருந்துதானே வந்திருக்கே? உன் ஊரிலே மனிதர்கள் வீட்டில் வாழும் பாம்போடு குடித்தனம் பண்ணல்லியா? அது உன்னை என்ன பண்ணித்து? நாமே நல்லதுக்குப் பிறந்தவாயில்லே, இந்தக் கண் இன்னும் என்னென்ன அக்கிரமங்களைக் காண இருக்கோ! இந்தக் கட்டை, பூச்சி பொட்டிலிருந்து யார் யார் சாபத்தை வாங்கிக் கட்டிக்கணும்னு இருக்கோ—''

பயம் வயிற்றுக்குள் பனிக்கட்டிபோல் திரியாயிறங்கிற்று. தூங்கிக்கொண்டிருந்த குழந்தையை வாரி யிறுகக் கட்டிக் கொண்டாள். அதன் அழுகுரல் அவளுக்குத் தேவையாக இருந்தது.

அதன் வருகையை வெகு தூரத்திலேயே அறிந்து கொண்டாள், அதன் வருகைக்கு, தீர்ப்பின் விதிப்புக்குக் காத்திருக்கும் கைதி போல் காத்திருந்தாள்.

கதவுகளைத் திறந்து வைத்தால் கூடம், மூடி விட்டால் அறை. அதிலும் மர 'ஸ்கிரீன்' நிறுத்திப் பாதி யிடம் தடுத்த ஒதுக்கம். குறிப்பிட்ட வேளைகளில் குறிப் பிட்ட உணவு, குடிஜலம்கூட அளந்துதான். தடுத்த இடம் தாண்டி நகர முடியாது. அவள் சிறை தான் இருந்தாள்,

இன்றைக்கென்று விடிவிளக்கு வேறு 'மக்கர்' பண்ணிற்று. நாணின் அதிர்வுடன் அது உள் நுழைந்ததும் விளக்கு குப்பென்று அணைந்து போயிற்று.

கும்மிருள்.

ரீங்காரம் வெள்ளமாய்ப் பெருகி இருளை நிறைத்தது.

குழந்தை மேல் பலமாய்த் துணியைச் சுற்றி இறுக அணைத்தபடி இருளில் ஓசைச் சுழல் வழியே முகம் திரும்பித் திரும்பி. தான் இழைத்த பழிக்கு என்ன நேரப் போவது என்று அறியாமல், என்ன நேரிடினும் குழந்தையை விட்டுத் தனக்கு என்ன நேரிடினும் நேர்வதற்குக் காத்திருந்தாள். எது நேரிடினும் அது சம்மதமே; நியாயமுமே. அவள், இழைத்த பழியே உருவாய்ப் பிதுங்கி, முகம் கூறிட்டு அவளைத் தேடுகிறது.

இருளில் கண்கள் தொடர முடியுமா அந்த ஓசையின் வளைவுகளை, வளைவுகளின் நுட்ப அழகுகளை, செவி எப்படிப் பளிச்சென்று பார்க்க முடிகிறது, பருக முடிகிறது! தம்பூரை மீட்டினாற்போன்ற உருகோசையில் நினைவு ஒன்றுபட்டு அந்தத் தேடலின் தவிப்பில் நெஞ்சு முங்கி முங்கி எழுகையில். தன் தன்மையே துவங்கித் தனிப் பரவச மடைந்தாள். தானும் அத்துடன், அதன் தேட லோடிழைந்தாள்,

கோபங்கள். கோபங்களின் அடிவாரமாம் பயம். பயத்தைமறைக்கத் தைரியம், தைரியத்துக்கு அலங்காரமாய்ச் சிரிப்பு, பீதிகள், பொய்மைகள், சுத்தங்கள், அசுத்தங்கள் அருவருப்புகள் யாவும் தடம் தடமாய்ப் பட்டையுரிந்து, சுற்றி உதிர்ந்த சருகுகளின் நடுவே ஒன்று—ஒருணர்வுதான் நெருப்புத் துண்டாய்த் தனித்து நின்று சூழ்ந்த இருளை

எரித்து நெஞ்சுகள்—எங்கென்று தெரியவில்லை—ஏதோ ஓர் இடத்தை—எவ்வளவு பெரிதென்று தெரியவில்லை, எவ்வளவோ—பெரிது—ஒளிமயமாகிற்று.

''பூம்ரொய்ஞ்ஞ்ஞ்''—

இது தன் கூட்டை இழந்த வெறுங் குளவியின் கூவல் அல்ல. பூமியின் ஆதார சுருதி. தானும் சுற்றிக் கொண்டு, தன்னையும் சுற்றிக்கொண்டு சின்ன உயிர், பெரிய உயிர், தாயினின்று புழு வரை தான் தாங்கும் எவ்வுயிரும் தன்னோடு சுற்றிக்கொண்டு, தான் தேடுவது இன்னதென்று அறியாத திகைப்பில், பூமியின் ஓயாத இயக்கத்தின் ஏக்கம்,

அந்த படிப் படுகையில் அவள் தேய்ந்ததும் அதற்கென்றே அவளுக்கென்றே காத்திருந்தாற்போல், அங்கிருந்து, அவளிலிருந்து அவளைப் பட்டை யுரித்தாற்போன்று ஒரு வீரல் புறப்பட்டது.

அலறிப் புடைத்துக்கொண்டு மாமியாரும் தாயாரும் ஓடி வந்தனர்.

மாடியில் 'திடும் திடும்'.

அக்கம் பக்கத்தில், எதிரே, வாசலில், கூட்டமாய்க் குரல்கள், யாரோ கூடத்து 'ஸ்விட்சை'ப் போட்டனர்.

கண்களை இறுக மூடியவாறு. உட்கார்ந்த நிலையிலேயே அவள் உடல் மருள் கண்டாற்போல் ஊஞ்சலாடிற்று. மடியில் குழந்தை நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தான்.

அவள் கணவன் அவளைத் தோளைப் பிடித்து உலுக்கி அதட்டினான். அவனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது கோபம் கோபமாய் வந்தது. மானம் போகிறது.

ஆனால் அவள் கனவு கலையவில்லை. அவள் கனவில் அவன் என்ன கண்டாளோ, புன்னகையில் கன்னங்கள் குழிந்தன. முகம் ஒளி வீசிற்று. வாய் குழறிற்று. அவளுக்குச் சம்பந்த மற்றவைபோல். தாம் ஒலிப்பட அவளை உபயோகம் கொள்வதுபோல் வார்த்தைகள் வெளிவந்தன,

''சின்ன உயிராம், பெரிய உயிராம்! எல்லாம் பேருயிரின் பரவல்!''

அவள் வலது கன்னத்தில் முத்திரைபொறித்தாற்போன்று சிவப்பாய் இரண்டு பதிவுகள் தெரிந்தன.

Cover Printed at Sri Murugan Offset Printers, Madras-5.